# சங்கப் பெண்மொழி:
# கட்டமைப்பு ஆய்வு

சென்னைப் பல்கலைக்கழக முனைவர் பட்டத் தேர்விற்காகச்
சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறை வாயிலாக
அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர்

**இர. ஹேமலதா**

(Ph.D./02/FT/06/2014/6341/01.09.2014)

நெறியாளர்

**முனைவர் ப. டேவிட் பிரபாகர்**

*எம்.ஏ.,(தமிழ்),எம்.ஏ.,(மொழியியல்) எம்.ஃ.பில்., பிஎச்.டி.,*

*தமிழ்த்துறைத் தலைவர்*

**தமிழ்த்துறை**

***சென்னைக் கிறித்தவக் கல்லூரி (தன்னாட்சி)***

***தாம்பரம், சென்னை - 600 059.***

**ஆகஸ்ட் – 2020**

**முனைவர் ப.டேவிட் பிரபாகர்**
*எம்.ஏ.,(தமிழ்)எம்.ஏ.,(மொழியியல்), பி.எச்.டி.*
*துறைத்தலைவர், தமிழ்த்துறை*
*சென்னைக் கிறித்தவக் கல்லூரி (தன்னாட்சி)*
*தாம்பரம், சென்னை - 600 059.*

# நெறியாளர் சான்றிதழ்

**“சங்கப் பெண்மொழி: கட்டமைப்பு ஆய்வு”** என்னும் தலைப்பில் **இர. ஹேமலதா** அவர்கள் செய்துள்ள இந்த ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழக முனைவர் (Ph.D.) பட்டத்திற்காகச் சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறையில் அவர் ஆய்வு செய்த காலத்தில் தன்னிச்சையாகச் செய்யப்பட்டது என்றும், இவ்வாய்விற்காக ஆய்வாளருக்கு வேறு எந்தப் பட்டத்திற்கும் இதுவரை அளிக்கப் பெறவில்லை என்றும் சான்றளிக்கின்றேன்.

இடம் : தாம்பரம் **(ப. டேவிட் பிரபாகர்)**
தேதி : நெறியாளர்

**இர. ஹேமலதா**
*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்*
*தமிழ்த்துறை*
*சென்னைக் கிறித்தவக் கல்லூரி (தன்னாட்சி)*
*தாம்பரம், சென்னை - 600 059.*

# ஆய்வாளர் உறுதிமொழி

**"சங்கப் பெண்மொழி: கட்டமைப்பு ஆய்வு"** *என்னும் தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழக முனைவர் பட்டத் தேர்விற்காகச் சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறையில் செய்யப்பட்ட இந்த ஆய்வு என் சொந்த முயற்சியில் உருவானதாகும். இதற்கு முன் வேறு எந்தப் பட்டத்திற்கும் இவ்வாய்வேடு அளிக்கப்படவில்லை என்று உறுதியளிக்கிறேன்.*

*இடம் : தாம்பரம்* **(இர.ஹேமலதா)**

*தேதி :* *ஆய்வாளர்*

# ஆய்வு முன்னுரை

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் தொன்மையான இலக்கிய, இலக்கண மரபுகளைக் கொண்டவை. அதன் மொழிக் கட்டமைப்பும் உணர்வு வெளிப்பாடும் தனித்தன்மை வாய்ந்தவை. இச்சிறப்புக்கு நூற்றுக்கணக்கான புலவர்கள் தம் அரிய பங்களிப்பை வழங்கிச் சென்றுள்ளனர். இவ்வகையில் சங்கப் பெண்பாற்புலவர்களும் குறிப்பிடத்தகுந்த பங்களிப்பினைச் செய்துள்ளனர். இவர்களது படைப்புகளில் காணப்பெறும் மொழிநடைப் பொதுமைகளையும் தனிப்பண்புகளையும் ஒலி, சொல், தொடர் ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்ந்து வெளிப்படுத்துவது இன்றியமையாததாகும்.

அகம் - புறம் ஆகிய இவ்விரு நிலைகளில் இயங்குகிற சங்க இலக்கியத்துள் தலைவி, தோழி, நற்றாய், செவிலி முதலிய அகத்திணை மாந்தர்கள் குறித்த பெண் மொழியின் இயல்பினை ஆராய இயலும். ஆயினும் இவ்வாய்வு பெண்பாற் புலவர்களின் இலக்கிய ஆக்கங்களில் செயலாற்றும் பெண் மொழியையே ஆராய முற்படுகிறது.

## ஆய்வுத் தலைப்பு

சங்கப் பெண்மொழி : கட்டமைப்பு ஆய்வு

## ஆய்வு நோக்கம்

சங்கப் புலவர் பெருமக்களுள் பெண்பாற் புலவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் காணப்பெறும் ஒலி அமைப்பு, சொல் அமைப்பு, தொடரமைப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, அவற்றில் இடம்பெறும் மொழிநடைப் பண்புகளைத் திணை, துறை, கூற்று, நூல், புலவர் ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்ந்து வெளிப்படுத்துவது இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது. இதன்வழி அவர்களது மொழிநடைப் பொதுமைகள் மற்றும் தனித்தன்மைகள் ஆகியவற்றைக் கண்டறிவதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வின் கருதுகோள்

சங்கப் பெண்பாற் புலவர்கள் பல்வேறு காலப்பகுதியில் பல்வேறு நிலத்திணை மரபுகள் சார்ந்து இலக்கிய ஆக்கங்களைச் செய்தவர்கள். அகம் - புறம் என்ற இருநிலையில் பல்வேறு பாடல்களை இயற்றியுள்ளனர். இப்பெண்பாற் புலவர்களிடையே ஒரு பொதுவான மொழிநடைப் பண்பு காணப்படுகிறது. நூல் அடிப்படையிலோ திணை, துறை, கூற்று ஆகியவற்றின் அடிப்படையிலோ அல்லது தனிப்பட்ட புலவர்களின் அடிப்படையிலோ அவர்களது மொழி நடையானது வேறுபட்டும் அமைய வாய்ப்புள்ளது என்பதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

## ஆய்வு முன்னிகழ்வுகள்

“சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழிநடை” *(2012)* எனும் தலைப்பில் பேராசிரியர் வீ.ரேணுகாதேவி அவர்கள் இலக்கண நோக்கில் ஒரு நூலினை வெளியிட்டுள்ளார். “மகடூஉ முன்னிலை” *(2004)* எனும் நூல்வழி சங்கப் பெண்பாற் புலவர்கள் குறித்த அடிப்படைச் செய்திகளை முனைவர் தாயம்மாள் அறவாணன் வெளிப்படுத்தியுள்ளார். முனைவர் காமேஷ்வரி அவர்கள் ‘Style of Avvaiyar’ எனும். தலைப்பில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு ஒரு ஆங்கில ஆய்வேட்டினை வழங்கியுள்ளார். மேலும் “சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும்” *(2003)* எனும் நூலினை முனைவர் வ.ஜெயா அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வாயிலாக வெளியிட்டுள்ளார். முனைவர் ஜே.ஆர்.இலட்சுமி அவர்கள் “வரலாற்றில் ஔவை” *(2011)* எனும் நூலினைப் படைத்துள்ளார். “தமிழ் வளர்த்த மகளிர்” *(1990)* எனும் தலைப்பிலமைந்த நூலினை வள்ளிநாயகி அவர்கள் வெளியிட்டுள்ளார். முனைவர் ஔவை நடராசன் அவர்கள் “பெண்பாற் புலவர் - சங்ககாலம்” எனும் நூலினை அளித்துள்ளார். “பெண் கவிதை மொழியும் பெண் கவிஞர்களும்” எனும் நூல் ஒன்றினை பத்மாவதி விவேகானந்தன் அவர்கள் எழுதியுள்ளார்கள். “சங்க கால ஔவையாரும் உலகப் பெண்பாற் புலவர்களும்”

என்ற நூலினையும் “நல்லிசைப் புலமை மெல்லியலார்கள்” என்ற நூலினையும் “பெருமைக்குரிய பெண்டிர்” (1989) என்ற நூலினையும் முறையே பெ.சு.மணி, ரா.ராகவையங்கார், தி.இராசகோபாலன் ஆகியோர் வெளியிட்டுள்ளனர். மேலும் “சங்ககாலப் பெண்மை” என்ற நூலினை முனைவர் அன்னிதாமசு அவர்களும் வெளியிட்டுள்ளார். சங்கப் பெண்பாற் புலவர்கள் குறித்த பெரும்பான்மையான ஆய்வுகள் பாடல்களின் உள்ளடக்கத்தைப் பகுத்து விளக்குவதாக அமைந்துள்ளன.

## ஆய்வுத் தரவு

எட்டுத்தொகை நூல்களுள் பரிபாடல், கலித்தொகை, ஐங்குறுநூறு ஆகிய மூன்று நூல்கள் நீங்கலாக அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய ஐந்து நூல்களில் மட்டுமே சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. மேற்சுட்டிய ஐந்து நூல்களில் இடம்பெற்றுள்ள பெண்பாற் புலவர்களின் பாடல்கள் யாவும் ஆய்வின் முதன்மைத் தரவுகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. சங்கப் பெண்பாற் புலவர்கள் குறித்த பிற ஆய்வுகள் இவ்வாய்வின் துணைமைச் சான்றாதாரங்களாக அமைகின்றன.

## ஆய்வின் வரையறை

அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய நூல்களில் அமைந்துள்ள சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் காணலாகும் ஒலி, சொல், தொடர் ஆகிய இலக்கணக் கூறுகளை திணை, துறை, கூற்று, நூல், புலவர் வாரியாகப் பகுப்பாய்வு செய்தும் ஒப்பீடு செய்தும் வெளிப்படுத்துவது இவ்வாய்வின் வரையறையாக அமைகிறது.

## ஆய்வு அணுகுமுறை

ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் அமைந்துள்ள ஒலி, சொல் ஆகியவற்றின் வருகை, உட்கூறுகள்,

நிகழ்வெண்ணிக்கை ஆகியவற்றை ஆராய்வதற்கு விளக்கமுறை மற்றும் புள்ளியில் அணுகுமுறையும் தொடர் நிலையை ஆராய விளக்கமுறை அணுகுமுறையும் கையாளப்படுகின்றன. ஒப்பீட்டு நிலையிலும் பெண்பாற் புலவர்களின் மொழிநடைப் பண்புகள் ஆராயப் படுகின்றன.

## ஆய்வேட்டின் அமைப்பு

இவ்வாய்வு முன்னுரை, முடிவுரை நீங்கலாகப் பின்வரும் நான்கு இயல்களைக் கொண்டுள்ளது. இதனைத் தொடர்ந்து துணை நூற்பட்டியலும், பின்னிணைப்புகளும் அமைகின்றன.

ஆய்வு முன்னுரை

இயல் *1* : ஆய்வு முறையும் அடிப்படைகளும்

இயல் *2* : ஒலி நிலை

இயல் *3* : சொல் நிலை

இயல் *4* : தொடர் நிலை

ஆய்வு முடிவுரை

## ஆய்வு முன்னுரை

ஆய்வு முன்னுரை இவ்வாய்வின் நோக்கையும், அமைப்பையும் விளக்குவதாக அமைகிறது. இதில் இவ்வாய்வின் நோக்கம், கருதுகோள், ஆய்வு முன்னிகழ்வுகள், ஆய்வுத் தரவு, ஆய்வின் வரையறை, ஆய்வு அணுகுமுறை, இயல் பகுப்பு ஆகியன விளக்கப்படுகின்றன.

## இயல் 1 - ஆய்வு முறையும் அடிப்படைகளும்

இவ்வியல் ஆய்வுக்குப் பின்புலமாக அமையும் செய்திகளையும் ஆய்வில் ஆளப்படும் கருவிகள் குறித்த அடிப்படைகளையும் விளக்குவதாக அமைகிறது. இவ்வகையில் சங்கப் பெண்பாற் புலவர்கள் குறித்த பொதுவான செய்திகளையும் நடையியல் கூறுகள், வகைகள், கோட்பாடுகள் ஆகியவற்றையும் விரிவாக

விளக்குகிறது. ஒலி, சொல், தொடர் ஆகிய மூன்று நிலைகளில் பெண்பாற் புலவர்களின் நடையியல்புகளை நோக்கும் இவ்வாய்வு திணை, துறை, கூற்று, புலவர், நூல் முதலிய காரணிகளைக் கவனத்தில் கொண்டுள்ளதால் அவை குறித்த விளக்கங்களும் இவ்வியலில் இடம்பெறுகின்றன.

## இயல் 2 – ஒலி நிலை

இவ்வியல் ‘ஒலி நிலை’ குறித்த பொதுவான செய்திகளையும் நடையியலில் ஒலிக் கூறுகள் பெறுமிடத்தையும் விளக்குகிறது. சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் எடுத்தாளப்பட்டுள்ள ஒலி நிலைக் கூறுகளான மோனை (இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று) வகைகளும், முரண், (வகைமைகள் உட்படுத்தப் படவில்லை) மற்றும் அளபெடை (இன்னிசை, சொல்லிசை, செய்யுளிசை) வகைகளும், ஒலிக்குறிப்புச் சொற்களும் உற்றுநோக்கி ஆராயப்பட்டுள்ளன. மேற்சுட்டிய ஒலிக்கூறுகளானது பெண்பாற் புலவர்களிடையே எங்ஙனம் பொதுமைப்பட்டும், மாறுபட்டும் அமைந்துள்ளன என்பதையும் இவ்வியல் ஆராய்கின்றது. மேலும் ஒலி நிலைக் கூறுகளின் வகைமைகள் நிகழ்வெண்ணிக்கையாக அட்டவணை மூலம் இவ்வியலில் தரப்பட்டுள்ளன. நிகழ்வெண்ணிக்கையின் விகிதாச்சாரம் பின்னிணைப்பில் வரைபடங்களாகவும் கொடுக்கப்பட்டுள்ளன.

## இயல் - 3 சொல் நிலை

இவ்வியல், ‘சொல் நிலை’ பற்றிய பொதுவான செய்திகளையும் நடையியலில் சொல் பெறுமிடத்தையும் விளக்குகிறது. சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் இடம்பெற்றுள்ள சொல் வகைகளான பெயர், சுட்டு, பதிலிடு பெயர், வினாப் பதிலிடு பெயர், விளி, தொழிற்பெயர், வினையாலணையும் பெயர், பெயரடை போன்ற பெயர் வகைகளும் வினை, வினையடை, பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம், வினைமுற்று, வினையெச்சம், எதிர்மறை வினையெச்சம், குறிப்புவினை, வியங்கோள்வினை, வினைத்தொகை போன்ற வினை வகைகளும் இவ்வியலில் விரிவாக ஆராயப்படுகிறது. மேலும் நிபந்தனை எச்சம், குறையெச்சம், ஏவல், உவம உருபு, உரிச்சொல், இடைச்சொல் போன்ற சொல் வகைகளையும்

இவ்வியல் ஆராய்கிறது. சொற்பயன்பாடு பெண்பாற் புலவர்களிடையே எங்ஙனம் மாறுபட்டும் பொதுமைப்பட்டும் அமைகின்றன என்பதையும் இவ்வியல் விரிவாக விளக்குகிறது. திணை, துறை, கூற்று, நூல் அடிப்படையிலும் இச்சொல் பயன்பாடுகள் சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல் வழி எடுத்துக் காட்டப்படுகின்றன. சொல் வகைகளின் வருகையை விளக்கும் வகையில் அவற்றின் நிகழ்வெண்ணிக்கையாக அட்டவணை மூலம் இவ்வியலில் தரப்பட்டுள்ளன. அதற்கான வரைபடங்கள் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

## இயல் - 4 தொடர் நிலை

இவ்வியலில் 'தொடர் நிலை' குறித்த விளக்கங்களும் தொடரமைப்பு பற்றிய செய்திகளும் விளக்கப்படுகின்றன. சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களின் காணலாகும் தொடரமைப்புகள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. தொடரியல் கூறுகளும் தொடர் வகைமைகளும் புலவர்கள் அடிப்படையில் ஒப்புநோக்கி விவரிக்கப்பட்டுள்ளன. மேலும் சங்கப் பெண்பாற் புலவர்களின் தொடரியல் பயன்பாடுகள் திணை, துறை, கூற்று, நூல் அடிப்படையில் விளக்கப்படுகின்றன. தொடர் நிலை ஆய்விற்கு விளித்தொடர்கள், எச்சத் தொடர்கள், வினாத் தொடர்கள், முரண் தொடர்கள், அடுக்குத் தொடர்கள், ஏகாரத் தொடர்கள், ஏவல் தொடர்கள் போன்றவை இவ்வியலில் ஆராயப்படுகின்றன.

## ஆய்வு முடிவுரை

ஒவ்வொரு இயலிலும் கண்டறியப்பட்ட செய்திகள், தொகுத்துரைக்கப் படுகின்றன. புலவர் அடிப்படையில் காணலாகும் மொழிநடைப் பண்புகள் ஒப்பீட்டு நிலையில் இங்கு எடுத்துக்காட்டப்படுகின்றன. திணை, துறை, கூற்று, நூல் ஆகியவற்றின் அடிப்படையில் புலவர்களின் தனித்தன்மை வாய்ந்த மொழி ஆளுமையும் எடுத்துரைக்கப்படுகின்றன. முடிவுரையைத் தொடர்ந்து துணைநூற் பட்டியலும், ஆய்விற்கு வலுவூட்டும் செய்திகள் பின்னிணைப்புகளாகவும் கொடுக்கப்பட்டுள்ளன.

# இயல் - 1

## ஆய்வுமுறைகளும் அடிப்படைகளும்

சங்க இலக்கியங்கள் தொன்மையும் செம்மையும் வாய்ந்தவையாகும். தனக்கென்ற தனித்த மொழிநடைக்கூறுகளைக் கொண்டவை. அவற்றின் பாடுபொருளும் உணர்த்தும் முறையும் முற்றிலும் மாறுபட்டவை. இத்தகைய சிறப்பு வாய்ந்த சங்க இலக்கியங்களின் மொழிநடையை பல அறிஞர்கள் ஆராய்ந்திருப்பினும் ஒலி, சொல், தொடர் ஆகிய மொழிநிலைகளின் அடிப்படையில் ஆய்வதென்பது இன்றியமையாததாகும். ‘சங்க இலக்கிய நடை’ எனும் தலைப்பிலமைந்த பா.வீரப்பன் அவர்களது ஆய்வு நூல் பத்துப்பாட்டின் நடைத்தன்மையை மட்டுமே வெளிப்படுத்தி அமைந்த நூலாகும். எட்டுத்தொகையைப் பொறுத்தமட்டில் மேற்குறிப்பிட்ட முறைகளில் மிக அரிதாகவே ஆய்வுகள் நிகழ்த்தப்பெற்றுள்ளன எனலாம். அதனினும் சங்கப் பெண்பாற் புலவர்களது மொழிநடையை அவர்களது கவிதைக் கட்டமைப்பு என்ற நோக்கில் சில ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டிருப்பினும் அவை பொருண்மை அடிப்படையிலேயே அமைந்துள்ளன.

ஒலி, சொல், தொடர் ஆகிய நிலைகளில் சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழிக் கட்டமைப்பை ஆய்வதென்பது அவர்களது மொழி ஆளுமையை வெளிப்படுத்தக் கூடியதாக அமையும். ‘பெண் மொழி’ எனும் நோக்கில் அவர்களது மொழி அமைப்பை இலக்கண நோக்கில் இவ்வாய்வு எதிர்கொண்டுள்ளது. சங்கப் பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கையில் பல மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. சங்கப் புலவர்கள் மொத்தம் 473 பேராவார். அவர்களுள் பெண்பாற்புலவர்களும் அடங்குவர். சங்க காலத்தில் பெண்களுக்கும் கல்வி வழங்கப்பட்டது என்பதனை அறிய இப்பெண்பாற் புலவர்களின் பாடல்களே சாட்சியாக விளங்குகின்றன. ஆண்பாற் புலவர்களுக்கு நிகரான கல்வியையும் மொழி அறிவையும் பெற்று இவர்கள் விளங்கினர். அகம்-புறம் ஆகிய இருநிலைகளிலும்

இப்பெண்பாற் புலவர்கள் இயங்கியுள்ளனர் என்பதற்கு அவர்களது பாடல்களே சான்றாகும்.

**நடை – நடையியல் - விளக்கம்**

'நடை' என்பதற்கு 'நடத்தல்' என்பதே பொருளாகும். தனிநபர் ஒருவரது நடத்தையையும் குறிக்கும். அதாவது ஒருவரின் பழக்கவழக்கங்கள், உடலசைவு, பேசும் தன்மை, பண்பு நலம் போன்றவற்றைச் சுட்டுவதாகும். 'நட' என்பதே எல்லாச் சொற்களுக்குமான அடிப்படைச் சொல்லாக அமைகிறது. இதனை ஆங்கிலத்தில் 'style' என வழங்குவர்.

'நடையியல்' என்பது இலக்கியத்தில் ஒரு படைப்பாளனின் மொழி ஆளுமையைக் குறிக்கும். எங்ஙனம் ஒருவருக்கு ஒருவர் பழக்க வழக்கங்களும் பண்புகளும் மாறுபடுகிறதோ அங்ஙனமே இலக்கியங்களிலும் படைப்பாளனின் நடைத்தன்மை மாறுபடும். இதனையே, நாம் மொழிநடை என்கிறோம். 'இலக்கியத் திறனாய்வியலும் மொழியியலும் இணைந்த ஒன்றே நடையியல் எனலாம்' என இ. சுந்தரமூர்த்தி தமது 'திருக்குறள் நடையியல்' எனும் நூலில் கூறுவார்.[1]

**நடை குறித்த அறிஞர்களின் கருத்து:**

1. கூறும் பொருளை மனத்தினுள் நன்கு பதிய வைத்து அப்பொருளோடு ஒன்றியிருந்தால் நல்ல நடை அமையும். – பாரதியார்.[2]

2. நுட்பம் (Accuracy), எளிமை (Ease), நலம் (Grace) ஆகிய மூன்றும் நல்ல நடையின் இயல்புகள் - ஆலென் வார்னர்.[3]

---

[1] சுந்தரமூர்த்தி இ., திருக்குறள் நடையியல். ப.13.
[2] சுந்தரமூர்த்தி இ., பாரதியார் கட்டுரைகள், ப.10.
[3] சுந்தரமூர்த்தி இ., நடையியல் சிந்தனைள், ப.60.

3. நடையாவது உரிய சொற்களை உரிய இடத்தில் அமைத்தலாகும் - சுவிட்டு[4]

4. நடை என்பது வார்த்தை வீச்சுக்களால் அமைகிறது – எம்.ஏ.நு.்.மான்[5]

5. ‘நிகழிடச் சூழலுக்கேற்ப விளக்கம் பெறுதலே நடை’ ‘வேறுபட்ட வடிவங்களுக்கிடையே அமைந்த ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் உத்தியே நடை’’ – என்க்விஸ்ட்.[6]

## பண்டைத் தமிழ் இலக்கிய, இலக்கணங்களில் நடை பற்றிய கருத்துகள்

### 1. தொல்காப்பியம்

‘‘ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை
வெண்பா நடைத்தே கலியென மொழிப’’ ***(தொல். செய். 104)***

‘‘நடையென்றது அப்பாக்கள் இயலுந் திறம்’’

***(தொல்.செய்.இளம்.உரை)***

‘‘நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்
எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப’’ ***(தொல்.செய். 177)***

### 2. நன்னூல்

‘விருத்தியாகும் விகற்ப நடை பெறுமே’ **(நன். எழு. 4)**

‘‘குன்றக் கூறல் மிகைபடக் கூறல்

[4] சுந்தரமூர்த்தி இ., நடையியலும் இலக்கியமும், ப.5.
[5] நு.்.மான், எம்.ஏ., மொழியும் இலக்கியமும். ப.32.
[6] நீதிவாணன், ஜெ., நடையியல், ப.24.

கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தல் மயங்க வைத்தல்
தெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல்
சென்று தேய்ந்நிறுத்தல் நின்று பயனின்மை'' ***(நன். பாயி.14)***

### 3. திருக்குறள்

''இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்'' ***(அவையறிதல், 2)***

### 4. தண்டியலங்காரம்

''நாற்பொருள் பயக்கும் நடை நெறித்தாகி'' ***(தண்டி. 8)***

''காட்டிய நடைநெறி கடைப் பிடித்திவற்றோடு
கூட்டி உணர்தல் ஆன்றோர் கடனே'' ***(தண்டி. 26)***

### 5. திருவரங்கக் கலம்பகம்

''சொல் நோக்கும் பொருள் நோக்கும்
தொடை நோக்கும் நடை நோக்கும்
துறையின் நோக்கோடு
எந்நோக்கும் காண இலக்கியம் ஆவது'' ***(திருவர. கலம்.1)***

### 6. வச்சணந்திமாலை

''எடுத்த பொருளினோ டோசை யினிதாய்
அடுத்தவை செஞ்சொல்லாய் அணியும் - தொடுத்த
தொடையும் விளங்க அவை துதிப்பச் சொல்லின்
இடமுடைய மாமதுர யாப்பு'' ***(மதுரகவி, செய்யுளியல், 3)***

## நடையின் தன்மை

கோஷ் எனும் மேலைநாட்டு இலக்கியத் திறனாய்வாளர் ஆசிரியர் (Author). காலம் (Age), நோக்கம் (Purpose), கருத்து (Theme), இடம் (Geography) மக்கள் (Audience) முதலியவற்றால் நடையின் தன்மை மாறுபடும் என விளக்குகிறார்.

'நடை' என்பது ஆசிரியரின் தன்மையை வெளிப்படுத்தும் மொழி என ஃபையர் எனும் மேலைநாட்டு அறிஞர் திறனாய்வுக் கூறுகள் எனும் ஆங்கில நூலில் நடையின் தன்மையை விளக்குவார்.

நுட்பம் (Accuracy), எளிமை (Ease), நயம் (Grace) எனும் மூவகைப் பண்புகளே நல்நடையின் தன்மைகளாக ஆலென் வார்னர் எனும் அறிஞர் 'ஆங்கிலேய நடையின் குறுவழிகாட்டி' எனும் ஆங்கில நூலில் கூறுகிறார்.

## நடையின் வகைகள்

பொதுவாக நடையினை செய்யுள் நடை, உரைநடை என இருவகைப்படுத்துவர். இவை எல்லா மொழி இலக்கிங்களுக்கும் பொருத்த முடையதாகும். திறனாய்வாளர்கள் நடையை ஆறு வகைப்படுத்துவர். அவை,

1. ஆசிரியர் - கம்பர் நடை, பாரதி நடை போன்றவை
2. காலம் - செய்யுள் நடை, உரைநடை, புதுக்கவிதை போன்றவை
3. நோக்கம் - போர், பக்தி, நீதி போன்றவை
4. கருத்து - அகம், புறம், அறிவியல், வரலாறு போன்றவை
5. இடம் - திணைப்பாடல்கள், நாடோடிப்பாடல்கள் போன்றவை
6. மக்கள் - கிராமியப்பாடல்கள், வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை போன்றவை

## மொழிநடையும் ஒலிக்கூறுகளும்

'மொழி நடையில் ஒலி அமைப்பினை மூன்று வகையில் பகுக்கலாம். ஒன்று, எழுத்துகளுக்குள் ஒலி அமைப்பு; இரண்டு, ஒலி அழுத்தங்களுக்கேற்ப ஒலி அமைப்பு; மூன்று, இயற்கையில் எழும் ஒலிகளைப் பற்றிய ஒலி அமைப்பு என சங்க இலக்கிய நடை எனும் நூலில் பா.வீரப்பன் கூறுகிறார்.[7]

எழுத்துகளுக்குள் ஒலி அமைப்பு என்பது வல்லினம், மெல்லினம், இடையினம் எனும் எழுத்து சார்ந்த ஒலி நிலைகளைக் குறிக்கும். இ∴து தொடை அமைப்பான மோனை, எதுகை, இயைபு போன்றவற்றையும் உள்ளடக்கி செயல்படுவதாகும். ஒலி அழுத்தங்களுக்கேற்ப ஒலி அமைப்பு என்பது முரண், அளபெடை போன்றவற்றைக் கையாண்டு பொருளழுத்தம் தோன்ற இயற்றுவதாகும். இயற்கையில் எழும் ஒலிகளைப் பின்பற்றிய ஒலி அமைப்பு என்பது ஒலிக்குறிப்புச் சொற்களைக் குறிப்பதாகும். இ∴து இயற்கையாக அமைந்த மழை, விலங்குகள், புள்ளினங்கள் செய்யும் ஒலியைப் பாடல்களில் குறிப்பாக வைத்துப் பாடப்படுவதாகும்.

## மொழிநடையும் சொற்கூறுகளும்

படைப்பாளியின் மொழிநடையில், சொற்கூறுகள் மிக முக்கியமான இடத்தைப் பெறுவன. பொருள் தரக்கூடிய மிகச் சிறிய சொல்லே உருபன் எனப்படும். இத்தகைய உருபன்கள் இணைந்து கூட்டுச்சொற்கள் தோன்றுகின்றன. படைப்பாளி தான் கூற விரும்பும் கருத்திற்கேற்ப இத்தகைய உருபனியல் உத்திகளைக் கையாளுகிறான். சொற்களே கவிதைக்கு செறிவூட்டவும் நடை ஓட்டத்தையும் தர வல்லனவாகும். படைப்பாளி பயன்படுத்துகின்ற சொற்களை வைத்து அவனது தனிப்பட்ட மொழிநடையை இனங்காண முடியும். உவம உருபுகள், எச்சங்கள், இடைச்சொற்கள், உரிச்சொற்கள், அடைகள் போன்றவையே படைப்பாளனின் மொழித்திறத்தை உணர்த்தக் கூடியதாகும்.

---

[7] வீரப்பன், பா., சங்க இலக்கிய நடை, ப.18.

**மொழிநடையும் தொடர்க்கூறுகளும்**

ஒன்றுக்கும் மேற்பட்ட சொற்கள் இணைந்து பொருள் தருமாயின் அ∴து தொடர் எனப்படும். ஒலி, சொல் போன்றே தொடரினை ஆய்வதும் மொழிநடை ஆய்வில் அடிப்படையானதாகும். படைப்பாளன் கையாளும் தொடரின் நீளம், தொடர் அமைப்பு, தொடர் உத்திகள் போன்றவற்றை ஆய்வதன் வாயிலாகவும், அவனது மொழிநடைப் பண்புகளை அறிய இயலும். சில படைப்பாளிகள் சிறு சிறு தொடர்களைக் கையாளக்கூடும். சிலர் நீண்ட தொடர்களைப் பயன்படுத்துவர். இவற்றை நோக்குவதன் வாயிலாகவும், விளி, ஏகாரம், வினா, எச்சம், அடுக்கு, உவமை போன்ற தொடர் வகைகளைப் படைப்பாளி பயன்படுத்துவதன் வாயிலாகவும் அவனது மொழிநடைப் பொதுமையையும், தனிப்பட்ட மொழிநடையையும் அறியலாம்.

**நடையியலின் பயன்**

‘நடை’ பற்றி ஆய்வதே ‘நடையியல்’ என்பதைக் கண்டோம். இந்நடையியலின் பயன்களாவன,

i. ஒரு படைப்பாளனின் வெற்றி அவனுடைய மொழித்திறனை வெளிப்படுத்தும் விதமாக நடையியல் அமைகிறது.

ii. ஒலி, சொல், தொடர் ஆகிய மூன்று நிலைகளில் உணர்த்தப்படும் கருத்துக்களையும் இலக்கிய நயத்தையும் அறிய நடையியல் ஆய்வு உதவுகிறது.

iii. நடையியல் ஆய்வே ஒரு படைப்பாளனின் திறமையை உணர்த்தக் கூடியது.

iv. படைப்பாளி கையாளும் தொடராட்சி, சொல்லாட்சி ஆகியன எச்சூழலில் உருவாகின்றன என்பதனை அறிய நடையியல் துணைபுரிகிறது.

v. நடையியல் ஆய்வே ஒரு படைப்பை பேரிலக்கியமாக ஆக்க வல்லது. சான்று – திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்றவை.

vi. நடையியல் ஆய்வு மொழியியல் ஆய்விற்கும் துணைபுரியும்.

vii. நடையியல் ஆய்வு ஒரு படைப்பாளனை மேன்மேலும் உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் செயல்படச் செய்யும். மேலும் தனது தவறுகளைச் சரி செய்து கொள்வதற்கான வாய்ப்பாகவும் அமைய வல்லது.

**சங்க இலக்கிய நடை**

சங்க இலக்கியங்கள் தனித்த மொழிநடைப் பண்புகளைக் கொண்டவை. அவற்றுள் சில பண்புகள் கீழே தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

i. பாடுபொருளும் உணர்த்தும் திறனும் சங்க இலக்கிய மொழி அமைப்பில் தனித்தன்மை வாய்ந்தவை.

ii. சங்கப் பனுவல்கள் ஒலிநயத்திற்கும் பொருள் செறிவிற்கும் முதன்மையான இடத்தைத் தந்து அமைந்தவை.

iii. ஆசிரியம், வெண்பா, கலி, வஞ்சி என்ற பா அமைப்பினைக் கொண்டவை.

iv. மொழி அமைப்பானது அகம், புறம் என்ற இரு நிலையில் வேறுபட்ட வடிவில் செயலாற்றுபவை.

v. திணை மரபில் மொழியப்பட்டவை.

vi. சங்க இலக்கிய மொழி வழிச் செயலானது நாடகத் தன்மைக் கொண்ட கூற்று நிலையில் இயங்குபவை.

vii. தொன்மையும் செம்மையும் கொண்ட மொழிக் கூறுகளைக் கொண்டவை.

viii. சங்க மொழியானது பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்தி அமைந்தவை.

ix. நாட்டுப்புற மொழிக்கூறுகளை உடையவை.

x. அறமும் மறமும் கொண்ட மொழிப்பனுவல்.

சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழிநடையானது அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, குறுந்தொகை, நற்றிணை ஆகிய ஐந்து நூல்களின் வாயிலாக ஆராயப்படுகிறது. கலித்தொகை, பரிபாடல், ஐங்குறுநூறு ஆகிய நூல்களில் பெண்பாற்புலவர்களின் பாடல்கள் இடம்பெறவில்லை. திணை, துறை, கூற்று, நூல், புலவர் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களது மொழிநடை வேறுபட வாய்ப்புள்ளமையால் அவற்றைக் குறித்த விரிவான விளக்கங்களும் தொகுத்துரைக்கப் பெற்றுள்ளன. திணை நிலையில் அகத்திணைகள், புறத்திணைகள் பற்றியும் அதன் அட்டவணைகளும், இத்திணைகளில் அமைந்துள்ள அகத்துறைகள், புறத்துறைகள் பற்றியும் கூற்று நிலையில் தலைவன், தலைவி, தோழி போன்றோரது கூற்றுகள் நிகழும் இடங்கள் குறித்தும், சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்கள் இடம்பெற்றுள்ள நூல்கள் பற்றியும், சங்கப் பெண்பாற் புலவர்கள் பற்றியும் இவ்வியலுள் விளக்கப்பட்டுள்ளன.

**திணை**

தொல்காப்பியரின் அறிவார்ந்த பகுப்பு முறைகளுள் அடிப்படையானது அகம் - புறம் என்கிற பகுப்பு முறையாகும். அகம் - புறம் என்கிற பகுப்பு முறையானது மனித உள்ளத்தின் உணர்வையும் அதன் அடிப்படையில் நிகழ்கின்ற நிகழ்வுகளையும் சுட்டுகிறது. ‘அகம்’ என்பதற்கு ‘காதல்’ என்ற பொருளும் ‘புறம்’

என்பதற்கு ‘வீரம்’ என்ற பொருளும் பொதுவாகக் கொள்ளப்படுகிறது. அவ்வீரத்திற்கும் காதலே அடிப்படை என்பதும் கருத்து.

தொல்காப்பியர் அகத்திணை பற்றிக் குறிப்பிடுகையில் இரண்டு நிலையில் கூறுகிறார். முதலாவதாக அன்பின் ஐந்திணையாக விளங்கும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை மற்றும் கைக்கிளை, பெருந்திணை ஆகியவற்றையும் இரண்டாவதாக, பிறர் அறியாத நிலையில் உள்ள களவு மற்றும் திருமணத்திற்குப் பின்னரான கற்பு ஆகியவற்றையும் அகத்திணைபாற்பட்டதாக உரைப்பார். அதே போன்று புறத்திணைப் பற்றி தொல்காப்பியர் கூறுகையில்,

“அகத்திண மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்” ***(புறம். 1)***

என ஒவ்வொரு புறத்திணைக்கும் இணையாக ஒரு அகத்திணையைச் சுட்டுவார். அவையாவன,

| | | |
|---|---|---|
| வெட்சி | - | குறிஞ்சி |
| வஞ்சி | - | முல்லை |
| உழிஞை | - | மருதம் |
| தும்பை | - | நெய்தல் |
| வாகை | - | பாலை |
| காஞ்சி | - | பெருந்திணை |
| பாடாண் | - | கைக்கிளை |

அகத்திணைகள் யாவும் நிலம் அடிப்படையிலும், அவற்றின் பெயர்கள் யாவும் மலர்களின் பெயர்களாகவும் வரையறுக்கப்பட்டுள்ளன. அகத்திணையில் இடம்பெறும் மாந்தர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. தலைவன், தலைவி, தோழி, பாங்கன், பரத்தை, பாணன், செவிலி போன்றோர்கள் மட்டுமே இவற்றில் காண முடியும். புறத்திணை மாந்தர்கள் இன்னின்னவர்கள் என எந்த வரையறையும் இல்லை. புறப்பாடல்களில் இடம்பெறும் மாந்தர்கள் யாவரும்

பலவகைப்பட்டவர்களாக அமைந்துள்ளனர். அகத்திணைகளுக்கு முதல், உரி, கரு பொருள்கள் உண்டு. அதே போன்று உள்ளுறை, இறைச்சி எனும் உத்திகளும் அகப்பாடல்களுக்கு உரியனவாகும். சங்க இலக்கியத்திலும் அகப்பாடல்களே மிகுதியானவை. அங்ஙனம் இருக்க சங்கப் பெண்பாற்புலவர்கள் அகத்தை விட புறப்பாடல்களையே மிகுதியாக யாத்துள்ளனர். சங்கப் பெண்பாற் புலவர்களது அகப்பாடல்களில் குறிஞ்சி முதல் பாலை வரையுள்ள அன்பின் ஐந்திணைகள் மட்டுமே அமைந்துள்ளன. கைக்கிளை மற்றும் பெருந்திணைப் பாடல்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. புறப்பாடல்களில் பாடாண், வாகை, தும்பை, பொதுவியல், வெட்சி, கரந்தை, கைக்கிளை, நொச்சி ஆகிய துறைகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன.

சங்கப் பெண்பாற்புலவர்களது அகப்பாடல்களில் இடம்பெற்றுள்ள புலவர்களது பெயர், பாடல் எண், திணை, கூற்று ஆகியவையும் அதே போன்று புறப்பாடல்களில் இடம்பெற்றுள்ள புலவர்களது பெயர், பாடல் எண், திணை, துறை ஆகியவையும் கீழ்க்காணும் அட்டவணையில் விளக்கமாக அளிக்கப்பட்டுள்ளன.

**அகநானூறு**

**அட்டவணை *1.1***

| **வ.எண்** | **புலவர்** | **பாடல் எண்** | **திணை** | **கூற்று** |
|---|---|---|---|---|
| *1* | அஞ்சியத்தை மகள் நாகையார் | *352* | குறிஞ்சி | தலைவி |
| *2* | ஒக்கூர் மாசாத்தியார் | *324*<br>*384* | முல்லை<br>முல்லை | உழையர்<br>உழையர் |
| *3* | ஔவையார் | *11*<br>*147*<br>*273*<br>*303* | பாலை<br>பாலை<br>பாலை<br>பாலை | தலைவி<br>தலைவி<br>தலைவி<br>தலைவி |
| *4* | கழார்க்கீரன் எயிற்றியார் | *169*<br>*217* | பாலை<br>பாலை | தலைவி<br>தலைவி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 235<br>294 | பாலை<br>முல்லை | தலைவி<br>தலைவி |
| 5 | குமிழிஞாழலார் நப்பசலையார் | 160 | நெய்தல் | தோழி |
| 6 | போந்தைப் பசலையார் | 110 | நெய்தல் | தோழி |
| 7 | நக்கண்ணையார் | 252 | குறிஞ்சி | தலைவி |
| 8 | வெள்ளிவீதியார் | 45<br>362 | நெய்தல்<br>பாலை | தலைவி<br>தலைவி |
| 9 | வெறிபாடிய காமக் கண்ணியார் | 22<br>98 | குறிஞ்சி<br>குறிஞ்சி | தலைவி<br>தோழி |

**குறுந்தொகை**

**அட்டவணை 1.2**

| **வ.எண்** | **புலவர்** | **பாடல் எண்** | **திணை** | **கூற்று** |
|---|---|---|---|---|
| 1 | ஆதிமந்தி | 31 | மருதம் | தலைவி |
| 2 | ஊண்பித்தை | 232 | பாலை | தோழி |
| 3 | ஒக்கூர் மாசாத்தியார் | 126<br>139<br>186<br>220<br>275 | முல்லை<br>மருதம்<br>முல்லை<br>முல்லை<br>முல்லை | தலைவி<br>தோழி<br>தலைவி<br>தலைவி<br>தோழி |
| 4 | ஔவையார் | 15<br>23<br>28<br>29<br>39<br>43<br>80 | பாலை<br>குறிஞ்சி<br>பாலை<br>குறிஞ்சி<br>பாலை<br>பாலை<br>மருதம் | செவிலி<br>தோழி<br>தலைவி<br>தலைவன்<br>தலைவி<br>தலைவி<br>பரத்தை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | *91*<br>*99*<br>*102*<br>*158*<br>*183*<br>*200*<br>*364*<br>*388* | மருதம்<br>முல்லை<br>நெய்தல்<br>குறிஞ்சி<br>முல்லை<br>நெய்தல்<br>மருதம்<br>பாலை | தலைவி<br>தலைவன்<br>தலைவி<br>தலைவி<br>தலைவி<br>தோழி<br>தலைவி<br>தோழி |
| *5* | கழார்க்கீரன் எயிற்றியார் | *35*<br>*261* | மருதம்<br>குறிஞ்சி | தலைவி<br>தலைவி |
| *6* | காக்கைப் பாடினி நச்செள்ளையார் | *210* | முல்லை | தோழி |
| *7* | நன்னாகையார் | *30*<br>*118*<br>*172*<br>*180*<br>*192*<br>*197*<br>*287*<br>*325* | பாலை<br>நெய்தல்<br>நெய்தல்<br>பாலை<br>பாலை<br>நெய்தல்<br>முல்லை<br>நெய்தல் | தலைவி<br>தலைவி<br>தலைவி<br>தோழி<br>தலைவி<br>தலைவி<br>தோழி<br>தலைவி |
| *8* | நெடும்பல்லியத்தை | *178*<br>*203* | மருதம்<br>மருதம் | தோழி<br>தலைவி |
| *9* | பூங்கணுத்திரையார் | *48*<br>*171* | பாலை<br>மருதம் | தோழி<br>தலைவி |
| *10* | வருமுலையாரித்தி | *176* | குறிஞ்சி | தோழி |
| *11* | வெண்பூதியார் | *97*<br>*174*<br>*219* | நெய்தல்<br>பாலை<br>பாலை | தலைவி<br>தலைவி<br>தலைவி |
| *12* | வெண்மணிப்பூதியார் | *299* | நெய்தல் | தலைவி |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | வெள்ளிவீதியார் | 27<br>44<br>58<br>130<br>146<br>149<br>169<br>386 | பாலை<br>பாலை<br>குறிஞ்சி<br>பாலை<br>குறிஞ்சி<br>பாலை<br>மருதம்<br>நெய்தல் | தலைவி<br>தலைவி<br>தலைவன்<br>தோழி<br>தோழி<br>தலைவி<br>தோழி<br>தலைவி |

**நற்றிணை**

**அட்டவணை 1.3**

| **வ.எண்** | **புலவர்** | **பாடல் எண்** | **திணை** | **கூற்று** |
|---|---|---|---|---|
| 1 | அஞ்சில் அஞ்சியார் | 90 | மருதம் | தோழி |
| 2 | ஔவையார் | 129<br>187<br>295<br>371<br>381<br>390<br>394 | குறிஞ்சி<br>நெய்தல்<br>நெய்தல்<br>முல்லை<br>முல்லை<br>மருதம்<br>முல்லை | தோழி<br>தலைவி<br>தோழி<br>தலைவன்<br>தலைவி<br>தலைவி<br>தோழி |
| 3 | கழார்க்கீரன் எயிற்றியார் | 281<br>312 | பாலை<br>பாலை | தலைவி<br>தலைவன் |
| 4 | குறமகள் குறியெயினி | 357 | குறிஞ்சி | தலைவி |
| 5 | நக்கண்ணையார் | 19<br>87 | நெய்தல்<br>நெய்தல் | தோழி<br>தலைவி |
| 6 | நப்பசலையார் | 243 | பாலை | தலைவி |
| 7 | மாறோகத்து நப்பசலையார் | 304 | குறிஞ்சி | தலைவி |
| 8 | வெள்ளி வீதியார் | 70 | மருதம் | தலைவி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 335<br>348 | நெய்தல்<br>நெய்தல் | தலைவி<br>தலைவி |
| 9 | வெறிபாடிய காமக்கண்ணியார் | 268 | குறிஞ்சி | தோழி |

**பதிற்றுப்பத்து**

**அட்டவணை 1.4**

| வ.எண் | புலவர் | பாடல் எண் | திணை | கூற்று |
|---|---|---|---|---|
| 1 | காக்கைப்பாடினி நச்செள்ளையார் | 51 | பாடாண் | வஞ்சி |
| | | 52 | பாடாண் | குரவை நிலை |
| | | 53 | பாடாண் | செந்துறை |
| | | 54 | பாடாண் | காட்சிவாழ்த்து |
| | | 55 | பாடாண் | செந்துறை |
| | | 56 | பாடாண் | ஒல்வாள்அமலை |
| | | 57 | பாடாண் | விறலியாற்றுப்படை |
| | | 58 | பாடாண் | செந்துறை |
| | | 59 | பாடாண் | செந்துறை |
| | | 60 | பாடாண் | விறலியாற்றுப்படை |

**புறநானூறு**

**அட்டவணை 1.5**

| வ.எண் | புலவர் | பாடல் எண் | திணை | துறை |
|---|---|---|---|---|
| 1 | ஒக்கூர் மாசாத்தியார் | 279 | வாகை | மூதின்முல்லை |
| 2 | ஔவையார் | 87 | தும்பை | தானைமறம் |
| | | 88 | தும்பை | தானைமறம் |
| | | 89 | தும்பை | தானைமறம் |
| | | 90 | தும்பை | தானைமறம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | *91* | பாடாண் | வாழ்த்தியல் |
| | | *92* | பாடாண் | வாழ்த்தியல் |
| | | *93* | வாகை | அரசவாகை |
| | | *94* | வாகை | அரசவாகை |
| | | *95* | பாடாண் | வாள்மங்கலம் |
| | | *96* | பாடாண் | இயன்மொழி |
| | | *97* | பாடாண் | இயன்மொழி |
| | | *98* | வாகை | அரசவாகை |
| | | *99* | வாகை | அரசவாகை |
| | | *100* | வாகை | அரசவாகை |
| | | *101* | பாடாண் | பரிசில்நிலை |
| | | *102* | பாடாண் | இயன்மொழி |
| | | *103* | பாடாண் | விறலியாற்றுப்படை |
| | | *104* | வாகை | அரச வாகை |
| | | *140* | பாடாண் | பரிசில்விடை |
| | | *187* | பொதுவியல் | பொருண்மொழிக்காஞ்சி |
| | | *206* | பாடாண் | பரிசில்நிலை |
| | | *231* | பொதுவியல் | கையறுநிலை |
| | | *232* | பொதுவியல் | கையறுநிலை |
| | | *235* | பொதுவியல் | கையறுநிலை |
| | | *269* | வெட்சி | உண்டாட்டு |
| | | *286* | கரந்தை | வேத்தியல் |
| | | *290* | கரந்தை | குடிநிலைஉரைத்தல் |
| | | *295* | தும்பை | உவகைக்கலுழ்ச்சி |
| | | *311* | தும்பை | பாண்பாட்டு |
| | | *315* | தும்பை | வல்லாண்முல்லை |
| | | *367* | பாடாண் | வாழ்த்தியல் |
| | | *390* | பாடாண் | இயன்மொழி |
| | | *392* | பாடாண் | கடைநிலை |
| *3* | காக்கைப்பாடினி நச்செள்ளையார் | *278* | தும்பை | உவகைக்கலுழ்ச்சி |
| *4* | காவற்பெண்டு | *86* | வாகை | ஏறாண்முல்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | குறமகள் இளவெயினி | 157 | பாடாண் | இயன்மொழி |
| 6 | தாயங்கண்ணியார் | 250 | பொதுவியல் | தாபதநிலை |
| 7 | நக்கண்ணையார் | 83<br>84<br>85 | கைக்கிளை<br>கைக்கிளை<br>கைக்கிளை | பழிச்சுதல்<br>பழிச்சுதல்<br>பழிச்சுதல் |
| 8 | பாரிமகளிர் | 112 | பொதுவியல் | கையறுநிலை |
| 9 | பூங்கணுத்திரையார் | 277 | தும்பை | உவகைக்கலுழ்ச்சி |
| 10 | பெருங்கோப்பெண்டு | 246 | பொதுவியல் | ஆனந்தப்பையுள் |
| 11 | பேய்மகள் இளவெயினி | 11 | பாடாண் | பரிசில் நிலை |
| 12 | மாற்பித்தியார் | 251<br>252 | வாகை<br>வாகை | தாபத வாகை<br>தாபத வாகை |
| 13 | மாறோகத்து நப்பசலையார் | 37<br>39<br>126<br>174<br>226<br>280<br>383 | வாகை<br>பாடாண்<br>பாடாண்<br>வாகை<br>பொதுவியல்<br>பொதுவியல்<br>பாடாண் | அரச வாகை<br>இயன்மொழி<br>பரிசில்துறை<br>அரசவாகை<br>கையறுநிலை<br>ஆனந்தப்பையுள்<br>இயன்மொழி |
| 14 | வெண்ணிக்குயத்தியார் | 66 | வாகை | அரசவாகை |
| 15 | வெறிபாடிய காமக்கண்ணியார் | 271<br>302 | நொச்சி<br>நொச்சி | செருவிடை வீழ்தல்<br>குதிரை மறம் |

**துறை**

சங்க இலக்கியத்தில் ‘துறை’ எனப்படுவது திணைக்கு அடுத்த நிலையில் செய்யுளில் அமையப்பெற்ற நிகழ்வுகளின் வெளிப்பாட்டினை உரைப்பதாகும். அதாவது செயல், சூழல், அகஉணர்வு ஆகியவற்றை வெளிப்படுத்தும் முக்கியக் கூறாக அமைவன. இவை உடல் சார்ந்தும், மொழி சார்ந்தும், உணர்வு சார்ந்தும் விளக்கம் பெறுகின்றன எனலாம். அகம், புறம் ஆகிய

திணைகளுக்கு உரிய செயல்பாடுகளையும் உணர்வு வெளிப்பாடுகளையும் இத்துறைகள் உணர்த்த வல்லன. இவற்றின் அடிப்படையில் மொழிப்பயன்பாடு மாறுவதற்கு வாய்ப்புள்ளதால் துறை சார்ந்தும் புலவர்களின் மொழி ஆளுமையை ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

சங்கப் பெண்பாற்புலவர்களின் அகப்பாடல்கள் பல ஒன்றிற்கும் மேற்பட்ட துறைகளுள் இடம்பெற்றுள்ளன. மேலும் ஒரே அகத்துறையில் குறிப்பிட்ட அளவில் பாடல்கள் இடம்பெறவில்லை என்பதால் அகத்துறைகள் அடிப்படையில் பாடல்களை ஆய்விற்கு உட்படுத்தவில்லை. ஆனால் புறத்துறைகளுள் தானைமறம், அரசவாகை, கையறுநிலை போன்றவை ஒரு குறிப்பிட்ட அளவில் இடம்பெற்றுள்ளதால் இப்புறத்துறைகள் மட்டும் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

சங்கப் பெண்பாற் புலவர்களது புறப்பாடல்களில் தானை மறம், வாழ்த்தியல், அரசவாகை, இயன்மொழி, கையறுநிலை, உவகைக் கலுழ்ச்சி, பழிச்சுதல், தாபத வாகை, பரிசில் துறை, ஆனந்த பையுள், ஏறாண் முல்லை, மூதின் முல்லை, குதிரை மறம், வாள்மங்கலம், பரிசல் கடாநிலை, விறலியாற்றுப்படை, பரிசில் விடை, பொருண்மொழிக்காஞ்சி, உண்டாட்டு, வேத்தியல், குடிநிலை உரைத்தல், பாண்பாட்டு, வல்லாண் முல்லை, கடைநிலை ஆகிய 24 துறைகள் மட்டுமே இடம்பெற்றுள்ளன.

பதிற்றுப்பத்தில் செந்துறை, விறலியாற்றுப்படை, வஞ்சி, குரவைநிலை, காட்சிவாழ்த்து, ஒல்வாள் அமலை போன்ற துறைகள் இடம் பெற்றுள்ளன. விறலியாற்றுப்படை தவிர பிற பதிற்றுப்பத்துத் துறைகள் புறப்பாடல்களில் இடம்பெறவில்லை.

**கூற்று**

‘கூற்று’ என்பது சங்கப் பாடல்களில் இடம்பெறும் மாந்தர்களது மொழியாகும். சங்க இலக்கியம், திணை இலக்கியமாக அமைந்திருப்பினும் அத்திணைகளில் இடம்பெறுகின்ற மாந்தர்களது மொழியாலேயே அவ்விலக்கியம் முழுமையும் நிறைவும் பெறுகின்றதெனலாம்.

புறப்பாடல்கள் யாவும் புலவர், பாணர், விறலி, அரசன் போன்றோரது கூற்றுகளாக அமைந்துள்ளன. அகப்பாடல்கள் யாவும் அகவுணர்வுகளை வெளிப்படுத்தும் ஆற்றல் மிக்க மொழியுடன் கூடிய தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலி போன்றோரது கூற்றுகளாக இடம்பெற்றுள்ளன. சங்கப் பெண்பாற்பலவர்களது பாடல்களில் தலைவி கூற்றே மிகுந்துள்ளன. அதற்கு அடுத்த நிலையில் தோழியின் கூற்று இடம்பெற்றுள்ளது.

**அட்டவணை 1.6**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | உழையர் | செவிலி | பரத்தை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அகநானூறு | - | 13 | 3 | 2 | - | - |
| 2 | நற்றிணை | 2 | 11 | 6 | - | - | - |
| 3 | குறுந்தொகை | 3 | 30 | 15 | - | 1 | 1 |
| | மொத்தம் | 5 | 54 | 24 | 2 | 1 | 1 |

சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் பெண்நிலைக் கூற்றுகளே அதிகம் காணப்படுகின்றன. தலைவன் கூற்று நற்றிணையில் 2-உம் குறுந்தொகையில் 3-மாக 5 இடங்களில் மட்டுமே இடம்பெற்றுள்ளன.

‘‘தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்
எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லைப்
பிறநீர் மாக்களின் அறிய ஆயடைப்
பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப’’ **(தொல். 116 : 4)**

என்பது தொல்காப்பிய நூற்பா. தலைவி தன் விருப்பத்தைத் தலைவனிடம் முன்னதாகச் சொல்லுதல் வழக்கம் இல்லை. எனினும் அவளது விருப்பமானது புதுப்பானையில் இட்ட நீரானது புறத்தே கசிவது போன்ற உணர்வினதாய் இருத்தல் வேண்டும் என்பது அக்கால சமூகச் சூழலாகும். கடல் மீது பயணம் மேற்கொள்வதும் பெண்களுக்கு இல்லை. பெண்களுக்கென சில கட்டுப்பாடுகளும், விதிமுறைகளும் வரையறுக்கப்பட்ட சங்க காலச்சூழலில் பாடல்கள் புனைவது என்பதே தனிப்பெரும் சிறப்பாகும். கிடைத்த வாய்ப்புகளிலும் தலைவன் கூற்றில் பாடல் புனைவது என்பது

அவர்களுக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தாமல் போவது என்பதாகும். ஆகையால் பெண் கூற்றிலேயே பாடல்கள் இயற்றி தனது மனவுணர்வுகளை இதன் வாயிலாக வெளிப்படுத்தி இருத்தல் கூடும். இவர்களது மொழிக் கட்டமைப்பு என்பது தனித்தன்மை வாய்ந்ததாகும். சங்கப் பெண்பாற் புலவர்களது வழியே இவர்களது மொழிப்பாங்கானது எங்ஙனம் மாறுபாடு அடைந்துள்ளதென ஒலி, சொல், தொடர் ஆகியவற்றின் அடிப்படையில் ஆராயப் பெறுகிறது.

**நூல்**

சங்க இலக்கியம் எனப்படுபவை சங்க காலத்துத் தோன்றியதென அறியப்படும் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். எட்டுத்தொகை பற்றிய குறிப்புகள் முதன் முதலில் இறையனார் களவியலுரையில் காணப்படுகிறது. அவை யாவும் நூல்களின் எண்ணிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. (நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல்) இப்பெயர்கள் சில பிற்காலத்தில் மாற்றம் பெற்றன. எட்டுத்தொகையை,

“நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறு நூறு
ஒத்த பதிற்றுப் பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடு அகம் புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை”

என பழம்பாடல் ஒன்று வரிசைப்படுத்தும் எட்டுத்தொகையுள் புறநானூறும் பதிற்றுப்பத்தும் புற நூல்களாகும். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்து நூல்களும் அக நூல்களாகும். பரிபாடல் மட்டும் அகமும் புறமும் கலந்த நூலாக அமைந்துள்ளது. இவற்றை முன்பழந்தமிழ் நூல்கள் எனவும் பின்பழந்தமிழ் நூல்கள் எனவும் பகுக்கலாம். சங்கப்பெண்பாற் புலவர்கள் ஐங்குறுநூறு, கலித்தொகை, பரிபாடல் ஆகிய மூன்று நூல்களைத் தவிர நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகிய ஐந்து

நூல்களுள் பாடியுள்ளனர். இவ்வைந்து நூல்களின் வாயிலாகவும் சங்கப் பெண்பாற்புலவர்களின் மொழிக் கட்டமைப்பு உற்று நோக்கப்படுகின்றது.

**புலவர்**

சங்க காலத்தில் வாழ்ந்த புலவர் பெருமக்களால் பாடப்பெற்றதே சங்க இலக்கியங்களாகும். இப்புலவர்கள் இல்லையேல் சங்க இலக்கியங்கள் இல்லை எனும் அளவிற்கு இப்புலவர்கள் சிறப்பு பெற்றவர்களாவர். சங்க இலக்கியத்தில் மொத்தம் 473 புலவர்கள் இடம்பெற்றுள்ளனர். இப்புலவர்களது செம்மாந்த பண்பட்ட எண்ணங்களின் வெளிப்பாடாகவே சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. தனித்தனிப் புலவர்களால் இயற்றப் பெற்றாலும் ‘சங்க இலக்கியங்கள்’ என்ற ஒற்றைத் தலைப்பில் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இயங்குகின்றன. இவர்களிடையே அகம் - புறம் எனும் அடிப்படையில் ஒரு பொதுமைப் பண்பு இழையோடிக் காணப்படுகின்றன. 473 புலவர் பெருமக்களுள் 30 பெண்பாற் புலவர்களும் அடங்குவர். அகம் - புறம் என்ற நிலையில் இவர்களும் பல பாடல்களை இயற்றி சங்க இலக்கியங்களுக்குப் பெரும்பங்காற்றியுள்ளனர். ஆண்புலவர்களுக்கு இணையாக இவர்கள் கவிதைகள் படைத்துள்ளனர். ஆண்பாற் புலவர்களின் நடையும் இவர்களது நடையும் ஒன்றானதா, வேறுபட்டதா என்பதும் ஒப்பீடு செய்து ஆராயப்பட வேண்டியதாகும்.

சங்கப் பெண்பாற்புலவர்களின் எண்ணிக்கை குறித்துப் பல்வேறு கருத்துகள் அறிஞர்களிடையே நிலவுகின்றன. அவை குறித்து கீழே விளக்கப் பட்டுள்ளன.

**சங்கப் பெண்பாற்புலவர்களின் எண்ணிக்கை குறித்த அறிஞர்களின் கருத்துக்கள்**

சங்கப் பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை குறித்து அறிஞர்களிடையே பல முரண்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. சங்கப் புலவர்களது பெயர்கள் ஊர், குடி, குலம் போன்றவற்றின் அடிப்படையிலும் பாடற் தொடர்களாலும் அறியப்படுகின்றனர். சிலர் பாடல் கருத்துக்களாலும் பெயர்

பெற்றுள்ளனர். எவ்வகையில் இருப்பினும் சங்கப் புலவர்கள் 473 பேர் என்ற எண்ணிக்கையில் மாறுபட்ட கருத்துக்கள் இல்லை. ஆனால் சங்கப் பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கையில் ஒன்றுக்கும் மேற்பட்ட கருத்துக்கள் கூறப்படுகின்றன.

i. “ஏறக்குறைய ஐம்பது பெண்பாலர் இயற்றிய செய்யுட்கள் இப்பொழுது கிடைக்கின்றன. மற்றப் புலவர்களுடைய வாக்குக்கு எவ்வளவு சிறப்பு உண்டோ அவ்வளவு சிறப்பு இவர்களுடைய செய்யுட்களுக்கும் உண்டு”[8] என நல்லுரைக்கோவை - இரண்டாம் பாகம் எனும் நூலிலும், ‘சங்க காலத்தில் தமிழாராய்ந்து விளக்கிய பெண்பாலர் ஐம்பதின்மருக்கு மேலிருக்கலாமென்று தெரிகிறது” என சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் எனும் நூலிலும் உ.வே.சா. அவர்கள் பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை குறித்துக் கூறுகிறார்.[9]

ii. ‘சங்க பெண்புலவர்கள் 45 பேர் கவிதை படைத்துள்ளனர். இது சிந்திக்கத்தக்க ஒன்று. பத்துப்பாட்டில் ஒரே ஒரு பெண் கவிதை யாத்து உள்ளார்”[10] என மகடூஉ முன்னிலை எனும் நூலிலும், ‘சங்க காலத்தில் பெண்ணுக்குக் கல்வி கற்கச் சமவாய்ப்பு நல்கப் பெற்றிருந்தது. இதனைச் சங்க இலக்கியங்களுள் முப்பது பெண்பாற் புலவர்கள் இடம்பெற்றிருந்தது உறுதி செய்கிறது’ என தையல் சொல் கேளீர் எனும் நூலிலும் சங்கப் பெண்பாற்புலவர்களின் எண்ணிக்கை குறித்து இருவேறு முரண்பட்ட கருத்துக்களை தாயம்மாள் அறவாணன் கூறுகிறார்.

iii. ‘சங்க காலத்தில் பல்வேறு சமூகச் சூழ்நிலையிலிருந்து வந்த 41 பெண்கள் கவிதை எழுதியிருக்கிறார்கள் என்றும் சங்கம் வளர்த்த மதுரை தவிர சேரநாடு, ஆந்திர நாட்டு பகுதிகளிலிருந்தும் பெண்கள் எழுதியிருக்கிறார்கள்’ என இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் தமது

[8] சாமிநாதையர், உ.வே., நல்லுரைக்கோவை, 2-ம் பாகம், ப.144.
[9] சாமிநாதையர், உ.வே., சங்கத்தமிழும் பிற்காலத் தமிழும், ப.79.
[10] தாயம்மாள் அறவாணன், மகடூஉ முன்னிலை, ப.5.

கட்டுரை ஒன்றில் கூறியுள்ளதாக வ.ஜெயா அவர்கள் சங்கப் பெண்பாற் புலவர்கள் மொழியும் கருத்தும் எனும் நூலில் குறிப்பிடுகிறார்.

iv. 'சங்க நூல்களில் ஐம்பதின்மருக்குக் குறையாத பெண்பாற் புலவர்கள் இயற்றிய பாடல்களைக் காணலாம்' என புஷ்பம் நடராஜன் அவர்கள் கூறுகிறார்.

v. 'ஐம்பதிற்கும் மேற்பட்ட பெண்பாற்புலவர்கள் சங்கப் புலவர்கள் வரிசையில் இடம்பெற்றிருக்கக் காணலாம்' என சி.பாலசுப்பிரமணியம் கூறுகிறார்.

vi. பெ.சு.மணி அவர்கள் 41 பெண்பாற் புலவர்கள் உள்ளதாகக் கூறுவார்.

vii. ஔவை துரைசாமிப் பிள்ளையும் பெண்பாற் புலவர்கள் 41 பேர் என்ற கொள்கையுடையவர்.

viii. வ.ஜெயா அவர்கள் 42 சங்கப் பெண்பாற் புலவர்கள் உள்ளதாகக் கருதுவார்.

ix. ந. சஞ்சீவி அவர்கள் 'சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணை' எனும் நூலில் சங்கப்பெண்பாற் புலவர்கள் மொத்தம் 30 பேரை நிரல்படுத்துகிறார்.

x. ரா.ராகவையங்கார், ஔவையார் உள்ளிட்ட 31 பெண்பாற் புலவர்களை ஆராய்ந்ததாகக் குறிப்பிடுகிறார்.

xi. 473 சங்கப் புலவர்களுள் 30 பேர் பெண்பாற் புலவர்கள் என வள்ளி நாயகி குறிப்பிடுவார்.

xii. 'பெருமைக்குரிய பெண்டிர்' எனும் நூலில் தி.இராச கோபாலன் அவர்கள் 30 பேரை வரிசைப்படுத்தியுள்ளார்.

xiii. 'வாழையடி வாழையாகப் பாக்கள் புனைந்தும் நூற்கள் யாத்தும் தமிழன்னையை அலங்கரித்த பெண்பாற் புலவர்கள் எண்ணிலடங்கார்.

எனினும் இடையிடையே இவ்வரிசை ஒளிமங்கிக் காணப்படுகிறது' என கா.கோவிந்தன் அவர்கள் சங்கத் தமிழ் புலவர் வரிசை – 4 எனும் நூலில் சங்கப் பெண்பாற்புலவர்களின் வரிசையில் முரண்பட்ட கருத்துக்கள் நிலவுவதனை இவ்வாறு குறிப்பிடுகிறார்.

மேற்காணும் கூற்றுகளிலிருந்து பெண்பாற் புலவர்கள் குறித்த எண்ணிக்கையில் ஒருமித்த கருத்துகள் அறிஞர்களிடையே காணப்படவில்லை என்பதை அறியலாம். ஆகையால் அவர்களது பாடல் எண்ணிக்கையும் மாறுபட்டு அமைகிறது. இவ்வாய்விற்காக ந.சஞ்சீவி அவர்களின் கூற்றின்படி 30 பெண்பாற்புலவர்களின் 154 பாடல்கள் மட்டுமே நோக்கப்பட்டுள்ளன. இப்பெண்பாற் புலவர்களது பாடல்களில் அமைந்துள்ள ஒலி, சொல், தொடர் ஆகிய கூறுகள் திணை, துறை, கூற்று, நூல், புலவர் ஆகியவற்றின் அடிப்படையில் நோக்கப்பட்டுள்ளன. இக்கூறுகளின் வழியே சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழிநடையை ஆராய்வதன் வாயிலாக அவர்களது கவிதைக் கட்டமைப்பு எங்ஙனம் அமைந்துள்ளது என்பதை அறிய இயலும். மொழிநடையைக் கண்டறிவதால் நடை பற்றிய விளக்கங்களும் இவ்வியலுள் விரிவாக எடுத்துரைக்கப் பெற்றுள்ளன.

## முடிவுரை

சங்க இலக்கியங்கள் தனக்கென ஒரு குறிப்பிட்ட நடையைக் கொண்டுள்ளன. அவ்வகையில் சங்கப் பெண்பாற் புலவர்களும் அத்தனித்தன்மைக்கு குறிப்பிட்ட அளவில் செயலாற்றியுள்ளனர். இவ்வியலில் நடைகுறித்த பொதுவான விளக்கங்களும் அது பற்றி அறிஞர்களிடையே நிலவும் கருத்துகளும் விரிவாக எடுத்துரைக்கப்பெற்றுள்ளன. திணை, துறை, கூற்று, புலவர், நூல் ஆகியவற்றின் அடிப்படையில் சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்கள், ஒலி. சொல், தொடர் ஆகிய கூறுகளின் அடிப்படையில் ஆராயப்படுவதால் அவை குறித்த விளக்கங்களும் இவ்வியலில் கூறப்பட்டுள்ளன. மேலும் இவ்வியலில் சங்கப் பெண்பாற் புலவர்கள் பாடல்கள் எந்தெந்த திணை, துறைகளில் அமைந்துள்ளன என்பதும் அப்பாடலுக்குரிய எண்களையும் யார் கூற்றில் எத்தனைப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன என்பதும் அட்டவணைகளாகத் தரப்பெற்றுள்ளன.

# இயல் - 2

## ஒலி நிலை

செய்யுளுக்கு ஒலியே அடிப்படையாகும். செய்யுள்களில் அமைந்துள்ள ஒலிக் கூறுகளின் தன்மையை பன்முக நோக்கில் ஆராயலாம். அவ்வகையில் தொல்காப்பியர் சுட்டும் தொடைநிலையில் இத்தகைய ஒலிக்கூறுகளை ஆராய்வதன் வாயிலாக தனிப்பட்ட புலவர்களின் மொழிநடையைக் கண்டறிய இயலும். சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் அமைந்துள்ள ஒலிநிலையை ஆராய்வதாக இவ்வியல் அமைகிறது.

தொல்காப்பியர் *34* செய்யுள் உறுப்புகளைச் சுட்டுவார். யாப்பிலக்கண நூல்கள் சங்கப் பாடல்களை உறுப்பியல், செய்யுளியல் என இருவகைப்படுத்தும். அவற்றுள் உறுப்பியலானது எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியவற்றை விளக்கி அமையும். மேற்குறிப்பிட்ட செய்யுள் உறுப்புகள் இன்றி கவிதை அமையாது. எழுத்து, அசை, சீர், தளை, அடி ஆகிய உறுப்புகள் இவ்வாய்வில் நோக்கப்பட்டாலும் ஆய்வு வரையறை கருதியும் தொடை நிலையில் அமைந்த ஒலிக்கூறுகள் தனித்தன்மை பெற்று விளங்கியதாலும் தொடை தவிர்த்த பிற செய்யுள் உறுப்புகள் இவ்வாய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. ‘தளை’ நிலையில் நேரொன்றிய ஆசிரியத் தளையும், நிரையொன்றிய ஆசிரியத் தளையும் இயற்சீர் வெண்டளையுமே மிகுதியாக பெண்பாற் புலவர்களது பாடல்களில் காணப்பெறுகிறது. ஆசிரியப் பாவினைக் கொண்டதாக சங்க இலக்கியங்கள் இருப்பதால் இத்தகைய ஆசிரியத் தளைகள் மிகுதியாக அமைந்துள்ளன எனலாம். ஆய்வுத் தரவிற்கு இவை போதுமானதாக இல்லையென்பதால் இத்தளை அமைப்புகளை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

## தொடைக் கூறுகள்

தொல்காப்பியர் மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை, பொழிப்பு, ஒரூஉ, செந்தொடை, நிரனிறுத்தமைத்தல், இரட்டையாப்பு என்னும் பத்துவகைத் தொடைகளைக் குறிப்பிடுகின்றார்.

**"மோனை எதுகை முரணே இயைபென**
**நால்நெறி மரபின் தொடைவகை என்ப"**
**(தொல். செய். *84*)**

என்றும்,

**"அளபெடை தலைப்பெய ஐந்தும் ஆகும்"**
**(தொல்.செய்.*85*)**

என்றும் தொல்காப்பியம், முதன்மைத் தொடைகள் ஐந்தினைக் கூறும்.

பொழிப்பு, ஒரூஉ ஆகியன தொடை விகற்பகங்களாக அமைந்தவை. செந்தொடை, நிரனிறுத்தமைத்தல், இரட்டை யாப்பு போன்றவை ஆய்விற்கு உட்படுத்தப்படவில்லை.

''எதுகை, மோனை போன்றவை இலக்கிய உத்திகளாகப் ஆளப்பட்டிருப்பினும் இவ்வுத்திகள் நினைவாற்றலை எளிமைப்படுத்தவே கையாளப் படுகின்றன. காலப்போக்கில் இவை அணி மற்றும் யாப்பின் அடிப்படையில் வளர்த்துக்கொள்ளப்பட்டன என முனைவர் ஜெ.நீதிவாணன் அவர்கள் 'நடையியல்' என்ற நூலில் குறிப்பிடுகிறார்.[11]

எதுகை, மோனை, இயைபு, அளபெடை ஆகியவற்றைத் தொல்காப்பியர் ஒலி நிலையிலும் முரண் என்பதை சொல் நிலையிலும் ஒரூஉ,

---

[11] *நீதிவாணன், ஜெ., நடையியல், ப.38.*

பொழிப்பு ஆகியவற்றை தொடர்நிலையிலும் அமைத்து ஒலிக்கும், சொல்லுக்கும், தொடருக்கும் உள்ள பிணைப்பைப் புலப்படுத்துகிறார்.

சங்கச் செய்யுள்கள் இத்தகைய ஒலிநயத்திற்கு முதன்மையான இடத்தைத் தருவன. மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை ஆகிய தொடைக்கூறுகள் மட்டுமல்லாது சங்க பெண்பாற்புலவர்களின் பாடல்களுள் அமைந்துள்ள ஒலிக்குறிப்புச் சொற்களையும் இவ்வியல் ஆராய்கிறது. மோனை, எதுகை, இயைபு ஆகிய தொடைக்கூறுகளில் சீர்நிலையில் அமையும் இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று ஆகிய வகைகளையும், சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் முரண் குறைந்த அளவில் உள்ளமையால் அவற்றை உட்பகுப்பு செய்யாமலும், அளபெடை நிலையில் இன்னிசை, சொல்லிசை, செய்யுளிசை ஆகியவற்றையும் இவ்வியல் உற்றுநோக்கி விளக்கியுள்ளது.

கவிதைக் கட்டமைப்பு அடிப்படையில் பெண்பாற்புலவர்களின் பாடல்களை நோக்கும்பொழுது யாப்பிலக்கண ஆய்வு வேண்டப்படுகிறது. இவ்வாறு மேற்குறிப்பிட்ட ஒலிக்கூறுகளின் பயன்பாட்டை ஆராய்வதின் வழி பெண்பாற்புலவர்களின் தனித்த மொழிநடையினை அறிய இயலும். திணை, துறை, கூற்று, நூல், புலவர் சார்ந்து அனைத்துக் கூறுகளிலும் தனித்த நடையியல் பண்புகளைக் கொண்டு வேறுபடவும், பொதுமைப்படவும் இவர்களது நடைத்தன்மை அமைய வாய்ப்புள்ளது. இதன் அடிப்படையில் சங்கப் பெண்பாற் புலவர்களின் படைப்புகள் மேற்குறிப்பிட்ட ஒலிநிலையில் ஆராயப்படுகின்றது.

## மோனை

பாடல் இயற்றுவதற்கு முன்பே அப்பாடலின் சூழலைச் சுட்டுவதற்கு அப்பாடலில் அமையவுள்ள ஒலிக்கூறுகளும் துணைபுரிகின்றன. இத்தகைய ஒலிக்கூறுகள் படிப்போரிடையே ஒருவித மனவுணர்வினைத் தோற்றுவிக்கின்றன. அவ்வகையில் ‘மோனை’ கவிதையில் சிறப்பிடம் பெறுவதாகும்.

மோனையை அல்லிட்ரேஷன் (Alliteration) என்று ஆங்கிலத்தில் கூறுவர். வடமொழியில் கூறப்படும் 'அனுப்பிராசம்' என்பதும் இதனோடொத்ததே[12] என மருதூர் அரங்கராசன் 'யாப்பறிந்து பாப்புனைய' என்ற நூலில் குறிப்பிடுவார்.

**'அடிதொறுந் தலையெழுத் தொப்பது மோனை'**

**(தொல்.செய்.87)**

என தொல்காப்பியர் குறிப்பிடுவார்.

செய்யுளில் முதலெழுத்து ஒன்றி வருவது (Identical sounds) மோனை ஆகும். இவை வருமிடங்கள் இயல்பு, சொல்லமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் உட்பகுப்பு செய்து விளக்கப்படுகிறது.

சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் மோனைத் தொடையின் ஆட்சி பல நிலைகளில் காணப்படுகின்றது. தொல்காப்பியர் சுட்டிய மோனைத் தொடைகளும் இடைக்கால யாப்பியல் நூல்களில் கூறியுள்ள மோனைத் தொடைகளும் விரவிக் காணப்படுகின்றன. இணை மோனை, பொழிப்பு மோனை, ஒரூஉ மோனை, கூழை மோனை, மேற்கதுவாய் மோனை, கீழ்க்கதுவாய் மோனை, முற்று மோனை ஆகிய மோனை வகைகள் சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. அதிக எண்ணிக்கையில் பொழிப்பு மோனையே இடம்பெற்றுள்ளது. அடுத்த நிலையில் இணை மோனை ஆதிக்கம் செலுத்தியுள்ளது. ஒரூஉ மோனையும் கூழை மோனையும் சற்றொத்த நிலையில் காணப்பெறுகின்றன. மேற்கதுவாய் மோனையை விட கீழ்க்கதுவாய் மோனை சற்றுக் குறைவான நிலையிலும் கீழ்க்கதுவாய் மற்றும் முற்று மோனைகள் ஒரே அளவிலும் அதே வேளை மிகக் குறைந்த அளவிலும் இடம் பெற்றுள்ளன.

சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்களில் மொத்தம் 497 மோனைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் 119 இணை மோனைகளும் 244 பொழிப்பு மோனைகளும் 47 ஒரூஉ மோனைகளும் 46 கூழை மோனைகளும் 29 மேற்கதுவாய்

---

[12] மருதூர் அரங்கராசன், யாப்பறிந்து பாப்புனைய, ப.130.

மோனைகளும் 6 கீழ்க்கதுவாய் மோனைகளும் 6 முற்று மோனைகளும் காணப்படுகின்றன.

**அகப்பாடல்கள் - மோனை**

**அட்டவணை 2.1**

| வ. எண் | புலவர் | நூல் | பாடல் எண்ணிக்கை | இ. மோ. | பொ. மோ. | ஒ. மோ. | கூ. மோ. | மே. மோ. | கீ. மோ. | மு. மோ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | அஞ்சியத்தை மகள் நாகையார் | அகநானூறு | 1 | 1 | 5 | - | 1 | - | - | - |
| 2. | அஞ்சில் அஞ்சியார் | நற்றிணை | 1 | 1 | 3 | 1 | - | - | - | - |
| 3. | ஆதிமந்தி | குறுந்தொகை | 1 | - | - | - | - | - | - | - |
| 4. | ஒக்கூர் மாசாத்தி | குறுந்தொகை | 5 | 5 | 5 | - | - | - | - | - |
| | | அகநானூறு | 2 | 2 | 6 | - | - | - | - | - |
| 5. | ஔவையார் | குறுந்தொகை | 15 | 5 | 11 | 1 | 1 | 2 | - | - |
| | | நற்றிணை | 7 | 7 | 5 | 2 | 3 | 2 | 1 | - |
| | | அகநானூறு | 4 | 5 | 12 | 5 | 1 | 1 | 1 | 1 |
| 6. | ஊண்பித்தை | குறுந்தொகை | 1 | - | 3 | 1 | - | - | - | - |
| 7. | கழார்க்கீரன் எயிற்றியார் | குறுந்தொகை | 2 | 4 | 4 | 1 | 2 | - | - | - |
| | “ | நற்றிணை | 2 | 1 | 2 | - | 1 | 1 | - | - |
| | “ | அகநானூறு | 4 | 5 | 17 | 4 | 3 | - | - | - |
| 8. | காக்கைப்பாடினி நச்செள்ளையார் | குறுந்தொகை | 1 | 2 | - | - | - | - | - | - |
| 9. | குமிழிஞாழலார் நப்பசலையார் | அகநானூறு | 1 | 1 | 1 | 1 | - | - | - | - |
| 10. | குறமகள் குறியெயினி | நற்றிணை | 1 | - | - | 1 | 1 | - | - | - |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11. | நக்கண்ணையார் | நற்றிணை | 2 | 1 | - | 1 | - | - | - | - |
| | | அகநானூறு | 1 | 2 | 4 | 1 | - | 1 | - | - |
| 12. | நப்பசலையார் | நற்றிணை | 1 | - | 7 | - | - | 1 | - | - |
| 13 | நன்னாகையார் | குறுந்தொகை | 8 | 1 | 2 | - | 1 | 1 | - | - |
| 14. | நெடும்பல்லியத்தை | குறுந்தொகை | 2 | 3 | 2 | - | - | - | - | - |
| 15. | பூங்கணுத்திரையார் | குறுந்தொகை | 2 | 1 | 4 | - | - | - | - | - |
| 16. | போந்தைப் பசலையார் | அகநானூறு | 1 | 2 | 1 | 2 | 1 | - | - | 1 |
| 17. | மாறோகத்து நப்பசலையார் | நற்றிணை | 1 | 1 | 1 | - | - | 1 | - | - |
| 18. | வருமுலையாரித்தி | குறுந்தொகை | 1 | - | - | - | 1 | 1 | - | - |
| 19. | வெண்பூதியார் | “ | 3 | 5 | 5 | - | 1 | - | - | 1 |
| 20. | வெண்மணிப் பூதியார் | குறுந்தொகை | 1 | 1 | 2 | 1 | - | - | - | - |
| 21. | வெள்ளிவீதியார் | குறுந்தொகை | 8 | 1 | 4 | 1 | - | 1 | - | - |
| | | நற்றிணை | 3 | 4 | 5 | 1 | 2 | 1 | - | - |
| | | அகநானூறு | 2 | 4 | 8 | 2 | 1 | - | 1 | - |
| 22. | வெறிபாடிய காமகண்ணியார் | நற்றிணை | 1 | 1 | 3 | - | - | - | - | - |
| | | அகநானூறு | 2 | 2 | 10 | 3 | - | 2 | 1 | - |

**புறப்பாடல்கள் - மோனை**

***அட்டவணை 2.2***

| வ. எண் | புலவர் | நூல் | பாடல் எண்ணிக்கை | இ. மோ. | பொ. மோ. | ஒ. மோ. | கூ. மோ. | மே. மோ. | கீ. மோ. | மு. மோ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஒக்கூர் மாசாத்தியார் | புறம் | 1 | 1 | 2 | - | - | 1 | - | - |
| 2. | ஔவையார் | புறம் | 33 | 19 | 46 | 3 | 9 | 6 | 1 | - |
| 3. | காக்கைப் பாடினியார் | பதிற்றுப் பத்து | 10 | 16 | 27 | 5 | 7 | 2 | - | 1 |
| | | புறம் | 1 | - | 1 | 1 | - | - | - | - |
| 4. | காவற்பெண்டு | புறம் | 1 | - | - | - | - | - | 1 | - |
| 5. | குறமகள் இளவெயினி | புறம் | 1 | 2 | - | - | 2 | - | - | - |
| 6. | தாயங்கண்ணியார் | புறம் | 1 | - | 1 | - | 1 | - | - | - |
| 7. | நக்கண்ணையார் | புறம் | 3 | 1 | - | 2 | - | - | - | - |
| 8. | பாரி மகளிர் | புறம் | 1 | 1 | 4 | - | - | - | - | - |
| 9. | பெருங்கோப்பெண்டு | புறம் | 1 | 2 | 4 | - | 1 | - | - | - |
| 10. | பேய்மகள் இளவெயினி | புறம் | 1 | 1 | - | 1 | - | 1 | - | - |
| 11. | மாறோகத்து நப்பசலையார் | புறம் | 7 | 7 | 24 | 6 | 5 | 3 | - | - |
| 12. | மாற்பித்தியார் | புறம் | 2 | - | - | - | 1 | - | - | - |
| 13. | வெண்ணிக் குயத்தியார் | புறம் | 1 | - | 2 | - | - | - | - | - |
| 14. | வெறிபாடிய காமக்கண்ணியார் | புறம் | 2 | 1 | 1 | - | - | 1 | - | 1 |

## இணை மோனை

நான்கு சீர்கள் கொண்ட ஓரடியில் முதல் இரண்டு சீர்களின் முதலெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது இணை மோனையாகும். சங்க பெண்பாற்

*புலவர்களின் பாடல்களில் குறிப்பிட்ட அளவு இணை மோனை இடம்பெற்றுள்ளது. பொழிப்பு மோனைக்கு அடுத்த நிலையில் இணை மோனையின் ஆட்சியே மிகுந்துள்ளது. சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் காணப்படும் 487 மோனைகளுள் 119 இணை மோனைகள் இடம்பெற்றுள்ளன.*

*(எ.கா).*

'**முலையிடை முனிநர் சென்ற ஆறே'** ***(குறு. 39)***

'**ஆன்ற அறிவின் தோன்றிய நல்இசை'** ***(பதி.பத். 57)***

'**மடவன் மன்ற செந்நாப் புலவீர்'** ***(புறம். 140)***

'**திங்களுந் திகழ்வான் ஏர்தரும் இமிழ்நீர்'** ***(நற். 335)***

'**மங்குல் மாமழை விண்அதிர்பு முழங்கி'** ***(அகம். 294)***

*சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களுள் ஒரே பாடலில் பல இணை மோனைகள் பயின்று வருதலைக் காண முடிகிறது. சான்றாக, ஒக்கூர் மாசாத்தியாரின் குறுந்தொகை 139-வது பாடலில் இத்தகைய தன்மையைக் காணலாம்.*

*(எ.கா.)*

''மனைஉறை கோழிக் குறுங்காற் பேட்டை
**வே**லி **வெ**ருகினம் மாலை உற்றெனப்
புகுமிடன் அறியாது தொகுபுடன் குழீஇய
**பை**தற் **பி**ள்ளைக் கிளைபயிர்ந்த தாஅங்கு
**இ**ன்னாது **இ**சைக்கும் அம்பலொடு
**வா**ரல் **வா**ழியர்! ஐயஎம் தெருவே'' ***(குறுந். 139)***

*மேற்குறிப்பிட்ட பாடலில் 6 அடிகளே காணப்படினும் 4 அடிகளில் இணை மோனை இடம்பெற்றுள்ளதை அறியலாம். அதே போன்று வெள்ளிவீதியாரின் நற்றிணை 335-*

வது பாடலிலும் சில இணை மோனைகள் பயின்று வந்துள்ளன. 11 அடிகள் கொண்ட இப்பாடலில் 3 இணை மோனைகள் அமைந்துள்ளன.

(எ.கா.)

'**தி**ங்களுந் **தி**கழ்வான் ஏர்தரும் இமிழ்நீர்ப்' **(நற். 335)**

'**ஓ**லிசிறந்து **ஓ**தமும் பெயரும் மனிபுனல்' **(நற். 335)**

'**சோ**று **சொ**ரிகுடவயின் கூம்புமுகை அவிழ' **(நற். 335)**

ஒரே பாடலில் இத்தகு இணை மோனைகளை ஔவை, வெண்பூதியார், ஒக்கூர் மாசாத்தி, வெள்ளிவீதி, மாறோகத்து நப்பசலையார் ஆகியோர் மட்டுமே பயன்படுத்தியுள்ளனர்.

குறுந்தொகை பாடிய 13 பெண்பாற்புலவர்களில் ஆதிமந்தி, ஊண்பித்தை, வருமலையாரித்தி ஆகியோரைத் தவிர பிற பெண்பாற்புலவர்கள் இணை மோனைகளைப் பயன்படுத்தியுள்ளனர். சங்கப் பெண்பாற்புலவாக்ள் பாடிய குறுந்தொகையில் மொத்தம் 28 இணை மோனைகள் வந்துள்ளன. அவற்றுள் மருதத் திணையில் மட்டும் 10 இணை மோனைகளும், பாலை, குறிஞ்சித் திணைகளில் தலா 5 இணை மோனைகளும் முல்லை பாலைத் திணைகளில் தலா 4 இணை மோனைகளும் இடம்பெற்றுள்ளன.

நற்றிணை பாடிய 9 பெண்பாற்புலவர்களில் குறமகள் குறியெயினி, நப்பசலையார் ஆகியோரைத் தவிர பிற பெண்பாற்புலவர்கள் இணை மோனைகளைக் கையாண்டுள்ளனர். சங்க பெண்பாற்புலவர்கள் பாடிய நற்றிணையில் மொத்தம் 16 இணை மோனைகள் காணப்படுகின்றன. இவற்றினுள் நெய்தல் திணையில் மட்டும் 8 இணை மோனைகளும் மருதத் திணையில் 4 இணை மோனைகளும் குறிஞ்சியில் 2-உம் முல்லை, பாலைத் திணைகளில் முறையே ஒவ்வொன்றும் காணப்படுகின்றன.

அகநானூறு பாடிய 9 பெண்பாற் புலவர்களும் இம்மோனையைக் கையாண்டுள்ளனர். சங்கப் பெண் புலவர்கள் பாடிய அகநானூறில் 24 இணை மோனைகள் காணப்படுகின்றன. ஔவை, கழார்க்கீரன், எயிற்றியார், வெள்ளி வீதியார் ஆகியோர் முறையே 5, 5, 4 என்ற எண்ணிக்கையிலும் பிற புலவர்கள் ஒன்று அல்லது இரு மோனைகளையும் கையாண்டுள்ளனர். 24 இணை மோனைகளுள் பாலைத் திணையில் மட்டும் 11 இணை மோனைகள் பயின்று வந்துள்ளன. மருதம் தவிர குறிஞ்சி, முல்லை, நெய்தல் திணைகளில் முறையே 5, 4, 4 என்ற எண்ணிக்கையில் இணை மோனைகள் காணப்பெறுகின்றன. பிரிவிடை ஆற்றாமைத் துறையில் தலைவிக் கூற்றிலேயே மிகுதியான எண்ணிக்கையில் இத்தகைய இணை மோனைகள் காணப்பெறுகின்றன. ஔவை மற்றும் கழார்க்கீரன் எயிற்றியார் ஆகியோர் பாலைத் திணை, தலைவிக் கூற்றிலேயே அகநானூற்றுப் பாடல்களை இயற்றியுள்ளமையே இதற்குக் காரணமாகலாம்.

பதிற்றுப்பத்தில் காக்கைப் பாடினியார் இயற்றிய ஆறாம் பத்தில் 58 மோனைகள் காணப்படுகின்றன. அவற்றில் 16 இணை மோனைகள் இடம்பெற்றுள்ளன. பாடாண் திணையைக் கொண்டே ஆறாம் பத்து இயற்றப் பெற்றுள்ளது. அவற்றுள் செந்துறையிலேயே அதிக எண்ணிக்கையில் இவை அமைந்துள்ளன.

புறநானூறு பாடிய 15 பெண்பாற் புலவர்களுள் காக்கைப்பாடினியார், காவற்பெண்டு, தாயங்கண்ணியார். மாற்பித்தியார், வெண்ணிக் குயத்தியார் ஆகிய ஐந்து பெண்பாற்புலவர்களைத் தவிர்த்து பிற பெண்பாற் புலவர்கள் இணை மோனையை பயன்படுத்தியுள்ளனர். 33 பாடல்களைப் பாடிய ஔவையாரின் புறப்பாடல்களில் மட்டும் 19 இணை மோனைகள் காணப்படுகின்றன. அடுத்த நிலையில் மாறோகத்து நப்பசலையார் 7 இணை மோனைகளைக் கையாண்டுள்ளார். பிற பெண்பாற்புலவர்களின் பாடல்களில் ஒன்று அல்லது இரண்டு இணை மோனைகளையே காண முடிகிறது. பாடாண் திணையில் மட்டும் 12 இணை மோனைகள் இடம் பெற்றுள்ளன. அடுத்த நிலையில் வாகைத் திணையில் மட்டும் 10 இணை மோனைகள் அமைந்துள்ளன. புறநானூற்றில் மொத்தம் 35 இணை

*மோனைகள் காணப்படுகின்றன. பொதுவியல் திணையில் 6-உம் தும்பையில் 2-உம் கரந்தையில் 2-உம் வஞ்சி, கைக்கிளைத் திணைகளில் தலா ஒவ்வொன்றும் அமைந்துள்ளன. அரச வாகைத் துறையிலேயே இவை அதிகம் பயின்று வந்துள்ளன.*

## பொழிப்பு மோனை

*நான்கு சீர்கள் கொண்ட ஓரடியில் முதல் மற்றும் மூன்றாம் சீரில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது பொழிப்பு மோனையாகும். சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் இணை மோனையை விட பொழிப்பு மோனையே அதிக அளவில் இடம்பெற்றுள்ளது. சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் காணப்பெறும் 497 மோனைகளுள் 245 பொழிப்பு மோனைகள் அமைந்துள்ளன.*

*சங்கப் பெண்பாற் புலவர்களின் ஒரு பாடலிலேயே பல பொழிப்பு மோனைகள் இடம்பெறுவதைக் காணமுடிகிறது. சான்றாக, ஔவையாரது வஞ்சித்திணை, கொற்றவள்ளைத் துறையைச் சார்ந்த புறப்பாடலான 100-ஆவது பாடலுள் 8 பொழிப்பு மோனைகள் பயின்று வந்துள்ளன. 11 அடிகள் கொண்ட இப்பாடலில் 8 பொழிப்பு மோனைகள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*(எ.கா.)*

‘‘**கை**யறு வேலே **கா**லன புனைகழல்
**மெ**ய்யது வியரே **மி**டற்றது பசும்புண்
**வ**ட்கர் போகிய **வ**ளரிளம் போந்தை
**உ**ச்சிக் கொண்ட **ஊ**சி வெண்டோடு
**வெ**ட்சி மாமலர் **வே**ங்கையொடு விரைஇச்
அரியிரும் பித்தை பொலியச் சூடி
**வ**ரிவயம் பொருத **வ**யக்களிறு போல
இன்று மாறாது சினனே யன்னோ
**உ**ய்ந்தன ரில்லரிவ **னு**டற்றி யோரே
செறுவர் நோக்கிய கண்டன்
**சி**றுவனை நோக்கியஞ் **சி**வப்பா னாவே’’ ***(புறம். 100)***

அதே போன்று பாலைத் திணையைச் சார்ந்த பூங்கணுத்திரையாரது 7 அடிகள் கொண்ட 45-ஆவது குறுந்தொகைப் பாடலில் 4 பொழிப்பு மோனைகள் காணப்படுகின்றன.

(எ.கா)

"**தூ**தின் செய்த **து**ண்பனிப் பாவை
**கா**லை வருந்தும் **கை**யாறு ஓம்பு என
ஓரை ஆயம் கூறக் கேட்டும்
**இ**ன்ன பண்பின் **இ**ணைபெரிது வழக்கும்
**ந**ன்னுதல் பசலை **நீ**ங்க அன்ன
நசைஆகு பண்பின் ஒருசொல்
இசையாது சொல்லோ காதலர் தமக்கே" (குறுந். 48)

ஒரே பாடலில் பல பொழிப்பு மோனைகள் சங்கப் பெண்பாற் புலவரிடையே இயல்பான முறையிலேயே அமைந்துள்ளன. குறுந்தொகையில் மொத்தம் 43 பொழிப்பு மோனைகள் காணப்பெறுகின்றன. அவற்றுள் பாலைத்திணையில் மட்டும் 15 பொழிப்பு மோனைகள் இடம்பெற்றுள்ளன. ஔவை மட்டும் 11 பொழிப்பு மோனைகளைக் கையாண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஒக்கூர் மாசாத்தியாரும் வெண்பூதியாரும் முறையே 6, 5 பொழிப்பு மோனைகளைப் பயன்படுத்தியுள்ளனர். பிற புலவர்கள் ஒன்றிலிருந்து 4 பொழிப்பு மோனைகள் வரை கையாண்டுள்ளனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய திணைகளில் முறையே 8, 7, 6, 6 என்ற எண்ணிக்கையில் பொழிப்பு மோனைகள் அமைந்துள்ளன.

நற்றிணையில் மொத்தம் 26 பொழிப்பு மோனைகள் இடம்பெற்றுள்ளன. நற்றிணையில் 7 பாடல்களைப் பாடிய ஔவையாரை விட 1 பாடல் பாடிய நப்பசலையார் 7 பொழிப்பு மோனைகளைக் கையாண்டுள்ளார். ஔவை 5 பொழிப்பு மோனைகளையே பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. வெள்ளிவீதியார் 5 பொழிப்பு மோனைகளையும் பிற பெண்பாற்புலவர்கள் 4லிருந்து 1வரை இவ்வகை மோனைகளைக் கையாண்டுள்ளனர். குறமகள் குறியெயினி, நக்கண்ணையார்

ஆகியோர் மட்டும் இம்மோனைகளைக் கையாளவில்லை. நற்றிணையிலும் பாலைத் திணைப் பாடல்களிலேயே இவ்வகை மோனைகள் அதிகம் பயின்றுள்ளன.

அகநானூறு பாடிய பெண்பாற்புலவர்களின் பாடல்களில் மொத்தம் 64 பொழிப்பு மோனைகள் காணப்படுகின்றன. ஔவையாரது பாடல்களை விட கழார்க்கீரன் எயிற்றியார் பாடல்களில் 19 பொழிப்பு மோனைகள் உள்ளன. இருவரும் அகநானூறில் 4 பாடல்களைப் புனைந்துள்ளனர். ஔவை 12 பொழிப்பு மோனைகளைக் கையாண்டுள்ளார். வெறிபாடிய காமக்கண்ணியார் 10 பொழிப்பு மோனைகளை தமது பாடலுள் அமைக்கப்பெற்றுள்ளார். அகநானூற்றிலும் பாலைத்திணைப் பாடல்களிலேயே பொழிப்பு மோனைகள் அதிகம் காணப்படுகின்றன. அடுத்த நிலையில் குறிஞ்சித் திணையில் 18-ம் முல்லையில் 5-ம், நெய்தலில் 5-உம் அமைந்துள்ளன.

காக்கைப் பாடினியார் இயற்றிய பதிற்றுப்பத்தினுள் 27 மோனைகள் இடம்பெற்றுள்ளன. புறநானூற்றில் மொத்தம் 85 பொழிப்பு மோனைகள் காணப்பெறுகின்றன. ஔவை தாம் பாடிய 33 புறப்பாடல்களுள் 46 பொழிப்பு மோனைகளையும் 7 பாடல்களைப் பாடிய மாறோகத்து நப்பசலையார் 24 பொழிப்பு மோனைகளையும் அமைத்து பாடல் இயற்றியுள்ளனர். பாடாண் திணையிலேயே இம்மோனைகள் அதிகம் பயின்று வந்துள்ளன.

## ஒரூஉ மோனை

நான்கு சீர்கள் கொண்ட ஓரடியில் முதல் மற்றும் நான்காம் சீரில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ஒரூஉ மோனையாகும். சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் மொத்தம் 47 ஒரூஉ மோனைகள் இடம்பெற்றுள்ளன. இணை மற்றும் பொழிப்பு மோனைகளுக்கு அடுத்த நிலையில் ஒரூஉ மோனையே மிகு எண்ணிக்கையில் அமைந்துள்ளது. ஒரு பாடலில் பல ஒரூஉ மோனைகள் இடம்பெறுதல் மிகவும் குறைவான நிலையிலேயே காணப்படுகிறது.

காக்கைப்பாடினியார் பாடிய பாடாண் திணை குரவைநிலைத் துறையைச் சார்ந்த 52-ஆவது பாடலில் 2 ஒரூஉ மோனைகள் இடம் பெற்றுள்ளன.

(எ.கா.)

'**இ**ரப்போர்க்குக் கவிதல் அல்லதை **இ**ரைஇய' ***(பதி.பத்.52)***

'**பா**அல் வல்லாய் ஆயினை **பா**அல்' ***(பதி.பத். 42)***

மேலும் ஔவையாரது பாலைத்திணை பிரிவாற்றாத் துறையைச் சேர்ந்த அகநானூறு 11-ஆவது பாடலில் இரு ஒரூஉ மோனைகள் காணப்பெறுகின்றன.

(எ.கா.)

'**இ**லைஇல மலர்ந்த முகைஇல் **இ**லவம்' ***(அகம். 11)***

'**மெ**ய்புகுவு அன்ன கைகவர் **மு**யக்கம்' ***(அகம்.11)***

மாறோகத்து நப்பசலையார் பாடலிலும் இப்போக்கினைக் காணலாம்.

(எ.கா)

'**பொ**ய்யா நாவின் கபிலன் **பா**டிய' ***(புறம். 174)***

'**கோ**டை நீடிய பைதுஅறு **கா**லை' ***(புறம். 174)***

சங்கப் பெண்பாற்புலவர்களுள் ஔவை, கழார்க்கீரன் எயிற்றியார், மாறோகத்து நப்பசலையார், காக்கைப்பாடினியார் போன்றோரே ஒரூஉ மோனையை அதிகம் கையாண்டுள்ளனர். பல பெண் புலவர்களது பாடல்களில் ஒரூஉ மோனை இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குறுந்தொகையில் மொத்தம் 5 ஒரூஉ மோனைகள் மட்டுமே இடம்பெற்றுள்ளன. குறிஞ்சியில் ஒன்றும் மருதத்திணையில் இரண்டும் பாலை, நெய்தல் திணைகளில் தலா ஒவ்வொன்றும் காணப்படுகின்றன.

நற்றிணையில் 6 ஒரூஉ மோனைகள் உள்ளன. நெய்தலில் மூன்றும் குறிஞ்சியில் இரண்டும் மருதத்தில் ஒன்றுமாக அமைந்துள்ளன. அகநானூற்றில் மொத்தம் 14 ஒரூஉ மோனைகள் காணப்படுகின்றன. பாலைத் திணையில் 9-உம் நெய்தலில் 3உம் குறிஞ்சி முல்லைத் திணைகளில் ஒவ்வொன்றுமாக அமையப் பெற்றுள்ளன.

பதிற்றுப்பத்தில் 5 ஒரூஉ மோனைகள் பயின்று வந்துள்ளன. புறப்பாடல்களில் இடம்பெற்ற 13 ஒரூஉ மோனைகளுள் ஔவை மூன்று ஒரூஉ மோனைகளைப் மட்டுமே கையாண்டுள்ளார். மாறோகத்து நப்பசலையார் 6 ஒரூஉ மோனைகளை பயன்படுத்தியுள்ளார். பாடாண் திணையில் 4உம் வாகைத் திணையில் 2உம் கைக்கிளையில் 2உம் தும்பையில் 3உம், வஞ்சி, பொதுவியல் திணைகளில் ஒவ்வொன்றும் இடம்பெற்றுள்ளன.

**கூழை மோனை**

நான்கு சீர்கள் கொண்ட ஓரடியில் முதல் மூன்று சீர்களிலும் முதலெழுத்து ஒன்றத் தொடுப்பது கூழை மோனையாகும். இணை, பொழிப்பு, ஒரூஉ ஆகிய மோனைகளுக்கு அடுத்த எண்ணிக்கையில் இவை இடம்பெற்றுள்ளன.

சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் அமைந்துள்ள 497 மோனைகளுள் 46 கூழை மோனைகள் காணப்படுகின்றன. ஒரூஉ மோனையும் கூழை மோனையும் சற்றொத்த நிலையிலேயே அமைந்துள்ளன.

ஒரூஉ மோனையைவிட கூழை மோனை குறுந்தொகையில் சற்று அதிகமாகக் காணப்படுகின்றது. மொத்தமாக 8 கூழை மோனைகள் அமைந்துள்ளன. குறிஞ்சியில் மூன்றும் மருதத்தில் இரண்டும், நெய்தலில் இரண்டும் பாலையில் ஒன்றுமாக இடம்பெற்றுள்ளன. கழார்க்கீரன் எயிற்றியார் மட்டுமே இரு கூழை மோனைகளைத் தமது பாடல்களில் கையாண்டுள்ளார்.

நற்றிணையில் 7 கூழை மோனைகள் இடம்பெற்றுள்ளன. முல்லை, நெய்தல் திணைகளில் இரண்டிரண்டும் குறிஞ்சி, மருதம், பாலைத் திணைகளில்

ஒவ்வொன்றுமாக அமைந்துள்ளன. ஔவை, வெள்ளிவீதி மட்டுமே இரு கூழை மோனைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

அகநானூறில் மொத்தம் 10 கூழை மோனைகள் காணப்படுகின்றன. கழார்க்கீரன் எயிற்றியாரும், வெறிபாடிய காமகக்கண்ணியாரும் மட்டுமே தலா 3 கூழை மோனைகளைப் பயன்படுத்தியுள்ளனர். அகநானூற்றில் குறிஞ்சித் திணையில் மட்டும் 5 கூழை மோனைகள் அமைந்துள்ளன. பாலைத் திணையில் 3 கூழை மோனைகளும் முல்லை, நெய்தலில் தலா ஒவ்வொன்றும் இடம்பெற்றுள்ளன.

காக்கைப் பாடினியாரின் பதிற்றுப்பத்தில் 7 கூழை மோனைகள் பயின்று வந்துள்ளன. புறநானூற்றில் 19 கூழை மோனைகள் உள்ளன. ஔவை மட்டுமே 9 கூழை மோனைகளைப் பயன்படுத்தியுள்ளார். மாறோகத்து நப்பசலையார் 5 கூழை மோனைகளைக் கையாண்டுள்ளார். பாடாண் திணைக்கு அடுத்து வாகைத் திணையிலும் பொதுவியல் திணையிலும் சற்றொப்ப இம்மோனைகள் இடம்பெற்றுள்ளன.

கூழை மோனைக்குச் சான்றாக ஔவையார் தமது புறப்பாடலான 91-ஆவது பாடலிலும் மாறோகத்து நப்பசலையார் தமது 37 மற்றும் 39ஆவது பாடல்களிலும் கூழை மோனைகளை அமைத்துப் பாடியுள்ளனர்.

(எ.கா)

‘**க**ளம்படக் **க**டந்த **க**ழல்தொடித் தடக்கை’ **(புறம். 91)**

‘**பா**ல்புரை **பி**றைநுதற் **பொ**லிந்த சென்னி’ **(புறம். 91)**

‘**க**ராஅம் **க**விந்த **கு**ண்டுகண் அகழி’ **(புறம். 37)**

‘**வா**டா **வ**ஞ்சி **வா**ட்டும் நின்’ **(புறம். 39)**

காக்கைப்பாடினியார் தாம் இயற்றியப் பதிற்றுப்பத்திலும் இவ்வகை மோனையைப் பயன்படுத்தியுள்ளார்.

(எ.கா)

'**நு**னைஉறு **ந**றவின் **நா**டுடன் கமழ' **(பதி. 51)**

'**கு**டவர் **கோ**வே **கொ**டிதேர் அண்ணல்' **(பதி. 55)**

வெள்ளிவீதியாரின் நற்றிணைப் பாடல்களிலும் இம்மோனைகள் காணப்படுகின்றன.

(எ.கா.)

'**பொ**ங்குதிரைப் **பு**ணரியும் **பா**டும் ஓவாதே' **(நற். 335)**

'**த**னைஇருங் **த**ங்குலும் **த**ண்படை இலனே' **(நற். 348)**

## மேற்கதுவாய் மோனை

நான்கு சீர்கள் கொண்ட ஓரடியில் இரண்டாம் சீரினைத் தவிர்த்து பிற சீர்களிலுள்ள முதலெழுத்து ஒன்றிவருவது மேற்கதுவாய் மோனை ஆகும். சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் மொத்தம் 29 மேற்கதுவாய் மோனைகள் காணப்படுகின்றன. இம்மோனையைக் கையாள்வதில் ஔவையே முதன்மை பெறுகிறார். 29 மேற்கதுவாய் மோனைகளுள் 11 மோனைகளை தமது பாடல்களுள் பயன்படுத்தியுள்ளார்.

(எ.கா.)

'**ந**றுங் கள்ளின் **நா**டு **நை**த்தலின்' **(புறம். 97)**

'**அ**மரர் பேணியும் **ஆ**வுதி **அ**ருந்தியும்' **(புறம். 99)**

மாறோகத்து நப்பசலையார் தமது புறப்பாடல்களில் இவ்வகை மோனைகளைக் கையாண்டுள்ளார்.

(எ.கா.)

'**இ**ரந்துசெல் மாக்கட்கு **இ**னியிடன் **இ**ன்றி' (புறம். 126)

'**அ**றம்நின்று நிலையிற்று **ஆ**கலின் **அ**தனால்' (புறம். 39)

மேற்கதுவாய் மோனைகள் அகப்பாடல்களில் குறிஞ்சியிலும் பாலையிலும் ஒத்த போக்கில் ஆளப்பட்டுள்ளன. மருதத்திணையில் மிகக் குறைந்த அளவிலும் குறிஞ்சி, முல்லையில் சற்றொத்த நிலையிலும் காணப்படுகின்றன. பிற மோனைகள் காணப்படுவதைப் போல மேற்கதுவாய் மோனை புறப்பாடல்களான புறநானூறு மற்றும் பதிற்றுப்பத்தில் பாடாண் திணையிலிலேயே அதிகமாக அமைந்துள்ளன.

## கீழ்க்கதுவாய் மோனை

நான்கு சீர்கள் கொண்ட ஓரடியில் மூன்றாம் சீர் தவிர்த்து பிற சீர்களில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கீழ்க்கதுவாய் மோனையாகும். சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் 6 இடங்களில் மட்டுமே கீழ்க்கதுவாய் மோனைகள் காணப்படுகின்றன. ஔவை மூன்று மோனைகளையும் காவற்பெண்டு 1 மோனையையும் வெறிபாடிய காமக்கண்ணியார் 1 மோனையையும் வெள்ளிவீதியார் 1 மோனையையும் பயன்படுத்தியுள்ளனர்.

(எ.கா.)

'**ஆ**யமும் **அ**ழுங்கின்று யாயும.்.து **அ**றிந்தனள்' **(நற். 295)**

'**பு**லவர் **பு**கழ்ந்த நார்இல் **பெ**ருமரம்' **(அகம். 273)**

'**வ**ரிசைக்கு **வ**ருந்துமிப் புலவர் **வா**ழ்க்கை' **(புறம். 206)**

'**பு**லிசேர்ந்து **போ**கிய கல்அளை **போ**ல' **(புறம். 86)**

'**எ**ல்லிற்று **எ**ன்னான் வெண்வேல் **ஏ**ந்தி' **(அகம். 362)**

'**வெ**றியியர் **வி**யன்களம் பொறிப **வ**ல்லோன்' **(அகம். 98)**

குறுந்தொகையில் காவற்பெண்டு பாலைத்திணையில் ஒரு மோனையையும் நற்றிணையில் ஔவை நெய்தல் திணையில் ஒரு மோனையையும் அகநானூற்றில் ஔவை, வெள்ளிவீதியார், வெறிபாடிய காமக்கண்ணியார் ஆகியோர் முறையே பாலையில் ஒரு மோனையையும் குறிஞ்சியில் தலா ஒவ்வொன்றும் புறநானூற்றில்

ஔவை பாடாண் திணையில் ஒன்றனையும் வெறிபாடிய காமக்கண்ணியார் ஒன்றனையும் கையாண்டுள்ளனர்.

## முற்று மோனை

நான்கு சீர்கள் கொண்ட ஓரடியில் அனைத்துச் சீர்களிலும் முதலெழுத்து ஒன்றத் தொடுப்பது முற்று மோனையாகும். கீழ்க்கதுவாய் மோனையும் முற்று மோனையும் ஒரே எண்ணிக்கையில் அமைந்துள்ளன. ஔவையார், கழார்க்கீரன் எயிற்றியார், போந்தைப் பசலையார் ஆகியோர் அகநானூற்றில் முறையே ஒவ்வொரு முற்று மோனையையும் காக்கைப் பாடினியார் பதிற்றுப்பத்து 6-ஆம் பத்தினுள் ஒரு முற்று மோனையையும் வெண்பூதியார் குறுந்தொகையில் ஒரு முற்றுமோனையையும் வெறிபாடிய காமக்கண்ணியார் புறநானூற்றில் ஒரு முற்று மோனையையும் பயன்படுத்தியுள்ளனர்.

(எ.கா.)

'**வே**ங்கை **வெ**றித்தழை **வே**று **வ**குத்தன்ன' ***(அகம். 147)***

'**பா**சிலை **பொ**துளிய **பு**தல்தொறும் **ப**கன்றை' ***(அகம். 217)***

'**அ**ன்னை **அ**றியினும் **அ**றிக **அ**லர்வாய்' ***(அகம். 110)***

'**அ**டும்பமல் **அ**டைகரை **அ**லவன் **ஆ**டிய' ***(பதி. 51)***

'**க**வைமுட் **க**ள்ளிக் **கா**ய்விடு **க**டுநொடி' ***(குறு. 174)***

'**ம**றம்புகழ் **மை**ந்த **ம**லைந்த **மா**றே' ***(புறம். 271)***

ஔவை, கழார்க்கீரன் எயிற்றியார், வெண்பூதியார் ஆகியோர் பாலைத் திணையிலும் வெறிபாடியக் காமக்கண்ணி நொச்சித் திணையிலும் போந்தைப் பசலையர் நெய்தல் திணையிலும் காக்கைப் பாடினியார் பாடாண் திணையிலும் இம்மோனைகளை அமைத்துள்ளனர்.

**எதுகை**

தொடைக் கூறுகளுள் மோனைக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணப்படுவது எதுகையாகும். செய்யுள் அடிகளில் இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகையாகும்.

**'அடிதொறுந் தலையெழுத் தொப்பது மோனை' (தொல்.செய்.87)**

என மோனையைக் குறித்துக் கூறும் தொல்காப்பியம் அடுத்த நூற்பாவில்,

**'அ∴.தொழித் தொன்றின் எதுகை ஆகும்' (தொல்.செய். 88)**

என எதுகையைக் குறித்து கூறுகிறது. அதாவது அடிதொறும் முதலெழுத்து ஒன்றாமல் இரண்டாம் எழுத்து ஒன்றின் எதுகையாகும்.

தொடை வகைகளுள் எதுகையே சிறப்பிடம் பெற்றமைகிறது. இக்கருத்தை 'எதுகை எனினும் மோனை எனினும் ஒக்கும்' என வீரசோழிய காரிகையில் பெருந்தேவனார் குறிப்பிடுவார்.[13] இக்கருத்தை வலியுறுத்தும் வகையில்,

"தொடை வகைகளின் வரிசை முறைமையில் மோனை முதலிடம் பெற்றாலும் இலக்கிய ஆட்சியில் அடிநிலையில் சிறப்பாகக் கையாளப் பெற்றுள்ள எதுகையே முதன்மைப்படுவதை 'எகன மொகன' என்ற பேச்சு வழக்குத் தொடர் உணர்த்துகிறது' என ந.சுப்பு ரெட்டியார் 'கவிதையனுபவம்' என்ற நூலில் குறிப்பிடுகிறார்.[14]

மோனையைப் போன்றே எதுகை நிலையில் இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று ஆகிய வகைமைகள் சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்களில் எங்ஙனம் அமைந்துள்ளன என்பதையும் இவ்வியல் ஆராய்கிறது.

---

[13] பெருந்தேவனார், வீரசோழியம், ப.111.
[14] சுப்பு ரெட்டியார், ந., கவிதையனுபவம், ப.23.

## அகப்பாடல்கள் - எதுகை

### அட்டவணை 2.3

| வ. எண் | புலவர் | நூல் | பாடல் எண்ணிக்கை | இ. எ. | பொ. எ. | ஒ. எ. | கூ. எ. | மே. எ. | கீ. எ. | மு. எ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | அஞ்சியத்தை மகள் நாகையார் | அகநானூறு | 1 | - | 4 | 1 | 1 | - | - | - |
| 2. | அஞ்சில் அஞ்சியார் | நற்றிணை | 1 | - | 4 | 1 | - | - | - | - |
| 3. | ஆதிமந்தி | குறுந்தொகை | 1 | - | 1 | 1 | 1 | - | - | - |
| 4. | ஒக்கூர் மாசாத்தி<br>“ | குறுந்தொகை<br>அகநானூறு | 5<br>2 | 2<br>6 | 8<br>9 | 1<br>3 | -<br>- | -<br>1 | -<br>- | -<br>- |
| 5. | ஔவையார் | குறுந்தொகை<br>நற்றிணை<br>அகநானூறு | 15<br>7<br>4 | 4<br>4<br>3 | 14<br>9<br>8 | 9<br>1<br>8 | 1<br>-<br>- | 1<br>1<br>- | -<br>2<br>1 | 2<br>-<br>- |
| 6. | ஊண்பித்தை | குறுந்தொகை | 1 | - | - | - | - | - | 1 | - |
| 7. | கழார்க்கீரன் எயிற்றியார் | குறுந்தொகை | 15 | 4 | 14 | 9 | 1 | 1 | - | 2 |
| | “ | நற்றிணை | 7 | 4 | 9 | 1 | - | 1 | 2 | - |
| | “ | அகநானூறு | 4 | 3 | 8 | 8 | - | - | 1 | - |
| 8. | காக்கைப் பாடினியார் | குறுந்தொகை | 1 | 1 | - | 2 | - | - | - | - |
| 9. | குமிழிஞாழலார் நப்பசலையார் | அகநானூறு | 1 | - | 3 | 4 | - | - | 1 | - |
| 10. | குறமகள் குறியெயினி | நற்றிணை | 1 | - | - | 2 | - | 1 | - | - |
| 11. | நக்கண்ணையார் | நற்றிணை | 2 | - | 2 | 2 | 1 | - | - | - |
| | “ | அகநானூறு | 1 | 1 | 2 | 4 | - | - | - | - |
| 12. | நப்பசலையார் | நற்றிணை | 1 | - | - | 1 | - | - | - | - |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13 | நன்னாகையார் | குறுந்தொகை | 8 | 1 | 6 | 1 | - | 1 | - | - |
| 14. | நெடும்பல்லியத்தை | குறுந்தொகை | 2 | - | 2 | - | - | - | - | - |
| 15. | பூங்கணுத்திரையார் | குறுந்தொகை | 2 | 2 | 1 | - | - | - | 1 | - |
| 16. | போந்தைப் பசலையார் | அகநானூறு | 1 | 3 | 4 | 3 | - | 1 | - | - |
| 17. | மாறோகத்து நப்பசலையார் | நற்றிணை | 1 | 3 | 1 | - | - | - | - | - |
| 18. | வருமுலையாரித்தி | குறுந்தொகை | 1 | - | - | 1 | - | - | - | 1 |
| 19. | வெண்பூதியார் | “ | 3 | 1 | 4 | 4 | - | - | - | - |
| 20. | வெண்மணிப் பூதியார் | குறுந்தொகை | 1 | 1 | - | - | - | - | - | - |
| 21. | வெள்ளிவீதியார் | குறுந்தொகை | 8 | 4 | 3 | - | - | - | - | - |
| | | நற்றிணை | 3 | 1 | 4 | 2 | - | - | 1 | - |
| | | அகநானூறு | 2 | 5 | 4 | 3 | - | 1 | - | - |
| 22. | வெறிபாடிய காமகண்ணியார் | நற்றிணை | 1 | 1 | 3 | - | - | - | - | - |
| | | அகநானூறு | 2 | 2 | 9 | 1 | - | - | - | - |

**புறப்பாடல்கள் - எதுகை**

**அட்டவணை 2.4**

| வ. எண் | புலவர் | நூல் | பாடல் எண்ணிக்கை | இ. எ. | பொ. எ. | ஓ. எ. | கூ. எ. | மே. எ. | கீ. எ. | மு. எ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஒக்கூர் மாசாத்தியார் | புறம் | 1 | - | 3 | - | - | - | - | - |
| 2. | ஔவையார் | புறம் | 33 | 15 | 36 | 21 | 8 | 8 | 1 | 1 |
| 3. | காக்கைப்பாடினி நச்செள்ளையார் | புறம் | 1 | 1 | - | 1 | - | - | - | - |
| | “ | பதிற்றுப்பத்து | 10 | 12 | 38 | 12 | 4 | 2 | 2 | - |
| 4. | காவற்பெண்டு | புறம் | 1 | - | 1 | 1 | - | - | - | - |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5. | குறமகள் இளவெயினி | புறம் | 1 | 1 | 1 | 2 | - | - | 1 | - |
| 6. | தாயங்கண்ணியார் | புறம் | 1 | - | 1 | 1 | - | 1 | - | - |
| 7. | நக்கண்ணையார் | புறம் | 3 | 2 | - | 4 | - | - | - | - |
| 8. | பாரி மகளிர் | புறம் | 1 | - | - | - | - | - | - | - |
| 9. | பெருங்கோப்பெண்டு | புறம் | 1 | 1 | 6 | 2 | - | - | - | - |
| 10. | பேய்மகள் இளவெயினி | புறம் | 1 | 2 | - | - | - | - | - | - |
| 11. | மாறோகத்து நப்பசலையார் | புறம் | 7 | 3 | 1 | - | - | - | - | - |
| 12. | மாற்பித்தியார் | புறம் | 2 | 2 | 2 | - | - | 1 | - | - |
| 13. | வெண்ணிக் குயத்தியார் | புறம் | 1 | - | - | 2 | - | - | 1 | - |
| 14. | வெறிபாடிய காமக்கண்ணியார் | புறம் | 2 | - | 1 | 3 | - | 1 | 1 | - |

செய்யுளில் அமையும் அடிகளுக்கிடையே உள்ள பிணைப்பை வலுவாக்கவும் எதுகைகள் பயன்படுகின்றன. மோனையை விட எதுகையே ஒலி நயம் மிக்கதாயும் பொருளாழம் கொண்டதாயும் அமையவல்லன. இத்தகு தன்மைகளைக் கொண்ட எதுகை சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் மொத்தம் 498 இடங்களில் பயின்று வந்துள்ளன. அவற்றுள் 86 இணை எதுகைகளும் 230 பொழிப்பு எதுகைகளும் 119 ஒரூஉ எதுகைகளும் 21 கூழை எதுகைகளும் 22 மேற்கதுவாய் எதுகைகளும் 14 கீழ்க்கதுவாய் எதுகைகளும் 7 முற்று எதுகைகளும் இடம்பெற்றுள்ளன.

சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் மோனையும் எதுகையும் சற்றொத்த நிலையிலேயே அல்லது எதுகை சற்றுக் கூடுதலாகக் காணப்படுகின்றன. (மோனை – 487, எதுகை – 499). இணை மோனையை விட இணை எதுகைக் குறைவாகவும், பொழிப்பு மோனையும் பொழிப்பு எதுகையும் சற்றொப்பவும், ஒரூஉ மோனையை விட ஒரூஉ எதுகை மிகுதியாகவும் கூழை மோனையை விட கூழை எதுகை குறைவாகவும் மேற்கதுவாய் மோனையும் மேற்கதுவாய் எதுகையும்

சற்றொத்த நிலையிலும் கீழ்க்கதுவாய் மோனையை விட கீழ்க்கதுவாய் எதுகை இருமடங்கிலும் முற்று மோனையும் முற்று எதுகையும் சற்றொத்த நிலையிலும் காணப்படுகின்றன.

## இணை எதுகை

சங்கப் பெண்பாற்புலவர்கள் மொத்தம் 86 இணை எதுகைகளைப் பயன்படுத்தியுள்ளனர். பாரி மகளிர் ஒரு எதுகையைக் கூட பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இணை எதுகையைக் கையாள்வதில் ஔவையும் காக்கைப்பாடினியும் முதன்மைப் பெற்று விளங்குகின்றனர். ஔவை தமது புறப்பாடல்களில் 15 இணை எதுகைகளையும் காக்கைப்பாடினி நச்செள்ளையார் 12 இணை எதுகைகளையும் பயன்படுத்தியுள்ளனர்.

அகநானூற்றில் இரு பாடல்களைப் பாடிய வெள்ளிவீதியார் 6 இணை எதுகைகளைக் கையாண்டுள்ளார். 4 அகநானூற்றுப் பாடல்களை இயற்றியுள்ள ஔவையார் 3 இணை எதுகைகளையே பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. வெறிபாடிய காமக்கண்ணியார் தமது இரு அகநானூற்றுப் பாடல்களில் 9 இணை எதுகைகளைக் கையாண்டுள்ளமை அவரது நடையாளுமையை உணர்த்துகிறது. அகப்பாடல்களைப் பாடிய பிற பெண்பாற் புலவர்களைவிட ஔவையார் தமது அகப்பாடல்களில் குறைவான அளவிலேயே இணை எதுகைகளைக் கையாண்டுள்ளார். பல பெண்பாற்புலவர்கள் இணை எதுகைகளைப் பயன்படுத்தவில்லை என்பதனை அட்டவணை உணர்த்தும்.

(எ.கா.)

‘சி**று**யகட் பெ**றி**னே எமக்கீயும் மன்னே’ **(புறம். 235)**

‘ஈ**யா**து வீ**யு**ம் உயிர்தவப் பலவே’ **(புறம். 235)**

‘ப**க**ல்நீடு ஆ**கா**து இரவுப்பொழுது பெருகி’ **(பதி. 59)**

‘செ**ல்**வர் செ**ல்**வ வேந்தோர்க்கு அரணம்’ **(பதி. 59)**

'ஏ**றி**யது அ**றி**ந்தன்று அல்லது வந்த' ***(அகம். 384)***

'ஆ**று**நனி அ**றி**ந்தன்றோ இலெனே தாஅய்' ***(அகம். 384)***

'கோ**டை** நீ**டி**ய அகன்பெருங் குன்றத்து' ***(அகம்.45)***

'சு**ண**ங்கு அ**ணி**முற்றத்து ஆரம் போலவும்' ***(அகம். 362)***

ஒரே பாடலுள் 3 இணை எதுகைக்கு மேல் காணப்படவில்லை.

குறுந்தொகையில் குறிஞ்சியிலும், பாலையிலும் சம அளவில் இவ்வகை எதுகைகள் இடம்பெற்றுள்ளன. நற்றிணைப் பாடல்களில் குறிஞ்சியில் மிகுதியாகவும் அகநானூற்றுப் பாடல்களில் குறிஞ்சி, முல்லை, பாலைத் திணைகளில் சம அளவிலும் புறநானூற்றில் பாடாண் திணையில் மிகுந்தும் இவ்வெதுகைகள் அமைந்துள்ளன.

## பொழிப்பு எதுகை

நான்கு சீர்கள் கொண்ட ஓரடியில் முதல் மற்றும் மூன்றாம் சீர்களின் இரண்டாம் எழுத்து ஒன்ற வருவது பொழிப்பு எதுகையாகும். எல்லா வகை சீர் எதுகைகளை விடவும் பொழிப்பு எதுகையே மிகு எண்ணிக்கையில் அமைந்துள்ளன. சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் 229 பொழிப்பு எதுகைகள் இடம்பெற்றுள்ளன.

ஔவை நாம் இயற்றிய 33 புறப்பாடல்களில் 36 பொழிப்பு எதுகைகளைக் கையாண்டுள்ளார். ஔவையை விட காக்கைப்பாடினியார் தாம் இயற்றிய பதிற்றுப்பத்தில் 38 பொழிப்பு எதுகைகளைப் பயன்படுத்தியுள்ளார். பதிற்றுப்பத்துப் பாடல்கள் புறநானூற்றுப் பாடல்களைவிட அடிவரையறையில் மிகுந்திருப்பதே இவ்வெண்ணிக்கைக்குக் காரணமாக இருக்கலாம். இப்புலவர்களுக்கு அடுத்த நிலையில் மாறோகத்து நப்பசலையார் தாம் இயற்றிய 8 புறநானூற்றுப் பாடல்களில் 21 பொழிப்பு எதுகைகளைக் கையாண்டுள்ளார். புறப்பாடல்களிலேயே

இவ்வெதுகைகள் மிகுந்து காணப்படுகின்றன. அகப்பாடல்களில் ஔவையே அதிகமாகப் பொழிப்பு எதுகைகளைத் தமது பாடல்களில் கையாண்டுள்ளார்.

(எ.கா.)

'யா**ழொ**டும் கொள்ளா பொ**ழு**தொடும் புணரா' ***(புறம். 91)***

'ஓ**ட**ல் மரீஇய பீ**டு**இல் மன்னர்' ***(புறம். 93)***

'**அக**ல்இரு விசும்பில் ப**க**ல்இடம் தரீஇயர்' ***(பதி. 52)***

'ந**சை**கால் வாய்மொழி இ**சை**கால் தோன்றல்' ***(பதி. 55)***

'க**ண்**ணீர் தடுத்த த**ண்**ணறும் பந்தர்' ***(புறம். 250)***

'க**ழ**ைபடு சொலியின் இ**ழை**யணி வாரா' ***(பொது. 280)***

'ந**ல்**உரை இகந்து ப**ல்**உரைத் தாஅய்' ***(குறு. 28)***

'உ**ள்**ளம் தாங்கா வெ**ள்**ளம் நீந்தி' ***(குறு. 29)***

பிற சங்க நூல்களைக் காட்டிலும் நற்றிணையில் குறைந்த அளவிலேயே இவ்வெதுகைகள் காணப்படுகின்றன.

குறுந்தொகையுள் பாலைத் திணையிலும் நற்றிணையில் நெய்தல் திணையிலும் அகநானூறில் பாலைத்திணையிலும் பொழிப்பு எதுகைகள் மிகுந்துள்ளன. புறப்பாடல்களான பதிற்றுப்பத்திலும் புறநானூற்றிலும் பாடாண் திணைகளிலேயே இவ்வெதுகைகள் அதிகமான அளவில் காணப்படுகின்றன. சங்கப் பெண்பாற்புலவர்கள் அகநானூறில் மருதத்திணையில் ஒருபாடல் கூட இயற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### ஒரூஉ எதுகை

நான்கு சீர்கள் கொண்ட ஓரடியில் முதல் மற்றும் நான்காம் சீரிலுள்ள இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது ஒரூஉ எதுகையாகும். சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களுள் 119 ஒரூஉ எதுகைகள் காணப்படுகின்றன.

பெரும்பான்மையான பொழிப்பு எதுகையைக் கையாண்ட ஔவையார், காக்கைப் பாடினியார், மாறோகத்து நப்பசலையார் ஆகியோரே ஒரூஉ எதுகைகளையும் அதிகமாகக் கையாண்டுள்ளனர். ஔவைத் தமது புறப்பாடல்களில் 21 ஒரூஉ எதுகைகளையும் காக்கைப் பாடினியார் தாம் இயற்றிய பதிற்றுப்பத்தில் 12 ஒரூஉ எதுகைகளையும் மாறோகத்து நப்பசலையார் 10 ஒரூஉ எதுகைகளையும் கையாண்டுள்ளனர். அகப்பாடல்களிலும் ஔவையாரே மிகுதியான அளவில் இவ்வெதுகைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

குறுந்தொகைப் பாடிய பெண்பாற் புலவர்களது பாடல்களில் 20 ஒரூஉ எதுகைகளைக் காணமுடிகிறது. குறுந்தொகையில் முல்லைத் திணையிலேயே அதிக ஒரூஉ எதுகைகள் இடம்பெற்றுள்ளன. நற்றிணையில் 8 ஒரூஉ எதுகைகள் இடம்பெற்றுள்ளன. நற்றிணையில் நெய்தல் திணையில் அதிகமாக இவற்றைக் காண முடிகிறது. அகநானூறில் 31 ஒரூஉ எதுகைகள் அமைந்துள்ளன. சங்கப் பெண்பாற்புலவர்கள் அகநானூற்றில் பாலைத் திணைப் பாடல்களையே மிகுதியாகப் பாடியுள்ளமையால் பாலைத் திணையிலேயே இவ்வெதுகைகள் மிகுந்துள்ளன. பதிற்றுப்பத்தினுள் 12 ஒரூஉ எதுகைகளும் புறநானூறில் 47 ஒரூஉ எதுகைகளும் அமைந்து பாடாண் திணையிலேயே மிகு ஆட்சியைப் பெற்றுள்ளன.

(எ.கா).

'அ**ன்**றும் பாடுநர்க்கு அரியை இ**ன்**றும்' ***(புறம். 99)***

'வி**சு**ம்புற நீளினும் நீள்க ப**சு**ங்கதிர்த்' ***(புறம். 231)***

'இ**ர**வலர் தடுத்த வாயிற் பு**ர**வலர்' ***(புறம். 250)***

'ஒ**ண்**பூங் கலிங்கம் உடீஇ நு**ண்**பூண்' ***(புறம். 383)***

'பெ**ரு**மலை வயின்வயின் விலங்கும் அ**ரு**மணி' ***(பதி. 51)***

'க**து**மென உருத்த நோக்கமொடு அ**து**நீ' ***(பதி. 52)***

'எ**ம்**மொடு கழிந்தனர் ஆயின் க**ம்**மென' ***(அகம். 11)***

'தோளும் தொல்கவின் தொலைய நாளும்' **(அகம். 147)**

பெண்பாற் புலவர்கள் இயற்றிய சங்க நூல்களில் நற்றிணையில் மிகக் குறைந்த அளவிலேயே இவ்வெதுகைகள் காணப்படுகின்றன.

**கூழை எதுகை**

நான்கு சீர்கள் கொண்ட ஓரடியில் முதல் மூன்று சீர்களிலும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது கூழை எதுகையாகும். சங்கப் பெண்பாற் புலவர்கள் கையாண்ட கூழை மோனையில் பாதி அளவிலேயே கூழை எதுகைகள் இடம்பெற்றுள்ளன. பல பெண்பாற் புலவர்கள் இவ்வெதுகையைக் கையாளவில்லை. 7 பெண்பாற் புலவர்கள் மட்டுமே கூழை எதுகையைக் கையாண்டுள்ளனர்.

ஔவையார் குறுந்தொகையில் மருதத் திணையில் ஒரே ஒரு கூழை எதுகையினையும் நற்றிணையில் நக்கண்ணையார் நெய்தல் திணையில் ஒரு கூழை எதுகையினையும் அகநானூறில் அஞ்சியத்தை மகள் நாகையார் குறிஞ்சித் திணையில் ஒன்றனையும் கழார்க்கீரன் எயிற்றியார் முல்லைத் திணையில் ஒன்றனையும், காக்கைப் பாடினியார் பதிற்றுப்பத்தில் வஞ்சி, குரவைநிலை, செந்துறை ஆகிய துறைகளில் முறையே ஒவ்வொன்றினையும் ஔவையார் புறநானூற்றில் பாடாண், பொதுவியல், கரந்தை, வாகை ஆகிய திணைகளில் முறையே 3, 2, 1, 1 ஆகிய எண்ணிக்கையிலும், மாறோகத்து நப்பசலையார் வாகைத் திணையில் மூன்றும், பாடாண் திணையில் இரண்டுமாக இவ்வெதுகைகளைக் கையாண்டுள்ளனர். சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் மொத்தம் 22 கூழை எதுகைகள் காணப்படுகின்றன.

(எ.கா.)

'போற்றுமின் மறவீர் சாற்றுதும் நும்மை' **(புறம். 104)**

'வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை' **(புறம். 104)**

'மல்லல் நல்நாட்டு அல்லல் தீர' **(புறம். 174)**

'அருவழி இருந்த பெருவிறல் வளவம்' **(புறம். 174)**

'வண்டுஇறை கொண்ட தண்கடற் பரப்பின்' **(பதி. 51)**

'முன்னும் பின்னும்நின் முன்னோர்ஓம்பிய' **(பதி. 53)**

## மேற்கதுவாய் எதுகை

நான்கு சீர்கள் கொண்ட ஓரடியில் இரண்டாம் சீரினைத் தவிர்த்த ஏனைய சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றத் தொடுப்பது மேற்கதுவாய் எதுகையாகும். சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் மொத்தம் 22 மேற்கதுவாய் எதுகைகள் காணப்படுகின்றன. கூழை எதுகையும் மேற்கதுவாய் எதுகையும் சம அளவில் அமைந்துள்ளன. கூழை எதுகையைப் போன்றே ஔவையார் மட்டும் தமது புறப்பாடல்களில் 8 மேற்கதுவாய் எதுகைகளைக் கையாண்டுள்ளார். சங்கப் பெண்பாற்புலவர்கள் கூழை எதுகையைவிட மேற்கதுவாய் எதுகையை கையாள்வதில் அதிக எண்ணிக்கையில் அமைந்துள்ளனர். இருப்பினும் தமது பாடல்களில் ஒவ்வொரு மேற்கதுவாய் எதுகைகளையே பயன்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

குறுந்தொகையில் நன்னாகையார் மட்டுமே நெய்தல் திணையில் ஒரேயொரு மேற்கதுவாய் எதுகையைப் பயன்படுத்தியுள்ளார். நற்றிணையில் ஔவை மருதத் திணையில் 295ஆவது பாடலில் ஒரே ஒரு மேற்கதுவாய் எதுகையினையும் குறமகள் குறியெயினி 357ஆவது பாடலில் குறிஞ்சித் திணையில் ஒன்றனையும் அகநானூற்றில் ஒக்கூர் மாசாத்தியார் முல்லைத் திணையில் ஒன்றனையும் கழார்க்கீரன் எயிற்றியார் மற்றும் வெள்ளிவீதியார் இருவரும் பாலைத் திணையில் ஒவ்வொன்றனையும் போந்தைப்பசலையார் ஒன்றனையும் கையாண்டுள்ளனர்.

புறப்பாடல்களான பதிற்றுப்பத்தில் காக்கைப்பாடினியார், குரவை, செந்துறை ஆகிய துறைகளில் முறையே ஒவ்வொன்றினையும் புறநானூறில் ஔவையார், மாறோகத்து நப்பசலையார், மாற்பித்தியார், வெறிபாடிய காமக் கண்ணியார், தாயங்கண்ணியார் ஆகிய புலவர்கள் 12 மேற்கதுவாய் எதுகைகளையும்

கையாண்டுள்ளனர். வாகை மற்றும் பாடாண் திணைகளிலேயே இவை அதிகம் இடம்பெற்றுள்ளன.

(எ.கா.)

‘இ**ல்**லா கியரோ கா**லை** மா**லை**’ ***(புறம். 232)***

‘நு**ந்**தைதந் தைக்குஇவன் த**ந்**தை த**ந்**தை’ ***(புறம். 290)***

‘த**னி**த்தலைப் பெருங்காடு மு**ன்**னிய பி**ன்**னே’ ***(புறம். 250)***

‘ம**ன்**னிக் கழிக எ**ன்**றேனே அ**ன்**னோ’ ***(குறு. 325)***

‘தொ**ட**லை ஆயமொடு க**ட**லுடன் ஆ**டி**யும்’ ***(அகம். 110)***

‘பீ**லி** மஞ்ஞை ஆ**லு**ஞ் சோ**லை**’ ***(நற். 357)***

## கீழ்க்கதுவாய் எதுகை

நான்கு சீர் கொண்ட ஓரடியில் மூன்றாம் சீரினைத் தவிர்த்து பிற சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது கீழ்க்கதுவாய் எதுகையாகும். சங்கப் பெண்பாற் புலவர்கள் கீழ்க்கதுவாய் மோனையை விட கீழ்க்கதுவாய் எதுகையை இருமடங்கு கூடுதலாகப் பயன்படுத்தியுள்ளனர். இவர்களது பாடல்களில் மொத்தம் 14 கீழ்க்கதுவாய் எதுகைகள் இடம்பெற்றுள்ளன. ஔவையே தமது பாடல்களில் பிற புலவர்களைவிட அதிக அளவில் இவ்வெதுகைகளைக் கையாண்டுள்ளார். இவரது பாடல்களான நற்றிணையில் இரண்டும் அகநானூறு, புறநானூறு ஆகியவற்றில் ஒவ்வொன்றுமாக 4 கீழ்க்கதுவாய் எதுகைகள் அமைந்துள்ளன. காக்கைப் பாடினியார் தமது பதிற்றுப்பத்தில் 2 கீழ்க்கதுவாய் எதுகைகளையும், மாறோகத்து நப்பசலையார் தமது புறநானூற்றில் 2 கீழ்க்கதுவாய் எதுகைகளையும் கையாண்டுள்ளனர். சில புலவர்கள் ஒவ்வொரு கீழ்க்கதுவாய் எதுகைகளைக் கையாண்டுள்ளனர். பல பெண்பாற்புலவர்கள் இவ்வெதுகையைக் கையாளவில்லை.

(எ.கா.)

‘யா**ங்**ஙனம் தா**ங்**குவென் மற்றே ஓ**ங்**குசெலல்’ ***(நற். 381)***

'வாளை வாளின் பிறழ நாளும்' **(நற். 390)**

'அன்றிலும் என்புற நரலும் அன்றி' **(நற். 335)**

'ஒல்லென ஒலிக்கும் இளையரொடு வல்வாய்' **(அகம். 160)**

'வல்லேம் மல்லேம் ஆயினும் வல்லே' **(புறம். 126)**

'நோக்கினும் செருக்கும் காளை ஊக்கி' **(புறம். 302)**

## முற்று எதுகை

நான்கு சீர்கள் கொண்ட ஓரடியில் அனைத்துச் சீர்களிலும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது முற்று எதுகையாகும். சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் மொத்தம் 7 முற்று எதுகைகள் இடம்பெற்றுள்ளன. இவ்வெதுகையை ஔவையார் குறுந்தொகையில் இரண்டையும், புறநானூற்றில் ஒன்றையும், கழார்க்கீரன் எயிற்றியார் அகநானூற்றில் ஒன்றையும், பூங்கணுத்திரையார் குறுந்தொகையில் ஒன்றும், மாறோகத்து நப்பசலையார் புறநானூற்றில் ஒன்றும், வருமலையாரித்தி குறுந்தொகையில் ஒன்றையும் கையாண்டுள்ளனர்.

(எ.கா.)

'அகவன் மகளே அகவன் மகளே' **(குறு. 23)**

'அரில்பவர்ப் பரம்பின் வரிப்புற நீர்நாய்' **(குறு. 364)**

'ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன்' **(குறு. 176)**

'கடும்புனல் அடைகரை நெடுங்கயத்து இட்ட' **(குறு. 171)**

'மாரிஅம் குருகின் ஈரிய குரங்க' **(அறம். 235)**

'வாயி லோயே வாயி லோயே' **(புறம். 206)**

'இடம்கருங் குட்டத்து உடன்றுதொக்கு ஓடி' **(புறம். 37)**

## இயைபு

நான்கு சீர்கள் கொண்ட ஓரடியில் இறுதி எழுத்து ஒன்றி வருவது இயைபுத் தொடையாகும். இயைபுத் தொடையானது செய்யுளின் இசைத் தன்மைக்கு இன்றியமையாதது. எதுகையைப் போன்றே இயைபுத் தொடையும் யாப்புப் பணியை செய்ய வல்லதாகும். மோனை, எதுகைக்கு அடுத்த நிலையில் கருத்து வலுவூட்டலுக்கு இவ்வியைபுத் தொடை துணை செய்வதாகும்.

**'இறுவாய் ஒப்பின.். தியைபென மொழிப' (தொல்.செய். 92)**

என தொல்காப்பியம் இயைபுத் தொடைக்கு இலக்கணம் கூறும். சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் மொத்தம் 219 சீர் இயைபுகள் காணப்படுகின்றன. அவற்றுள் 52 இணை இயைபுகளும் 79 பொழிப்பு இயைபுகளும் 61 ஒரூஉ இயைபுகளும் 6 கூழை இயைபுகளும் 6 மேற்கதுவாய் இயைபுகளும் 10 கீழ்க்கதுவாய் இயைபுகளும் 5 முற்று இயைபுகளும் இடம்பெற்றுள்ளன. புலவர்களின் நடை வேறுபாட்டிற்கு இவ்வகையான இயைபுத் தொடைகளும் காரணமாக அமைகின்றன. அவ்வகையில் சங்கப் பெண்பாற்புலவர்களது நடை இயல்பினை அறியும் வகையில், அவர்களது பாடல்களில் பயின்று வந்துள்ள இயைபுத் தொடைகளையும் இவ்வியல் ஆராய்கிறது. ஔவையாரும் காக்கைப்பாடினியாரும் முறையே புறநானூற்றிலும், பதிற்றுப்பத்திலும் இவ்வியைபுத் தொடைகளை அதிகமாகக் கையாண்டுள்ளனர். ஒட்டுமொத்த பெண்பாற் புலவர்களோடு ஒப்பிடுகையில் அகம், புறம் ஆகிய இரு நிலைகளில் 66 இயைபுகளைக் கையாண்டு ஔவையாரே இயைபுத் தொடையைக் கையாள்வதில் முதலிடம் வகிக்கிறார். ஆதிமந்தி, ஊண்பித்தை, பூங்கணுத்திரையார், மாற்பித்தியார் ஆகிய நான்கு பெண்பாற்புலவர்களும் இயைபுத் தொடையைக் கையாளவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். சங்கப் பெண்பாற்புலவர்கள் தமது பாடல்களில் மோனை எதுகையைவிட இயைபுத் தொடையைக் குறைந்த அளவிலேயே பயன்படுத்தியுள்ளனர்.

## அகப்பாடல்கள் - இயைபு

### அட்டவணை 2.5

| வ. எண் | புலவர் | நூல் | பாடல் எண்ணிக்கை | இ. இ. | இ. பொ. | இ. ஓ. | இ. கூ. | இ. மே. | இ. கீ. | இ. பூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | அஞ்சியத்தை மகள் நாகையார் | அகநானூறு | 1 | 1 | 1 | - | - | - | - | - |
| 2. | அஞ்சில் அஞ்சியார் | நற்றிணை | 1 | - | 2 | - | - | - | - | - |
| 3. | ஆதிமந்தியார் | குறுந்தொகை | 1 | - | - | - | - | - | - | - |
| 4. | ஒக்கூர் மாசாத்தி | குறுந்தொகை | 5 | - | 3 | - | - | - | - | - |
| | | அகநானூறு | 2 | 1 | 3 | 1 | - | - | 1 | - |
| 5. | ஔவையார் | குறுந்தொகை | 15 | 4 | 5 | 2 | 2 | 1 | - | 1 |
| | | நற்றிணை | 7 | - | 4 | - | - | 1 | - | - |
| | | அகநானூறு | 4 | 2 | 1 | 5 | - | - | - | - |
| 6. | ஊண்பித்தை | குறுந்தொகை | 1 | - | - | - | - | - | - | - |
| 7. | கழார்க்கீரன் எயிற்றியார் | குறுந்தொகை | 2 | - | 1 | - | - | - | - | - |
| | | நற்றிணை | 2 | 2 | - | 2 | - | - | - | - |
| | | அகநானூறு | 4 | 4 | 6 | 3 | - | - | 2 | - |
| 8. | காக்கைப்பாடினி நச்செள்ளையார் | குறுந்தொகை | 1 | - | - | 1 | - | - | - | - |
| 9. | குமிழிஞாழலார் நப்பசலையார் | அகநானூறு | 1 | - | - | 2 | - | - | - | - |
| 10. | குறமகள் குறியெயினி | நற்றிணை | 1 | - | - | 1 | - | - | - | - |
| 11. | நக்கண்ணையார் | நற்றிணை | 2 | - | - | - | - | - | - | - |
| | | அகநானூறு | 1 | - | - | 2 | - | - | - | - |
| 12. | நப்பசலையார் | நற்றிணை | 1 | - | - | - | 1 | - | - | - |
| 13 | நன்னாகையார் | குறுந்தொகை | 8 | 2 | 2 | 2 | - | 1 | - | - |
| 14. | நெடும்பல்லியத்தை | குறுந்தொகை | 2 | 1 | - | - | - | - | - | - |
| 15. | பூங்கணுத்திரையார் | குறுந்தொகை | 2 | - | - | - | - | - | - | - |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16. | போந்தைப் பசலையார் | அகநானூறு | 1 | - | - | 1 | - | - | - | - |
| 17. | மாறோகத்து நப்பசலையார் | நற்றிணை | 1 | 1 | 1 | 1 | - | - | - | - |
| 18. | வருமுலையாரித்தி | குறுந்தொகை | 1 | - | 1 | - | - | - | - | - |
| 19. | வெண்பூதியார் | “ | 3 | - | 2 | - | - | - | - | - |
| 20. | வெண்மணிப் பூதியார் | குறுந்தொகை | 1 | - | 2 | - | - | - | - | - |
| 21. | வெள்ளிவீதியார் | குறுந்தொகை | 8 | 2 | 3 | 1 | - | - | - | 1 |
| | | நற்றிணை | 3 | - | - | 1 | - | - | - | - |
| | | அகநானூறு | 2 | 5 | - | 2 | - | - | - | - |
| 22. | வெறிபாடிய காமகண்ணியார் | நற்றிணை | 1 | - | 2 | - | - | - | - | - |
| | | அகநானூறு | 2 | - | 3 | 1 | 1 | - | - | - |

**புறப்பாடல்கள் - இயைபு**

**அட்டவணை 2.6**

| வ. எண் | புலவர் | நூல் | பாடல் எண்ணிக்கை | இ. இ. | பொ. இ. | ஒ. இ. | கூ. இ. | மே. இ. | கீ. இ. | மு. இ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஒக்கூர் மாசாத்தியார் | புறம் | 1 | - | - | 2 | - | - | - | - |
| 2. | ஔவையார் | புறம் | 33 | 12 | 15 | 9 | - | - | 1 | 1 |
| 3. | காக்கைப்பாடினியார் | புறம் | 1 | - | - | 1 | - | - | - | - |
| | | பதிற்றுப் பத்து | 10 | 7 | 10 | 5 | 1 | 3 | 5 | 1 |
| 4. | காவற்பெண்டு | புறம் | 1 | 1 | - | 1 | - | - | - | - |
| 5. | குறமகள் இளவெயினி | புறம் | 1 | - | - | 1 | - | - | - | - |
| 6. | தாயங்கண்ணியார் | புறம் | 1 | - | - | 3 | - | - | - | - |
| 7. | நக்கண்ணையார் | புறம் | 3 | - | 1 | 1 | - | - | - | - |
| 8. | பாரி மகளிர் | புறம் | 1 | 1 | - | - | - | - | - | - |
| 9. | பெருங்கோப்பெண்டு | புறம் | 1 | 1 | 1 | 1 | 1 | - | 1 | - |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| *10.* | பேய்மகள் இளவெயினி | புறம் | *1* | - | - | *1* | - | - | - | - |
| *11.* | மாறோகத்து நப்பசலையார் | புறம் | 7 | *1* | 7 | 7 | - | - | - | *1* |
| *12.* | மாற்பித்தியார் | புறம் | *2* | - | - | - | - | - | - | - |
| *13.* | வெண்ணிக்குயத்தியார் | புறம் | *1* | *2* | - | - | - | - | - | - |
| *14.* | வெறிபாடிய காமக்கண்ணியார் | புறம் | *2* | - | *2* | *1* | - | - | - | - |

## இணை இயைபு

செய்யுளில் நான்கு சீர்கள் கொண்ட ஓரடியில் முதலிரு சீர்களின் இறுதி எழுத்து ஒன்றி வருவது இணை இயைபாகும். சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் மொத்தம் *50* இணை இயைபுகள் காணப்படுகின்றன. சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களான குறுந்தொகையில் *8* இணை இயைபுகளும், நற்றிணையில் *3* இணை இயைபுகளும் அகநானூற்றில் *13* இணை இயைபுகளும் பதிற்றுப்பத்தில் *7* இணை இயைபுகளும் புறநானூற்றில் *19* இணை இயைபுகளும் காணப்படுகின்றன. அகப்பாடல்களை விடவும் புறப்பாடல்களான பதிற்றுப்பத்து மற்றும் புறநானூற்றிலேயே இவ்வகை இயைபுகள் அதிகமாக இடம்பெற்றுள்ளன. இணை இயைபுகளைக் கையாள்வதில் ஔவையார் முதன்மையாக உள்ளார். அடுத்த நிலையில் காக்கைப்பாடினியார் இணை இயைபுகளைத் தமது பதிற்றுபத்தில் அதிகமாகக் கையாண்டுள்ளார். ஔவையாரை விட வெள்ளிவீதியார் அகநானூற்றில் அதிகமாக இணை இயைபுகளைப் பயன்படுத்தியுள்ளார். பிற பெண்பாற் புலவர்கள் ஒன்றிலிருந்து *4* வரை இவ்வகை இயைபுகளைத் தம் பாடல்களில் கையாண்டுள்ளனர். பல பெண்பாற் புலவர்கள் இவ்வியைபுகளைக் கையாளவேயில்லை.

அகப்பாடல்களில் இணை இயைபுகள் பாலைத் திணையிலும் புறப்பாடல்களில் பாடாண் திணையிலும் அதிகமாக இடம்பெற்றுள்ளன.

(எ.கா.)

'செல்வா**ர்** அல்ல**ர்** என்றுயான் இகழ்ந்தனனே' **(குறு. 43)**

'பழுமர**ம்** படரு**ம்** பையுள் மாலை' **(குறு. 172)**

'பெய்**து** புறந்தந்**து** பொங்கல் ஆடி' **(பதி. 56)**

'பனிச்சுர**ம்** படரு**ம்** பாண்மகன் உவப்ப' **(பதி. 59)**

'காய்சி**ன** வேந்த**ன்** பாசறை நீடி' **(அகம். 294)**

'வாட**ல்** உழஞ்சி**ல்** வினைநெற்று அம்துணர்' **(அகம். 45)**

'மருளி**ன்** விசும்பி**ன்** மாதிரத்து ஈண்டிய' **(புறம். 90)**

'அறிவு**ம்** புகழு**ம்** உடையோர் மாய்ந்தென' **(புறம். 206)**

## பொழிப்பு இயைபு

செய்யுளில் நான்கு சீர்கள் கொண்ட ஓரடியில் முதல் மற்றும் மூன்றாம் சீரின் இறுதி எழுத்து ஒன்றி வருவது பொழிப்பு இயைபாகும். சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் மொத்தம் 79 பொழிப்பு இயைபுகள் காணப்படுகின்றன. அவற்றுள் குறுந்தொகையில் 19 பொழிப்பு இயைபுகளும் நற்றிணையில் 11 பொழிப்பு இயைபுகளும் அகநானூறில் 14 பொழிப்பு இயைபுகளும் பதிற்றுப்பத்தில் 10 பொழிப்பு இயைபுகளும் புறநானூற்றில் 26 பொழிப்பு இயைபுகளும் இடம்பெற்றுள்ளன. அனைத்து இயைபுகளை விட பொழிப்பு இயைபுகளே அதிகமாக இடம்பெற்றுள்ளன.

ஔவையார், காக்கைப்பாடினியார், மாறோகத்து நப்பசலையார் போன்றோரே அதிகமாக இவற்றைக் கையாண்டுள்ளனர். ஔவை புறநானூறில் 15 பொழிப்பு இயைபுகளையும் குறுந்தொகையில் 5 பொழிப்பு இயைபுகளையும், நற்றிணையில் 4உம், அகநானூறில் 1-மாக மொத்தம் 25 பொழிப்பு இயைபுகளைத் தம் பாடல்களில் பயன்படுத்தியுள்ளார். காக்கைப் பாடினியார் பதிற்றுப்பத்தில் 10உம்

மாறோகத்து நப்பசலையார் நற்றிணையில் 1உம் புறநானூற்றில் 7-மாகக் கையாண்டுள்ளனர்.

குறுந்தொகையில் நெய்தல் திணையிலும், நற்றிணையில் மருதத் திணையிலும், அகநானூற்றில் பாலைத் திணையிலும் பொழிப்பு இயைபுகள் அதிகமாக இடம்பெற்றுள்ளன.

(எ.கா.)

'நல்உ**ரை** இகந்து புல்உ**ரைத்** தாஅய்' **(குறு. 29)**

'உள்ள**ம்** தாங்கா வெள்ள**ம்** நீந்தி' **(குறு. 29)**

'முரிந்**த** சிலம்பின் நெரிந்**த** வள்ளியின்' **(நற். 295)**

'மரந்த**லை** மணந்த நனந்த**லை**க் கானத்து' **(நற். 394)**

'பெருந**சை** உள்ளமொடு வருந**சை** நோக்கி' **(அகம். 163)**

'கரிமுக**ழ்** முசுண்டைப் பொதிஅவி**ழ்** வான்பூ' **(அகம். 235)**

'ஆடு**க** விறலியர் பாடு**க** பரிசிலர்' **(பதி. 58)**

'மறா**அ** விளையுள் அறா**அ** யாணர்' **(பதி. 60)**

'எத்தி**சை**ச் செலினும் அத்தி**சை**ச் சோறே' **(புறம். 206)**

'யாழொடு**ம்** கொள்ளா பொழுதொடு**ம்** புணரா' **(புறம். 92)**

பிற இயைபுகளை விடவும் பொழிப்பு இயைபுகள் கருத்தாழம் மிக்கதாயும் இசைநலன் கொண்டதாயும் அமைந்துள்ளன. இவை முரண்களாகவும் காணப் படுகின்றன.

## ஒரூஉ இயைபு

செய்யுளில் நான்கு சீர்கள் கொண்ட ஓரடியில் முதல் மற்றும் நான்காம் சீரிலுள்ள இறுதி எழுத்து ஒன்றி வருவது ஒரூஉ இயைபாகும். பொழிப்பு இயைபும்

*ஒரூஉ இயைபும் சற்றொத்த நிலையில் காணப்படுகின்றன. சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் மொத்தம் 61 ஒரூஉ இயைபுகள் இடம்பெற்றுள்ளன. குறுந்தொகையில் 6-உம், நற்றிணையில் 5-உம், அகநானூற்றில் 17-உம், பதிற்றுப்பத்தில் 5-உம், புறநானூற்றில் 28-மாக ஒரூஉ இயைபுகள் காணப்படுகின்றன. புறநூல்களில் புறநானூறிலும், அகநூல்களில் அகநானூறிலும் ஒரூஉ இயைபுகள் மிகுந்துள்ளன. குறுந்தொகை மற்றும் நற்றிணையில் அனைத்துத் திணைகளிலும் விரவி வந்துள்ளன. அகநானூறில் பாலைத் திணையில் அதிகமாகக் காணப்படுகின்றன. புறநூல்கள் இரண்டிலும் பாடாண் திணையிலேயே இவை அதிகம் காணப்படுகின்றன.*

*(எ.கா.)*

'நம்போ**ல்** பசக்கும் காலை தம்போ**ல்**' ***(குறு. 183)***

'யாம்அ.்.**து** அயர்கம் சேறும் தான்அ.்.**து**' ***(குறு. 80)***

'ஈத**ல்** நின்புகழும் அன்றே சாத**ல்**' ***(புறம். 39)***

'அன்று**ம்** பாடுநர்க்கு அரியை இன்று**ம்**' ***(புறம். 99)***

'வேர்பு**ரை** சிதாஅர் சீக்கி நேர்க**ரை**' ***(புறம். 392)***

'எமியே**ன்** இருத்தலை யானும் ஆற்றே**ன்**' ***(அகம். 252)***

*ஒரூஉ இயைபுகளைக் கையாள்வதில் ஔவையாரும் மாறோகத்து நப்பசலையாருமே சிறப்பிடம் பெற்றுள்ளனர். பதிற்றுப்பத்தில் காக்கைப்பாடினியார் 5 ஒரூஉ இயைபுகளையே பயன்படுத்தியுள்ளார். ஒரூஉ இயைபுகளை சில பெண்பாற்புலவர்கள் பயன்படுத்தவில்லை.*

## கூழை இயைபு

*செய்யுளில் நான்கு சீர்கள் கொண்ட ஓரடியில் நான்காம் சீர் தவிர்த்து முதல் மூன்று சீர்களிலும் இறுதி எழுத்து ஒன்றி வருவது கூழை இயைபாகும். சங்கப்*

பெண்பாற் புலவர்களின் பாடல்களில் மிகக் குறைந்த அளவிலேயே இவை கையாளப்பட்டுள்ளன. மொத்தம் 6 கூழை இயைபுகளே காணப்படுகின்றன. ஔவையார், காக்கைப்பாடினியார். நப்பசலையார், பெருங்கோப்பெண்டு, வெறிபாடிய காமக்கண்ணியார் ஆகியோர் மட்டுமே இவ்வியைபுகளைக் கையாண்டுள்ளனர். ஔவை தமது குறுந்தொகைப் பாடல்களில் இரண்டினையும், காக்கைப்பாடினியார் பதிற்றுப்பத்திலும், நப்பசலையார் நற்றிணையிலும், பெருங்கோப்பெண்டு புறநானூற்றிலும், வெறிபாடிய காமக்கண்ணியார் அகநானூற்றிலும் ஒவ்வொரு கூழை இயைபுகளைக் கையாண்டுள்ளனர்.

(எ.கா.)

'துணைஇல**ர்** அளிய**ர்** பெண்டி**ர்** இஃதெவனோ?' **(குறு. 158)**

'உள்ளினெ**ன்** அலல**னோ** யா**னே?** உள்ளி' **(குறு. 99)**

'குணகு**ட** கடலொ**டு** ஆயி**டை** மணந்த' **(பதி. 51)**

'துறுக**ல்** அய**ல** தூமண**ல்** அடைகரை' **(நற். 243)**

'நள்இரு**ம்** பொய்கையு**ம்** நீயு**ம்** ஒரந்தே' **(புறம். 246)**

'தக்கனெ**ன்** அல்லெ**னோ** யா**னே?** எய்த்த' **(அகம். 22)**

பெரும்பாலும் கூழை இயைபுகள் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் வினா அமைப்பில் காணப்படுகின்றன. அவ்வினா அமைப்பு அகப்பாடல்களிலேயே அமைந்துள்ளன. தலைவி கூற்றில் மட்டுமே அமையப்பெற்றுள்ள இவை மன உணர்வினையும் கழிவிரக்கத்தினையும் வெளிப்படுத்துவதாக உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## மேற்கதுவாய் இயைபு

செய்யுளில் நான்கு சீர்கள் கொண்ட ஓரடியில் இரண்டாம் சீர் தவிர்த்த பிற சீர்களில் இறுதி எழுத்து ஒன்றி வருவது மேற்கதுவாய் இயைபாகும். சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் மொத்தம் 6 இடங்களிலேயே மேற்கதுவாய்

இயைபுகள் இடம்பெற்றுள்ளன. ஔவையார் குறுந்தொகையில் ஒன்றையும், நற்றிணையில் ஒன்றையும், காக்கைப்பாடினியார் பதிற்றுப்பத்தில் மூன்றையும், நன்னாகையார் குறுந்தொகையில் ஒன்றையும் கையாண்டுள்ளனர். புறநானூறிலும் அகநானூறிலும் இவை காணப்படவில்லை.

(எ.கா.)

'கா**ல** மாரி மா**லை** மாம**லை**' ***(குறு. 200)***

'சேறு**ம்** வாழியோ! முதிர்க**ம்** யா**மே**' ***(நற். 295)***

'தமியெ**ன்** மன்ற அளியெ**ன்** யா**னே**' ***(குறு. 30)***

'உள்ளுவ**ர்** கொல்லோ நின்உண**ரா** தோ**ரே**?' ***(பதி. 51)***

'நகைசா**ல்** வாய்மொழி இசைசா**ல்** தோன்ற**ல்**' ***(பதி. 55)***

'கொலைவி**னை** மேவற்றுத் தா**னை** தா**னே**' ***(பதி. 60)***

ஔவையார் பாடல்களில் இவ்வியைபுகள் தோழி கூற்றிலேயே அமைந்துள்ளன.

## கீழ்க்கதுவாய் இயைபு

செய்யுளில் நான்கு சீர்கள் கொண்ட ஓரடியில் மூன்றாம் சீர் தவிர்த்து ஏனைய சீர்களில் இறுதி எழுத்து ஒன்றி வருவது கீழ்க்கதுவாய் இயைபாகும். சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் மொத்தம் 10 இடங்களில் இக்கீழ்க்கதுவாய் இயைபுகள் காணப்படுகின்றன. ஒக்கூர் மாசாத்தியார் அகநானூறில் ஒன்றினையும், ஔவையார் மற்றும் பெருங்கோப்பெண்டு ஆகியோர் முறையே புறநானூறில் ஒவ்வொன்றினையும், கழார்க்கீரன் எயிற்றியார் அகநானூறில் இரண்டினையும், காக்கைப் பாடினியார் பதிற்றுப்பத்தில் ஐந்தினையும் கையாண்டுள்ளனர். குறுந்தொகையிலும் நற்றிணையிலும் இவை கையாளப்படவில்லை.

(எ.கா.)

'இழிமி**ன்** என்றநி**ன்** மொழிமருண் டிசி**னே**' ***(அகம். 384)***

'துவலை தூவல் கழிய அகல்வயல்' **(அகம். 217)**

'பனிகடி கொண்ட பண்புஇல் வாடை' **(அகம். 235)**

'உடையன் ஆயின் உண்ணவும் வல்லன்' **(புறம். 315)**

'வெள்ளட் சாந்தொடு புளிபெய்து அட்ட' **(புறம். 246)**

'இயலினள் ஒல்கினள் ஆடும் மடமகள்' **(பதி. 51)**

'செல்லா மோதில் சில்வளை விறலி' **(பதி. 57)**

## முற்று இயைபு

செய்யுளில் நான்கு சீர்கள் கொண்ட ஓரடியில் நான்கு சீர்களிலும் இறுதி எழுத்து ஒன்றி வருவது முற்று இயைபாகும். சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்கள் மொத்தம் ஐந்து இடங்களில் மட்டுமே இம்முற்று இயைபுகள் காணப்படுகின்றன. ஔவையார் குறுந்தொகையில் ஒன்றினையும், புறநானூறில் ஒன்றினையும் காக்கைப்பாடினியார் பதிற்றுப்பத்தில் ஒன்றினையும் மாறோகத்து நப்பசலையார் புறநானூறில் ஒன்றினையும் கையாண்டுள்ளனர். வெள்ளிவீதியார் குறுந்தொகையில் ஒன்றினையும் கையாண்டுள்ளார். புறப்பாடல்களிலேயே இவை அதிகம் அமைந்துள்ளன.

(எ.கா.)

'நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்' **(குறு. 130)**

'சான்றோர் அல்லர் யாம்மரீஇ யோரே' **(குறு. 162)**

'வாயி லோயே வாயி லோயே' **(புறம். 266)**

'ஒருவன் உடையேன் மன்னே யானே' **(புறம். 383)**

'மலையவும் கடலவும் பண்ணியம் பகுக்கும்' **(பதி. 59)**

முற்று இயைபுகள் காணப்படும் அடிகளில் பெரும்பாலும் இறுதிசீர்கள் ஏகார ஒலியைக் கொண்டு அமைந்துள்ளன. முற்று இயைபுகள் காணப்பெறும் புறப்பாடல்கள் அனைத்துமே பாடாண் திணையைச் சார்ந்தவையாக அமைந்துள்ளன.

**முரண்**

செய்யுளில் ஓரடியிலும் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளிலும் முரண்பட்ட சொற்கள் அமைவது முரண் தொடையாகும். முரண்கள் செய்யுளில் ஓசை நயத்திற்கு வலுசேர்ப்பவையாகும். பெரும்பாலும் இவை எதிர்ச் சொற்களாகவே அமைந்து ஒலி நயத்திற்கு மட்டுமின்றி பொருள்நயத்திற்கும் துணை செய்கின்றன.

சொல்லையும் பொருளையும் முரண் சுவை தோன்றும்படி எதிர்ப்பட அமைப்பது முரண் தொடையாகும். இதனை,

**'மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே'**

**(தொல்.செய்.90)**

என தொல்காப்பியம் கூறும். தொடை முரண்களை விட கருத்து முரண்களே அதிகமாக சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் அமைந்துள்ளன. ஆகையால் முரண்களின் விகற்பங்கள் ஆய்விற்கு உட்படுத்தப்படவில்லை. மேலும், இவை குறைவாகவே கையாளப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

*14* பெண்பாற் புலவர்கள் மட்டுமே முரண் சொற்களை கையாண்டுள்ளனர். மொத்தம் *49* இடங்களில் இத்தகைய முரண்சொற்கள் இடம் பெற்றுள்ளன. 'சிறு x பெரு' என்ற முரண் சொல்லானது *4* இடங்களிலும், சிறிய x பெரிய என்ற முரண் சொல்லை ஒரு இடத்திலும் சிறிது x பெரு என்ற முரணை ஒரு இடத்திலும், சிறியிலை x பெரிய என்ற சொல்லை ஒரு இடத்திலும் காண முடிகின்றது. இவற்றுள் சிறு x பெரு என்ற முரணை நக்கண்ணையார் ஓர் இடத்திலும் மேற்குறிப்பிட்ட பிற அனைத்து முரண்களையும் ஔவையார் மற்றும் காக்கைப்பாடினியார் ஆகியோர் கையாண்டுள்ளனர். கோடை x வாடை என்ற முரண்

சொற்கள் கழார்க்கீரன் எயிற்றியார் எனும் பெண்பாற் புலவர் மட்டுமே இரு இடங்களில் (நற்றிணை, அகநானூறு) பயன்படுத்தியுள்ளார்.

**புறநானூறு முரண்கள்**

**அட்டவணை 2.7**

| வ. எ. | புலவர் | முரண் சொற்கள் | பாடல் எண் | நூல் | திணை | துறை |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஔவை | இருள் x ஞாயிறு | 90 | புறம் | தும்பை | தானை மறம் |
| 2. | ‘‘ | இனியை x இன்னா | 94 | புறம் | வாகை | அரச வாகை |
| 3. | ‘‘ | உண்டாயின் x இல்லாயின் | 95 | புறம் | பாடாண் | வாள் மங்கலம் |
| 4. | ‘‘ | ஒரு x பல | 101 | புறம் | பாடாண் | பரிசில் நிலை |
| 5. | ‘‘ | நாடு x காடு | 187 | புறம் | பொதுவியல் | பொருண் மொழிக்காஞ்சி |
| 6. | ‘‘ | திங்கள் x ஞாயிறு | 231 | புறம் | பொதுவியல் | கையறுநிலை |
| 7. | ‘‘ | குறுகுக x குறுகாது | 231 | புறம் | பொதுவியல் | கையறுநிலை |
| 8. | ‘‘ | காலை x மாலை | 232 | புறம் | பொதுவியல் | கையறுநிலை |
| 9. | ‘‘ | நரந்தம் x புலவு | 235 | புறம் | பொதுவியல் | கையறுநிலை |
| 10. | ‘‘ | சிறிய x பெரிய | 235 | புறம் | பொதுவியல் | கையறுநிலை |
| 11. | ‘‘ | சிறு x பெரு | 235 | புறம் | பொதுவியல் | கையறுநிலை |
| 12. | ‘‘ | தோன்றாது x தோன்றவும் | 315 | புறம் | தும்பை | வல்லாண் முல்லை |
| 13. | ‘‘ | அறவை x மறவை | 390 | புறம் | பாடாண் | இயன்மொழி |
| 14. | தாயங் கண்ணியார் | இரவலர் x புரவலர் | 250 | புறம் | பொதுவியல் | தாபதநிலை |
| 15. | பாரிமகளிர் | அற்றை x இற்றை | 112 | புறம் | பொதுவியல் | கையறுநிலை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *16.* | பாரிமகளிர் | அவ் x இவ் | *112* | புறம் | பொதுவியல் | கையறுநிலை |
| *17.* | பெருங்கோப் பெண்டு | நுமக்கு x எமக்கு | *246* | புறம் | பொதுவியல் | ஆனந்தப் பையுள் |
| *18.* | மாறோகத்து நப்பசலையார் | இன்மை x வன்மை | *126* | புறம் | பாடாண் | பரிசில் துறை |
| *19.* | " | துஞ்சா x துஞ்சும் | *280* | புறம் | பொதுவியல் | ஆனந்தப் பையுள் |

சங்கப் பெண்பாற்புலவர்களின் புறநானூற்றுப் பாடல்களில் மொத்தம் *19* இடங்களில் இம்முரண் சொற்கள் பயின்று வந்துள்ளன. ஔவையார், தாயங்கண்ணியார், பாரிமகளிர், பெருங்கோப்பெண்டு, மாறோகத்து நப்பசலையார் ஆகிய ஐவர் மட்டுமே இம்முரண் சொற்களைக் கையாண்டுள்ளனர். பெரும்பாலும் இவை பொதுவியல் திணைகளிலும் கையறுநிலைத் துறைகளிலும் மிகுதியாக ஆளப்பட்டுள்ளன. *19* முரண்களில் *14* முரண்களை ஔவையார் மட்டுமே கையாண்டுள்ளமை நோக்குதற்குரியது. கையறு நிலைப்பாடல்கள் கருத்து செறிவும் நாட்டுப்புறக்கூறான ஒப்பாரித் தன்மையும் வாய்ந்தமையால் ஒலி நிலைக்கு வலுசேர்க்கும் இத்தகைய முரண் சொற்கள் மிகுந்திருக்கலாம்.

(எ.கா.)

'இல்லா கியரோ **காலை** **மாலை**' **(புறம். 232)**

"**சிறிய**கட் பெறினே எமக்கீயும் மன்னே!
**பெரிய**கட் பெறினே" **(புறம். 235)**

"**நரந்தம்** நாறும் தன் கையால்
**புலவு** நாறும் என்தலை தைவரும் மன்னே" **(புறம். 235)**

'**இரவலர்** தடுத்த வாயில் **புரவலர்**' **(புறம். 250)**

'**நுமக்கு** அரிதாகுக தில்ல **எமக்கு** எம்' **(புறம். 246)**

"**இன்மை** துரப்ப இசைதர வந்து நின்
**வண்மை**யின் தொடுத்தனம் யாமே முள்ளயிற்று" **(புறம். 126)**

## பதிற்றுப்பத்து – முரண்கள்

## (காக்கைப்பாடினியார்)

### அட்டவணை 2.8

| வ. எண் | முரண் சொற்கள் | பாடல் எண் | திணை | துறை |
|---|---|---|---|---|
| 1. | பல் x சில | 52 | பாடாண் | குரவை நிலை |
| 2. | முன்னும் x பின்னும் | 53 | பாடாண் | செந்துறை |
| 3. | நசை x இசை | 55 | பாடாண் | செந்துறை |
| 4. | சிறியிலை x பெரிய | 58 | பாடாண் | செந்துறை |
| 5. | சிறு x பெரு | 59 | பாடாண் | செந்துறை |
| 6. | பகல் xஇரவு | 59 | பாடாண் | செந்துறை |

பதிற்றுப்பத்தில் ஆறாம் பத்தினைப் பாடிய காக்கைப்பாடினி நச்செள்ளையார் 6 முரண் சொற்களைத் தமது பாடல்களில் கையாண்டுள்ளார். ஆறனுள் ஐந்து செந்துறையைச் சார்ந்தவையாக அமைந்துள்ளன. அவை பெரும்பாலும் 'சிறு x பெரு' என்ற பொருண்மைகளிலேயே இடம்பெற்றுள்ளன.

எ.கா.

'**<u>பல்சில</u>** கிண்கிணி சிறுபரடு அலைப்ப' **(பதி. *52*)**

'**<u>முன்னும்</u>** **<u>பின்னும்</u>**நின் முன்னோர் ஓம்பிய' **(பதி. *53*)**

'**<u>நசை</u>**சால் வாய்மொழி **<u>இசை</u>**சால் தோன்றல்' **(பதி. *55*)**

'**<u>சிறி</u>**யிலை வேலம் **<u>பெரிய</u>** தோன்றும்' **(பதி. *58*)**

'**<u>பகல்</u>**நீடு ஆகாது **<u>இரவு</u>**ப்பொழுது பெருகி' **(பதி. *59*)**

'இரவல் மாக்கள் **<u>சிறு</u>**குடி **<u>பெரு</u>**க' **(பதி. *59*)**

## அகப்பாடல்கள் முரண்கள்

### அட்டவணை 2.9

| வ. எண் | புலவர் | சொற்கள் | பாடல் எண் | நூல் | திணை | கூற்று |
|---|---|---|---|---|---|---|
| 1. | அஞ்சியத்தை மகள் நாகையார் | பாடு x ஆடு | 352 | அகநானூறு | குறிஞ்சி | தலைவி |
| 2. | ஒக்கூர் மாசாத்தியார் | பழமழை x புதுப்புனல் | 220 | குறுந்தொகை | முல்லை | தலைவி |
| 3. | ஔவையார் | நல்லுரை x புல்லுரை | 29 | “ | குறிஞ்சி | தலைவன் |
| | “ | பல x சில | 91 | “ | மருதம் | தலைவி |
| | “ | உள்ளின் x உள்ளாது | 102 | “ | நெய்தல் | தலைவி |
| | “ | சிறு x பெரு | 183 | “ | முல்லை | தலைவி |
| 4. | காக்கைப்பாடினி நச்செள்ளையார் | சிறிது x பெரு | 210 | “ | முல்லை | தோழி |
| 5. | கழார்க்கீரன் எயிற்றியார் | கனைத்த x நுண் | 35 | “ | மருதம் | தலைவி |
| | “ | கோடை x வாடை | 312 | நற்றிணை | பாலை | தலைவன் |
| | “ | கோடை x வாடை | 217 | அகநானூறு | பாலை | தலைவி |
| | “ | முகழ் x அவிழ | 235 | “ | பாலை | தலைவி |
| | “ | உள்ளார் x உள்ளி | 235 | “ | பாலை | “ |
| 6. | குறமகள் குறியெயினி | நின் x என் | 357 | நற்றிணை | குறிஞ்சி | “ |
| 7. | நக்கண்ணையார் | இடம் x வலம் | 252 | அகநானூறு | குறிஞ்சி | “ |
| | “ | சிறு x பெரு | 252 | “ | “ | “ |
| | “ | சிறு x பெரு | 87 | நற்றிணை | நெய்தல் | “ |
| 8. | நன்னாகையார் | ஏழ் x ஓர் | 172 | குறுந்தொகை | “ | “ |
| | “ | பொய் x மெய் | 30 | “ | பாலை | “ |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | “ | கருங்கால் x வெண்குருகு | 325 | “ | நெய்தல் | “ |
| 9. | மாறோகத்து நப்பசலையார் | புணரின் x பிரியின் | 304 | நற்றிணை | குறிஞ்சி | “ |
| | “ | இன்பமும் x துன்பமும் | 304 | “ | “ | “ |
| 10. | வருமுலையாரித்தி | ஒரு x பல | 176 | குறுந்தொகை | “ | தோழி |
| | “ | வாரலன் x வந்து | 176 | “ | “ | “ |
| 11. | வெள்ளிவீதியார் | ஆங்கண் x ஈங்கண் | 70 | நற்றிணை | மருதம் | தலைவி |

அகப்பாடல்களான குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு ஆகியவற்றில் 11 பெண்பாற்புலவர்கள் முரண் சொற்களைக் கையாண்டு தமது பாடல்களில் ஓசை நயத்திற்கு துணை செய்துள்ளனர். அகப்பாடல்களுள் குறுந்தொகையில் 12 இடங்களிலும். நற்றிணையில் 6 இடங்களிலும், அகநானூற்றில் 6 இடங்களிலும் ஆக 24 இடங்களிலும் இம்முரண்கள் பயின்று வந்துள்ளன. ஔவையாரே இம்முரண்களை அதிகம் கையாண்டுள்ளார். 24 முரண்களில் 19 முரண்கள் தலைவி கூற்றில் அமைந்துள்ளன. 3 முரண்கள் தோழி கூற்றிலும் 2 முரண்கள் தலைவன் கூற்றிலும் இடம்பெற்றுள்ளன. பெரும்பாலும் இம்முரண்கள் குறிஞ்சித் திணையிலேயே காணப்படுகின்றன. கழார்க்கீரன் எயிற்றியார் ‘கோடை x வாடை’ என்ற முரண் சொல்லை மட்டும் நற்றிணையிலும் அகநானூறிலும் முறையே ஒவ்வொன்றினைக் கையாண்டுள்ளார். பெரும்பான்மையான முரண்களை ஔவையாரே கையாண்டுள்ளார்.

(எ.கா.)

“**<u>பாடு</u>** இமிழ் அருவிப் பாறை மருங்கின்

**<u>ஆடு</u>** மயில் முன்னது ஆகக் கோடியர்” **(அகம். 352)**

‘**<u>நல்உரை</u>** இகந்து **<u>புல்உரை</u>**த் தாஅய்’ **(குறு. 29)**

"**<u>கோடை</u>**த் திங்களும் பனிபோள்

**<u>வாடை</u>**ப் பெரும்பனிக்கு என்னள் கொல்? எனவே" **(நற். 312)**

'**<u>நின்குறிப்பு</u>** எவனோ தோழி **<u>என்குறிப்பு</u>**' **(நற். 357)**

'**<u>இடம்</u>**படுபு அறியா **<u>வலம்</u>**படு வேட்டத்து' **(அகம். 252)**

'**<u>புணரின்</u>** புணருமார் எழிலே **<u>பிரியின்</u>**' **(நற். 304)**

அகப்பாடல்களிலும் புறப்பாடல்களிலும் சற்றொத்த நிலையிலேயே இம்முரண்கள் அமையப் பெற்றுள்ளன. புறப்பாடல்களை விட அகப் பாடல்களிலேயே அதிகமாக சங்க பெண்பாற்புலவாக்ள் இம்முரண்களைக் கையாண்டுள்ளனர். செய்யுள் கட்டமைப்பில் இம்முரண்சொற்கள் ஒருவித நடை ஓட்டத்தினையும் சந்த நயத்தினையும் தரவல்லதாகும். அவ்வகையில் ஔவையாரே தமது பாடல்களில் இம்முரண்களை அதிகமாகக் கையாண்டு தனது நடை ஆளுமையினை எடுத்தியம்பியுள்ளார். ஔவையாருக்கு அடுத்த நிலையில் காக்கைப்பாடினியாரும் கழார்க்கீரன் எயிற்றியாரும் இவ்வகை முரண் சொற்களைக் கையாண்டுள்ளனர்.

## அளபெடை

அளபெடை என்பது செய்யுளில் இடம்பெறும் எழுத்தின் ஒலிக்கு மாத்திரை கூட்டுதல் என்பதாகும். அதாவது செய்யுளில் ஓசை குறையும் போதும், சீரும் சீர்களுடன் இணையும் தளைகள் சிதையும் போதும், செய்யுள் இலக்கணத்தில் குற்றம் ஏற்படும். அதனை நிறைவு செய்வதற்கும், செய்யுளில் ஓசை இனிமையாக அமையும் பொருட்டும், செய்யுளின் சிலவிடங்களில் அளபெடைகள் அமைத்து இயற்றப்படுகின்றன. அவ்வாறு அளபெடுக்கும் போது நெடிலெழுத்துகள் தனக்கு இனமான குறிலெழுத்துக்களை உடன் இணைத்துக்கொள்ளும். அளபெடுத்தல் என்பது செய்யுளிலுள்ள நின்றசீர், வரும்சீருக்கு ஏற்பத் தன் அமைப்பில் மாற்றம் செய்து கொள்ளும் வகையாகும். இவ்வளபெடை மூன்று வகைப்படும். அவை:

1. இன்னிசை அளபெடை

2. சொல்லிசை அளபெடை
3. செய்யுளிசை அளபெடை

என்பதாகும். தொல்காப்பியர் முதலில் மோனை, எதுகை, முரண், இயைபு என்று கூறிவிட்டு அடுத்த நூற்பாவில்,

**'அளபெழின் அவையே அளபெடைத் தொடையே'**

**(தொல்.செய்.93)**

என அளபெடைக்கு இலக்கணம் கூறுவார். அளபெடை பெரும்பாலும் குறிப்புப் பொருளைக் கொண்டுள்ளதாக இலக்கணவியலாளர் குறிப்பிடுவர். அளபெடை பிற தொடைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். பிற தொடைகளானது சீரிலுள்ள எழுத்துக்களுடன் தொடர்புடையவை. ஆனால் அளபெடையானது ஒரே ஒரு சீரில் இடம்பெற்றாலும் அவை மனவுணர்வையும் சேர்த்தே வெளிப்படுத்துபவையாக அமைந்துள்ளது.

கவிதையில் அளபெடையானது இன்றியமையாத கூறாகும். கூட்டொலியாக இடம்பெற்று ஒலி அழுத்தம் பெறக்கூடியது இவ்வளபெடை. சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் இன்னிசை, சொல்லிசை, செய்யுளிசை ஆகிய அளபெடைகள் அமைந்துள்ள பான்மையையும் இவ்வியலில் நோக்கப்பட்டுள்ளன.

## இன்னிசை அளபெடை

இன்னிசை அளபெடை என்பது செய்யுளில் ஓசையோ அசையோ குறையாத போதும் ஓசை இனிமைக்காக அளபெடுப்பதாகும். சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் ஒரு இன்னிசை அளபெடை கூட இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வித இன்னிசை அளபெடைகள் சங்கப்பாடல்களில் மிகவும் குறைவான ஆட்சியைப் பெற்றுள்ளன. திருக்குறள் போன்ற சங்கம் மருவிய காலத்தில் இயற்றப்பெற்ற பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலேயே அதிகம் காணப்படுகின்றன. அளபெடையைப் பொறுத்தமட்டில் சங்கப் புலவர்கள் ஓசை

இனிமையை விட கவிதைக் கட்டமைப்பில் அதிக கவனம் செலுத்தியுள்ளமையை இங்கு அறிய முடிகிறது.

## சொல்லிசை அளபெடை

சங்கப் பெண்பாற்புலவர்களின் 154 பாடல்களில் மொத்தம் 38 சொல்லிசை அளபெடைச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. அவையுள் அகப்பாடல்களில் 24 சொல்லிசை அளபெடைச் சொற்களும் புறப்பாடல்களில் 14 சொல்லிசை அளபெடைச் சொற்களும் காணப்படுகின்றன. ஒரு பெயர்ச் சொல்லை வினை எச்சமாக மாற்றுவது சொல்லிசை அளபெடை எனப்படும். சான்றாக, ‘நசை’ என்ற சொல்லிற்கு விருப்பம் என்பது பொருளாகும். இச்சொல்லை ‘நசைஇ’ என்று அளபெடுத்து ஒலிப்பதனால் ‘விரும்பி’ என்ற வினையெச்ச சொல்லாக மாறி பொருள் தரும். இத்தகைய இலக்கண ஆக்கத்திற்கும் ஓசைநயத்திற்கும் இச்சொல்லிசை அளபெடைகள் துணைபுரிகின்றன.

அகப்பாடல்களில் 8 பெண்பாற் புலவர்களே சொல்லிசை அளபெடைகளைக் கையாண்டுள்ளனர். அவர்களுள் ஔவையாரே அதிகமான சொல்லிசை அளபெடைச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். 24 அளபெடைகளுள் 10 அளபெடைகளை ஔவையார் எடுத்தாண்டுள்ளார். ஔவையாருக்கு அடுத்த நிலையில் ஒக்கூர் மாசாத்தியாரும் வெறிபாடிய காமக்கண்ணியாரும் அதிக அளவில் இத்தகைய சொல்லிசை அளபெடைகளைப் பயன்படுத்தியுள்ளனர். அஞ்சியத்தை மகள் நாகையார், கழார்க்கீரன் எயிற்றியார், நன்னாகையார். நெடும்பல்லியத்ததை, மாறோகத்து நப்பசலையார் போன்றோர் ஓரிரு சொல்லிசை அளபெடைகளையே கையாண்டுள்ளனர். ‘தாஅய்’ என்ற அளபெடை 5 இடங்களில் பயின்று வந்துள்ளது.

(எ.கா.)

‘ஆறுநனி அறிந்தன்றோ இலெனே, **தாஅய்**’ **(அகம். 384)**

‘நல்உரை இகந்து, பல்உரைத் **தாஅய்**’ **(குறு. 29)**

‘மீமிசைத் **தாஅய்** வீசும் வளிகலந்து’ **(குறு. 200)**

‘மாஇருங் கொல்லி உச்சித் **தாஅய்**’ **(அகம். 303)**

‘வளிசினை உதிர்த்தலின் வெளிகொள்பு **தாஅய்ச்**’ **(அகம். 324)**

## அகப்பாடல்கள் - சொல்லிசை அளபெடை

## அட்டவணை 2.10

| வ. எண் | புலவர் | சொல்லிசை | நூல் | பாடல் எண் | திணை | துறை | கூற்று |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | அஞ்சியத்தை மகள் நாகையார் | தழீஇ | அகநானூறு | 352 | குறிஞ்சி | வரைவு மலிதல் | தலைவி |
| 2. | ஒக்கூர் மாசாத்தியார் | நசைஇ | குறுந் தொகை | 126 | முல்லை | பருவம் கண்டு அழிதல் | தலைவி |
| | “ | தாஅய் | அகநானூறு | 324 | முல்லை | வினைமுற்றி மீண்டு வருதல் | உழையர் |
| | “ | நிறீஇ | “ | 324 | முல்லை | “ | “ |
| | “ | தாஅய் | “ | 384 | முல்லை | “ | “ |
| 3. | ஔவையார் | தழீஇ | குறுந் தொகை | 29 | குறிஞ்சி | இரவுக்குறி மறுத்தல் | தலைவன் |
| | “ | தாஅய் | “ | 29 | “ | “ | தலைவன் |
| | “ | மரீஇ | “ | 102 | நெய்தல் | பிரிவாற்றாமை | தலைவி |
| | “ | அளைஇ | “ | 158 | குறிஞ்சி | இரவுக்குறி | தலைவி |
| | “ | தாஅய் | “ | 200 | நெய்தல் | பிரிவாற்றாமை | தலைவி |
| | “ | சாஅய் | அகநானூறு | 147 | பாலை | செலவுணர்தல் | தலைவி |
| | “ | வளைஇ | “ | 273 | பாலை | பிரிவாற்றாமை | தலைவி |
| | “ | தாஅய் | “ | 303 | பாலை | பிரிவாற் றாமை | தலைவி |
| | “ | தைஇ | நற்றிணை | 390 | மருதம் | வாயில் நேர்தல் | தலைவி |
| | “ | தைஇ | நற்றிணை | 381 | முல்லை | பிரிவாற்றாமை | தலைவி |
| 4. | கழார்க்கீரன் எயிற்றியார் | சாஅய் | அகநானூறு | 235 | பாலை | பிரிவாற்றாமை | தலைவி |
| 5. | நன்னாகையார் | சாஅய் | குறுந்தொகை | 30 | பாலை | பிரிவாற்றாமை | தலைவி |
| | “ | அசைஇ | “ | 287 | முல்லை | பருவம்காட்டி தேற்றல் | தோழி |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 6. | நெடும்பல்லி யத்தை | ஓரீஇ | " | 203 | மருதம் | வாயில் நேர்தல் | தலைவி |
| 7. | மாறோகத்து நப்பசலையார் | குழீஇ | நற்றிணை | 304 | குறிஞ்சி | வன்புறை | தலைவி |
| 8. | வெறிபாடிய காமக்கண்ணி யார் | தூஉய் | அகநானூறு | 22 | " | இயற்பட மொழிதல் | " |
| | " | இரீஇ | " | 98 | " | சிறைப்புறம் | " |
| | " | இரீஇ | " | 98 | " | " | " |
| | " | பரைஇ | " | 98 | " | " | " |

அதே போன்று 'சாஅய்' என்ற அளபெடைச் சொல்லும் மூன்று இடங்களில் காணப்பெறுகின்றன.

(எ.கா.)

'உண்ணா உயக்கமொடு உயிர்செலச் **சாஅய்**' (அகம். 147)

'தொல்நலம் சிதையச் **சாஅய்**' (அகம். 235)

'வண்டபடு மலரின் **சாஅய்**த்' (குறு. 30)

பெரும்பாலும் இத்தகைய அளபெடைச் சொற்கள் செய்யுளில் ஓரடியில் இறுதி சீரிலேயே அமையப் பெற்றுள்ளன. அகப்பாடல்களான அகநானூறிலும், குறுந்தொகையிலுமே அதிகமான சொல்லிசை அளபெடைகள் காணப்படுகின்றன. (அகம். 12, குறு. 9, நற். 3) நற்றிணையில் மிகக் குறைந்த அளவிலேயே இவை அமைந்துள்ளன. குறிஞ்சித் திணையிலேயே இவை அதிகம் இடம்பெற்றுள்ளன. பாலை, முல்லைத் திணைகளில் முறையே 6 சொல்லிசை அளபெடைகளும் மருதம், நெய்தல் ஆகியத் திணைகளில் முறையே 2 சொல்லிசை அளபெடைகளும் இடம்பெற்றுள்ளன. பிரிவாற்றாமை துறையிலும் தலைவி கூற்றிலும் மிகுதியான சொல்லிசை அளபெடைகளைக் காணமுடிகிறது. (காண்க அட்டவணை)

சங்கப் பெண்பாற்புலவர்கள் இயற்றிய புறப்பாடல்களான புறநானூறிலும், பதிற்றுப்பத்திலும் மொத்தம் 14 சொல்லிசை அளபெடைகள் காணப்படுகின்றன. 4 பெண்பாற் புலவர்களே இத்தகைய அளபெடைச் சொற்களைக்

கையாண்டுள்ளனர். ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், காக்கைப்பாடினியார். மாறோகத்து நப்பசலையார் ஆகியோருள் ஔவையாரே அதிகமான சொல்லிசை அளபெடைகளைக் கையாண்டுள்ளார். பாடாண் திணையிலும் இயன்மொழித் துறையிலுமே இவை மிகுந்துள்ளன. ‘உடீஇ’ என்ற சொல் *3* இடங்களில் இடம்பெற்றுள்ளது.

**புறப்பாடல்கள் - சொல்லிசை அளபெடை**

**அட்டவணை *2.11***

| வ. எண் | புலவர் | சொல்லிசை | நூல் | பாடல் எண் | திணை | துறை |
|---|---|---|---|---|---|---|
| *1.* | ஒக்கூர் மாசாத்தியார் | உடீஇ | புறநானூறு | *279* | வாகை | மூதின் முல்லை |
| *2.* | ஔவையார் | தழீஇ | “ | *93* | வாகை | அரச வாகை |
| | “ | உரைஇ | “ | *97* | பாடாண் | இயன்மொழி |
| | “ | எழூஉ | “ | *97* | பாடாண் | இயன்மொழி |
| | “ | விரைஇ | “ | *100* | வாகை | அரசவாகை |
| | “ | உரீஇ | “ | *235* | பொதுவியல் | கையறுநிலை |
| | “ | கொளீஇ | “ | *390* | பாடாண் | இயன்மொழி |
| | “ | உடீஇ | “ | *392* | பாடாண் | கடைநிலை |
| | “ | அளைஇ | “ | *392* | பாடாண் | கடைநிலை |
| *3.* | காக்கைப்பாடினி நச்செள்ளையார் | சினைஇ | “ | *278* | தும்பை | உவகைக் கலுழ்ச்சி |
| | “ | தழூஉ | பதிற்றுப்பத்து | *52* | பாடாண் | குரவைநிலை |
| | “ | புறந்தரீஇ | பதிற்றுப்பத்து | *53* | பாடாண் | செந்துறை |
| *4.* | மாறோகத்து நப்பசலையார் | தைஇ | புறநானூறு | *126* | பாடாண் | பரிசில் துறை |
| | “ | உடீஇ | புறநானூறு | *383* | பாடாண் | இயன்மொழி |

*(*எ.கா.*)*

‘வேல்கைக் கொடுத்து வெளிது விரித்து **உடீஇ**’ **(புறம். *279*)**

‘நுண்நூல் கலிங்கம் **உடீஇ** உண்எனத்’ **(புறம். *392*)**

'ஒண்பூங் கலிங்கம் **உடீஇ**, நுண்பூண்' **(புறம். 383)**

இவை மட்டுமின்றி தழீஇ, உரைஇ, தைஇ, கொளீஇ, இளைஇ, அழூஉ, விரைஇ, சினைஇ, தழூஉ, புறந்தரீஇ, ஒரீஇ, பரைஇ, அசாஅ போன்ற சொல்லிசை அளபெடைச் சொற்களும் இப்பெண்பாற்புலவர்கள் பாடல்களில் காணமுடிகிறது. புறநானூறில் 12 சொல்லிசை அளபெடைச் சொற்களும், பதிற்றுப்பத்தில் 2 சொல்லிசை அளபெடைச் சொற்களும் அமைந்துள்ளன.

## செய்யுளிசை அளபெடை

செய்யுளில் ஓசை குறையும் போதும், சீரும் தளையும் சிதையும் போதும் அசையை நிறைப்பதற்காக எழுத்துகள் அளபெடுப்பதே செய்யுளிசை அளபெடையாகும். இதற்கு இசைநிறை அளபெடை என்ற பெயரும் உண்டு. சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் மொத்தம் 74 செய்யுளிசை அளபெடைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் அகப்பாடல்களில் 36 செய்யுளிசை அளபெடைகளும் (அகம். - 8, குறு. - 15, நற். – 13) புறப்பாடல்களில் 35 செய்யுளிசை அளபெடைகளும் (புறம். – 23, பதி. – 11) காணப்படுகின்றன. சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் சொல்லிசை அளபெடைகளை விடவும் செய்யுளிசை அளபெடைகள் அதிகமாக அமைந்துள்ளன. அகநூல்களில் பாலைத் திணையிலும், புறநூல்களில் பாடாண் திணையிலும் இவை மிகுந்துள்ளன. ஔவையாரே இருதிணைப் பாடல்களிலும் இச்செய்யுளிசை அளபெடையை அதிகமாகக் கையாண்டுள்ளார். 13 பெண்பாற் புலவர்கள் அகநூல்களிலும், 4 பெண்பாற் புலவர்கள் புறநூல்களிலும் இவற்றைப் பயன்படுத்தியுள்ளனர். கழார்க்கீரன் எயிற்றியார், நக்கண்ணையார், நன்னாகையார், வெறிபாடிய காமக்கண்ணியார் ஆகிய புலவர்கள் இச்செய்யுளிசை அளபெடையைக் கையாள்வதில் ஒத்த போக்கினைக் கொண்டுள்ளனர். பிற புலவர்கள் ஓரிரு அளபெடைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

(எ.கா.)

''மள்ளர் **குழீஇய** விழவி னானும்

மகளிர் **<u>தழீஇய</u>** துணங்கை யானும்' ***(குறு. 31)***

'ஒருநாள் கழியினும் உயிர்வேறு **<u>படூஉம்</u>**' ***(நற். 129)***

## அகப்பாடல்கள் - செய்யுளிசை

## *அட்டவணை 2.12*

| வ. எண் | புலவர் | சொல் | நூல் | பாடல் எண் | திணை | துறை | கூற்று |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | அஞ்சியத்தை மகள் நாகையார் | நிறீஇய | அக நானூறு | 352 | குறிஞ்சி | வரைவு மலிதல் | தலைவி |
| 2. | ஆதிமந்தியார் | குழீஇய | குறுந் தொகை | 31 | மருதம் | அறத்தொடு நிற்றல் | தலைவி |
| | " | தழீஇய | " | 31 | " | " | " |
| 3. | ஊண்பித்தை | யாஅ | | 27 | பாலை | பிரிவாற்றாமை | தோழி |
| 4. | ஒக்கூர் மாசாத்தி | குழீஇய | " | 139 | மருதம் | வாயில் மறுத்தல் | தோழி |
| | " | வரூஉம் | " | 275 | முல்லை | பிரிவாற்றாமை | தலைவி |
| 5. | ஔவையார் | நல்அராஅ | | 43 | பாலை | பிரிவாற்றாமை | தலைவி |
| | " | மராஅத்த | " | 99 | முல்லை | வினைமுற்றி மீளல் | " |
| | " | அசாஅ | " | 388 | பாலை | உடன்போக்கு | தோழி |
| | " | கதூஉம் | " | 91 | பாலை | பிரிவாற்றாமை | தலைவி |
| | " | படூஉம் | நற்றிணை | 129 | குறிஞ்சி | பிரிவுணர்த்தல் | தோழி |
| | " | வரூஉம் | " | 129 | " | " | " |
| | " | தேஎம் | " | 371 | முல்லை | வினைமுற்றி மீளல் | தலைவன் |
| | " | மராஅத்து | " | 381 | முல்லை | பிரிவாற்றாமை | தலைவி |
| | " | செலீஇயர் | " | 390 | மருதம் | வாயில் நேர்தல் | தலைவி |
| | " | குரீஇயினம் | அக நானூறு | 303 | பாலை | நெஞ்சோடு கிளத்தல் | தலைவி |
| | " | தரீஇயர் | " | 303 | " | " | " |
| | " | பேஎய் | " | 303 | " | " | " |
| 6. | கழார்க்கீரன் எயிற்றியார் | தலைஇய | குறுந் தொகை | 35 | மருதம் | பிரிவாற்றாமை | தலைவி |
| | " | முனைஇய | " | 212 | குறிஞ்சி | இரவுக்குறி | " |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ‘‘ | கழாஅர் | நற்றிணை | 281 | நெய்தல் | வன்பொறை | ‘‘ |
| 7. | குறமகள் குறியெயினி | கவாஅன் | நற்றிணை | 357 | குறிஞ்சி | | தலைவி |
| | ‘‘ | கலைஇய | நற்றிணை | 357 | குறிஞ்சி | | தலைவி |
| 8. | நக்கண்ணையார் | செலீஇய | நற்றிணை | 19 | நெய்தல் | வன்பொறை | தோழி |
| | ‘‘ | யாஅங்கு | ‘‘ | 87 | ‘‘ | பிரிவாற்றாமை | தலைவி |
| | ‘‘ | தூஉம் | அக நானூறு | 252 | குறிஞ்சி | சிறைப்புறம் | ‘‘ |
| 9. | நன்னாகையார் | மரீஇய | குறுந் தொகை | 30 | பாலை | பிரிவாற்றாமை | தலைவி |
| | ‘‘ | தாஅவல் | ‘‘ | 172 | நெய்தல் | வரைவிடை ஆற்றாமை | ‘‘ |
| | ‘‘ | பழூஉப்பல் | ‘‘ | 180 | பாலை | பிரிவாற்றாமை | தோழி |
| 10. | நப்பசலையார் | தழீஇய | நற்றிணை | 243 | பாலை | பிரிவாற்றாமை | தலைவி |
| | ‘‘ | மராஅத்து | ‘‘ | 243 | ‘‘ | ‘‘ | ‘‘ |
| 11. | போந்தைப் பசலையார் | புகாஅர் | அக நானூறு | 110 | நெய்தல் | அறத்தொடு நிற்றல் | தோழி |
| 12. | வெள்ளிவீதியார் | உணீஇயர் | குறுந் தொகை | 27 | பாலை | பிரிவாற்றாமை | தலைவி |
| 13. | வெறிபாடியகாமக் கண்ணியார் | தலைஇய | நற்றிணை | 268 | குறிஞ்சி | வெறியாட்டு | தோழி |
| | ‘‘ | தெரீஇய | அக நானூறு | 22 | குறிஞ்சி | இயற்பழித்தல் | தலைவி |
| | ‘‘ | கவாஅன் | ‘‘ | 98 | ‘‘ | சிறைப்புறம் | தோழி |

## புறப்பாடல்கள் - செய்யுளிசை

## அட்டவணை 2.13

| வ. எண் | புலவர் | சொல் | நூல் | பாடல் எண் | திணை | துறை | கூற்று |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஔவையார் | மரீஇய | புறம் | 93 | வஞ்சி | அரசவாகை | புலவர் |
| | ‘‘ | கடாஅத்து | ‘‘ | 93 | ‘‘ | ‘‘ | ‘‘ |
| | ‘‘ | கழாஅலின் | ‘‘ | ‘‘ | ‘‘ | ‘‘ | ‘‘ |
| | ‘‘ | கடாஅம் | ‘‘ | 94 | வாகை | ‘‘ | ‘‘ |
| | ‘‘ | தழீஇய | ‘‘ | 97 | பாடாண் | வாள்மங்கலம் | ‘‘ |
| | ‘‘ | அசைஇய | ‘‘ | 98 | வாகை | அரச வாகை | ‘‘ |
| | ‘‘ | எழாஅ | ‘‘ | 99 | வாகை | அரச வாகை | ‘‘ |
| | ‘‘ | பெறூஉம் | ‘‘ | 101 | பாடாண் | பரிசில் கடாநிலை | ‘‘ |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ‘‘ | இடைப் படாஅ | ‘‘ | 103 | பாடாண் | விறலியாற்றுப் படை | ‘‘ |
| | ‘‘ | கராஅத்து | ‘‘ | 104 | வாகை | அரசவாகை | ‘‘ |
| | ‘‘ | வளைஇய | ‘‘ | 140 | பாடாண் | பரிசில்விடை | ‘‘ |
| | ‘‘ | கெழீஇய | ‘‘ | 232 | பொதுவியல் | கையறுநிலை | ‘‘ |
| | ‘‘ | தழீஇய | ‘‘ | 269 | வெட்சி | உண்டாட்டு | ‘‘ |
| | ‘‘ | கழீஇய | ‘‘ | 311 | தும்பை | பாண்பாட்டு | ‘‘ |
| | ‘‘ | செரீஇய | ‘‘ | 315 | வாகை | வல்லாண் முல்லை | ‘‘ |
| | ‘‘ | கொடாஅ | ‘‘ | 392 | பாடாண் | கடைநிலை | ‘‘ |
| | ‘‘ | சிதாஅர் | ‘‘ | 392 | பாடாண் | கடைநிலை | ‘‘ |
| *2.* | காக்கைப் பாடினியார் | தரீஇயலர் | பதிற்றுப் பத்து | 52 | ‘‘ | குரவைநிலை | ‘‘ |
| | ‘‘ | இறைஇய | ‘‘ | 52 | ‘‘ | ‘‘ | ‘‘ |
| | ‘‘ | பாஅல் | ‘‘ | 52 | ‘‘ | ‘‘ | ‘‘ |
| | ‘‘ | தரீஇயர் | ‘‘ | 53 | ‘‘ | செந்துறை | ‘‘ |
| | ‘‘ | அறாஅ | ‘‘ | 60 | ‘‘ | விறலியாற்றுப் படை | ‘‘ |
| | ‘‘ | மறாஅ | ‘‘ | 60 | ‘‘ | ‘‘ | ‘‘ |
| | ‘‘ | எனையதூ உம் | ‘‘ | 54 | ‘‘ | காட்சி வாழ்த்து | ‘‘ |
| | ‘‘ | இடூஉம் | ‘‘ | 54 | ‘‘ | ‘‘ | ‘‘ |
| | ‘‘ | பெறூஉம் | ‘‘ | 58 | ‘‘ | செந்துறை | ‘‘ |
| *3.* | நக்கண்ணையார் | படாஅ | புறம் | 83 | கைக்கிளை | பழிச்சுதல் | ‘‘ |
| | ‘‘ | வெரூஉம் | ‘‘ | 84 | ‘‘ | ‘‘ | ‘‘ |
| *4.* | மாறோகத்து நப்பசலையார் | கதூஉம் | ‘‘ | 37 | வாகை | அரசவாகை | ‘‘ |
| | ‘‘ | துலாஅம் | ‘‘ | 39 | பாடாண் | இயன்மொழி | ‘‘ |
| | ‘‘ | உணீஇயர் | ‘‘ | 174 | வாகை | அரசவாகை | ‘‘ |
| | ‘‘ | குராஅல் | ‘‘ | 280 | பொதுவியல் | ஆனந்தபையுள் | ‘‘ |
| | ‘‘ | கெழீஇய | ‘‘ | 383 | பாடாண் | இயன்மொழி | ‘‘ |

‘முடங்குபுறச் செந்நெல் **தரீஇயர்** ஓராங்கு’ ***(அகம். 303)***

‘சேற்றுநிலை ***முனைஇய*** செங்கட் காரான்’ ***(குறு. 261)***

கொடுஞ்சுழிப் **புகாஅர்த்** தெய்வம் நோக்கி’ ***(அகம். 110)***

சொல்லிசை அளபெடை போன்று அமையாமல் செய்யுளில் ஓரடியில் இடை, கடை ஆகிய சீர்களிலும் இவை அமையப்பெற்றுள்ளன. ஒரே செய்யுளிசை அளபெடைச் சொற்களை இப்பெண்பாற்புலவர்களுள் காண முடியவில்லை. 'கவாஅன்' என்ற அளபெடைச் சொல்லை வெறிபாடிய காமக்கண்ணியாரும், குறமகள் குறியெயினியும் பயன்படுத்தியுள்ளனர். (காண்க அட்டவணை) அதே போன்று 'தலைஇய' என்ற அளபெடைச் சொல்லை கழார்க்கீரன் எயிற்றியாரும் வெறிபாடிய காமக்கண்ணியாரும் கையாண்டுள்ளனர். ஆதிமந்தியாரும் ஒக்கூர் மாசாத்தியாரும் 'குழீஇய' என்ற அளபெடையைத் தமது குறுந்தொகைப் பாடல்களில் அமைத்துள்ளனர். ஒக்கூர் மாசாத்தியாரும் ஒளவையாரும் 'வரூஉம்' என்ற அளபெடைச் சொல்லைத் தமது பாடல்களில் கையாண்டுள்ளனர்.

புறப்பாடல்களான புறநானூற்றில் *24* செய்யுளிசை அளபெடைகளும், பதிற்றுப்பத்தில் *11* செய்யுளிசை அளபெடைகளும் இடம்பெற்றுள்ளன. இப்பாடல்களிலும் ஒளவையாரே அதிகமாக இவ்வளபெடையைக் கையாண்டுள்ளார். பாடாண் திணைப் பாடல்களிலேயே இவை அதிகம் இடம்பெற்றுள்ளன.

(எ.கா.)

'ஓடல் **மரீஇய** பீடுஇல் மன்னர்' **(புறம். 93)**

'வேற்புரை **சிதாஅர்** நீக்கி நேர்கரை' **(புறம். 392)**

'யாமம் கொள்பவர் சுடர்நிழல் **கதூஉம்**' **(புறம். 37)**

புறப்பாடல்களில் ஒரே செய்யுளிசை அளபெடைச் சொற்களைக் காண முடிகிறது. ஒளவையார் தமது புறப்பாடல்களில் 'தழீஇய' என்ற அளபெடைச் சொல்லை *2* இடங்களில் கையாண்டுள்ளார்.

(எ.கா.)

'சுரை **தழீஇய** இருங்கா ழொடு' **(புறம். 97)**

'பல்ஆன் இனநிரை **<u>தழீஇய</u>** வில்லோர்' ***(புறம். 269)***

அதே போன்று 'தரீஇயர்' என்ற அளபெடைச் சொல்லை காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் 3 இடங்களில் பயன்படுத்தியுள்ளார்.

(எ.கா.)

'அகல்இரு விசும்பில் பகல்இடம் **<u>தரீஇயர்</u>**' ***(பதி. 52)***

'வென்றுகலம் **<u>தரீஇயர்</u>** வேண்டு புலத்திறுத்து அவர்' ***(பதி. 53)***

'செல்உறழ் மறவர்தம் கொல்படைத் **<u>தரீஇயர்</u>**' ***(பதி. 58)***

இவ்வளபெடைச் சொல்லானது காக்கைப்பாடினியாரின் தனித்த விருப்பக் கூறாக அமைந்து காணப்படுகிறது.

நல்அரா, யாஅ, மராஅத்த, அசாஅ, தேஎம், பேஎய், செலீயியர். படூஉம், கழாஅர், தாஅவல், கவாஅன், கொடாஅ, எழாஅ, கடாஅம், பாஅல், சிதாஅர், குராஅல், கெழீஇய, செரீஇய, கழீஇய, வளைஇய, பெறூஉம், துலாஅம் போன்ற சொற்கள் செய்யுளிசை அளபெடைகளாக இடம்பெற்றுள்ளன.

## ஒலிக்குறிப்புச் சொற்கள்

ஒரு நிகழ்ச்சியைக் குறிக்க அல்லது விளக்க ஒருசில சொற்களைக் கையாண்டு உணர்த்துகிறோம். அச்சொற்களையே ஒலிக்குறிப்புச் சொற்கள் என்கிறோம். அவ்வொலிக் குறிப்புச் சொற்கள் துல்லியமாகவும் சிறியதாகவும் அதே சமயம் விளக்கமாகவும் அமையப் பெறுகின்றன. ஒருவரின் செயல் ஏற்படுத்தும் ஒலியை அல்லது ஒன்றின் தன்மையை மனம் உணரும் விதத்தில் குறிக்கும் சொல்லே ஒலிக்குறிப்புச் சொல்லாகும். இவை அச்சம், விரைவு போன்ற பொருளில் வருவதாகும்.

ஒலிக்குறிப்புச் சொற்கள் நடையியலில் ஓர் உத்தியாகப் பயன்படுத்தப்படுகிறது. ஒலிக்குறிப்புச் சொற்கள் செய்யுளில் காலம், சூழல்

ஆகியவற்றை உணர்த்தக்கூடியதாகும். செய்யுளில் இடம்பெறக் கூடிய மாந்தர்களது மகிழ்ச்சி, கோபம், அச்சம், அவலம், வியப்பு போன்ற மனவுணர்வுகளையும், மெய்ப்பாடுகளையும் தெளிவாகச் சித்தரிக்க இவ்வொலிக் குறிப்புச் சொற்கள் துணை செய்கின்றன.

சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் இத்தகைய ஒலிக்குறிப்புச் சொற்கள் குறைவாகவே காணப்படுகின்றன. ஔவையார், கழார்க்கீரன் எயிற்றியார், காக்கைப்பாடினி நச்செள்ளையார், குமிழிஞாழலார் நப்பசலையார், நன்னாகையார், நக்கண்ணையார், போந்தைப்பசலையார் ஆகிய ஏழு பெண்பாற்புலவர்கள் மட்டுமே ஒலிக்குறிப்புச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர். ஔவையார் குறுந்தொகையில் ஒன்றினையும், புறநானூற்றில் இரண்டினையும் பயன்படுத்தியுள்ளார். கழார்க்கீரன் எயிற்றியார் அகநானூறில் ஒன்றினையும், குறுந்தொகையில் ஒன்றனையும் கையாண்டுள்ளார். சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்களில் மொத்தம் 10 ஒலிக்குறிப்புச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. இப்பெண்பாற்புலவர்கள் இவ்வொலிக் குறிப்புச் சொற்களைக் கையாண்டுள்ள விதத்தை அட்டவணை உணர்த்தும்.

**ஒலிக்குறிப்புச்சொற்கள்**

**அட்டவணை 2.14**

| வ. எண் | புலவர் | சொல் | நூல் | பாடல் எண் | திணை | துறை | கூற்று | பொருண்மை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஔவை | ஆஅஒல் | குறுந் தொகை | 28 | பாலை | வரைவு ஆற்றாமை | தலைவி | பிரிவால் அரற்றும் மனநிலை |
| | ‘‘ | இழுமென | புற நானூறு | 93 | வாகை | அரச வாகை | புலவர் | போர் முரசு ஒலித்தல் |
| | ‘‘ | இம்மென | ‘‘ | 367 | பாடாண் | வாழ்த்தியல் | ‘‘ | மழை பொழியும் ஒலி |
| 2. | கழார்க்கீரன் எயிற்றியார் | கல்லென | அக நானூறு | 217 | பாலை | பிரிவாற்றாமை | தலைவி | பறவை செய்யும் ஒலி |
| | ‘‘ | ஐ | குறுந் தொகை | 261 | குறிஞ்சி | பருவ வரவு | தலைவி | (எருமை கரையும் ஒலி)அச்சப் பொருள் |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| *3.* | காக்கைப் பாடினியார் | கதுமென | பதிற்றுப் பத்து | *52* | பாடாண் | குரவை நிலை | புலவர் | விரைவுப் பொருள் |
| *4.* | குமிழிஞாழலார் நப்பசலையார் | ஒல்லென | அக நானூறு | *160* | நெய்தல் | வரைவு மலிதல் | தோழி | இளையர் செய்யும் ஆரவாரம் |
| *5.* | நக்கண்ணை யார் | கல்லென் | புற நானூறு | *84* | கைக்கிளை | பழிச்சுதல் | புலவர் | போர் மிகுதியால் ஆரவாரம் மிக்க ஊர் |
| *6.* | நன்னாகையார் | நள்ளென | குறுந் தொகை | *118* | குறிஞ்சி | வரைவு நீட்டித்தல் | தலைவி | மாலை கால வரவு (செறிவு) |
| *7.* | போந்தைப் பசலையார் | இழுமென | அக நானூறு | *110* | நெய்தல் | அறத்தொடு நிற்றல் | தோழி | மெல்லிய குரலால் எழுப்பும் ஒலி |

மேற்காணும் அட்டவணையில் சங்கப் பெண்பாற் புலவர்கள் ஒலிக்குறிப்புச் சொற்களைத் திணை, துறை, கூற்று, நூல், பொருள் அடிப்படையில் கையாண்டத் தன்மையை அறிய முடியும். சங்கப் பெண்பாற்புலவர்கள் இயற்றியுள்ள *154* பாடல்களுள் அகத்தில் *6* இடங்களிலும், பதிற்றுப்பத்து நூலினைச் சேர்த்து புறத்தில் *4* இடங்களிலும் ஒலிக்குறிப்புச் சொற்களைக் காண முடிகிறது.

(எ.கா.)

'நள்ளென் யாமத்து **'ஐ'** எனக் கரையும்' **(குறு. 261)**

'புலம்தொறும் குறுகினம் நரல **கல்லென**' **(அகம். 217)**

'**ஒல்லென** ஒலிக்கும் இளையரொடு வல்வாய்' **(அகம். 160)**

'திண்பினி முரசம் **இழுமென** முழங்கச்' **(புறம். 93)**

'**கல்லென்** பேர்ஊர் விழவுடை ஆங்கன்' **(புறம். 84)**

'**கதுமென** உடுத்த நோக்கமொடு அதுநீ' **(பதி. 52)**

செய்யுளில் இடம்பெற்றுள்ள தலைவி, தோழி போன்றோரது மனநிலையினையும் போர்க்களச் சிறப்பினையும் இவ்வொலிக் குறிப்புச் சொற்கள் மூலம் தெளிவாக அறிய முடிகிறது. அச்சப்பொருள் (ஐ), விரைவுப் பொருள்

(கதுமென) போன்ற புறவயப் பொருண்மைகளிலும் செறிவு (நள்ளென) மற்றும் மனநிலை (ஆஅ ஒல்) போன்ற அகவயப் பொருண்மைகளிலும் இவ்வொலிக் குறிப்புச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. இதன்வழி பெண்பாற் புலவர்களின் மொழி அறிவும் இலக்கிய புலமையும் புலனாகிறது.

## முடிவுரை

சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் அமைந்துள்ள மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை, ஒலிக்குறிப்புச் சொற்கள் ஆகியவை விரிவான நிலையில் இவ்வியலில் நோக்கப்பட்டுள்ளன. திணை, துறை, கூற்று, புலவர், நூல் ஆகியவற்றின் அடிப்படையில் சங்கப் பெண்பாற் புலவர்களின் நடையியல் பண்பும், கவிதைக் கட்டமைப்பும் எங்ஙனம் பொதுமைப்பட்டும் மாறுபட்டும் அமைந்துள்ளன என்பதையும் இவ்வியல் விரிவாக ஆராய்ந்துள்ளது. எடுத்துக்கொள்ளப்பட்ட மோனை முதலான ஒலியியல் சார்ந்த கூறுகளின் வருகைகள் சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்களில் அமைந்துள்ள பான்மையை அட்டவணைகளாகவும் இவ்வியலில் கொடுக்கப்பட்டுள்ளன.

# இயல்-3

## சொல் நிலை

பொருள் தரக்கூடிய மிகச் சிறிய சொல்லே உருபன் எனப்படும். தன்னியல்பில் பொருளுணர்த்தும் பெயர், வினை ஆகியன சொல்லின் அடிப்படை வகைகளாகும். பெயர், வினைகளால் அமைக்கப்பெறும் சூழலுக்கேற்பப் பொருள் தரும். உரிச்சொற்களும் பெயரோடும் வினையோடும் ஒட்டி நின்று அவற்றின் பொருளைத் தேவைக்கேற்ப வேறுபடுத்திச் சிறப்பிக்கும் இடைச்சொற்களும் சொல் என்றே சுட்டப்பெறும். இதனையே,

**"சொல்லெனப் படுப பெயரே வினையென்(று)**
**ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே" *(தொல்.சொல்.158)***

என்றும்,

**"இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்**
**அவற்றுவழி மருங்கில் தோன்று மென்ப" *(தொல்.சொல்.159)***

என்றும் தொல்காப்பிய நூற்பா குறிப்பிடுகிறது. சொல்லிலணக்க ்தை விளக்கும் பகுதியையே சொல்லதிகாரம் என்பர்.

பெயர், வினை ஆகிய சொற்களை முதன்மைச் சொல் வகையாகவும் இடை, உரி ஆகியவற்றைப் பெயர், வினை சார்ந்து இயங்கும் சொற்களாகவும் தொல்காப்பியம் சுட்டுகிறது.

சங்கப் பாடல்களை இத்தகைய 'சொல்நிலை' ஆய்விற்கு உட்படுத்திப் பல இலக்கணவியலாளர்கள் நூல்கள் பலவற்றை படைத்துள்ளனர். குறிப்பாக, சொற்களுக்கு இலக்கணக் குறியீடுகள் வழங்கி அவற்றின் வழி ஆய்வு மேற்கொள்ளப்படுவது ஒரு வகையான ஆய்வாக வளர்ந்திருக்கிறது. இத்தகு முறையில் சொற்களுக்கு இலக்கணக் குறியீடுகள் வழங்குவதன் வாயிலாகத் தொடரில் அமைந்துள்ள சொல்லின் செயல்பாடு, பொருண்மை போன்றவற்றைச் சரியாக

அறியவியலும். ஆய்வின் போக்கிற்கு ஏற்ப இலக்கணக் குறியீடுகளும் எண்ணிக்கையும் வரையறுத்துக் கொள்ளப்படுகின்றன. இவ்வாறு தமிழ் இணையக் கல்விக்கழகம், செம்மொழி மத்தியத் தமிழாய்வு மையம் ஆகியன சங்க இலக்கியங்களுக்கு கணினி வழி இத்தகைய இலக்கணக் குறியீடுகள் வழங்கியுள்ளன. மேலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சங்கரன் பாஸ்கரன், மா.கணேசன், டி.வி.கீதா போன்றோர் இத்தகைய இலக்கணக் குறியீடுகள் குறித்து குறிச்சொல் தொகுப்புகளை வழங்கியுள்ளனர். கேரளப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பழனிராஜன் 50 சொல் வகைகளை வகைப்படுத்தியுள்ளார். அ. காமாட்சி, செ.கல்பனா ஆகியோர் இணைந்து ‘ஐங்குறுநூற்று உருபனியல் பகுப்பாய்வு’ எனும் நூலில் 230 இலக்கணக் கூறுகளைப் பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே, சொல்களுக்கான இலக்கணக் குறியீடுகளின் எண்ணிக்கையானது ஆய்வின் தன்மை, போக்கு ஆகியவற்றுக்கேற்ப வரையறுத்துக் கொள்ளப்படுவதை அறியலாம். சங்கப் பெண்பாற் புலவர்களின் 154 பாடல்களில் அமைந்துள்ள சொல் நிலையை அறிய 25 சொல் வகைகளுக்கான குறியீடுகள் வழங்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. அவை,

1. பெயர்
2. சுட்டு
3. பதிலிடு பெயர்
4. வினா பெயர்
5. விளி
6. தொழிற்பெயர்
7. வினையாலணையும் பெயர்
8. பெயரடை
9. பெயரெச்சம்
10. எதிர்மறைப் பெயரெச்சம்
11. வினை
12. வினையடை
13. வினைமுற்று
14. குறிப்பு வினைமுற்று

15. எதிர்மறை வினைமுற்று
16. வினையெச்சம்
17. எதிர்மறை வினையெச்சம்
18. வியங்கோள்
19. வினைத்தொகை
20. நிபந்தனை எச்சம்
21. குறையெச்சம்
22. ஏவல்
23. உவம உருபு
24. உரிச்சொல்
25. இடைச்சொல்

மேற்குறிப்பிட்ட சொல் வகைகள், சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் எங்ஙனம் அமைந்து அவர்களது மொழிநடையைச் சிறப்பிக்கின்றன என இவ்வியல் ஆராய்கிறது. மேலும், திணை, துறை, கூற்று, நூல், புலவர் ஆகியவற்றின் அடிப்படையில் சங்கப்பெண்பாற் புலவர்களது பாடல்கள் சொல் நிலையில் செயலாற்றுகின்ற பான்மையையும் இவ்வியல் நோக்குகிறது. சொல்லாட்சிகளை ஆராய்வதன் வழி புலவர்களின் தனித்த மொழி நடையினையும் மொழிநடைப் பொதுமைகளையும் இனங்காண இயலும்.

## பெயர்

சங்கப் பெண்பாற் புலவர்களது அக, புறப் பாடல்களில் மொத்தம் 3597 பெயர்ச் சொற்கள் காணப்படுகின்றன. அவற்றுள் அகநானூற்றில் 784 பெயர்ச் சொற்களும் குறுந்தொகையில் 671 பெயர்ச் சொற்களும், நற்றிணையில் 469 பெயர்ச் சொற்களும் புறநானூற்றில் 1183 பெயர்ச் சொற்களும், பதிற்றுப்பத்தில் 490 பெயர்ச்சொற்களும் இடம் பெற்றுள்ளன. கீழ்க்காணும் அட்டவணையின் மூலம் சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் பெயர்ச்சொற்கள் இடம்பெற்றுள்ள பாங்கை அறியலாம்.

**அகப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.1**

| வ.எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| *1* | அகம் | *229* | *112* | - | *84* | *359* |
| *2* | குறு. | *94* | *120* | *152* | *9* | *6* |
| *3* | நற். | *92* | *68* | *85* | *160* | *64* |

**அகப்பாடல்கள் - கூற்று**

**அட்டவணை 3.2**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| *1* | அகம் | - | *526* | *189* | - | - | *69* |
| *2* | குறு. | *32* | *388* | *216* | *19* | *16* | - |
| *3* | நற். | *43* | *278* | *114* | - | - | - |

சங்கப் பெண்பாற் புலவர்களுள் வெள்ளிவீதியார் தமது பாடல்களில் இயற்கை சார்ந்த பெயர்களைக் கையாண்டுள்ளார்.

(எ.கா.)

நிலம் (நற். 130 : 1)

உலகம் (நற். 348 : 9)

வானம் (குறு. 130 : 1)

விசும்பு (நற். 348 : 1, குறு. 44 : 3)

மீன் (குறு. 169 : 4)

முந்நீர் (குறு. 130 : 2)

வான் (குறு. 149 : 3)

தீம்புனல் (குறு. 149 : 4, நற். 70 : 7)

நிலவே (நற். 348 : 1)

திங்கள் (நற். *335 : 1*, அகம். *362 : 15*)

குறிப்பாக ‘வான்’ சார்ந்த பெயர்களைத் தமது பாடல்களில் மிகுதியாகக் கையாண்டுள்ளார். அதே போன்று ‘கடல்’ சார்ந்தப் பெயர்களையும் அதிகமாகக் காண முடிகிறது.

நன்னாகையார் என்ற பெண்புலவர் உயிரினங்களின் பெயர்களை மிகுதியாகக் கையாண்ட நிலையை அறிய முடிகிறது. குறுந்தொகையில் *8* பாடல்களை இவர் இயற்றியுள்ளார். அவற்றுள் 7 இடங்களில் உயிரினங்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

(எ.கா.)

வண்டு (குறு. *30 : 5*)

வாவல் (குறு. *172 : 1*)

இருங்களிற்று (குறு. *180 : 2*)

இருங்குயில் (குறு. *192 : 3*)

புள் (குறு. *118 : 1*)

மா (குறு. *118 : 1*)

குருகு (குறு. *325 : 5*)

நெய்தல் திணையிலும் பாலைத்திணையிலும் இவை இடம்பெற்றுள்ளன.

ஒக்கூர் மாசாத்தியார் தமது அகப்பாடல்களில் முல்லைத் திணையைச் சுட்ட ‘முல்லை’ என்ற பெயரைப் பயன்படுத்தியுள்ளார். 7 அகப்பாடல்களைப் பாடிய இவர் 6 பாடல்களை முல்லைத் திணையிலேயே இயற்றியுள்ளார். அவற்றுள் ‘முல்லை’ என்ற பெயர் 6 இடங்களில் இடம்பெற்றுள்ளன.

புறநானூற்றில் *1* பாடலை மட்டுமே இயற்றியுள்ளார். அ∴தும் ‘மூதின் முல்லை என்ற முல்லைப் பெயர் அடங்கிய துறையைச் சார்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பதிற்றுப்பத்தில் 6ஆம் பத்தினைப் பாடிய காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் ‘கடல்’ என்ற சொல்லையும் ‘புணரி’ என்ற சொல்லையும் அதிகமாகக் கையாண்டுள்ளார்.

*(எ.கா.)*

*புணரி (பதி. 51 : 2)*

*கடல் (பதி. 51 : 3)*

*கடல் (பதி. 51 : 6)*

*கடல் (பதி. 51 : 15)*

*புணரி (பதி. 55 : 3)*

*கடல் (பதி. 59 : 15)*

*புணரி (பதி. 60 : 10)*

*கடல் (பதி. 60 : 11)*

நெய்தல் நிலம் சார்ந்த கருப்பொருள் பெயர்களையும் பதிற்றுப்பத்தில் கையாண்டுள்ளார்.

*(எ.கா.)*

*அலவன் (பதி. 51)*

*நெய்தல் (பதி. 51)*

**புறப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.3**

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொது வியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக் கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | புறம் | 656 | 33 | 183 | 158 | 31 | 33 | 38 | 51 |
| 2 | பதி.ப. | 490 | - | - | - | - | - | - | - |

புறநானூற்றில் ஔவையார் 33 பாடல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் ‘களிறு’ என்ற சொல்லை மிகுதியாகக் கையாண்டுள்ளார். பெரும்பாலும் இச்சொற்கள் பாடாண், வாகை ஆகிய திணைகளிலேயே இடம்பெற்றுள்ளன.

அதே போன்று மாறோகத்து நப்பசலையாரும் தாம் பாடிய 7 புறநானூற்றுப் பாடல்களில் 3 இடத்தில் ‘யானை’ என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தியுள்ளதைக் காண முடிகிறது.

மாற்பித்தியார் தாம் பாடிய 2 புறப்பாடல்களில் ‘அருவி’ எனும் சொல்லை இருமுறை பயன்படுத்தியுள்ளார்.

ஒரே சொற்களைக் கையாள்வதும் குறிப்பிட்ட ஒரே பொருள் அல்லது ஒரே சூழல் பொருள்களைக் கையாள்வதும் புலவர்களின் தனிப்பட்ட விருப்பக் கூறாகவும் அவர்களது தனித்த மொழிநடையைக் குறிப்பதாகவும் அமைந்துள்ள விதத்தை அறிய முடிகிறது. ஒரே பொருள் தரும் வேறு சொற்கள் புறப்பாடல்களில் ஒரு விதமாகவும் அகப்பாடல்களில் ஒருவிதமாகவும் அமைந்துள்ளதை ஔவையார் பாடல்களில் அறியலாம்.

புறப்பாடல்களில் ‘களிறு’ என்ற சொல் போர் சார்ந்து இடம்பெற்றுள்ளமை முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. ‘களிறு’ என்பது ஆண் யானையைக் குறிக்கும் சொல்லாகும். இதே பொருள் கொண்ட சொல் அகப் பாடல்களில் யானை என்ற சொல்லில் அமையப்பெற்றுள்ளது.

களிறு என்ற சொல்லானது ஔவையாரது அகப்பாடலான அகநானூற்றில் 303-ஆவது பாடல் 9ஆவது அடியில் இடம்பெற்றுள்ளது. அஃதும் அதியமானின் கொடைத்தன்மையைப் புகழ்ந்து பாடும் விதமாகவே அமைந்துள்ளது. ‘யானை’ என்ற சொல்லும் கூட ‘கடும்பகட்டு யானை’ என்றும் ‘வரைபோல் யானை’ என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அஃதும் அதியமானின் பெருமையைக் குறிப்பிடுவதாகவே (குறு. 91), (நற். 381) இடம்பெற்றுள்ளது. மற்றொரு இடத்தில்

மலைக்கு உவமையாகவும் (வரைபோல் யானை, நற். 390:9) பாலைநில வருணனைக்கும் (யானை கைமடித்து உயவும் கானமும், குறு. 388 : 6) பயன்படுத்தப்பட்டுள்ளது.

**சுட்டுப்பெயர்**

சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் மொத்தம் 119 சுட்டுப்பெயர்கள் இடம்பெற்றுள்ளன. 30 பெண்பாற் புலவர்களுள் 16 பெண்பாற் புலவர்களே இச்சுட்டுப் பெயர்களைப் பயன்படுத்தியுள்ளனர். அகப்பாடல்களை விட புறப்பாடல்களிலேயே இச்சுட்டுப் பெயர்கள் மிகுதியாக அமைந்துள்ளன. புறநானூற்றில் 56 சுட்டுப்பெயர்களும் பதிற்றுப்பத்தில் 5 சுட்டுப்பெயர்களும் அகநானூற்றில் 18 சுட்டுப்பெயர்களும் குறுந்தொகையில் 28 சுட்டுப்பெயர்களும் நற்றிணையில் 12 சுட்டுப்பெயர்களும் காணப்படுகின்றன.

உயிரெழுத்துக்களான அ, இ, உ ஆகியவையே சுட்டெழுத்து களுக்கு உரியவையாகும். ஒரு குறிப்பிட்ட பொருளையோ, மனிதரையோ சுட்டிக்காட்டும் பொருளில் வரும். இச்சுட்டுப்பெயர்கள் இருவகைப்படும். அவை அகச்சுட்டு (அவன், இவன், உவன்), புறச்சுட்டு (அம்மனிதன், இம்மனிதன், உம்மனிதன்) என்பனவாகும். அகரச் சுட்டுப்பெயர்கள் கண்களுக்குப் புலப்படாத சேய்மையையும் இகரச் சுட்டுப் பெயர்கள் அண்மையில் உள்ளவற்றையும் உகரச் சுட்டுப்பெயர்கள் சேய்மைக்கும் அண்மைக்கும் இடைப்பட்ட கண்களுக்குப் புலப்படுகின்றவற்றையும் சுட்டுவனவாகும். சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்களில் உகரச் சுட்டுகள் காணப்படவில்லை.

சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் அவண், அவன், அவர், அது, அவை, அவ், அற்றை, அஃது, இற்றை, இஃது, இவள், ஈங்கு ஆகிய சுட்டுப்பெயர்கள் அமைந்து காணப்படுகின்றன. சுட்டுப் பெயர்கள், ஔவையாரது பாடல்களிலேயே மிகுந்து காணப்படுகின்றன. அகப்பாடல்களை விட புறப்பாடல்களிலேயே அதிகமாக இடம்பெற்றுள்ளன. 32 சுட்டுப் பெயர்களை இவர் கையாண்டுள்ளார். அவர் இயற்றிய அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு ஆகிய அனைத்துப் பாடல்களிலும் இச்சுட்டுப் பெயர்களைக் கையாண்டுள்ளார். புறப்பாடல்களில் அதியமானின் புகழையும் வீரத்தையும் கொடைச்

சிறப்பினையும் கூறுவதற்காக அவன், இவன் ஆகிய சுட்டுப்பெயர்களையும் அவர், இவர் ஆகிய சுட்டுப்பெயர்களை அதியமானின் நாட்டுவளத்தையும் அதியனின் அன்பையும் சுட்டுவதற்காகப் பயன்படுத்தியுள்ளார். புறப்பாடலான 97வது பாடலில் மட்டும் 6 சுட்டுப்பெயர்களைத் தொடர்ந்து கையாண்டுள்ளார்.

*(எ.கா.)*

அவர் *(97 : 4)*

அவர் *(97 : 8)*

அவன் *(97 : 14)*

ஆயிடை *(97 : 17)*

அவர் *(97 : 19)*

*அஃது (97 : 25)*

மேற்சுட்டப்பெற்ற அனைத்து சுட்டுப்பெயர்களும் அதியமானின் புகழையும் வீரத்தையும் நாட்டின் பெருமையையும் சுட்டுவதற்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதே போன்று ஒரே பாடலில் தொடர்ந்து சுட்டுப்பெயர்களைப் பயன்படுத்துவதில் வெறிபாடிய காமக்கண்ணியாரும் குறிப்பிடத்தக்கவராவார். தமது அகப்பாடலான அகநானூறு *98*-ஆவது பாடலுள் *5* சுட்டுப் பெயர்களைக் கையாண்டுள்ளார்.

*(எ.கா.)*

அவர் *(98 : 2)*

அது *(98 : 10)*

இம் *(98 : 24)*

*அஃது (98 : 25)*

அதன் *(98 : 30)*

தோழி கூற்றில் அமைந்த குறிஞ்சித் திணைப்பாடலான இப்பாடலில் சுட்டுப்பெயர் தலைவனது இயல்பையும் தலைவியின் மனநிலையையும் சுட்டுவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில்

இடம்பெற்றுள்ள சுட்டுப் பெயர்கள் கீழ்க்காணும் அட்டவணையில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

**சுட்டு**

**அட்டவணை 3.4**

| **புலவர்கள்** | **அகநானூறு** | **குறுந்தொகை** | **நற்றிணை** | **பதிற்றுப் பத்து** | **புறநானூறு** |
|---|---|---|---|---|---|
| அஞ்சில் அஞ்சியார் | | | இ *(190:12)* | | |
| ஒக்கூர் மாசாத்தி | ஆங்கண் *(384:6)* | இவண்*(126:2)*<br>ஆங்கு*(139:4)* | | | இவள்*(279:1)*<br>இவள்*(279:3)*<br>இவள்*(279:5)* |
| ஔவையார் | அவர்*(303:19)* | அவர்*(23:4)*<br>அவர்*(43:2)*<br>அ்.து*(80:3)*<br>அ்.து*(80:3)*<br>இ்.து*(158:6)*<br>இவர்*(364:8)* | இவண்*(129:3)*<br>அதன்*(129:6)*<br>அ்.து*(295:3)*<br>அதன்*(371:7)* | | அது*(89:9)*<br>அவர்*(93:6)*<br>அதன்*(94:3)*<br>இவ்*(95:1)*<br>அவ்*(95:3,3)*<br>அவன்*(96:9)*<br>அவர்*(97:4)*<br>அவர்*(97:8)*<br>அவர்*(97:19)*<br>அவன்*(97:14)*<br>ஆயிடை*(97:17)*<br>அ்.து*(97:25)*<br>அவர்*(98:20)*<br>இவண்*(99:2)*<br>இவன்*(100:9)*<br>அது*(101:8)*<br>அவன்*(101:10)*<br>அவனது *(102:4)*<br>அவன்*(103:12)*<br>அவ்*(187:4)*<br>இப்*(206:4)*<br>அத்திசை *(206:13)*<br>அவன்*(235:14)*<br>இது*(269:7)* |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | இ(269:12)<br>இவன் (290:1,3,6)<br>அதன்(315:5)<br>இது(367:14)<br>அது(390:11)<br>இவண் (392:21) |
| கழார்க் கீரன் எயிற்றியார் | இது(217:13)<br>இவர்(294:6)<br>இ(294:14) | | | | |
| காக்கைப் பாடினி நச் செள்ளை யார் | | | | ஆயிடை (51:15)<br>அது (52:25)<br>இவண் (54:10)<br>அவன் (56:3)<br>ஆங்கண் (56:1) | |
| காவற் பெண்டு | | | | | இது(86:5) |
| குறமகள் இள வெயினி | | | | | அது(157:1) |
| நக்கண்ணை யார் | | | | | அவை(83:3)<br>இ(83:6)<br>ஆங்கண் (84:4)<br>இ∴து (85:1)<br>அவன்(85:8) |
| நன்னாகை யார் | | ஈங்கு(172:3)<br>அ(180:6)<br>ஈங்கு(192:1)<br>இவர்(287:5) | | | |
| நெடும்பல் லியத்தை | | இவள்(178:3) | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாரிமகளிர் | | | | | அற்றை (112:1)<br>அவ்(112:1)<br>இற்றை (112:3)<br>இவ்(112:3) |
| பூங்கணுத் திரையார் | | இது(171:4) | | | |
| போந்தைப் பசலையார் | இ(110:12)<br>அவன்(110:14) | | | | |
| மாறோகத்து நப்பசலை யார் | | | | | அதன்(126:13)<br>அவ்வழி (126:15)<br>ஆங்கண் (174:10)<br>அக்குடை (174:14)<br>இவண்(280:10)<br>அதன்(280:15)<br>அ(383:12)<br>அவ்வழி (383:16)<br>அது(383:23) |
| வெண் பூதியார் | | அஃது(97:2)<br>அஃது(97:2)<br>இ(174:5)<br>அவர்(219:1)<br>ஆங்கண் (219:4)<br>ஈங்கு(219:4) | | | |
| வெண்மணிப் பூதியார் | | இது(299:1)<br>அவன்(299:5)<br>அவன்(299:6) | | | |
| வெள்ளி வீதியார் | ஆயிடை(362:6)<br>இப்பொழுது (362:10) | இவ்(44:4)<br>இந்(58:6)<br>ஆங்கண் (146:5)<br>அவை(146:5) | அவர்(70:5)<br>ஆங்கண்(70:7)<br>இ(348:9) | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வெறிபாடிய காமக் கண்ணியார் | இது(22:4)<br>இவள்(22:6)<br>அது(22:7)<br>அவர்(98:2)<br>அது(98:10)<br>இ(98:24)<br>அஃது(98:25)<br>அதன்(98:30) | | | | இவர்(302:10) |

## பதிலிடு பெயர்

பெயர்ச்சொல்லுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் இன்னொரு பெயர் பதிலிடு பெயராகும். இப்பதிலிடு பெயர்கள் சங்க இலக்கியங்களில் ஏராளமாக இடம்பெற்றுள்ளன. குறிப்பாக சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்களில் மொத்தம் 267 பதிலிடு பெயர்கள் காணப்படுகின்றன. அவர்களுள் ஔவையாரே மிகுதியான பதிலிடு பெயர்களைக் கையாண்டுள்ளார். 267 பதிலிடு பெயர்களுள் 111 பதிலிடு பெயர்களை ஔவையார் மட்டுமே பயன்படுத்தியுள்ளார். சங்கப் பெண்பாற்புலவர்களில் இவரே அதிகப் பாடல் புனைந்துள்ளமை இதற்குக் காரணமாக இருக்கலாம். அகப்பாடல்களை விடவும் புறப்பாடல்களிலேயே பதிலிடு பெயர்கள் மிகுந்துள்ளன. பதிற்றுப்பத்திலும் காக்கைப் பாடினியார் 25 பதிலிடு பெயர்களைக் கையாண்டுள்ளார். அகப்பாடல்களைக் காணும்போது குறுந்தொகையில் ஔவையாரும் கழார்க்கீரன் எயிற்றியார் நற்றிணையிலும், வெள்ளிவீதியார் அகநானூறு மற்றும் குறுந்தொகையிலும் அதிகமான பதிலிடு பெயர்களைப் பயன்படுத்தியுள்ளனர். சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்களில் தாம், தான், நீ, யான், என், எம், எனக்கு, எமக்கு, நாம், யாம், நும் போன்ற பதிலிடு பெயர்கள் காணப்படுகின்றன. புறப்பாடல்களில் வாகை மற்றும் பாடாண் திணைகளிலும் அகப்பாடல்களில் பாலைத் திணை மற்றும் தலைவி கூற்றிலும் பதிலிடு பெயர்கள் மிகுந்துள்ளன.

பல பெண்பாற் புலவர்கள் ஒரே பாடல்களில் பல பதிலிடு பெயர்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்தியுள்ளனர். அவருள் ஔவையார் தனியிடம் பெற்று விளங்குகிறார்.

(எ.கா.)

நம் (நற். 129 : 3)

தாம் (நற். 129 : 4)

நம் (129 : 5)

நாம் (129 : 6)

**அகப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.5**

| வ. எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | 12 | 6 | - | 11 | 14 |
| 2 | குறு. | 10 | 4 | 24 | 16 | 12 |
| 3 | நற். | 9 | 1 | 3 | 10 | 6 |

**அகப்பாடல்கள் - கூற்று**

**அட்டவணை 3.6**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | கரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | 22 | 17 | - | - | - | 3 |
| 2 | குறு. | 3 | 43 | 17 | - | 3 | - |
| 3 | நற். | 3 | 18 | 8 | - | - | - |

**புறப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.7**

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொது வியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக் கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | புறம் | 42 | 21 | 15 | 11 | 4 | - | 10 | - |
| 2 | பதி.ப. | 25 | - | - | - | - | - | - | - |

போந்தைப் பசலையார் அகநானூற்றுப் பாடல் ஒன்றனுள் 9 பதிலிடுப் பெயர்களைக் கையாண்டுள்ளார். அவற்றுள் ஒன்றனைத் தவிர பிற 8 பதிலிகளும் தன்னைச் சுட்டுவதாக அமைந்த நெய்தல் திணை தோழி கூற்று பாடலைச் சார்ந்ததாகும்.

(எ.கா.)

நினக்கு (அகம். 110:5)

யாம் (அகம். 110:8)

யான் (அகம். 110:12)

என் (அகம். 110:21)

யான் (அகம். 110:22)

யாம் (அகம். 110:23)

தான் (அகம். 110:24)

தன் (அகம். 110:24)

என் (அகம். 110:25)

வெள்ளிவீதியாரும் குறுந்தொகைப் பாடல் ஒன்றனுள் 6 பதிலிடு பெயர்களைப் பயன்படுத்தியுள்ளார். 6 அடிகளுள் 6 பதிலிடு பெயர்கள் இடம்பெற்றுள்ளமை இவரது தனி நடையியல் பண்பைச் சுட்டுகிறது.

(எ.கா.)

யாம் (குறு. 169:2)

நும் (குறு. 169:3)

எமக்கு (குறு. 169:5)

நும் (குறு. 169:6)

எம் (குறு. 169:6)

எம் (குறு. 169:6)

பதிற்றுப்பத்தில் காக்கைப்பாடினியாரும் ஒரே பாடலுள் பல பதிலிடு பெயர்களை அமைத்துள்ளார். அவை அனைத்தும் முன்னிலை ஒருமையைச் சுட்டுவதாகவே விளங்குகின்றன.

*சான்று :*

*நின் (பதி. 52:10)*

*நீ (பதி. 52:16)*

*நின் (பதி. 52:22)*

*நீ (பதி. 52:24)*

*நீ (பதி. 52:26)*

*நின் (பதி. 52:28)*

இத்தகைய பதிலிடு பெயர்கள் சுட்டு, வினா போன்றவற்றுள்ளும் இடம் பெறுவனவாகும். அவை உயர்திணை, அ∴றிணை ஆகியவற்றை உணர்த்தியும் ஐம்பால், மூவிடங்களையும் சுட்டி அமைவன.

## வினாப்பெயர்

பெயர் வகைகளுள் வினாப் பெயரும் ஒன்றாகும். இவை உயர்திணை வினாப்பெயர்கள் அ∴றிணை வினாப்பெயர்கள் என இருவகைப்படும். உயர்திணை வினாப் பெயர்களானது யார்?, எவன்?, எவள்?, எவர்?, அவர்கள்? என்றும் அ∴றிணை வினாப்பெயர்கள் என்ன?, எது? எவை? எங்கு? எத்தனை? எவ்வளவு? என்றும் அமையும். இவைத் தவிர யாண்டு? யாங்கு? யாவணது? போன்றவையும் பயன்பாட்டில் உள்ளன. சங்க இலக்கியங்களில் அறு வகை வினாக்களும் இடம்பெற்றுள்ளன. அவை, அறிவினா, அறியா வினா, ஐய வினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா ஆகியனவாகும். சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் மொத்தம் 80 வினாப் பெயர்கள் காணப்படுகின்றன. அகநானூறில் 15 வினாப்பெயர்களும் குறுந்தொகையில் 26 வினாப் பெயர்களும் நற்றிணையில் 8 வினாப் பெயர்களும் புறநானூற்றில் 25 வினாப்பெயர்களும், பதிற்றுப்பத்தில் 6 வினாப் பெயர்களும் காணப்படுகின்றன. சங்கப் பெண்பாற் புலவர்களில் ஔவையாரே அதிகமான வினாப்பெயர்களைத் தமது கவிதையில் அமைத்துள்ளார்.

**அகப்பாடல்கள் - திணை**

***அட்டவணை 3.8***

| வ. எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| *1* | அகம் | *3* | *1* | - | *3* | *8* |
| *2* | குறு. | *4* | *9* | *1* | *3* | *9* |
| *3* | நற். | *1* | *2* | - | *2* | *3* |

**அகப்பாடல்கள் - கூற்று**

***அட்டவணை 3.9***

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| *1* | அகம் | - | *9* | *5* | - | - | - |
| *2* | குறு. | *3* | *11* | *11* | - | - | - |
| *3* | நற். | *1* | *5* | *4* | - | - | - |

**புறப்பாடல்கள் - திணை**

***அட்டவணை 3.10***

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொது வியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக் கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| *1* | புறம் | *11* | *4* | *6* | *3* | - | - | *1* | - |
| *2* | பதி.ப. | *6* | - | - | - | - | - | - | - |

ஒளவையார் வினாப்பெயர்களைப் பெரும்பாலும் குறிப்பு வினைகளால் கையாண்டுள்ளார்.

*(எ.கா.)*

*உளரோ? (புறம். 89 : 3)*

*உளவோ? (புறம். 190:3)*

*உண்டா? (புறம். 90:9)*

*உண்டோ? (புறம். 90:5)*

*உளரோ? (புறம் 90:13)*

அதே போன்று பதிலிடு பெயர்களையும் வினாப் பெயர்களாகத் தமது கவிதையில் இடம்பெறச் செய்துள்ளார்.

*(எ.கா.)*

*நீயோ? (குறு. 158:4)*

*நமரே? (குறு. 183:4)*

*தாமே? (அகம். 273:6)*

*யானே? (அகம். 273:9)*

ஔவையாரது பாடல்களில் வினாப்பெயர்களின் அருகில் ‘கொல்’ என்ற அசைச் சொல் மிகுதியாகக் காணப்படுகின்றன. அசைச் சொற்களுக்குத் தனிப்பொருள் எதுவும் இல்லை. அவை பெயரோடும் வினையோடும் இணைந்து வரக்கூடிய ஓர் உருபாகும். சங்க இலக்கியங்களில் ‘கொல்’ எனும் அசைச்சொல் வினாப் பெயரொடு மட்டுமே இடம்பெற்றுள்ளன. ஔவையாரைத் தொடர்ந்து வெள்ளிவீதியாரும் இதே போன்று ‘கொல்’ என்னும் அசைச் சொல்லோடு கூடிய வினாப்பெயர்களைத் தம் அகப்பாடல்களில் கையாண்டுள்ளார். *(பொரும் கொல்? நற்.348:9), (பொரும் கொல். நற்.348:10), (இருந்தனர் கொல்லோ? குறு. 146:2), (உழல்வென் கொல்லோ? அகம்.45:15), (எவன்கொல்? அகம்.362:11)* அகப்பாடல்களில் இவ்வகைச் சொல்லை கழிவிரக்கத்தைக் குறிப்பிடவே பெரும்பாலும் கையாண்டுள்ளனர்.

கழார்க்கீரன் எயிற்றியாரது பாடல்களில் இடம்பெற்றுள்ள வினாச் சொற்கள் அனைத்தும் ‘கொல்’ எனும் அசைச்சொல்லோடு மட்டுமே அமைந்துள்ளன.

*(எ.கா.)*

*என்னள் கொல்? (நற். 312:9)*

*உள்ளார் கொல்லோ? (அகம்.235:2)*

*மறந்தனர் கொல்லோ? (அகம்.235:3)*

என்னள் கொல்? (அகம். 235:19)

வருகுவர் கொல்? (அகம். 294:14)

காக்கைப்பாடினியார் ‘யா’ எனும் எழுத்தில் தொடங்கும் வினாப் பெயர்களையே பெரும்பாலும் பயன்படுத்தியுள்ளார்.

(எ.கா.)

யாங்கு? (பதி. 52:28)

யாரையோ? (பதி. 52:25)

யாவது? (பதி. 53:12)

சங்க இலக்கியம் படைத்த பெண்பாற் புலவர்களுள் 17 புலவர்கள் மட்டுமே வினாப் பெயர்களைக் கையாண்டுள்ளனர். இப்புலவர்களது பாடல்களில் அமைந்துள்ள வினாப் பெயர்கள் பாலைத் திணையிலேயே அதிகம் இடம் பெற்றுள்ளன. அஃதும் தலைவி கூற்றிலேயே மிகுந்துள்ளன. புறநானூற்றிலும் குறுந்தொகையிலும் வினாப் பெயர்களின் எண்ணிக்கையானது ஒத்த போக்கிலேயே காணப்படுகின்றன. புறநானூற்றில் பாடாண் திணையிலேயே இவை மிகுந்துள்ளன. அகப்பாடல்களில் இவ்வினாப் பெயர்கள், தலைவியின் பிரிவுத்துயருடன் கூடிய ஆற்றாமையை வெளிப்படுத்துகின்றன.

## விளி பெயர்

**“விளி எனப்படுப கொள்ளும் பெயரொடு**

**தெளியத் தோன்றும் இயற்கைய என்ப”**

எனத் தொல்காப்பியம் விளிக்கு பொது இல்கணம் கூறும். ஒருவரை அழைப்பதே விளி எனப்படும். மொழிப் பயன்பாட்டில் விளியின் அவசியம் கருதி தொல்காப்பியர் விளிக்குத் தனி இயலே வகுத்தளித்தார். இவ்விளி சேய்மை, அண்மை என இருவகைப்படும். சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் மொத்தம் 96 விளிப்பெயர்கள் காணப்படுகின்றன. அகநானூற்றில் 10உம் குறுந்தொகையில் 22உம் நற்றிணையில் 10உம், புறநானூற்றில் 36உம் பதிற்றுப் பத்தில் 18உம் அமைந்துள்ளன.

அகநானூற்றிலும் நற்றிணையிலும் விளிகள் ஒத்தப் போக்கினைப் பெற்றுள்ளன. புறப்பாடலுள் புறநானூற்றில் மிகுதியாகவும் அகப்பாடலுள் குறுந்தொகையில் மிகுந்தும் விளிகள் அமைந்துள்ளன. திணை நிலையில் குறிஞ்சியிலேயே விளிகள் அதிகம் காணப்படுகின்றன. புறப்பாடல்களில் பாடாணில் மிகுந்துள்ளன. அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகிய அகப்பாடல்களில் தலைவி மற்றும் தோழி கூற்றுகளில் விளிகள் சற்றேறக்குறைய ஒரே போக்கில் இடம்பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

**அகப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.11**

| வ. எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | 4 | 1 | - | 1 | - |
| 2 | குறு. | 6 | 5 | - | 4 | 3 |
| 3 | நற். | 1 | 2 | - | 2 | 3 |

**அகப்பாடல்கள் - கூற்று**

**அட்டவணை 3.12**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | 5 | 4 | - | - | - | 1 |
| 2 | குறு. | 1 | 10 | 10 | 1 | - | - |
| 3 | நற். | - | 6 | 4 | - | - | - |

**புறப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.13**

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொது வியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக் கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | புறம் | 10 | 4 | 6 | 3 | - | - | 1 | - |
| 2 | பதி.ப. | 18 | - | - | - | - | - | - | - |

சங்கப் பெண்பாற் புலவர்களுள் ஔவையாரே மிகுதியான விளிகளைப் பயன்படுத்தியுள்ளார். தமது புறநானூற்றுப் பாடல்களில் அதியமானை அதிகமாக விளித்துப் பாடியள்ளார்.

(எ.கா.)

அதியர் கோமான் (புறம். 91:1)

அஞ்சி (புறம். 91:2)

பெரும (புறம். 91:5)

நெடுமான் அஞ்சி (புறம். 92:6)

நெடுந்தகை (புறம். 93:15)

பெரும (புறம். 94:3)

குருசில் (புறம். 290:2)

வேந்தீர் (புறம். 367:14)

உழவ (புறம். 392:11)

ஔவையார் குறுந்தொகையுள் அகவன் மகளே! அகவன் மகளே! எனவும் பறுநானூற்றில் வாயிலாயே! வாயிலோயே ! எனவும் அடுக்குத் தொடராக விளித்துள்ளார். அதே போன்று பெருங்கோப்பெண்டு பல்சான்றீரே! பல்சான்றீரே! என்றும் வெள்ளி வீதியார் வெள்ளாங்குருகே! வெள்ளாங்குருகே என்றும் விளியை அடுக்குத் தொடர் நிலையில் விளித்துள்ளமையைக் காணமுடிகிறது.

ஔவையாரைப் போன்றே காக்கைப்பாடினியாரும் தமது பதிற்றுப்பத்துப் பாடல்களில் 18 விளிகளைக் கையாண்டுள்ளார். அவற்றுள் பெரும்பான்மையாக ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை விளித்தற்கே பயன்படுத்தப்பட்டுள்ளன. 3 இடங்களில் ‘மெய்ம்மறை’ என்ற விளி இடம்பெற்றுள்ளது.

குருசில்!, கணவ!, புரவல!, பொருந!, கோவே!, அண்ணல்!, தோன்றல்!, பெரும!, கொற்றவ!, விறலி !, விறலியர்!, பரிசிலர்!, அரணம்!, பாண்மகள்! போன்ற விளிகள் காக்கைப்பாடினியாரது பாடல்களில் காணப்படுகின்றன.

மாறோகத்து நப்பசலையாரது புறப்படல்களில் 10 விளிகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ‘மருக’ என்ற விளி 3 இடங்களில் அமையப்பெற்றுள்ளன.

பல விளிகள் பெண்பாற்புலவர்களது பாடல்களில் காணப் பட்டாலும் தனித்த ஒரு புலவரது பாடல்களுள் மீண்டும் மீண்டும் ஒரே விளிச்செல் இடம்பெறுதல் என்பது அப்புலவரது தனித்த விருப்பக் கூறாகக் கருத இடமளிக்கிறது.

சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்களில் காணப்படும் 96 விளிகளுள் 25 விளிகள் ‘தோழி’ என்ற விளிச் சொல்லாக அமைந்துள்ளன. நக்கண்ணையார் என்ற பெண்புலவர் மட்டும் ‘நெஞ்சே!’ என்ற விளிச்சொல்லைக் கையாண்டுள்ளனர். (நற். 190:1)

**தொழிற்பெயர்**

வினையடியாகப் பிறக்கும் தொழிற்பெயர்கள் தல், அல், அம், ஐ, கை ஆகிய ஈற்று விகுதிகளைக் கொண்டிருக்கும். இவ்வகைப் பெயர்கள் வேற்றுமை உருபுகளை ஏற்று படர்க்கைக்கு உரியதாக விளங்குகின்றன. இது, எண், இடம், காலம், பால் ஆகியவற்றை உணர்த்தாது. சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் 128 தொழிற்பெயர்கள் காணப்படுகின்றன. அகநானூற்றில் 28உம் குறுந்தொகை மற்றும் நற்றிணையில் முறையே 14உம், புறநானூற்றில் 57உம், பதிற்றுப்பத்தில் 15உம் இடம்பெற்றுள்ளன. அகப்பாடல்களில் குறிஞ்சித் திணையிலேயே இவை மிகுந்துள்ளன. புறப்பாடல்களில் பாடாணிலேயே அதிகமாக அமைந்துள்ளன. கூற்றுநிலையில் தலைவி கூற்றிலேயே மிகுந்து காணப்படுகின்றன. தொழிற்பெயர்கள் புறப் பாடல்களை விட அகப்பாடல்களில் குறைவாகவே இடம்பெற்றுள்ளன. ஔவையார், காக்கைப்பாடினியார், மாறோகத்து நப்பசலையார் ஆகியோர் அதிக எண்ணிக்கையிலான தொழிற்பெயர்களைத் தமது பாடல்களில் கையாண்டுள்ளனர்.

**அகப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.14**

| வ. எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | 14 | 2 | - | 1 | 11 |
| 2 | குறு. | 3 | 3 | 5 | - | 3 |
| 3 | நற். | 3 | 3 | 2 | 4 | 2 |

**அகப்பாடல்கள் - கூற்று**

**அட்டவணை 3.15**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | - | 17 | 9 | - | - | 2 |
| 2 | குறு. | 3 | 5 | 6 | - | - | - |
| 3 | நற். | - | 9 | 3 | - | - | - |

ஒரே பாடலில் பல தொழிற்பெயர்களை ஔவையாரது புறப்பாடலிலும் வெறிபாடிய காமக்கண்ணியாரது அகநானூற்றுப் பாடல் ஒன்றனுள்ளும் காண முடிகிறது.

(எ.கா.)

அழித்தல் (புறம். 97:2)

நைத்தல் ((புறம். 97:5)

உடைத்தல் (புறம். 97:9)

பரிதல் (புறம். 97:12)

உய்தல் (புறம். 97:17)

உரித்தாகல்(புறம். 97:19)

இறுக்கல் (புறம். 97:20)

மேற்சுட்டிய தொழிற்பெயர்கள் நிபந்தனை எச்சமாகவும் இடம் பெற்றுள்ளன. (நைத்தலின், பரிதலின், உடைத்தலின்) வெறிபாடிய காமக்கண்ணியாரது அகப்பாடல் ஒன்றனுள்,

(எ.கா.)

வினவல் (அகம் 98:8)
என்றல் (அகம் 98:10)
செல்லல் (அகம் 98:28)
வாழ்தல் (அகம் 98:30)

ஆகிய தொழிற்பெயர்கள் விரவி வரக் காணமுடிகிறது. 30 பெண்பாற் புலவர்களுள் 15 புலவர்களே இத்தகைய தொழிற்பெயர்களைத் தமது பாடல்களில் கையாண்டுள்ளனர். புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் திணை நிலையில் தொழிற்பெயர்கள் அமைந்துள்ள விதத்தைக் கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம்.

**புறப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.16**

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொது வியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக் கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | புறம் | 32 | 11 | 4 | 3 | - | - | 5 | 2 |
| 2 | பதி.ப. | 15 | - | - | - | - | - | - | - |

## வினையாலணையும் பெயர்

ஒரு வினைமுற்றானது வினையை உணர்த்தாது பெயரை உணர்த்தி நிற்குமானால் அஃது வினையாலணையும் பெயர் எனப்படும். இவை வேற்றுமை உருபை ஏற்றும் வருவன. தெரிநிலை, குறிப்பு என்ற இரு நிலையில் செயலாற்றும் வினையாலணையும் பெயர்கள் சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் 154 என்ற எண்ணிக்கையில் இடம்பெற்றுள்ளன. அகப்பாடல்களில் குறுந்தொகையிலும்

புறப்பாடல்களில் புறநானூற்றிலும் இவை மிகுந்துள்ளன. ஔவையாரே வினையாலணையும் பெயர்களை அதிகமாகக் கையாண்டுள்ளார். தமது புறப்பாடல் ஒன்றனுள் (புறம். 98) ஒரே சொல் கொண்ட வினையாலணையும் பெயரே மீண்டும் மீண்டும் கையாண்டுள்ளார்.

(எ.கா.)
கண்டவர் (புறம். 98:3)
கண்டவர் (புறம். 98:7)
கண்டவர் (புறம். 98:10)
கண்டவர் (புறம். 98:13)

இஃது ஔவையாரின் தனித்த நடையியல் பண்பைக் காட்டுகிறது. அகப்பாடல்களை விட புறப்பாடல்களிலேயே இவர் அதிக வினையாலணையும் பெயர்களைப் பயன்படுத்தியுள்ளார். மாறோகத்து நப்பசலையாரும் அதிகமான வினையாலணையும் பெயர்களைத் தமது பாடல்களுள் ஆண்டுள்ளார்.

(எ.கா.)
கொல்பவர் (நற். 304:8)
கொள்பவர் (புறம். 37:9)
பாடினன் (புறம். 126:13)
பெயர்ந்தனன் (புறம். 174:20)

வெள்ளிவீதியார் எதிர்மறை வினையாலணையும் பெயர்களை மிகுதியாகக் கையாண்டிருப்பதை அவரது பாடல்கள் வழி அறிய முடிகிறது.

(எ.கா.)
புகார் (குறு. 130:1)
ஏறார் (குறு. 130:1)
செல்லார் (குறு. 130:2)
வழங்கார் (அகம். 362:6)

எதிர்மறை மட்டுமல்லாது பிற வினையாலணையும் பெயர்களையும் மிகுதியாக இவரது அகப்பாடல்களில் காணமுடிகிறது. அவை பெரும்பாலும் வினைமுற்றுகளாக இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் இப்பெயர்கள் புறப்பாடல்களுள் பாடாண் மற்றும் வாகையில் சற்றொத்த நிலையிலும் அகப்பாடல்களுள் பாலைத் திணையில் மிகுந்தும் காணப்படுகின்றன. தலைவி கூற்றிலேயே இவை அதிகமாக இடம்பெற்றுள்ளன. பெரும்பாலான வினையாலணையும் பெயர்கள் தலைவனைக் குறிப்பிடவே பயன்படுத்தப்பட்டுள்ளன.

**அகப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.17**

| வ. எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | 5 | 2 | - | - | 17 |
| 2 | குறு. | 5 | 4 | 5 | 15 | 10 |
| 3 | நற். | 2 | - | 4 | 1 | 9 |

**அகப்பாடல்கள் - கூற்று**

**அட்டவணை 3.18**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | - | 20 | 3 | - | - | - |
| 2 | குறு. | 1 | 21 | 17 | - | - | - |
| 3 | நற். | 2 | 11 | 3 | - | - | - |

**புறப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.19**

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொது வியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக் கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | புறம் | 19 | 16 | 11 | 2 | - | 1 | 3 | 1 |
| 2 | பதி.ப. | 22 | - | - | - | - | - | - | - |

## பெயரடை

ஒரு பெயரைக் குறித்து விளக்கமும் விரிவும் தருமாறு அமையும் சொல்லே பெயரடை ஆகும். இப்பெயரடைகளை ஏராளமாய்ப் பெற்றதாலேயே சங்க இலக்கியங்கள் ‘அடைமொழி புணர்த்த இலக்கியம்’ என்றழைக்கப்படுகின்றன. அடைகளின் ஆற்றல் அளப்பரியது. அவை பாமொழிப் பறவையின் பைஞ்சிறகுகள், புலமைப் புரவலனின் போர் வீரர்கள் எனப் பேராசிரியர் ந.சஞ்சீவி குறிப்பிடுவார்.[15] அடைகள் பயன்பாடு என்பது ‘சொல் கேட்டார்க்குப் பொருள் கண்கூடாதல்’ என்ற தொடர்க்கு முற்றிலும் பொருத்தப்பாடுடையது. சங்கப் புலவர்கள் அடைகளைக் கையாள்வதில் நுண்தேர்ச்சிப் பெற்றிருந்தனர். சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களிலும் இத்தகைய அடைகளின் ஆட்சி மிகுந்துள்ளன. சங்கப் பெண்பாற் புலவர்களுள் ஔவையாரே அதிகமான அடைகளைக் கையாண்டுள்ளார். பெரு, சிறு, அரும், நல், நெடு, கடும், நெடு, பல், குறும், நறும், இரு, மென், கடு, நுண் போன்ற அடைகள் இவரது பாடல்களில் மிகுந்துள்ளன. இவர் ‘நெடு, என்ற அடைமொழியை அதிகமாகக் கையாண்டுள்ளார்.

(எ.கா.)

நெடுமான் (நற். 381:6)

நெடுங்கூந்தல் (குறு. 23:2)

நெடுங்குன்றம் (குறு. 23:5)

நெடுவரை (குறு. 158:1)

நெடுங்கொடி (அகம்.11:5)

நெடுவேல் (புறம். 88:3)

நெடுமான் (புறம். 92:6)

நெடுவேல் (புறம். 99:6)

நெடுங்கால் (புறம். 390:3)

நெடுங்கடை (புறம். 390:11)

நெடுங்கடை (புறம். 392:2)

---

[15] சஞ்சீவி, ந., செவ்வியல் இலக்கிய அடை : வகை தொகைக் களஞ்சியம், ப.57.

பெரு, சிறு ஆகிய அடைகளையும் மிகுதியான அளவில் ஔவையாரின் பாடல்களில் காண முடிகிறது. அகப்பாடல்களை விட புறப்பாடல்களிலேயே இவர் மிகுதியான அடைகளைப் பயன்படுத்தியுள்ளார். ஔவையாருக்கு அடுத்த நிலையில் காக்கைப்பாடினி நச்செள்ளையார் பதிற்றுப்பத்தில் ஏராளமான அடைகளைக் கையாண்டுள்ளார். ஒரு சொல்லுக்கு இரண்டுக்கும் மேற்பட்ட அடைகளைக் கையாண்டுள்ளதை இவரது பாடல்களில் காண முடிகிறது. ‘இரு’ என்ற அடை மிகுதியாக இவரது பாடல்களில் இடம்பெற்றுள்ளது.

(எ.கா.)
இரும் புணரி (பதி.*51:2*)
தூஇரும் போந்தை (பதி.*51:9*)
மாஇருங் கூற்றம் (பதி. *51:35*)
மாஇரும் பல்தோல் (பதி.*52:5*)
அகல் இரு விசும்பு (பதி. *52:28*)
இரு நிலம் (பதி. *54:11*)
இரு பனம் (பதி. *57:2*)
இருங்கொற்றம் (பதி. *59:9*)

நக்கண்ணையார் தமது பாட.ல்களில் ‘பெரு’ என்ற பெயரடையைத் தமது பாடல்களில் மிகுதியாகக் கையாண்டுள்ளதைக் காண முடிகிறது.

(எ.கா.)
பெருங்களிறு (நற். *19:3*)
பெருங்காட்டு (நற். *87:3*)
பெருந்தாட் புன்னை (நற். *87:6*)
பெருந்தண் கானல் (நற். *87:9*)
பெருவரை (அகம். *252:5*)
பெருங்குளம் (அகம். *252:13*)
பெருவிதுப்பு (புறம். *83:4*)
பெருந்தோள் (புறம். *84:1*)

எண்ணல் அளவிற்கானப் பெயரடை மாறோகத்து நப்பசலையார் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

(எ.கா.)

ஒருசிறை (அகம். 377:11)

ஐந்தலை (புறம். 37:1)

எழுசமம் (புறம். 39:11)

எழுஉறழ்திணிதோள் (புறம். 39:11)

மேலும் 'அரு' என்ற அடை இவரது சொல்களில் விரவி வரக் காணலாம்.

(எ.கா.)

அடுங்கடுந்திறல் (புறம். 39:5)

அருமரபு (புறம். 126:9)

அருஞ்சமம் (புறம். 126:21)

அருவழி (புறம். 174:14)

அருங்கடி (புறம். 383:6)

சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களுள் 10 பாடல்களைக் கொண்டிருக்கும் காக்கைப்பாடினியாரின் பதிற்றுப்பத்திலேயே அதிகமான பெயரடைகளைக் காண முடிகிறது. நற்றிணையில் மிகக் குறைந்த அளவிலேயே பெயரடைகள் காணப்படுகின்றன. புறநானூற்றில் 234 பெயரடைகள் உள்ளன. சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் மொத்தம் 622 பெயரடைகள் இடம்பெற்றுள்ளன. அகப்பாடல்களில் தலைவி கூற்றிலும் திணை நிலையில் அகநானூற்றில் குறிஞ்சித் திணையிலும் நற்றிணை, குறுந்தொகையில் நெய்தல் திணையிலும் புறநானூறில் பாடாணிலும், புறத்துறைகளில் இயன்மொழி மற்றும் அரசவாகையிலும் பெயரடைகள் அதிகமாக இடம்பெற்றுள்ளன.

**அகப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.20**

| வ. எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | 42 | 15 | - | 21 | 37 |
| 2 | குறு. | 16 | 21 | 22 | 28 | 15 |
| 3 | நற். | 13 | 11 | 14 | 27 | 8 |

**அகப்பாடல்கள் - கூற்று**

**அட்டவணை 3.21**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | - | 70 | 35 | - | - | 10 |
| 2 | குறு. | 4 | 59 | 36 | 3 | 5 | - |
| 3 | நற். | 3 | 43 | 27 | - | - | - |

**புறப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.22**

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொது வியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக் கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | புறம் | 95 | 56 | 45 | 20 | 3 | 4 | 7 | 4 |
| 2 | பதி.ப. | 98 | - | - | - | - | - | - | - |

## பெயரெச்சம்

பெயரினை எஞ்சு கிளவியாகக் கொள்ளும் எச்சம் பெயரெச்சம் ஆகும். தொல்காப்பியர் செய்த, செய்யும் ஆகிய பெயரெச்சங்களைக் குறிப்பிடுகிறார். செய்கின்ற என்ற வாய்பாட்டுப் பெயரெச்சம் நன்னூல் போன்ற பிற்கால இலக்கண நூல்கள் குறிப்பிடுகிறது. இப்பெயரெச்சம் தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம் என இருவகைப்படும். சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்களில்

இத்தகைய பெயரெச்சங்கள் ஏராளமாய் இடம்பெற்றுள்ளன. சங்கப் பெண்பாற் புலவர்கள் இயற்றிய பாடல் அகநானூற்றில் 224உம் குறுந்தொகையில் 175உம் நற்றிணையில் 132உம் புறநானூற்றில் 350உம் பதிற்றுப்பத்தில் 98மாக பெயரெச்சங்கள் இடம் பெற்றுள்ளன. அகநானூற்றில் பாலைத் திணையில் மிகுந்தும், குறுந்தொகையில் மருதம், நெய்தல் மற்றும் முல்லைத் திணையில் ஒரே அளவிலும் புறநானூற்றில் பாடாணில் மிகுந்தும் காணப்படுகின்றன. ஔவையாரே இவற்றை அதிகமாகக் கையாண்டுள்ளார். ஔவையாருக்கு அடுத்த நிலையில் புறநானூற்றில் மாறோகத்து நப்பசலையாரும் அகநானூற்றில் ஔவையார் மற்றும் கழார்க்கீரன் எயிற்றியார் ஒரே அளவிலும் பெயரெச்சங்களைக் கையாண்டுள்ளனர். தலைவி கூற்றிலேயே இவை பெரும்பாலும் இடம்பெற்றுள்ளன.

காக்கைப் பாடினியாரது பதிற்றுப்பத்துப் பாடல்களில் ‘செய்யும்’ என்ற வாய்பாட்டிலமைந்த பெயரெச்சங்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

(எ.கா.)
கடுக்கும் சீறடி (52:19)
துஞ்சும் பந்தர் (55:4)
இரங்கும் பௌவம் (55:3)
கமழும் தாழை (55:5)
இடூஉம் ஏணி (54:12)
பனிற்றும் புலவு (57:3)
படரும் பாண்மகள் (59:3)

மாறோகத்து நப்பசலையார் பெயரெச்சங்களைப் பெரும்பாலும் பெயரடைகளுடன் கையாண்டுள்ளார்.

(எ.கா.)
போகிய பெரும்பாழ் (அகம். 377:6)
தீர்த்த வெள்வேல் (புறம். 37:5)

எறிந்த வெண்குடை (புறம். 39:2)

இருந்த பெருவிறல் (புறம். 174:14)

**அகப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.23**

| வ. எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | 63 | 36 | - | 20 | 105 |
| 2 | குறு. | 24 | 39 | 40 | 43 | 29 |
| 3 | நற். | 21 | 24 | 23 | 43 | 21 |

**அகப்பாடல்கள் - கூற்று**

**அட்டவணை 3.24**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | - | 151 | 52 | - | - | 21 |
| 2 | குறு. | 9 | 103 | 56 | 4 | 3 | - |
| 3 | நற். | 13 | 82 | 37 | - | - | - |

**புறப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.25**

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொது வியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக் கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | புறம் | 147 | 87 | 38 | 43 | 4 | 10 | 4 | 17 |
| 2 | பதி.ப. | 98 | - | - | - | - | - | - | - |

## எதிர்மறைப் பெயரெச்சம்

நிகழ்ச்சி நடவாமையாகிய எதிர்மறைப் பொருளில் வருகின்ற எச்சம், எதிர்மறைப் பெயரெச்சமாகும். இ∴து காலம் காட்டாது. முக்காலத்திற்கும் பொதுவான

நிலையில் அமைவன. சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்களில் எதிர்மறைப் பெயரெச்சங்களை விட ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்களே மிகுதியாக இடம்பெற்றுள்ளன. சங்கப் பெண்பாற் புலவர்களுள் ஔவையாரே இத்தகைய எச்சங்களை மிகுதியாகக் கையாண்டுள்ளார். ஔவையாருக்கு அடுத்த நிலையில் மாறோகத்து நப்பசலையார் தமது புறப்பாடல்களில் இவ்வகை எச்சங்களைப் பயன்படுத்தியுள்ளார். அகப்பாடல்களை விடவும் புறப்பாடல்களிலேயே இன்று அதிகமாகக் காணப்படுகின்றன. சில பெண்பாற் புலவர்கள் மட்டுமே எதிர்மறைப் பெயரெச்சங்களைக் கையாண்டுள்ளனர். சங்கப் பெண்பாற்புலவர்களது மொத்தப் பாடல்களில் மொத்தம் *72* எதிர்மறைப் பெயரெச்சங்கள் இடம்பெற்றுள்ளன. ஔவையாரது புறப்பாடல்களில் கீழ்க்கண்ட எதிர்மறைப் பெயரெச்சங்களைக் காணலாம்.

(எ.கா.)

காணா ஊங்கு (புறம். *88:6*)

அஞ்சா அரவு (புறம். *89:5*)

ஒல்காத் தோள் (புறம். *98:9*)

எழாஅத் தேயம் (புறம். *99:7*)

புலரா மண்டை (புறம். *103:9*)

ஓடாப் பூட்கை (புறம். *295:8*)

‘ஓடாப் பூட்கை’ எனும் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தை ஔவை, காக்கைப்பாடினி மற்றும் மாறோகத்து நப்பசலையார் ஆகிய மூன்று பெண்புலவர்களும் கையாண்டுள்ளனர்.

(எ.கா.)

ஓடாப் பூட்கை (புறம். *295:8*)

ஓடாப் பூட்கை (பதி.*57:1*)

ஓடாப் பூட்கை (புறம். *126:4*)

பூட்கை என்றால் கொள்கை என்பது பொருள். ஓடா என்பது புறமுதுகு காட்டி ஓடாத நிலை என்பதைச் சுட்டுவதாகும். அதாவது புறமுதுகிட்டு ஓடாதக் கொள்கையினை உடையவர் என்பது பொருள். ஔவை போரில் இறந்த புறமுதுகிட்டு ஓடாத வீர மறவனது தாய் என்ற பொருளிலும் காக்கைப் பாடினியார் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை புறமுதுகிட்டு ஓடாத வீர மறவன் எனக் குறிப்பிட்டும் மாறோகத்து நப்பசலையார் மலையமான் திருமுடிக்காரியை புறமுதுகிட்டு ஓடாத வீர மறம் கொண்ட வேந்தே என்று விளித்தும் இப்பெயரெச்சத்தைக் கையாண்டுள்ளனர். மாறோகத்து நப்பசலையார் அனைத்து ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்களையும் பாடலின் முதல் சீரிலேயே அமைத்துப் பாடியுள்ளார். இஃது அவரது தனித்த நடையில் உத்தியாக இருக்கலாம். குறுந்தொகையில் 50 பாடல்கள் இருப்பினும் 6 எதிர்மறைப் பெயரெச்சங்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன. அகநானூற்றில் 13உம் நற்றிணையில் 9உம் புறநானூற்றில் 30உம் பதிற்றுப்பத்தில் 14உம் காணப்படுகின்றன.

**அகப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.26**

| வ. எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | 5 | 1 | - | 1 | 6 |
| 2 | குறு. | 2 | 1 | 1 | 1 | 1 |
| 3 | நற். | - | 3 | 3 | - | 3 |

**அகப்பாடல்கள் - கூற்று**

**அட்டவணை 3.27**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | - | 10 | 3 | - | - | - |
| 2 | குறு. | 1 | 3 | 2 | - | - | - |
| 3 | நற். | 3 | 3 | 3 | - | - | - |

**புறப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.28**

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொது வியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக் கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | புறம் | 16 | 4 | 1 | 6 | - | - | - | 3 |
| 2 | பதி.ப. | 14 | - | - | - | - | - | - | - |

சங்கப் பெண்பாற் புலவர்களது அகப்பாடல்களில் பாலைத்திணை மற்றும் தலைவி கூற்றிலும் புறப்பாடல்களில் பாடாண் திணையிலும் எதிர்மறைப் பெயரெச்சங்கள் மிகுந்திருப்பதை மேற்காணும் அட்டவணையின் மூலம் அறியலாம்.

## வினை

உயிருள்ள அல்லது உயிரற்றப் பொருட்களின் இயக்கத்தை வினை என்கிறோம். ஒரு பொருளின் செயலைக் குறிக்கும் சொல்லிற்கு வினைச்சொல் என்று பெயராகும். உலகிலுள்ள எந்தவொரு மொழித் தொடரும் பெயர் - வினைச் சொற்கள் இன்றி அமையாது. வினைச்சொற்கள் வேற்றுமை உருபு ஏற்காது காலம் காட்டுவனவாகும். இ஁து இருவகைப்படும். அவை தெரிநிலை வினை, குறிப்பு வினை ஆகியனவாகும். இதனை,

**“வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளாது**

**நினையும் காலை காலமொடு தோன்றும்” (தொல்.வினை.1)**

எனத் தொல்காப்பியம் சுட்டும்.

சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்களில் மொத்தம் 165 வினைச்சொற்கள் இடம்பெற்றுள்ளன. அகநானூற்றில் 16உம் குறுந்தொகையில் 17உம் நற்றிணையில் 9உம் புறநானூற்றில் 73உம் பதிற்றுப்பத்தில் ஐம்பதுமாக இவை காணப்படுகின்றன. புறநானூற்றில் இவை மிகுதியாக அமைந்துள்ளன. அகநானூற்றில் பாலைத்திணையில் மிகுந்தும் குறுந்தொகையில் நெய்தலில் மிகுந்தும் நற்றிணையில் எல்லாத் திணைகளிலும் விரவியும் காணப்படுகின்றன. புறநானூற்றில் பாடாண் மற்றும் வாகையில் ஒத்தப் போக்கில் அமைந்துள்ளன. தலைவி கூற்றிலேயே இவை

அதிகமாக இடம்பெற்றுள்ளன. அகநானூற்றைப் பொறுத்தவரையில் கழார்க்கீரன் எயிற்றியாரே அதிக வினைச்சொற்களைக் கையாண்டுள்ளார். புறநானூற்றில் ஔவையார் வினைகளை மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளார். 10 பாடல்களைப் பாடியுள்ள காக்கைப்பாடினியார் பாடிய பதிற்றுப்பத்தில் வினைச்சொற்கள் மிகுதியாக இடம்பெற்றிருத்தலை அறிய முடிகிறது.

(எ.கா.)

அடு (பதி. 51:8)

உறு (பதி. 51:11)

உறு (பதி. 51:18)

பாய் (பதி. 53:17)

ஏந்து (பதி. 53:19)

வீங்கு (பதி. 54:3)

மருள் (பதி. 54:3)

## வினையடை

பண்பு அடிச்சொற்களோடு வினையடை விகுதிகளாகிய அ, உ என்ற எழுத்துகள் இணைந்து வினையடைகள் தமிழில் உருவாகின்றன. இவை வினைச்சொல் முன்னர் இடம்பெற்று, அவ்வினைச் சொற்கள் உணர்த்தும் வினையை அதாவது செயலைச் சிறப்பிக்கின்றன. சங்க இலக்கியங்களில் ஏராளமான வினையடைகள் காணப்படுகின்றன. அவற்றுள் சங்கப் பெண்பாற் புலவர்கள் இயற்றிய பாடல்களிலும் வினையடைகள் விரவி வரக் காண முடிகிறது. மெல்ல, நன்கு, பெரிது, சிறிது, இனிது, மிக போன்ற வினையடைகள் இப்புலவர்களது பாடல்களில் இடம்பெற்றுள்ளன. சங்கப் பெண்பாற்புலவர்களது 154 பாடல்களுள் மொத்தம் 18 வினையடைகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. அகநானூற்றில் ஐந்தும், பதிற்றுப்பத்தில் எட்டுமாக வினையடைகள் அமைந்துள்ளன. நற்றிணையில் ஒரு வினையடை கூட காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(எ.கா.)

இனிய (குறு. 388:7)

பெரிது (புறம். 278:9)

நெடிது (பதி. 57:3)

இனிது (பதி. 58:5)

நன்கு (அகம். 22:8)

நன்கு (அகம். 352:8)

மிக (அகம். 110:11)

அகநானூற்றில் குறிஞ்சித் திணையில் 3உம் நெய்தலில் 2உம் புறநானூற்றில் பாடாணில் 3உம் குறுந்தொகையில் மருதத்திணையில் ஒன்றும், பதிற்றுப்பத்து அனைத்தும் பாடாணில் அமையப்பெற்றுள்ளதால் 8உமாக வினையடைகள் சங்கப் பெண்பாற்புலவர்களது பாடல்களில் காணப்படுகின்றன. தலைவி மற்றும் தோழி கூற்றிலேயே இவை மிகுந்துள்ளன.

## வினைமுற்று

ஒரு வினைச்சொல் முற்றுப்பெற்ற சொல்லாயின் அஃது வினைமுற்று ஆகும். இது திணை, பால், எண், இடம், காலம் காட்டும் பயனிலையாக நின்று வேற்றுமை உருபை ஏற்காது இயங்குவதாகும். இஃது தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இருவகைப்படுவதாகும். சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் மொத்தம் 227 வினைமுற்றுச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. அகநானூற்றில் 31உம் குறுந்தொகையில் 56உம் நற்றிணையில் 30உம் புறநானூற்றில் 75உம் பதிற்றுப்பத்தில் 35உமாக இவை காணப்படுகின்றன. புறநானூற்றிலேயே மிகுதியான வினைமுற்றுகள் இடம்பெற்றுள்ளன.

(எ.கா.)

இழந்தன (புறம். 97:3)

திரிந்தன (புறம். 97:7)

கழிந்தன (புறம். 97:10)

குளம்பின (புறம். 97:13)

ஒரே பாடலில் பல வினைமுற்றுச் சொற்களை ஔவையாரது பாடல்களில் காண முடிவதை மேற்கண்ட எடுத்துக்காட்டுகள் சுட்டுகின்றன. ஔவையாரே மிகுதியான வினைமுற்றுச் சொற்களைக் கையாண்டுள்ளார். உயர்திணை வினைமுற்றுக்களை விட அ்.றிணை வினைமுற்றுகளே சங்கப் பெண்பாற்புலவர்களது பாடல்களில் மிகுந்துள்ளன.

*(எ.கா.)*

*கண்டனம் (குறு. 220:7)*

*வருகம் (குறு. 275:2)*

*அலக்குறும் (குறு. 43:5)*

*அகத்தது (புறம். 101:8)*

*தைவரும் (புறம். 235:9)*

*துமிக்கும் (பதி. 51:29*

*பகுக்கும் (பதி. 59:15)*

*அல்கின்றன்று (நற். 187:3)*

*கொள்ளும் (நற். 281:3)*

*நிறைந்தன (அகம். 362:2)*

*புணர்ந்தோய் (அகம். 352:9)*

நன்னாகையார், கழார்க்கீரன் எயிற்றியார், வெள்ளிவீதியார், காக்கைப் பாடினியார் போன்ற புலவர்களும் வினைமுற்றுச் சொற்களை ஔவையாருக்கு அடுத்த நிலையில் மிகுதியாகக் கையாண்டுள்ளனர். சில புலவர்கள் வினைமுற்றுச் சொற்களை ஒரு இடத்தில் கூட கையாளவில்லை.

**அகப்பாடல்கள் - திணை**

***அட்டவணை 3.29***

| வ. எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | 5 | 8 | - | 8 | 10 |
| 2 | குறு. | 7 | 8 | 6 | 22 | 13 |
| 3 | நற். | 5 | 7 | 1 | 17 | - |

அகப்பாடல்களைப் பொறுத்தவரையில் நெய்தல் திணையிலேயே வினைமுற்றுச் சொற்கள் மிகுதியாக இடம்பெற்றுள்ளதை மேற்கண்ட அட்டவணை தெளிவுபடுத்துகிறது.

**அகப்பாடல்கள் - கூற்று**

**அட்டவணை 3.30**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| *1* | அகம் | - | *15* | *8* | - | - | *7* |
| *2* | குறு. | *7* | *38* | *10* | - | - | - |
| *3* | நற். | *3* | *16* | *11* | - | - | - |

சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் தலைவி கூற்றிலேயே வினைமுற்றுச் சொற்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளன. தலைவிக்கு அடுத்த நிலையில் தோழி கூற்றில் இச்சொற்கள் மிகுந்துள்ளதை அறிய முடிகிறது.

**புறப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.31**

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொது வியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக் கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| *1* | புறம் | *30* | *13* | *18* | *3* | *3* | *1* | *3* | *4* |
| *2* | பதி.ப. | *35* | - | - | - | - | - | - | - |

புறப்பாடல்களைப் பொறுத்தவரையில் பாடாண்திணையிலே இவை மிகுதியாக இடம்பெற்றுள்ளன. பாடாணிற்கு அடுத்து பொதுவியல் மற்றும் வாகையில் இவை விரவி வந்துள்ளன.

## குறிப்பு வினைமுற்று

குறிப்பு வினைமுற்று என்பது தெரிநிலை வினைமுற்றினைப் போன்று காலம் காட்டாது காலத்தைக் குறிப்பாக உணர்த்தவல்லது. பால் உணர்த்தும். செய்பவரை மட்டுமே விளக்குவதாகும். இ∴து பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய ஆறன் அடிப்படையில் வரும். இத்தகைய குறிப்பு வினைமுற்று சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் 237 இடங்களில் அமைந்து காணப்படுகின்றன. புறநானூற்றிலேயே குறிப்பு வினைமுற்றுகள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. ஔவையாரே இவற்றை அதிகமாகக் கையாண்டுள்ளார்.

(எ.கா.)

ஊரன் (நற். 390:7)

உளன் (புறம். 89:9)

நாடன் (புறம். 390:24)

அல்லன் (புறம். 97:21)

நல்லை (புறம். 187:4)

குறிப்பு வினைமுற்றுகளைக் கையாள்வது என்பது ஓர் கவிதையில் உத்தியாகக் கொள்ளப்படுகிறது. ஔவையாரது தனித்த விருப்பக் கூறாக நடையியல் பண்பாக இவற்றைக் கொள்ளலாம். புறநானூற்றில் மட்டும் 71 குறிப்பு வினைமுற்றுச் சொற்களை இவர் கையாண்டுள்ளார். அகநானூற்றிலும் நற்றிணையிலும் குறிப்பு வினைமுற்றுச் சொற்கள் குறிஞ்சித் திணையில் மிகுந்துள்ளன. குறுந்தொகையில் மட்டும் நெய்தல் திணையில் இவை அதிகமாகக் காணப்படுகின்றன. புறப்பாடல்களில் பாடாணிலேயே அதிகம் அமைந்துள்ளன. ஔவையாருக்கு அடுத்த நிலையில் காக்கைப்பாடினியார், கழார்க்கீரன் எயிற்றியார், போந்தைப் பசலையார், வெறிபாடிய காமக்கண்ணியார், மாறோகத்து நப்பசலையார் போன்றோர் ஓரளவிற்கு இச்சொற்களைத் தமது பாடல்களில் கையாண்டுள்ளனர். துறை நிலையில் இயன்மொழி, தானைமறம் போன்றவற்றில் இவை மிகுந்துள்ளன. அகப்பாடல்கள்

அனைத்திலும் தலைவி கூற்றிலேயே இவை அதிகம் காணப்படுவதனை அட்டவணையின் மூலம் அறியலாம்.

**அகப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.32**

| வ. எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | 18 | 10 | - | 10 | 8 |
| 2 | குறு. | 8 | 8 | 8 | 14 | 4 |
| 3 | நற். | 6 | 4 | 5 | 2 | 3 |

**புறப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.33**

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொது வியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக் கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | புறம் | 43 | 18 | 18 | 24 | 3 | - | 7 | - |
| 2 | பதி.ப. | 16 | - | - | - | - | - | - | - |

புறநானூற்றுப் பாடல்களில் வாகை மற்றும் பொதுவியலில் குறிப்பு வினைமுற்று சொற்கள் ஒத்தப்போக்கினைக் கொண்டுள்ளன. பாடாணுக்கு அடுத்த நிலையில் தும்பைத் திணையில் இவை அதிகமாக அமைந்துள்ளன.

**அகப்பாடல்கள் - கூற்று**

**அட்டவணை 3.34**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | - | 20 | 17 | - | - | 8 |
| 2 | குறு. | 6 | 26 | 7 | 1 | 1 | - |
| 3 | நற். | 2 | 14 | 4 | - | - | - |

சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் பெரும்பாலும் குறிப்பு வினைமுற்றுச் சொற்கள் தலைவனைச் சுட்டுவதற்கே பயன்படுத்தப்பட்டுள்ளன. ஊரன், நாடன், உளன், உளர், அல்லர், வல்லன், இனியர், வன்பர், மெல்லியன், பூணன், அல்லன், சேர்ப்பன், துறையன், நாட்டர், துறைவன், நல்லன், வரவோன், அவியன் போன்ற குறிப்பு வினைச் சொற்கள் இப்புலவர்களது பாடல்களில் தலைவனது பண்பினை, செயலை, இருப்பிடத்தைச் சுட்டுவதற்குக் கையாண்டுள்ளனர். பெண்பாலைச் சுட்டுவதற்கு இச்சொற்கள் பயன்படவில்லை. ஒரு இடத்தில் மட்டும் அகம் 98ஆவது பாடல் 19ஆவது அடியில் ‘அல்லள்’ என்ற குறிப்பு வினைமுற்று சொல்லானது வெறிபாடிய காமக்கண்ணியாரது பாடலில் இடம்பெற்றுள்ளது.

## எதிர்மறை வினைமுற்று

ஒரு செயலானது நிகழாது அமையும் முற்றுப்பெற்ற சொல்லையே எதிர்மறையே வினைமுற்று எனக் கூறுகிறோம். சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் மொத்தம் 35 எதிர்மறை வினைமுற்றுகள் காணப்படுகின்றன. குறுந்தொகை மற்றும் புறநானூற்றில் எதிர்மறை வினைமுற்றுச் சொற்கள் ஒத்தப் போக்கினைக் கொண்டுள்ளன. பதிற்றுப்பத்தில் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே இஃது காணப்படுகின்றது. அஃதும் எதிர்மறை வினையாலணையும் பெயராக அமைந்துள்ளது.

(எ.கா.)

உணராதோரே (பதி.51:24)

வெள்ளிவீதியார் மிகுதியான எதிர்மறை வினைமுற்றுகளைத் தமது பாடல்களில் கையாண்டுள்ளார். பெரும்பாலும் அவை தலைவனைச் சுட்டுவதாகக் கழிவிரக்கம் கொண்ட மனநிலையில் அமைந்துள்ளன.

(எ.கா.)

புகாஅர் (குறு.130:1)

ஏறார் (குறு. 130:1)

செல்லார் (குறு. 130:2)

*வாழலன் (அகம். 362:10)*

*அறியேன் (குறு. 386:6)*

அ∴றிணை எதிர்மறை வினைமுற்றுகளையும் அவரது பாடல்களில் காண முடிகிறது. அவையும் குறிப்பாக தலைவியின் பிரிவு குறித்த ஆற்றாமையையே வெளிப்படுத்துவதாகக் காணப்படுகின்றன.

*(எ.கா.)*

*உண்ணாது (குறு. 27:1)*

*படாது (குறு. 27:1)*

*ஆகாது (குறு. 27:3)*

*உதவாது (குறு. 27:3)*

*நில்லாது (குறு. 149:6)*

ஔவையாரும் தமது பாடல்களில் எதிர்மறை வினைமுற்றுகளை ஏராளமாகக் கையாண்டுள்ளதை அறிய முடிகிறது.

*(எ.கா.)*

*அல்கின்றன்றே (நற்.187:3)*

*அல்லேன் (நற். 381:2)*

*வாரார் (குறு. 200:3)*

*வாடாதாரும் (குறு. 388:2)*

*வாராதோர் (அகம். 273:17)*

*பிணித்தன்று (புறம். 96:5)*

*ஆகாது (புறம். 101:8)*

ஔவையார் தமது பாடல்களில் ஈறுகெட்ட எதிர்மறை வினைமுற்றுகளையும் அதிகமாகக் கையாண்டுள்ளதைக் காணலாம்.

*(எ.கா.)*

*கொள்ளா (புறம். 92:1)*

புணரா (புறம். 92:1)

வேண்டா (புறம். 101:10)

கொடாஅ (புறம். 392:5)

சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களுள் குறுந்தொகையுள் நெய்தல் திணையில் அகநானூற்றில் குறிஞ்சியிலும் நற்றிணையிலும் குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகியவற்றில் ஒவ்வொன்றுமாக எதிர்மறை வினைமுற்றுகள் காணப்படுகின்றன. புறநானூற்றில் பாடாணிலேயே அதிகமாக உள்ளன. கூற்று நிலையில் தலைவி கூற்றிலேயே இவை மிகுந்துள்ளன. புறத்துறைகளில் இயன்மொழி மற்றும் அரச வாகையில் அதிகமாக அமைந்துள்ளன.

**அகப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.35**

| வ. எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | 4 | - | - | - | 2 |
| 2 | குறு. | - | 2 | 2 | 6 | 2 |
| 3 | நற். | 1 | - | 1 | 1 | - |

**புறப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.36**

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொதுவியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக்கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | புறம் | 7 | 4 | 1 | - | - | 1 | - | - |
| 2 | பதி.ப. | 1 | - | - | - | - | - | - | - |

**அகப்பாடல்கள் - கூற்று**

**அட்டவணை 3.37**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | - | - | 1 | - | - | - |
| 2 | குறு. | - | 8 | 4 | - | - | - |
| 3 | நற். | - | 3 | - | - | - | - |

அனைத்து சொல் வகைகளும் தலைவி கூற்றிலேயே மிகுந்துள்ள நிலையில் அகநானூற்றில் மட்டும் தோழிக்கூற்றில் ஒரே ஒரு இடத்தில் எதிர்மறை வினைமுற்று அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வினை எச்சம்

தொல்காப்பியர் வினையெச்சம் என்றால் என்ன என்பதை தெளிவாகக் கூறாவிடினும் அது செய்யுளில் அமையும் விதத்தைத் தெளிவாகச் சுட்டியுள்ளார். வினையெச்ச வாய்பாடுகளாக ஒன்பதினைக் குறிப்பிடுகிறார்.

**செய்து செய்யூ செய்பு செய்தென**
**செய்யியர் செய்யிய செயின் செய செயற்கு என**
**அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி” (தொல்.சொல்.230)**

சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் மொத்தம் 630 வினையெச்சங்ள் இடம்பெற்றுள்ளன. அகநானூற்றில் 140உம் குறுந்தொகையில் 99உம் நற்றிணையில் 58உம் புறநானூற்றில் 267உம் பதிற்றுப்பத்தில் 66உமாக இச்சொற்கள் அமைந்துள்ளன. புறநானூறிலேயே இவை அதிகமாகக் காணப்படுகின்றன. புறப்பாடல்கள் யாவும் வீரம், கொடை, பண்பு, புகழ், பெருமை போன்ற செயல்நிலைகளில் இயங்குவதனால் இத்தகைய வினையெச்சங்கள் மிகுதியாக இடம்பெற்றிருக்கக் கூடும். ஒரே பாடலில் பல வினையெச்சங்களளும் ஒரே தொடரில் பல வினையெச்சங்களும் அடுக்கி வந்தும் அமைந்துள்ளன. மேலும்,

அகப்பாடல்களுள் அகநானூற்றிலும் புறப்பாடல்களுள் புறநானூற்றிலும் இவை அதிகமாக இடம்பெற்றுள்ளதை அறிய முடிகிறது. இவ்விரண்டு நூல்களிலும் அடிவரையறை மிகுதி என்பதால் இச்சொற்களும் மிகுந்துள்ளன. ஔவையாரே அதிகமான வினையெச்சங்களைக் கையாண்டுள்ளார். கழார்க்கீரன் எயிற்றியாரும் வெறிபாடிய காமக்கண்ணியாரும் அகநானூற்றில் ஒத்தப்போக்கில் இச்சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர். புறநானூற்றில் ஔவையாருக்கு அடுத்த நிலையில் மாறோகத்து நப்பசலையார் மிகுதியாக வினையெச்சங்களைக் கையாண்டுள்ளார். குறுந்தொகையுள் ஒக்கூர் மாசாத்தியாரும் வெள்ளிவீதியாரும் இச்சொற்களைக் கையாள்வதில் ஒத்தப் போக்கினைக் கொண்டுள்ளனர்.

**அகப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.38**

| வ. எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | 41 | 16 | - | 20 | 63 |
| 2 | குறு. | 12 | 17 | 21 | 31 | 18 |
| 3 | நற். | 15 | 5 | 8 | 18 | 12 |

சங்கப் பெண்பாற் புலவர்களது அகப்பாடல்களில் பாலைத் திணையிலேயே வினையெச்சங்கள் மிகுந்துள்ளன. குறிஞ்சியிலும் நெய்தலிலும் ஒத்தப் போக்கினைக் கொண்டுள்ளன. புறப்பாடல்களில் மற்ற சொற்களைப் போன்றே பாடாண் திணையில் வினையெச்சங்களை அதிகமாகக் காணலாம்.

**புறப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.39**

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொது வியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக் கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | புறம் | 111 | 65 | 31 | 30 | 6 | 8 | 7 | 9 |
| 2 | பதி.ப. | 66 | - | - | - | - | - | - | - |

கூற்று நிலையில் தலைவிக் கூற்றிலேயே வினையெச்சங்கள் அதிக அளவில் இடம்பெற்றுள்ளன. இயன்மொழி மற்றும் அரச வாகை ஆகிய துறைகளில் இச்சொற்கள் மிகுந்து காணப்படுவதனை அறிய முடிகிறது.

**அகப்பாடல்கள் - கூற்று**

**அட்டவணை 3.40**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| *1* | அகம் | - | *87* | *20* | - | - | *12* |
| *2* | குறு. | *12* | *50* | *32* | *1* | *4* | - |
| *3* | நற். | *6* | *36* | *16* | - | - | - |

'செய்து' என்ற வாய்பாட்டு வினையெச்சங்களை சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்களில் மிகுதியாகக் காணமுடிகின்றது.

*(எ.கா.)*

*மடித்து (புறம். 295:2)*

*சிதைந்து (புறம். 295:5)*

*கொடுத்து (புறம். 95:6)*

*எறிந்து (பதி. 51:26)*

*புனைந்து (பதி.51:31)*

*இகந்து (குறு. 29:1)*

*பரந்து (நற். 335:6)*

*மறந்து (அகம்.11:12)*

*புலந்து (அகம். 147:10)*

செய்தென என்ற வாய்பாட்டு வினையெச்சங்களை ஔவையார் மிகுதியாகக் கையாண்டுள்ளார்.

*(எ.கா.)*

*கம்மென (அகம்.11:7)*

*கூர்ந்தென (அகம். 147:5)*

இழுமென (புறம். *93:1*)

ஒய்யென (புறம். *98:15*)

மாய்ந்தென (புறம். *206:8*)

வந்தென (புறம். *269:6*)

இம்மென (புறம். *367:16*)

## எதிர்மறை வினையெச்சம்

ஒரு வினைச்சொல்லின் பகுதியானது எதிர்மறை இடைநிலையையோ அல்லது எதிர்மறை விகுதியையோ கொண்டு வினைமுற்றால் பொருள் முடிவு பெறும் எச்சத்தை எதிர்மறை வினையெச்சம் என்கிறோம். செய்யாமல், செய்யாமே, செய்யாது ஆகிய வாய்பாடுகளில் எதிர்மறை வினையெச்சம் அமையும். சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்களில் *30* எதிர்மறை வினையெச்சங்கள் காணப்படுகின்றன. பெரும்பாலும் அவை 'செய்யாது' எனும் வாய்ப்பாட்டில் அமைந்து காணப்படுகின்றன. புறநானூற்றில் *14*உம் பதிற்றுப்பத்தில் *5*உம் குறுந்தொகையில் *5*உம் நற்றிணையில் *1*உம் அகநானூற்றில் *5*உமாக அமைந்துள்ளன. அகப்பாடல்களை விட புறப்பாடல்களிலேயே இவ்வெதிர்மறை வினையெச்சங்கள் மிகுந்துள்ளன. பிற பெண்பாற் புலவர்களை விட ஔவையாரே இச்சொற்களை அதிகமாகப் பயன்படுத்தியுள்ளனர்.

(எ.கா.)

அறியாது (குறு. *28:5*)

உள்ளாது (குறு. *99:1*)

குறியாது (புறம். *91:9*)

பிழையாது (புறம். *96:6*)

தாங்காது (புறம். *98:15*)

மாறாது (புறம். *100:8*)

நீட்டாது (புறம். *101:6*)

நினையாது (புறம். *104:5*)

சூடாது (புறம். *235:19)*

ஈயாது (புறம். *235:20)*

தோன்றாது (புறம். *315:5)*

அருகாது (புறம். *367:8)*

அதே போன்று காக்கைப்பாடினியாரும் தமது பதிற்றுப்பத்துப் பாடல்களில் *5* இடத்தில் இவ்வெதிர்மறை வினையெச்சங்களைக் கையாண்டுள்ளார்.

(எ.கா.)

எண்ணாது (பதி. *52:6)*

செல்லாது (பதி. *54:10)*

ஆகாது (பதி. *59:1)*

தண்டாது (பதி. *60:2)*

திரியாது (பதி. *60:4)*

அகப்பாடல்களை விட புறப்பாடல்களிலேயே இச்சொற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அகப்பாடல்களில் முல்லை மற்றும் மருதத் திணையில் மிகவும் குறைவாகவும் குறிஞ்சி, நெய்தல், பாலை ஆகிய திணைகளில் இவை சற்றேறக்குறைய ஒரே அளவிலும் இச்சொற்கள் இடம் பெற்றுள்ளன. புறப்பாடல்களில் பாடாணில் மிகுந்தும் வாகை மற்றும் பொதுவியல் திணைகளில் ஓரளவிலும் எதிர்மறை வினையெச்சச் சொற்கள் விரவி வந்துள்ளன. தலைவி மற்றும் தோழி கூற்றில் இவை ஒத்த அளவில் காணப்படுகின்றன. பிறர் கூற்றில் இவை இடம்பெறவில்லை. அகப்பாடல்களில் பெரும்பாலும் தலைவியது தனிமைத் துயரை, இயலாமையை உணர்த்தவே இவ்வெதிர்மறை வினையெச்சங்கள் பயின்று வந்துள்ளன. புறப்பாடல்களைப் பொறுத்தவரை அரசனது வீரத்தையும் பகைவர்கள் உணரக்கூடிய துன்பத்தையும் இணையற்ற பெருமையையும் இவை உணர்த்தி நிற்கின்றன.

சான்றாக,

“போற்றுமின், மறவீர்! சாற்றுதும் நும்மை
ஊர்க்குறு மாக்கள் ஆடக் கலங்கும்

தாள்படு சில்நீர்க் களிறு அட்டு வீழ்க்கும்
ஈர்ப்புடைக் கராஅத்து அன்ன என்னை
நுண்பல் கருமம் **நினையாது**
'இளையன்' என்று இகழின், பெறல் அரிது ஆடே'' (புறம்.104)

ஊர்ச் சிறுவர்கள் நீராடிக் கலங்கும் சிற்றோடையாயினும் அதனுள் வருகின்ற யானையையும் கொன்று வீழ்த்தும் வலிமை பெற்றது முதலை. அது போன்று எம் இறைவனின் உண்மை வலுவையும் நுண்ணிய ஆற்றலையும் அறியாது 'இறையன்' என்று இகழ்ச்சியாக எவரேனும் நினைத்தவாறு அவன் நாட்டினுள் வந்து நுழைந்தால் அவர் எத்துணை வலிமை படைத்தவராயினும் அவனை வெல்லல் அரிது என அறிவாராக என்று ஔவை அதியனின் வீரதிதைச் சிறப்பிக்கிறார். இப்பாடலில் பயின்று வரும் 'நினையாது' எனும் எதிர்மறை வினையெச்சமானது அதியனின் வீரத்தை உணர்த்தக்கூடிய சொல்லாக இடம்பெற்றுள்ளதை அறியலாம்.

**அகப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.41**

| வ. எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | 1 | - | - | 2 | 2 |
| 2 | குறு. | 1 | 1 | 1 | 1 | 1 |
| 3 | நற். | 1 | - | - | - | - |

**அகப்பாடல்கள் - கூற்று**

**அட்டவணை 3.42**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | - | 2 | 3 | - | - | - |
| 2 | குறு. | - | 3 | 2 | - | - | - |
| 3 | நற். | - | 1 | - | - | - | - |

**புறப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.43**

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொது வியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக் கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | புறம் | 6 | 5 | 3 | - | - | - | - | - |
| 2 | பதி.ப. | 5 | - | - | - | - | - | - | - |

மேற்காணும் அட்டவணைகளில் நூல், திணை கூற்று அடிப்படையில் எதிர்மறை வினையெச்சச் சொற்கள் பயின்று வந்துள்ள பாங்கினை அறியலாம்.

## வியங்கோள் வினைமுற்று

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்றிடத்தும் உரைப்போனின் விருப்பத்தை வெளிப்படுத்தி ஏவல் போல வரும் சொற்களை வியங்கோள் என்பர். இஃது வாழ்த்துதல், வைதல், வேண்டுதல், விதித்தல் ஆகிய பொருள்களில் வரும். ஐம்பால் உணர்த்தி ஒருமை, பன்மை என்ற வேறுபாடற்று பயின்று வரும். சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்களில் இவ்வியங்கோள் வினைமுற்றுச் சொற்களானது 51 இடங்களில் அமைந்து காணப்படுகின்றன. இவையும் புறப்பாடல்களிலேயே மிகுதியாகப் பயின்று வந்துள்ளன. இவர்களது பாடல்களில், வாழிய, வாழ்க, அறிக, எழுக, பெறுக, செல்க, ஒழிக, பாடுக, ஆடுக, வாழியர், உணீஇயர், தரீஇயர் போன்ற வியங்கோள் வினைமுற்றுச் சொற்களைக் காண முடிகிறது. ஔவையார், காக்கைப்பாடினியார், ஒக்கூர் மாசாத்தியார் ஆகிய பெண்பாற் புலவர்கள் இவற்றை அதிக அளவில் கையாண்டுள்ளனர். அகப்பாடல்களில் அகநானூற்றில் இவை மிகுந்துள்ளன. காக்கைப்பாடினியாரது பாடல்களில் வாழ்க, தரீஇயர் ஆகிய வியங்கோள் சொற்கள் மீண்டும் மீண்டும் வருதலைக் காண முடிகிறது. பாடாண் திணையைச் சார்ந்த பதிற்றுப்பாடல்களில் அரசனை வாழ்த்தும் பொருட்டு இச்சொற்கள் இடம்பெற்றுள்ளன. 30 பெண்பாற் புலவர்களில் 15 புலவர்கள் வியங்கோள் வினைமுற்றுச் சொற்களைக் கையாண்டுள்ளனர். அகப்பாடல்களிலுள் வெள்ளிவீதியாரது பாடல்களில் வியங்கோள் வினைமுற்றுச் சொற்களை அதிகமாகக்

காண முடிகிறது. அகப்பாடல்களில் வரும் இச்சொற்கள் பெரும்பாலும் வேண்டுதல் பொருள்களிலும் புறப்பாடல்களில் வாழ்த்துதல் மற்றும் வைதல் பொருள்களிலும் வந்துள்ளதைக் காணமுடிகிறது.

(எ.கா.)

பாடுக (குறு. *23:3*)

ஆகுக (குறு. *91:8*)

அறிக (அகம். *110:1*)

பெயர்க (அகம். *110:23*)

ஒழிக (புறம். *246:2*)

வாழ்க (புறம். *103:12*)

கெடுக (புறம். *279:1*)

குறுகுக (புறம். *231:3*)

வாழ்க (பதி. *54:2*)

அகநானூற்றுப் பாடல்களில் குறிஞ்சி மற்றும் நெய்தல் திணையில் வியங்கோள் வினைமுற்றுச் சொற்கள் ஒத்த போக்கிலும் குறுந்தொகையில் குறிஞ்சி மற்றும் மருதத்தில் ஒரே அளவிலும் காணப்படுகின்றன. புறப்பாடல்களில் அரச வாகை மற்றும் கையறு நிலைத் துறைகளில் இவை மிகுந்துள்ளதை அறிய முடிகிறது. குறுந்தொகையில் தலைவி கூற்றில் மிகுந்தும் அகநானூற்றில் தோழி கூற்றில் மிகுந்தும் இச்சொற்கள் இடம்பெற்றுள்ளன.

**அகப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.44**

| வ. எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | 3 | - | - | 3 | 1 |
| 2 | குறு. | 4 | 1 | 4 | 3 | 1 |
| 3 | நற். | - | - | - | - | - |

**அகப்பாடல்கள் - கூற்று**

**அட்டவணை 3.45**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | - | 1 | 6 | - | - | - |
| 2 | குறு. | - | 7 | 5 | - | 1 | - |
| 3 | நற். | - | - | - | - | - | - |

**புறப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.46**

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொது வியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக் கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | புறம் | 9 | 6 | 7 | - | - | - | 1 | - |
| 2 | பதி.ப. | 7 | - | - | - | - | - | - | - |

## வினைத்தொகை

வினையும் பெயரும் சேர்ந்து அமையும் வினைத்தொகையானது கால உருபுகள் தொக்கி நின்று இயங்கும் ஒரு வினைச்சொல்லாகும். சங்கப் பெண்பாற்புலவர்களது பாடல்களில் மொத்தம் 19 வினைத்தொகைச் சொற்களைக் காண முடிகிறது. புறப்பாடல்களிலேயே இவை மிகுந்துள்ளன. புறநானூற்றுப் பாடல்களிலும் பதிற்றுப்பத்திலும் ஒத்தப் போக்கினைக் காண முடிகிறது. பதிற்றுப்பத்தினுள் காக்கைப்பாடினியார் அதிகமான வினைத்தொகைச் சொற்களைச் கையாண்டுள்ளார். பெரும்பாலும் இவ்வினைத் தொகைச் சொற்கள் போர்ச் செய்திகளைக் குறிப்பிடவே பயன்படுத்தப்பட்டுள்ளன.

(எ.கா.)

கொல் களிறு (பதி. 52:1)

கொல் புனல் (பதி. 52:21)

வெல் கொடி (பதி. 53:21)

அடுபோர் (பதி. 55:2)

கொல் படை (பதி. 58:4)

பதிற்றுப்பத்து பாடாண்திணையைச் சார்ந்ததால் அரசனது வீரத்தைக் குறிப்பிட இச்சொற்களைப் புலவர் கையாண்டுள்ளார். அகப்பாடல்களில் ஆங்காங்கே ஓரிரு இடங்களில் இச்சொற்கள் விரவி வந்துள்ளதைக் காணமுடிகிறது.

(எ.கா.)
அறுகுளம் (அகம். 11:13)
பாய்பரி (அகம். 160:18)
எறிதிரை (அகம்.252:12)

குறுந்தொகையில் மட்டும் ஒரே ஒரு வினைத்தொகைச் சொல்லினைக் காண முடிகிறது. அகப்பாடல்களில் மிகக் குறைந்த அளவிலேயே இவை இடம்பெற்றுள்ளதை திணை, கூற்று அடிப்படையில் இச்சொற்களின் வருகையினை கீழ்க்கண்ட அட்டவணைகள் புலப்படுத்துகின்றன.

**அகப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.47**

| வ. எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | 2 | - | - | 1 | 2 |
| 2 | குறு. | - | - | 1 | - | - |
| 3 | நற். | - | - | - | - | - |

**அகப்பாடல்கள் - கூற்று**

**அட்டவணை 3.48**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | - | 3 | 2 | - | - | - |
| 2 | குறு. | - | 1 | - | - | - | - |
| 3 | நற். | - | - | - | - | - | - |

**புறப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.49**

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொது வியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக் கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | புறம் | 2 | 3 | - | 2 | - | - | - | - |
| 2 | பதி.ப. | 7 | - | - | - | - | - | - | - |

## நிபந்தனை எச்சம்

நிபந்தனை எச்சம் என்பது நிபந்தனைப் பொருளில் வரக்கூடிய முற்றுப்பெறாத வினையெச்சங்களில் ஒன்றாகும். இச்சொற்கள் இரு வாக்கியங்களை இணைப்பதற்கே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் ஆயின், ஆயினும், ஆகிய நிபந்தனை எச்ச சொற்களே மிகுதியாக இடம்பெற்றுள்ளன. 13 பெண்பாற் புலவர்கள் மட்டுமே நிபந்தனை எச்சங்களைக் கையாண்டுள்ளனர். பெரும்பாலும் இவை வினையடிகளுக்குப் பின்னரே அமைந்துள்ளன.

(எ.கா.)
பெறின் (குறு. 29:7)
செலின் (அகம். 303:8)
பெறின் (புறம். 235:1)
புகின் (புறம். 84:3)
காணின் (பதி. 54:16)

அதே போன்று இரட்டித்த ஒற்றுக்களுக்குப் பின்னரும் நிபந்தனை எச்சங்கள் இடம்பெற்றுள்ளன.

(எ.கா.)
இருப்பின் (குறு. 102:2)
ஆர்ப்பினும் (அகம். 45:12)

பரப்பின் (அகம். 110:12)

நினைப்பின் (புறம். 39:6)

கேட்பின் (புறம். 89:8)

ஔவையாரே மிக அதிக அளவில் இச்சொற்களைக் கையாண்டுள்ளார். தமது புறநானூற்றுப் பாடல் ஒன்றனுள் மூன்று இடங்களில் இச்சொற்கள் பயின்று வந்துள்ளன.

(எ.கா.)

ஆயினும் (புறம். 101)

நீட்டினும் (")

செல்லினும் (")

பெரும்பாலும் ஔவையார் 'ஆயினும்' எனும் நிபந்தனை எச்ச சொல்லினைப் பயன்படுத்தியுள்ளார். 'உம்' எனும் இடைச்சொல் இணைந்த நிபந்தனை எச்ச சொற்களை ஏராளமாக இவரது புறப்பாடல்களில் காண முடிகிறது. அதே போன்று மாறோகத்து நப்பசலையார் தமது புறப்பாடல் (புறம்.226) ஒன்றனுள் 'ஆயினும்' எனும் சொல்லை மூன்று முறை அடுக்கிக் கையாண்டுள்ளதைக் காணமுடிகிறது. பெண்பாற்புலவர்களது பாடல்களில் மொத்தம் 101 நிபந்தனை எச்சங்கள் காணப்படுகின்றன. பிறச் சொற்களைப் போன்றே இச்சொற்களும் புறப்பாடல்களிலேயே மிகுந்துள்ளன. புறநானூற்றில் 47 சொற்களும் பதிற்றுப்பத்தில் 6உம் அகநானூற்றில் 14உம் நற்றிணையில் 11உம் குறுந்தொகையில் 23உமாக இவை இடம்பெற்றுள்ளன. அகப்பாடல்களில் பாலை மற்றும் நெய்தல் திணைகளிலும் மிகுந்துள்ளன. அகநானூற்றில் மட்டும் தலைவன் கூற்றில் 5 சொற்கள் இடம்பெற்றுள்ளன.

**அகப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.50**

| வ. எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| *1* | அகம் | *3* | *1* | - | *5* | *5* |
| *2* | குறு. | *1* | *2* | - | *11* | *9* |
| *3* | நற். | *6* | - | - | *2* | *3* |

**அகப்பாடல்கள் - கூற்று**

**அட்டவணை 3.51**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| *1* | அகம் | *5* | *8* | - | - | - | *1* |
| *2* | குறு. | - | *12* | *11* | - | - | - |
| *3* | நற். | - | *6* | *5* | - | - | - |

**புறப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.52**

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொது வியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக் கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| *1* | புறம் | *26* | *9* | *10* | *2* | - | - | - | - |
| *2* | பதி.ப. | *6* | - | - | - | - | - | - | - |

## குறையெச்சம்

குறையெச்சம் என்பது காலம் காட்டாது வருகின்ற ஒரு வினைச்சொல்லாகும். அவ்வாறு வருகின்ற வினைச்சொல்லானது அகர ஈற்றில் முடியும். சங்க இலக்கியங்களில் இத்தகைய குறைசெச்சங்கள் மிகுந்து வரக் காணலாம். சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்களிலும் ஏராளமான குறையெச்சங்கள் பயின்ற வந்துள்ளன. சங்கப் பெண்பாற் புலவர்களின் *154*

பாடல்களுள் 172 குறையெச்சங்கள் இடம்பெற்றுள்ளன. புறப்பாடல்களை விடவும் அகப்பாடல்களிலேயே இவை மிகுந்துள்ளன. குறிப்பாக, அகநானூற்றுப் பாடல்களில் அதிகமான குறையெச்சச் சொற்களைக் காண முடிகிறது. அகநானூற்றில் 53 சொற்களும் குறுந்தொகையில் 19உம் நற்றிணையில் 26உம் புறநானூற்றில் 37உம் பதிற்றுப்பத்தில் 7-மாக இவை அமைந்துள்ளன. புறப்பாடல்களில் 33 பாடல்களை இயற்றிய ஔவையாரது புறநானூற்றில் 17 குறையெச்சச் சொற்களே காணப்படுகின்றன. ஆனால் 7 பாடல்களை மட்டுமே இயற்றியுள்ள மாறோகத்து நப்பசலையாரது புறநானூற்றுப் பாடல்களில் 15 குறையெச்ச சொற்களைக் காண முடிகிறது.

(எ.கா.)
ஒழிய (புறம். 126:20)
தீர (புறம். 174:22)
உணங்க (புறம். 174:25)
வார (புறம். 280:12)

ஒரே பாடலில் பல குறையெச்ச சொற்களைக் கையாண்ட நிலையினையும் மாறோகத்து நப்பசலையாரது பாடல்களில் காணலாம்.

(எ.கா.)
தீர (புறம். 174:4)
கண்ட (புறம். 174:12)
படுந(புறம். 174:16)
தீர (புறம். 174:22)
வெம்ப (புறம். 174:24)
வணங்க (புறம். 174:25)

அதே போன்று அகப்பாடலான அகநானூற்றில் கழார்க்கீரன் எயிற்றியார் ஒரே பாடலில் பல குறையெச்சங்களைப் பயன்படுத்தியுள்ளார்.

(எ.கா.1)

கழிய (அகம். 217:3)

வர (அகம். 217:5)

மலர (அகம். 217:8)

அவிழ (அகம். 217:9)

விட (அகம். 217:10)

நரல (அகம். 217:11)

நடுங்க (அகம். 217:12)

துறந்த (அகம். 217:16)

பொர (அகம். 217:17)

(எ.கா.2)

துளிப்ப (அகம். 235:6)

அவிழ (அகம். 235:8)

அணிய (அகம். 235:10)

செறிய (அகம். 235:11)

குரங்க (அகம். 235:14)

நலிய (அகம். 235:17)

கழார்க்கிரான் எயிற்றியார் ‘அவிழ’ என்கிற குறையெச்ச சொல்லினைப் பெரும்பான்மையாகக் கையாண்டுள்ளார். (அகம். 163, 217, 235), (குறு. 261)

பதிற்றுப்பத்தினுள்ளும் காக்கைப்பாடினியார் குறையெச்ச சொற்களை மிகுதியாகக் கையாண்டுள்ளார். எ.கா. பொர, கமழ, அளப்ப, பட, விளங்க, அலைப்ப, கொடுப்ப, நுடங்க, பாட, அலற, பயந்த, உவப்ப, அகல போன்ற குறையெச்சங்களை இப்புலவர் தமது பாடல்களுள் பயன்படுத்தியுள்ளார். பெரும்பாலும் இச்சொற்கள் ஓரடியுள் இறுதி சீருடன் இணைந்தும் இணையாமலும் வந்துள்ளன.

திணை நிலையில் அகநானூற்றில் மட்டும் பாலைத்திணையிலேயே இச்சொற்கள் மிகுந்து வரக் காணப்படுகின்றன. குறுந்தொகை மற்றும் நற்றிணையில் நெய்தல் திணையில் மிகுந்துள்ளன.

**அகப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.53**

| வ. எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| *1* | அகம் | *19* | *3* | - | *5* | *26* |
| *2* | குறு. | *2* | *3* | *5* | *6* | *3* |
| *3* | நற். | *6* | *3* | *1* | *9* | *7* |

கூற்று நிலையில் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை என அனைத்து அகப்பாக்களிலும் தலைவி கூற்றிலேயே ஏராளமான குறையெச்ச சொற்களைக் காண முடிகிறது. தலைவிக்கு அடுத்த நிலையில் தோழி கூற்றில் இவை விரவி வந்துள்ளன.

**அகப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.54**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| *1* | அகம் | - | *40* | *12* | - | - | - |
| *2* | குறு. | *2* | *10* | *5* | *1* | *1* | - |
| *3* | நற். | *2* | *16* | *8* | - | - | - |

புறப்பாடல்களான புறநானூறு மற்றும் பதிற்றுப்பத்தில் பாடாண் திணையில் இவை அதிகமாகப் பயின்று வந்துள்ளன. பாடாணிற்கு அடுத்த நிலையில் புறநானூற்றில் வாகைத் திணையில் மிகுந்துள்ளன. அரச வாகைத் துறையில் அதிக நிலையில் இச்சொற்கள் காணப்படுகின்றன. இயன்மொழித் துறையிலும் இவற்றை ஓரளவிற்குக் காணமுடிகின்றது.

**புறப்பாடல்கள் - திணை**

***அட்டவணை 3.55***

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொது வியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக் கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| *1* | புறம் | *16* | *12* | *2* | *5* | - | *1* | *1* | - |
| *2* | பதி.ப. | *37* | - | - | - | - | - | - | - |

## ஏவல்

ஏவுகின்ற பொருளில் முன்னிலையில் மட்டுமே வருகின்ற வினைகள் ஏவல் வினைகளாகும். தெரிநிலை மட்டுமே பயின்று வரும். குறிப்பு வினையில் வாரா. இவை விகுதி பெற்றும் பெறாமலும் அமைவனவாகும். ஏவல் வினை வியங்கோளிலும் வரும். சங்கப் பெண்பாற் புலவர்களுள் மிகச் சிலரே இவ்வேவல் சொற்களைக் கையாண்டுள்ளனர். ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், நன்னாகையார், கழார்க்கீரன் எயிற்றியார், காக்கைப்பாடினியார் ஆகிய ஐந்து புலவர்கள் மட்டுமே ஏவல் வினையைக் கையாண்டுள்ளனர். ஔவையார் குறுந்தொகையில் *2* இடங்களிலும் நற்றிணையில் *1* இடத்திலும் புறநானூற்றில் *3* இடங்களிலும் இவ்வேவல் வினையினைப் பயன்படுத்தி உள்ளார். காக்கைப்பாடினியார் தமது பதிற்றுப்பத்துப் பாடலுள் *7* இடங்களில் இச்சொற்களை ஆண்டுள்ளார். ஒக்கூர் மாசாத்தியார் குறுந்தொகையில் *1*ம் அகநானூற்றில் ஒன்றுமாக பயன்படுத்தியுள்ளார். நன்னாகையார் குறுந்தொகையில் ஒன்றும் கழார்க்கீரன் எயிற்றியார் அகநானூற்றில் ஒன்றும் கையாண்டுள்ளனர்.

*(எ.கா.)*

*ஆகுமதி (பதி. 53:3)*

*சென்மதி (பதி.53:14)*

*பாடுக (குறு. 23:3)*

*பாடுக (குறு. 23:4)*

*கேளாய் (நற். 129:1)*

உரைமதி (அகம். 384:11)

வருகம் (குறு. 275:2)

இவையும் புறப்பாடல்களிலேயே மிகுந்துள்ள நிலையினை அறியலாம்

**அகப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.56**

| வ. எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | - | 1 | - | - | 1 |
| 2 | குறு. | 2 | 1 | - | - | - |
| 3 | நற். | 1 | - | - | - | - |

**அகப்பாடல்கள் - கூற்று**

**அட்டவணை 3.57**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | - | 1 | - | - | - | 1 |
| 2 | குறு. | - | 1 | 3 | - | - | - |
| 3 | நற். | - | - | 1 | - | - | - |

**புறப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.58**

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொது வியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக் கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | புறம் | - | - | - | 2 | 1 | - | - | - |
| 2 | பதி.ப. | 7 | - | - | - | - | - | - | - |

பிற சொற்கள் யாவும் பெரும்பாலும் தலைவி கூற்றில் மிகுந்துள்ள நிலையினை அறியலாம். ஏவல் சொற்கள் பெரும்பான்மையாகத் தோழிகூற்றில்

அமைந்த நிலையை அட்டவணை உணர்த்துகின்றது. மேலும் புறப்பாடல்களிலும் பாடாண், வாகை போன்ற திணைகளிலேயே பிற சொற்களின் வருகை அமைந்துள்ள நிலையில் தும்பை மற்றும் கரந்தையில் ஏவல் சொற்கள் அமைந்துள்ளன.

**உவம உருபு**

ஒப்புமைப் பொருளைச் சுட்டி ஆளப்படும் உரைச்சொற்களை உவம உருபு என்பர். “உவமம் என்பது ஒரு பொருளோடு ஒரு பொருளினை ஒப்புமைக் கூறுதல்” என தொல்காப்பிய உவமவியலுக்கான விளக்கத்தில் உவமைக்கு விளக்கம் தருகிறார் பேராசிரியர். செய்யுளில் உவமை பெறும் சிறப்பைக் கருதியே ‘உவமவியல்’ என்ற தனி இயலைத் தொல்காப்பியர் வகுத்தளித்துள்ளார். உவம உருபுகள் *36* சொற்களாக அமையும். அவை, வினை, பயன், மெய், உரு ஆகிய நான்கின் அடிப்படையில் வருவனவாகும். இவ்வுவம உருபுகள் இல்லாமல் இடம்பெறும் உவமைகள் சுட்டிக்கூறா உவமை எனப்படும். இஃது உள்ளுறை உவமை, ஏனை உவமை என இருவகையில் செயலாற்றுகின்றது.

சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் மொத்தம் *126* உவம உருபுகள் இடம்பெற்றுள்ளன. அகப்பாடல்களை விடவும் புறப்பாடல்களிலேயே இவை மிகுதியாக இடம்பெற்றுள்ளன. ஔவையாரே மிகுதியான அளவில் இச்சொற்களைக் கையாண்டுள்ளார். ஔவையார் இயற்றிய *59* பாடல்களுள் மொத்தம் *59* உவம உருபுகள் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் புறப்பாடல்களிலேயே அமைந்துள்ளன. இவ்வுவம உருபுகளை வினை, பயன், மெய், உரு என்கிற நான்கின் அடிப்படையிலும் ஔவையார் மட்டுமே பயன்படுத்தியிருப்பது அவரது மொழிப்புலமையைப் பறைசாற்றுவதாக உள்ளது. ஒரு பாடலில் ஒரு உவமை அமைத்தும் ஒரு பாடலில் பல உவமைகள் அமைத்தும் பாடல் முழுவதுமே உவமைகளால் அமைத்தும் ஔவையார் பாடல்கள் புனைந்துள்ளார். இவரது புறப்பாடல்களில் மட்டும் *38* உவம உருபுகள் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் அதியமானின் வீரம், படை, வலிமை, நாட்டுவளம், கொடைத்தன்மை போன்றவற்றை உவமிக்கவே கையாளப்பட்டுள்ளன.

(எ.கா.)

அன்னோனே (புறம். *87:4*)

கடுப்ப (புறம். *90:1*)

போல் (புறம். 96:4)

அனையை (புறம். 98:17)

அன்ன (புறம். 390:7)

புரை (புறம். 392:14)

போல (புறம். 286:1)

ஔவையின் புறநானூறு 390ஆவது மற்றும் 392ஆம் பாடல்களில் ‘அன்ன’ என்ற உவம உருபு முறையே 5 முறை இடம்பெற்றுள்ளன. ஔவைக்கு அடுத்த நிலையில் நன்னாகையார், கழார்க்கீரனார், காக்கைப் பாடினியார், நக்கண்ணையார், வெள்ளிவீதியார், வெறிபாடிய காமக்கண்ணியார் ஆகிய பெண்பாற் புலவர்கள் இவ்வுவம உருபுகளை மிகுதியாகக் கையாண்டுள்ளனர். அகப்பாடல்களில் அகநானூறிலேயே அதிகமான உவம உருபுகள் காணப்படுகின்றன. நற்றிணையிலும் குறுந்தொகையிலும் சற்றேறக் குறைய ஒத்தபோக்கில் இடம்பெற்றுள்ளன.

**அகப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.59**

| வ. எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | 8 | 4 | - | 1 | 13 |
| 2 | குறு. | 4 | 2 | 5 | 7 | 2 |
| 3 | நற். | 2 | 3 | 4 | 4 | 2 |

**அகப்பாடல்கள் - கூற்று**

**அட்டவணை 3.60**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | - | 17 | 6 | - | - | 3 |
| 2 | குறு. | 3 | 6 | 9 | - | 1 | - |
| 3 | நற். | 1 | 9 | 4 | - | - | - |

அகநானூறில் பாலைத்திணையில் உவம உருபுகள் காணப் படுகின்றன. குறுந்தொகையில் நெய்தல் திணையிலும் நற்றிணையில் மருதம் மற்றும் நெய்தல் திணையிலும் இச்சொற்கள் மிகுந்துள்ளன. கூற்று நிலையில் தலைவி கூற்றிலேயே இவை அதிகமாகக் காணப்படுகின்றன.

**புறப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.61**

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொது வியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக் கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| *1* | புறம் | *27* | *11* | *6* | *6* | *4* | *1* | *1* | *1* |
| *2* | பதி.ப. | *8* | - | - | - | - | - | - | - |

புறப்பாடல்களில் பாடாண் திணையில் உவம உருபுகள் மிகுதியாகக் கையாளப்பட்டுள்ளன. இயன்மொழி துறையிலேயே இவை இயல்பாக மிகுந்துள்ளன.

**உரிச்சொல்**

பெயர், வினை, இடை, உரி என்ற அடிப்படையான சொல் பாகுபாட்டினுள் உரிச்சொற்கள் பெறுமிடம் குறிப்பிடத்தக்கவை. உரிச் சொல்லானது பெயர்ச்சொல்லைப் போன்றோ வினைச்சொல்லைப் போன்றோ தனித்து நின்று பொருள் உணர்த்தாது பெயர்ச்சொல்லுக்கோ வினைச்சொல்லுக்கோ உரிமைப்பூண்டு பொருள் உணர்த்தக்கூடியதாகும். இஃது இசை, குறிப்பு, பண்பு ஆகியவற்றை உணர்த்தவல்லதாகும்.

**பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி**
**ஒருகுணம் பலகுணம் தழுவி பெயர்வினை**
**ஒருவா செய்யுட்கு உரியன உரிச்சொல் (நன்னூல், 442)**

என நன்னூல் உரிச்சொல்லுக்கு விளக்கம் கூறும்.

சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் மொத்தம் 32 உரிச்சொற்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் அகநானூறு, குறுந்தொகையில் ஒரே போக்கில் இச்சொற்கள் காணப்படுகின்றன. பதிற்றுப்பத்தில் மிகக் குறைந்த நிலையிலேயே இவை கையாளப்பட்டுள்ளன. புறநானூறில் ஔவையாரே அதிக அளவில் இச்சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். மாறோகத்து நப்பசலையார் ஒரே ஒரு இடத்தில் இவ்வுரிச்சொல்லைக் கையாண்டுள்ளார். பிற புறநானூற்றுப் புலவர்கள் இச்சொல்லைப் பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**அகப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.62**

| வ. எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | 1 | 2 | - | - | - |
| 2 | குறு. | - | - | 1 | 3 | - |
| 3 | நற். | 1 | - | 1 | 2 | 1 |

அகப்பாடல்களுள் திணை நிலையில் நெய்தலிலேயே சற்றுக் கூடுதலாக இவ்வுரிச்சொற்கள் அமைந்துள்ளன. குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய திணைகளில் இவை ஒரே அளவில் இடம்பெற்றுள்ளதை மேற்கண்ட அட்டவணை உணர்த்துகிறது.

**அகப்பாடல்கள் - கூற்று**

**அட்டவணை 3.63**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அகம் | - | 1 | 1 | - | - | 2 |
| 2 | குறு. | - | 4 | - | - | - | - |
| 3 | நற். | - | 2 | 3 | - | - | - |

பிற சொற்களைப் போலவே உரிச்சொற்களும் தலைவி கூற்றிலேயே மிகுதியாக அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. தலைவன், செவிலி, பரத்தை ஆகியவர்களின் கூற்றில் ஒரு உரிச்சொல் கூட அமைந்து காணப்படவில்லை.

**புறப்பாடல்கள் - திணை**

***அட்டவணை 3.64***

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொது வியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக் கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| *1* | புறம் | *3* | - | *3* | - | - | *1* | - | - |
| *2* | பதி.ப. | *2* | - | - | - | - | - | - | - |

புறப்பாடல்களில் பாடாண் திணையிலேயே இவை மிகுந்துள்ளதை அறிய முடிகிறது.

உரிச்சொற்களுள் பெரும்பாலும் உறு, கடி, நனி ஆகிய சொற்களையே அதிகமாக இப்பெண்பாற்புலவர்கள் கையாண்டுள்ளனர்.

(எ.கா.)

நனி (குறு. *149:2*)

நனி (நற். *281:9*)

நனி (அகம்.*235:14*)

கடி (அகம். *362:6*)

கடி (புறம். *95:3*)

உறு (பதி.ப. *51:18*)

உறு (நற். *90:10*)

'தவ' என்ற உரிச்சொல்லை ஔவையார் தமது புறநானூற்றுப் பாடல் (புறம். *235*) ஒன்றனுள்ளும் ஒக்கூர் மாசாத்தியார் 'சால' என்ற உரிச்சொல்லினை அகநானூற்றுப்பாடல் (அகம். *324*) ஒன்றனுள்ளும் பயன்படுத்தியுள்ளனர்.

## இடைச்சொல்

**"இடை எனப்படுவ பெயரொடும் வினையொடும்**

**நடைபெற்று இயலும் தமக்கு இயல்பிலவே"**

**“அவைதாம்,**

**புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்கு உதவுநவும்**

**வினை செயல் மருங்கின் காலமொடு வருநவும்**

**வேற்றுமைப் பொருள்வயின் உருபு ஆகுநவும்**

**அசைநிலை கிளவி ஆகி வருநவும்**

**இசைநிறைக் கிளவி ஆகி வருநவும்**

**தம்தம் குறிப்பின் பொருள் செய்குநவும்**

**ஒப்புஇல் வழியான் பொருள் செய்குநவும் என்று**

**அப்பண்பினவே நுவலும் காலை”**

என்பது இடைச்சொல்லுக்கான தொல்காப்பிய நூற்பாவாகும். இதன்வழி இடைச்சொல் என்பது தனித்து நின்று பொருள் தராது. பெயர் மற்றும் வினைச் சொற்களுக்கு இடையில் நின்று பொருளை விளக்கும் என்பதை அறியலாம். மேலும் இவ்விடைச்சொற்கள் நுணுக்கமான பொருள் வேறுபாடுகளை உணர்த்துவதற்கும், உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் மிகத் தெளிவாகவும் சுருக்கமான முறையில் வெளிப்படுத்தவும் பயன்படுகின்றன.

வேற்றுமை உருபுகள், பால் காட்டும் விகுதிகள், இடைநிலைகள், சாரியைகள், காலக் கிளவிகள், உவம உருபுகள், அசைநிலைச் சொற்கள், இசைநிரப்பிகள், தத்தம் குறிப்பிற் பொருளுணர்த்துவன, ஏ, ஓ, மன், தில், கொன், உம், என, மற்று, மன்ற, தஞ்சம், கொல், அம்ம, எல் என்பன போன்றவைகளும் இடைச்சொற்கள் எனப்படும்.

சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் மொத்தம் 1532 இடைச்சொற்கள் காணப்படுகின்றன. அகநானூற்றில் 280உம் குறுந்தொகையில் 339உம் நற்றிணையில் 190உம், புறநானூற்றில் 583உம் பதிற்றுப்பத்தில் 140உமாக இடைச்சொற்கள் காணப்படுகின்றன. எல்லாப் பெண்பாற்புலவரினும் ஔவையாரே அதிகமான இடைச்சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். புறநானூற்றுப் பாடல்களைப் பொறுத்தமட்டில் ஔவையாருக்கு அடுத்த நிலையில் மாறோகத்து நப்பசலையார் மிகுதியான இடைச்சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். அகநானூற்றில்

ஔவையாருக்கு அடுத்தபடி கழார்க்கீரன் எயிற்றியாரும், குறுந்தொகை மற்றும் நற்றிணையில் வெள்ளிவீதியாரும் மிகுதியான இடைச்சொற்களைக் கையாண்டுள்ளனர்.

ஔவையாரது பாடல்களில் பெரும்பாலும் ஏகார இடைச்சொல்லும் 'உம்' இடைச்சொல்லும் மிகுந்து காணப்படுகின்றன. காக்கைப்பாடினியாரின் பதிற்றுப்பத்துப் பாடல்களில் பிற இடைச்சொற்களைக் காட்டிலும் 'இன்' இடைச்சொல் மிகுந்துள்ளதை அறிய முடிகிறது. கழார்க்கீரன் எயிற்றியாரது பாடல்களில் 'ஒடு' இடைச்சொல் சற்றுக் கூடுதலாக அமைந்துள்ளது.

**அகப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.65**

| வ. எண் | நூல் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| *1* | அகம் | *82* | *37* | - | *45* | *116* |
| *2* | குறு. | *53* | *53* | *56* | *54* | *114* |
| *3* | நற். | *34* | *33* | *24* | *69* | *30* |

அகப்பாடல்களில் பாலைத்திணையிலேயே இடைச்சொற்கள் மிகுதியாக அமைந்துள்ளன. நெய்தல் திணையிலும் குறிஞ்சித் திணையிலும் ஒத்தப்போக்கினை இவ்விடைச்சொற்கள் பெற்றுள்ளன. மருதத் திணையில் மிகவும் குறைவான அளவிலேயே இச்சொற்கள் காணப்படுகின்றன.

**அகப்பாடல்கள் - கூற்று**

**அட்டவணை 3.66**

| வ. எண் | நூல் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை | உழையர் |
|---|---|---|---|---|---|---|---|
| *1* | அகம் | *17* | *153* | *53* | - | - | - |
| *2* | குறு. | *24* | *173* | *93* | *5* | *3* | - |
| *3* | நற். | - | *165* | *87* | - | - | *28* |

கூற்றுநிலையில் தலைவி கூற்றிலேயே இடைச்சொற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. தலைவிக்கு அடுத்தநிலையில் தோழி கூற்றில் இவை மிகுந்துள்ளதை அறியமுடிகிறது.

**புறப்பாடல்கள் - திணை**

**அட்டவணை 3.67**

| வ. எண் | நூல் | பாடாண் | வாகை | பொது வியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக் கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| *1* | புறம் | *253* | *122* | *87* | *65* | *11* | *5* | *27* | *13* |
| *2* | பதி.ப. | *140* | - | - | - | - | - | - | - |

புறப்பாடல்களில் பிறச்சொற்களைப் போலவே பாடாண் திணையிலேயே இடைச்சொற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. வாகை, பொதுவியல், தும்பை ஆகிய துறைகளில் ஓரளவிற்கு இவ்விடைச்சொற்கள் மிகுந்து வந்தள்ளமையை அட்டவணை உணர்த்தும்.

## முடிவுரை

சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் பயின்று வந்துள்ள சொற்களின் வருகை குறித்து இவ்வியலில் விரிவாக நோக்கப்பட்டது. பிற பெண்பாற்புலவர்களை விட ஔவையாரே மிகுதியான பாடல்களைப் புனைந்துள்ளமையால் சொற்களின் வருகையும் இவரது பாடல்களிலேயே பெரும்பாலும் மிகுந்துள்ளதை அறிய முடிகிறது. ஒரே வகையான சொற்களை சில பெண்பாற்புலவர்கள் மீண்டும் மீண்டும் பயன்படுத்தியுள்ளமை அவர்களது தனிப்பட்ட நடையியல் பண்பினைச் சுட்டுவதாகவும் அமைந்துள்ளது. அவ்வகையில் காக்கைப்பாடினியார், கழார்க்கீரன் எயிற்றியார், ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார் போன்றோர் தனித்த நடையியல் பண்பினைக் கொண்டுள்ளனர். திணை, துறை, நூல், கூற்று நிலையிலும் சில பெண்பாற் புலவர்கள் தமது பாடல்களில் ஒரு குறிப்பிட்ட வகைச் சொற்களைக் கையாண்டுள்ளனர் என்பது இவ்வியலில் விரிவாக எடுத்துரைக்கப் பெற்றுள்ளது.

# இயல் - 4

# தொடர் நிலை

## அறிமுகம்

வாக்கியத்தின் அடிப்படை உறுப்புகளாக எழுவாய், பயனிலை ஆகியன அமைகின்றன. இவை இரண்டுமே வாக்கியத்தின் அடிப்படைகளாக அமைந்து பல்வகை வாக்கியங்களுக்கு அடிகோலுகின்றன. “மொழியின் பல பகுப்புகளின் (units) முறைவைப்பும் அவற்றிடையே உள்ள தொடர்பும் பற்றிப் பேசுவது தொடரியல் (syntax)” என்று பா. வீரப்பன் அவர்கள் தனது சங்க இலக்கிய நடை என்ற நூலில் குறிப்பிடுவார்.[16]

தொடரினை இரண்டு நிலைகளில் ஆய்வு செய்யலாம். ஒன்று தொடரின் நீளம், இரண்டு தொடரின் அமைப்பு. இதனை அடிப்படையாகக் கொண்டே புலவர்கள் தொடர்களைக் கையாளுகின்றனர். அவர்கள் ஆளும் சிறு அல்லது நீண்ட தொடர்களை வைத்தும் தொடர்களை ஆக்கும் அமைப்பை வைத்தும் அவர்களது நடையினை வேறுபடுத்தவும் ஒப்புமைப்படுத்தவும் இயலும். அவர்களது எண்ணவோட்டங்களுக்கு ஏற்றவாறு ஒலிக்கூறுகளையும் சொல் தேர்வுகளையும் கொண்டு தொடரமைப்பு உத்திகளை இனங்காண்பது நடையியல் ஆய்விற்கு அவசியமாகிறது.

ஒலிக்கூறுகளைக் கொண்டு எதுகைத் தொடர், மோனைத் தொடர், முரண் தொடர் என தொடர்கள் பல உருவாக்கம் பெறுவதும் சொற்களின் தேர்வினைக் கொண்டு பெயர்த்தொடர், வினைத்தொடர், முற்றுத்தொடர், எச்சத்தொடர், அடைத்தொடர், விளித்தொடர் என தொடர்கள் பல அடையாளப்படுத்தப்படுவதும் இயல்பாகும். ஒரு தொடரின் இயல்பான பண்புகளை வைத்தும் தொடர்கள் வகைமைகளுக்கு உள்ளாகிறது. சான்று நேர்க்கூற்று –

---

[16] *வீரப்பன், பா., சங்க இலக்கிய நடை, ப.131.*

அயற்கூற்று போன்ற வாக்கியங்கள் மற்றும் செய்வினை – செயப்பாட்டு வினை போன்றவை. ‘மாட்டு’ போன்ற செய்யுள் உறுப்புகளால் இலக்கண மரபை மீறியும் உணர்ச்சி நிலையில் சில மாறுதல்களுக்கு உட்பட்டும் சில தொடர்கள் அமைவதுண்டு. ஒரே தொடர் திரும்பத் திரும்ப ஒரே பாட்டில் அமைவதும் உண்டு. தொடரமைப்பும் அவை இணைக்கப்படும் முறையும் நடையியலில் ஒரு முதன்மையான உத்திகளாகும்.

சங்க இலக்கியத் தொடர்கள், அடைகள், எழுவாய், பயனிலை, வினையெச்சம் உள்ளிட்ட பல தொடரியல் கூறுகளைக் கொண்டு பாடலுக்கென வளைந்தும், பிறழ்ந்தும், புதியதாயும் ஆக்கம் பெற்றுள்ளன. இத்தகைய தொடர் நிலைகளானது சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்களில் அமையும் பான்மையை இவ்வியல் ஆராய்வதாக அமைகிறது.

## தொடர் வகைமைகள்

1. தொல்காப்பியம் வாக்கியத்தில் முதன்மைக் கூறுகள் வரிசை முறை மாறி அமைவதை ‘மொழிபுணர் இயல்பு’ (எச்சவியல், 8) எனக் கூறி வகைப்படுத்துகிறது.

2. கருத்து வகை – அமைப்பு வகை என பரந்தாமனார் வாக்கியத்தை இரு நிலைகளில் பிரித்துள்ளார்.

- கருத்து வகை – செய்தி வாக்கியம், உணர்ச்சி வாக்கியம், வினா வாக்கியம் முதலியவை
- அமைப்பு வகை – தனி வாக்கியம், கூட்டு வாக்கியம், கலவை வாக்கியம்

3. தனி வாக்கியம் - இதனுள் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்ற மூன்று கூறுகள் இடம்பெற்றிருக்கும்.

- கூட்டு வாக்கியம் - இரு தனி வாக்கியங்கள் இணைந்து கூட்டு வாக்கியம் அமைகிறது. இதற்கு தொடர் இணைப்பான்கள் பயன்படுகிறது.
- கலவை வாக்கியம் - ஒன்றுக்கு மேற்பட்ட தனி வாக்கியங்கள் இணையும் போது சிறு மாற்றங்களுக்குட்பட்டு கலவை வாக்கியம் உண்டாகிறது.

வாக்கிய உருவாக்கத்திற்கு பெயர் மற்றும் வினைத்தொடர்கள் மிக அடிப்படையான, அவசியமான இடத்தைப் பெற்று விளங்குவனவாகும். பெயர்த் தொடர்களில் பெயரடை, பெயரெச்சங்கள், விளி, பதிலிடு போன்ற தொடர்களும் வினைத் தொடர்களில் வினையடை, வினையெச்சம், வினைமுற்று, வேற்றுமை போன்ற தொடர்களும் இடம்பெறுகின்றன. சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் இத்தகைய பெயர், வினை சார்ந்த தொடர்கள் ஆராயப் பெறுகின்றன.

- அடுக்குத்தொடர்
- எச்சத்தொடர்
- பெயரடைத் தொடர்
- விளித்தொடர்
- வினாத்தொடர்
- ஏவல் தொடர்
- ஏகாரத் தொடர்
- உவமைத் தொடர்
- முரண் தொடர்
- எதிர்மறைத் தொடர்

ஆகிய தொடர்கள் சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் அமைந்துள்ள பான்மையை இவ்வியலுள் எடுத்துக்காட்டப்பெறுகின்றன.

## அடுக்குத் தொடர்

*விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம் ஆகிய மெய்ப்பாடுகள் காரணமாகவும், யாப்பிலக்கணத்தின்படி அல்லது பொதுவாக இசையை நிறைவு செய்யும் பொருட்டும் ஒரு சொல் இரண்டு அல்லது மூன்று, நான்கு முறை அடுக்கி வருவது அடுக்குத் தொடர் எனப்படும். அச்சொற்கள் பெரும்பாலும் பொருள் உணர்த்தக் கூடியதாகவே அமையும். செய்யுள் வழக்கில் அசைநிலையிலும் இவை இடம்பெறும். அடுக்கிவரும் சொற்களை பிரித்தாலும் பொருள் தரக்கூடியதாக அமையும். இவ்வடுக்குத் தொடர்கள், சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் குறிப்பிட்ட அளவிலேயே இடம்பெற்றுள்ளன. 30 பெண்பாற் புலவர்களுள் 5 புலவர்கள் மட்டுமே இவ்வடுக்குத் தொடர்களைக் கையாண்டுள்ளனர். ஔவையார், நக்கண்ணையார், நன்னாகையார், பெருங்கோப்பெண்டு, வெள்ளிவீதியார் ஆகிய ஐந்து பெண்பாற்புலவர்களில் வெள்ளிவீதியாரே இத்தொடர்களை அதிகம் கையாண்டுள்ளார். புறநானூற்றுப் பாடல்களில் ஔவையார் 1 பாடலிலும் நக்கண்ணையார் 1 பாடலிலும் பெருங்கோப்பெண்டு 1 பாடலிலும் அடுக்குத் தொடரைப் பயன்படுத்தியுள்ளனர்.*

*(எ.கா.)*

***வாயிலாயோ ! வாயிலோயே ! (புறம். 206 : 1)***

***ஆடு ஆடு என்ப ஒரு சாரோரே (புறம். 85 : 3)***

***பல்சான்றீரே ! பல்சான்றீரே (புறம். 246 : 1)***

*ஔவையாரும் பெருங்கோப்பெண்டும் விளி நிலையிலும் பெருநற்கிள்ளியின் வெற்றியைக் குறிப்பதற்காக நக்கண்ணையாரும் இத்தொடர்களைக் கையாண்டுள்ளனர்.*

*குறுந்தொகையில் ஔவையார் மற்றும் வெள்ளிவீதியார் ஆகிய இரு புலவர்கள் மட்டுமே அடுக்குத்தொடர்களைப் பயன்படுத்தியுள்ளனர்.*

(எ.கா.)

***அகவன் மகளே ! அகவன் மகளே ! (குறு. 23 : 1)***

***நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின் (குறு. 130 : 3)***

***குடிமுறை குடிமுறை தேரின் (குறு. 130 : 4)***

***நன்று நன்று என்னும் மாக்களோடு (குறு. 146 : 4)***

ஔவையார் விளி நிலையிலும் வெள்ளிவீதியார் தலைவனை நாட்டிலும் ஊரிலும் குடிமக்களுள்ளும் தேடினால் அகப்படுவார் என்ற பொருண்மையிலும் இத்தொடர்களைக் கையாண்டுள்ளார். 'நன்று' என்பது 'பெரிது' என்று பொருள்படும். ஆகையால் இஃது வியப்புப் பொருளில் கையாளப்பட்டுள்ளது. நற்றிணையில் வெள்ளிவீதியார் மட்டுமே தமது ஒரே ஒரு பாடலில் அடுக்குத் தொடரைக் கையாண்டுள்ளார். அஃதும் விளிப் பொருண்மையிலேயே அமைந்துள்ளது.

(எ.கா.)

***சிறுவெள்ளாங் குருகே சிறு வெள்ளாங் குருகே (நற். 70 : 1)***

தலைவனைப் பிரிந்த தலைவி தனது மனத்துயரைச் சிறிய வெள்ளாங் குருகிடம் விளித்துக் கூறும் விதமாக அவலநிலையில் இத்தொடரை வெள்ளிவீதியார் கையாண்டுள்ளார்.

### எச்சத் தொடர்

செய்யுளில் பொருள் முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் தொடரே எச்சத் தொடர் எனப்படும். அஃது பெயரெச்சம், வினையெச்சம் என இருவகைப்படும். பெயரெச்சம் என்பது முடிக்கும் சொல்லாகப் பெயரைப் பெற்றுவரும் எச்சம் பெயரெச்சம் எனப்படும். எச்சமும் பெயரும் சேர்ந்த தொடர் பெயரெச்சத் தொடர் ஆகும்.

**"செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டில்**

**காலமும் செயலும் தோன்றிப் பாலொடு**
**செய்வது ஆதி அறுபொருள் பெயரும்**
**எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே" (நன். *340*)**

செய்த (இறந்தகாலம்), செய்கின்ற (நிகழ்காலம்), செய்யும் (எதிர்காலம்) ஆகிய முக்காலங்களையும் பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் ஆகிய ஆறுவகைப் பெயர்களைக் கொண்டு முடியும் விதமாகவும் இப்பெயரெச்சத்தொடர்கள் அமையும். செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் வாய்பாட்டில் வருவதாகும். வினையைக் கொண்டு முடியும் எச்சம், வினையெச்சம் ஆகும். எச்சமும் வினையும் சேர்ந்த தொடர் வினையெச்சத் தொடர் எனப்படும். இவ்வினையெச்சமானது தொழிலையும் காலத்தையும் காட்டி செயலுக்குரிய பாலினைக் காட்டாது நிற்கும். செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென என்னும் இறந்தகால வாய்பாட்டிலும் 'செய' என்னும் நிகழ்கால வாய்பாட்டிலும் செயின், செய்யிய, செய்யியர், வான், பான், பாக்கு என்னும் எதிர்கால வாய்பாட்டிலும் வருவதாகும். இதனை,

**"தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை**
**ஒழிய நிற்பது வினையெச் சம்மே" (நன். *342*)**

என நன்னூல் வினையெச்சத்திற்கு இலக்கணம் கூறும்.

மேற்குறிப்பிட்ட பெயரெச்சங்களும், வினையெச்சங்களும் சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல் தொடர்களுள் அமைந்த பாங்கு இங்கு எடுத்துக்காட்டப்படுகின்றன. சங்கப் பெண்பாற் புலவர்கள் பாடிய குறுந்தொகை தவிர்த்த பிற சங்கப் பனுவல்களுள் இத்தகைய எச்சங்கள் அதிகமான நிலையிலும் அடுக்கி வரும் பண்பிலும் காண முடிகிறது. குறுந்தொகையில் அடிவரையானது குறைவு என்பதால் இத்தகைய அடுக்கி வரக்கூடிய எச்சத் தொடர்கள் மிகக்குறைவு எனலாம். மாறாக, பிற பெண்பாற் புலவர்களை விட ஒக்கூர் மாசாத்தியார் தமது குறுந்தொகைப் பாடல்களில் பெயரெச்சங்களை அடுக்கிய நிலையில் கையாண்டுள்ளார்.

(எ.கா.)

“பழமழைக் **கலித்த** புதுப்புன வரகின்
இரலை **மேய்ந்த** குறைத்தலைப் பாவை
இருவிசேர் மருங்கில் **பூத்த** முல்லை
. . . . . . . . . . . . . . . . . . . . . .
குறுமுகை **அவிழ்ந்த** நறுமலர்ப் புறவின்” ***(குறு. 220)***

“ஆர்கலி ஏற்றொடு கார்தலை **மணந்த**
கொல்லைப் **புனத்த** முல்லை மென்கொடி
எயிறு என முகையும் நாடற்குத்
துயில்துறந் தனவால் தோழி ! – எம் கண்ணே” ***(குறு. 186)***

ஒக்கூர் மாசாத்தியாரின் குறுந்தொகைப் பாடல்களில் ‘செய்த’ என்ற வாய்ப்பாட்டு பெயரெச்சத் தொடர்களே அதிகமாகப் பயின்று வந்துள்ளன. மேற்கண்ட பாடல் சான்றுகளே அதற்கு உதாரணம்.

காக்கைப்பாடினியாரது பதிற்றுப்பத்து பாடல்கள் யாவும் வினையெச்சத் தொடர்களை விடவும் பெயரெச்சத் தொடர்களை அதிகம் கொண்டுள்ளன.

(எ.கா.)

“வெண்தோட்டு **அசைத்த** ஒண்பூங் குவளையர்
வாள்முகம் **பொறித்த** மாண்வரி யாக்கையர்
செல்உறழ் மறவர்தம் கொல்படைத் தரீஇயர்” ***(பதி. 58)***

“விளங்குஇடும் புணரி வரும்என **முழங்கும்**
கடல்சேர் கானற் குடபுலம் முன்னிக்
கூவல் **துழந்த** தடந்தாள் நாரை
குவிஇணர் ஞாழல் மாச்சினைச் **சேக்கும்**
வண்டுஇறை **கொண்ட** தண்கடற் பரப்பின்

. . . . . . . . . .. . . . . . . . . . . . .

குணகுட கடலோடு ஆயிடை **மணந்த**

பந்தர் அந்தரம் வேய்ந்து

வண்பிணி **அவிழ்ந்த** கண்போல் நெய்தல்” ***(பதி. 51)***

“இன்இசைப் புணரி **இரங்கும்** பௌவத்து

நன்கல வெறுக்கை **துஞ்சும்** பந்தர்

**கமழும்** தாழைக் கானல்அம் பெருந்துறை

. . . . . . . . . . . . . . . . . . . . . .

விண்டுச் **சேர்ந்த** வெண்மழைப் போல

. . . . . . . . . . . . . . . . . . . . . . . .

பொருதுசினம் **தணிந்த** செருபுகல் ஆண்மை

தாங்குநர்த் **தகைத்த** ஒள்வாள்” ***(பதி. 55)***

செய்த, செய்யும் ஆகிய இரு வாய்பாட்டுப் பெயரெச்சத் தொடர்களும் பதிற்றுப்பத்தினுள் அடுக்கி வருதலைக் காண முடிகிறது. இத்தகைய பெயரெச்சத் தொடர்கள் யாவும் ஒன்றனை உவமிக்கவும், வேந்தனது நாட்டு வளம் மற்றும் போர்ச் சிறப்பினைப் பாடவுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. காக்கைப்பாடினியார் இயற்றிய இவ்வாறாம் பத்து பாடல்கள் யாவுமே அரசனது புகழ்பாடும் பாடாண் திணையைச் சார்ந்ததே இதற்குக் காணரமாக இருக்கலாம். இதே போன்று அடுக்கி வரும் பெயரெச்சத் தொடர்களை ஔவையாரது அகநானூற்றுப் பாடல்களிலும் காண முடிகிறது.

*(எ.கா.)*

“வானம் **ஊர்ந்த** வயங்குஒளி மண்டிலம்

நெருப்பு எனச் **சிவந்த** உருப்புஅவிர் அம்காட்டு


இலைஇல **மலர்ந்த** முகைஇல் இலவம்

கலிகொள் ஆயம் மலிபுதொகுபு **எடுத்த**

அம்சுடர் நெடுங்கொடி **பொற்பத்** தோன்றி” ***(அகம். 11)***

மேற்சுட்டிய பாடலுள் தொடர்ந்து பெயரெச்சங்கள் அடுக்கி நின்று, தொடர்கள் கட்டமைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. ஔவையாரது பாடல்களில் பெரும்பாலும் பெயர்+பெயரெச்சம்+பெயர் என்ற நிலையிலேயே அது கட்டமைக்கப்பட்டுள்ளது.

(எ.கா.)




பெயரெச்சமும் அதை அடுத்து வரும் பெயரும் நிலம், பொருள், காலம், கருவி, வினை, முதல் முதலிய ஆறு பொருளில் இலக்கண உறவில் வரும் என (வினை. 37) தொல்காப்பியர் சுட்டுவதனை ஔவையாரது பாடல் தொடர்கள் உணர்த்தவல்லன.

பெயரெச்சத் தொடர்களைப் போன்றே வினையெச்சத் தொடர்களும் சங்கப் பெண்பாற்புலவர்களது பாடல்களில் இடம்பெற்றுள்ளன. மாறோகத்து நப்பசலையாரது பாடல்களில் அடுக்கி வரும் வினையெச்சத் தொடர்களைக் காண முடிகிறது. சான்றாக,

“ஒண்பொறிச் சேவல் எடுப்ப, **ஏற்றெழுந்து**
தண்பனி உறைக்கும் புலரா ஞாங்கர்
நுண்கோல் சிறுகிணை சிலம்ப **ஒற்றி**
நெடுங்கடை **நின்று,** பகடுபல **வாழ்த்தி**

தன்புகழ் ஏத்தினெ னாக ஊன் **புலந்து**

அருங்கடி வியல்நகர்க் குறுகல் **வேண்டி**'' ***(புறம். 383)***

எனும் புறப்பாடலில் வினையெச்சங்கள் அடுக்கி நின்று தொடராக்கம் பெற்றுள்ளதைக் காணலாம். பெரும்பாலும் சங்கப் பெண்பாற் புலவர்களது புறப்பாடல்களுள் பாடாண் திணையைச் சார்ந்த பாடல்களிலேயே இத்தகைய வினையெச்சங்கள் தொடர்நிலையில் தொடர்ந்து வருவதைக் காண முடிகிறது. அரசனது புகழையும், வீரம் மற்றும் கொடைத் தன்மைகளைப் பாடுவதாலும் பாடலின் அழகுணர்ச்சிக்காகவும் இத்தகைய எச்சங்களைப் புலவர்கள் மேற்கொண்டிருக்கலாம். மேலும் வினையெச்சங்களைப் பொறுத்தவரையில் பாடலின் அடி இறுதியிலேயே இத்தகைய எச்சங்கள் இடம்பெற்றுள்ளதை அறிய முடிகிறது. பிற பெண்பாற்புலவர்களை விடவும் வெறிபாடிய காமக்கண்ணியாரது அகநானூற்றுப் பாடல்களில் வினையெச்சத் தொடர்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

(எ.கா.)

''முதுவாய்ப் பெண்டிர் அதுவாய் கூற

களம்நன்கு **இழைத்து** கண்ணி **சூட்டி**

வளநகர் சிலம்பப் பாடி, பலி **கொடுத்து**

உருவச் செந்தினை குருதியொடு **தூஉய்**'' ***(அகம். 22)***

அதே போன்று கழார்க்கீரன் எயிற்றியாரது அகநானூற்றுப் பாடலான 217-வது பாடலில் 'செய' எனும் வாய்பாட்டு வினையெச்சம் தொடர்ந்து 7 இடங்களில் இடம்பெற்று அமைந்துள்ளதைக் காண முடிகிறது. இயற்கையை வருணிக்கும் விதமாக இத்தகைய வினையெச்சத் தொடர்கள் தொடர்ந்து நின்று பாடலைச் சிறப்பிக்கின்றன. கவிதை இயற்றும் உத்தியாக இத்தகைய தொடர் எச்சங்கள் கையாளப்பெறுகின்றன.

(எ.கா.)

''துவலை தூவல் **கழிய**, அகல்வயல்

நீடுகழைக் கரும்பின் கணைக்கால் வான்பூக்
கோடைப் பூளையின் வாடையொடு துயல்**வர**
பாசிலை பொதுளிய புகல்தொறும் பகன்றை
நீல்உண் பச்சை நிறம் மறைத்து அடைச்சிய
தோல்எறி பாண்டிலின் வாலிய **மலர**
கோழிலை அவரைக் கொழுமுகை **அவிழ**
ஊழ்உறு தோன்றி ஒண்பூத் தளை**விட**
புலம்தொறும் குருகினம் **நரல**, கல்லென
அகன்றுஉறை மகளிர் அணிதுறந்து **நடுங்க**
. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
நல்காக் காதலர் நலன்உண்டு **துறந்த**
பாழ்படு மேனி நோக்கி, நோய்**பொர**'' ***(அகம். 217)***

பிற வினையெச்சங்கள் பாடலுள் பயின்றுவரினும் ஒரு குறிப்பிட்ட (‘செய’ என்னும் வாய்பாட்டு வினையெச்சம்) வினையெச்சம் மட்டும் பாடல் தொடருள் மீண்டும் மீண்டும் இடம்பெறுதல் என்பது அப்புலவரின் தனித்த நடையியல் தன்மையைச் சுட்டுவதாகவே அமைகிறது. கழார்க்கீரன் எயிற்றியாரது தனித்த நடை இயல்பைச் சுட்டுவதாகவே இப்பாடல் அமைந்துள்ளமையை அறியலாம். கழிய, வர, மலர, அவிழ, விட, நரல, நடுங்க, துறந்த, பொர என்ற வினையெச்சங்கள் தொடர்ச்சியாக இவரது பாடல் தொடருள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க நடையியல் பண்பாகும். ஒரே வகை எச்சத் தொடர்களை ஒரே பாடலுள் மட்டும் அமைத்து பாடல் புனைவது போல ஒரு புலவர் தாம் இயற்றிய பல பாடல் தொடர்களில் ஒரே வகை எச்சங்களைப் பயன்படுத்துதலும் உண்டு. சான்றாக ஔவையார் தாம் இயற்றிய பல பாடல்களில் ‘செய்தென’ என்ற வினையெச்சத்தைக் கொண்டு பல தொடர்களைக் கையாண்டிருப்பதைக் காணமுடிகிறது.

எ.கா.

‘‘இடைச்சுரத்து எழிலி **உறைத்தென** மார்பிற்

குறும்பொறிக் கொண்ட சாந்தமொடு'' ***(நற். 394 : 6)***

''வெந்திறல் கடுவளி பொங்கர்ப் **போந்தென**

நெற்றுவிளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்

மலையுடை அருஞ்சுரம்'' ***(குறு. 39 : 1)***

''அற்புறங் கூறும் என்ப **தெற்றென**

வணங்குஇறைப் பணைத்தோள் எல்வளை மகளிர்'' ***(குறு. 364:4)***

''எம்மொடு கழிந்தனர் ஆயின், **கம்மென**

வம்பு, விரித்தன்ன பொங்குமணற் கான்யாற்றுப்''***(அகம். 11:7)***

''துறுகல் விடர்அளைப் பிணவுப்பசி **கூர்ந்தெனப்**

பொறிகிளர் வழுவைப் போழ்வாய் ஏற்றை'' ***(அகம். 147 : 5)***

'திண்பிணி முரசம் **இழுமென** முழங்கச்' ***(புறம். 93 : 1)***

''நீயே, ஐயவி புகைப்பவும் தாங்காது, **ஒய்யென**

உறுமுறை மரபின் புறம்நின்று உய்க்கும்'' ***(புறம். 98 : 15)***

'அறிவும் புகழும் உடையோர் **மாய்ந்தென'** ***(புறம். 206 : 8)***

'உவலைக் கண்ணித் துடியன் **வந்தென'** ***(புறம். 269 : 6)***

மேற்கண்ட பாடல் தொடர்ச்சான்றுகள் மூலம் ஔவையாரது தனித்த மொழிநடைப் பண்பினை அறிய முடிகிறது. பெரும்பாலும் இத்தகு வினையெச்சங்களைப் பாடல் அடியின் இறுதியிலேயே அமைத்து ஔவையார் பாடல் இயற்றியுள்ளார்.

## பெயரடைத் தொடர்

பெயரடை என்பது ஒரு பெயரைச் சிறப்பிக்க வருகின்ற இலக்கணக் கூறாகும். பொதுவாக ‘அடை’ என்பது உயர்ச்சிக்காகவும், சிறப்பிற்காகவும் பயன்படுத்தக்கூடிய ஓர் இலக்கிய உத்தியாகும். இ∴து பெயரடை, வினையடை என இருவகைப்படும். மேலும் இ∴து இனமுள்ள அடைமொழி, இனமில்லா அடைமொழி என இருவகைப்படும். தொடர்களில் இவை ஒரு அடை, ஒரு சினை, ஒரு முதல் என அமையும். பழந்தமிழ் இலக்கியத் தொடர்களில் இரு அடை, ஒரு முதலைச் சிறப்பித்து வருதலும் மரபாகும். இதனை,

**“அடைசினை முதன்முறை அடைதலும் ஈரடை**
**முதலோடு ஆதலும் வழக்கியல் ஈரடை**
**சினையொடு செறிதலும் மயங்கலும்**
**செய்யுட்கே” (நன். *403*)**

என நன்னூல் நூற்பா சுட்டும்.

சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல் தொடர்களில் இத்தகைய பெயரடைகள் காணப்படுகின்றன. பெரும்பாலும் இவை ஓரடையுடனே காணப்படுகின்றன. சில புலவர்கள் சிலவிடங்களிலேயே ஈரடைகள் கொண்ட பெயர்சொற்களைத் தமது பாடல்களில் புனைந்துள்ளனர். சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்கள் இடம்பெற்ற *5* சங்கப் பனுவல்களுள் பதிற்றுப்பத்தினை இயற்றிய காக்கைப்பாடினியாரது பாடல் தொடர்களிலேயே இத்தகையப் பெயரடைகள் அதிகமாக அமைந்துள்ளன.

(எ.கா.)

“கொடிநுடங்கு நிலைய கொல்களிறு மிடைந்து
வடிமணி **நெடுந்தேர்** வேறுபுலம் பரப்பி
**அருங்கலம்** தரீஇயர், நீர்மிசை நிவக்கும்
**பெருங்கலி** வங்கம் திசைதிரிந் தாங்கு

மைஅணிந்து **எழுதரு மாஇரும்** பல்தோல்

மெய்புதை அரணம் எண்ணாது, எ·.கு சுமந்து

முன்சமத்து **எழுதரும்** வன்கண் ஆடவர்

. . . . . . . . . . . . . . . . . . . . . " ***(பதி. 52)***

மேற்கண்ட பதிற்றுப்பத்து பாடலானது *31* அடிகள் கொண்டது. ஏறத்தாழ *20* பெயரடைகள் இப்பாடலுள் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. சினைக்கும் முதலுக்கும் என இருநிலைகளிலும் அடைகள் வந்துள்ளன. பதிற்றுப்பத்திற்கு அடுத்த நிலையில் புறநானூற்றில் அதிகமாக பெயரடைகள் இடம்பெற்றுள்ளன.

புறநானூற்றைப் பொறுத்தவரையில் பாடாண் திணைப் பாடல்களிலேயே இப்பெயரடைத் தொடர்கள் மிகுந்துள்ளன. அரசனது புகழ் பாடி சிறப்பிக்க இத்தகைய அடைமொழிகள் துணைபுரிந்துள்ளன. புலவர்களது புலமைத் திறமானது அவர்களது பாடல்களில் வெளிப்பட்டு நிற்பதற்கு அடைமொழியின் பயன்பாடு இன்றியமையாததாகும். புலவரானவர் தாம் கொண்ட கருத்தினையும் தாம் உணர்ந்த உணர்ச்சியையும் விளக்கியுரைப்பதற்கு இத்தகைய அடைமொழிகளைப் பயன்படுத்துவர். சங்க இலக்கியங்கள் உரைநடையைப் போன்று நீண்ட நெடிய அமைப்பைக் கொண்டவை அல்ல. ஒரே ஒரு அடைமொழி மூலம் கூட புலவரது மன உணர்வினை நமக்கு உணர்த்தவல்ல ஆற்றல் படைத்தவர்களாகச் சங்கப் புலவர்கள் விளங்கினர். புறநானூற்றுப் பாடல்கள் பாடிய சங்கப் புலவர்களுள் ஔவையார் யானைக்கு பல அடைகளைக் கொடுத்துப் பாடல் புனைந்துள்ளனர். போர் பற்றிய விளக்கங்களுக்கும் யானையைப் போன்ற வலிமை மிகுந்த அரசனது புகழ் பாடவும், யானைகள் நிறைந்த அரசனது நாட்டுவளத்தைப் பாடவும் இத்தகைய அடைமொழிகள் யானைக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

(எ.கா.)

"வரிஞிமிறு ஆர்க்கும் வாய்புகு கடாஅத்து

**அண்ணல் யானை** அடுகளத்து ஒழிய" ***(புறம். 93 : 13)***

'நீர்த்துறை படியும் **பெருங்களிறு** போல' ***(புறம். 94 : 2)***

**‘இனக் களிறு** செலக் கண்டவர்’ ***(புறம். 98 : 3)***

‘வரிவயம் பொருத **வயக்களிறு** போல’ ***(புறம். 100 : 7***

**‘இழைஅணி யானை** இயல்தோர் அஞ்சி’ ***(புறம். 101 : 4)***

‘மலைசூழ் மங்கின் **மழகளிறு** அணியும்’ ***(புறம். 103 : 7)***

**“இருங்கடறு** வளைஇய குன்றத் தன்னது ஓர்

**பெருங்களிறு** நல்கியோனே அன்ன ஓர்” ***(புறம். 140 : 8)***

**‘இனக்களிற்று** யானை இயல்தேர்க் குருசில்!’ ***(புறம். 290 : 2)***

**‘பொருகளிற்று** அடிவழி அன்ன என்கை’ ***(புறம். 392 : 4)***

யானையது தோற்றத்தை விளக்கவும் அதன் வலிமையை உணர்த்தவும் கூட ஔவையார் இத்தகு அடைமொழிகள் மூலம் காட்சிப்படுத்தியுள்ளார்.

குறுந்தொகைப் பாடல்களுள்ளும் ஔவையார் ‘நல்’ என்ற அடைமொழியை அதிகமாகக் கையாண்டிருப்பதைக் காண முடிகிறது. ஔவையார் பெரும்பாலும் இனிமையான, உயர்ந்த அடைமொழிகளையேத் தம் பாடல் தொடர்களுள் அமைத்துப் பாடியுள்ளார். உயர், நெடு, நல், பெரும், ஓங்கு, மா, அரும், இரு போன்ற உயர்ந்த பண்புச் சொற்களையே இவர் மிகுதியாகக் கையாண்டுள்ளார்.

(எ.கா.)

**‘நால்ஊர்க்** கோசர் **நல்மொழி** போல’ ***(குறு. 15 : 3)***

‘மனவுக் கோப்பு அன்னநல் **நெடுங்கூந்தல்’** ***(குறு. 23 : 2)***

**‘நல்நெடுங் குன்றம்** பாடிய பாட்டே’ ***(குறு. 23 : 5)***

**‘நல்உரை** இகந்து, **பல்உரைத்** தாஅய்’ ***(குறு. 29 : 1)***

**‘நல்அராக்** கதுவி யாங்குஎன்’ ***(குறு. 43 : 4)***

இது போன்றே கழாஅர்க்கீரன் எயிற்றியார் அவர்கள் ‘ண’கர எழுத்துகள் உடைய பெயரடைகளைத் தமது பாடல் தொடர்களுள் மிகுதியாகக் கையாண்டிருப்பதைக் காணமுடிகிறது.

(எ.கா.)

‘சிறைகுவிந் திருந்த பைதல் **வெண் குருகு’** ***(நற். 312 : 3)***

**‘நுண்உறை** அழிதுளி தலைஇய’ ***(குறு. 35 : 4)***

**‘தண்வரல்** வாடையும் பிரிந்திசினோர்க்கு அழலே’ ***(குறு. 35 : 5)***

**‘தண்மழை** பொழிந்த தாழ்பெயற் கடைநாள்’ ***(அகம். 163 : 2)***

‘பெய்து புறந்தந்த பொங்கல் **வெண்மழை’** ***(அகம். 217 : 1)***

‘ஊழ்உறு தோன்றி **ஒண்பூத்** தளைவிட’ ***(அகம். 217 : 10)***

**‘புள்ளிநுண் துவலை** பூவகம் நிறைய’ ***(அகம். 294 : 3)***

வெண், நுண், தண், ஒண் ஆகிய பெயரடைகள் இப்பெண்பாற் புலவரது பாடல் தொடருள், தொடர்ந்து பயின்று வந்துள்ளமை இவரது தனித்த மொழிநடையை வெளிப்படுத்துகிறது.

### விளித்தொடர்

எட்டாம் வேற்றுமை உருபையே விளி வேற்றுமை என்கிறோம். இவ்விளி வேற்றுமையினிடையே உருபுகள், படர்க்கைப் பெயரின் இறுதியில் மிகுதலும், கெடுதலும், இயல்பாதலும், இறுதியெழுத்து திரிதலுமாக அமையும். இஃது ஏவல் வினையையும் கொண்டு முடியும். விளியும் ஏவல் வினையும் சேர்ந்த தொடரினையே விளித்தொடர் எனக் கொள்ளப்படும். இதனை,

**“எட்டன் உருபே எய்துபெயர் ஈற்றின்**
**திரிபு குன்றல் மிகுதல் இயல்பு அயல்**

**திரிபும் ஆம்பொருள் படர்க்கை யோரைத்**

**தன்முக மாகத் தான்அழைப் பதுவே" (நன். 303)**

என நன்னூல் குறிப்பிடுகிறது.

(எ.கா.)

மிகுதல் - பல்சான்றீரே → பல்சான்றீர் என்பதன் ஈறு ஏகாரம் பெற்று வந்துள்ளது.

திரிதல் - தோழீ → 'தோழி' என்பதன் ஈறு ஈகாரமாகத் திரிந்துள்ளது.

கெடுதல் - வளவ → வளவன் என்பதன் ஈறு கெட்டு வந்துள்ளது

இயல்பாதல் - விறலி → எவ்வித மாறுதலுமின்றி வருமாயின் அ.்.து இயல்பு

ஈற்றயல் திரிதல் - சாத்தா → சாத்தன் என்பதன் இறுதி எழுத்து கெட்டு ஈற்றயல் எழுத்தான 'த'வானது 'தா' ஆயிற்று.

ஈற்றயல் திரிந்த விளிப்பெயர்கள் சங்கப் பெண்பாற்புலவர்களின் பாடல்களில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இப்பெண்பாற் புலவர்களது பாடல் தொடர்களில் 19 இடங்களில் மட்டுமே சேய்மை விளிகள் காணப்படுகின்றன. அண்மை விளிகள் 74 இடங்களில் இடம்பெற்றுள்ளன. பெரும்பாலும் பாடல் அடிகளின் இறுதி சீர்களிலேயே இவ்விளிகள் அமைந்துள்ளன. புறப்பாடல்களான பதிற்றுப்பத்திலும் புறநானூறிலும் ஈறு குறைந்த விளித்தொடர்களைக் காணமுடிகிறது. ஒளவையார், காக்கைப்பாடினியார், மாறோகத்து நப்பசலையார் ஆகிய மூவரது புறப்பாடல் தொடர்களுள்ளும் இவ்வித விளிகள்

மிகுதியாக இடம்பெற்றுள்ளன. மன்னனது புகழையும், வீரத்தையும், கொடைவன்மையையும் மிகைப்படுத்திக் கூறும் பாடாண் திணையிலேயே இவை அதிகமாக அமைந்து காணப்படுகின்றன.

எ.கா.

''இனியை **பெரும !** எமக்கே மற்றதன்
துன்அருங் கடாஅம் போல
இன்னாய், **பெரும !** நின்ஒன்னா தோர்க்கே''

***(புறம். 94 : 3 – 5)***

'மறைக்குவன் **பொரும**! நிற் குறித்துவரு வேலே'

***(புறம். 290 : 8)***

'வைகல் ***உழவ!*** வாழிய பெரிது என' ***(புறம். 392 : 11)***

'ஆன்றோள் ***கணவ!*** சான்றோர் **புரவல !'** ***(பதி. 55 : 1)***

'தண்கடற் படப்பை நல்நாட்டுப் **பொருந!'** ***(பதி. 55 : 6)***

'சென்றாலியரோ ***பெரும!*** அல்கலும்' ***(பதி. 55 : 16)***

'சினம் கெழுதானை, செம்பியன் **மருக!'** ***(புறம். 37 : 6)***

'கோல்நிறை துலாஅம் புக்கோன் **மருக!'** ***(புறம். 39 : 3)***

'ஓடாப் பூட்கை உரவோன் **மருக!'** ***(புறம். 126 : 4)***

மாறோகத்து நப்பசலையார் எனும் பெண்புலவர் 'மருக' என்ற விளிச்சொல்லை மீண்டும் மீண்டும் தமது பாடல் தொடர்களுள் கையாண்டுள்ளார். இது அவரின் தனிப்பட்ட விருப்பக்கூறாக கருத இடமளிக்கிறது. அவரது தனித்த மொழிநடையையும் வெளிக்காட்டுகிறது. 'மருக' எனும் விளிச்சொல்லை வெண்ணிக்குயத்தியார் எனும் புலவர் தமது புறப்பாடலில் (புறம். 66) ஒரே ஒரு

*இடத்தில் பயன்படுத்தியுள்ளார். பிற பெண்புலவர்கள் இவ்விளிச் சொல்லினைக் கையாளவில்லை.*

*அகப்பாடல்களைப் பொறுத்தவரையில் 40 இடங்களில் விளிச்சொற்கள் இடம்பெற்றுள்ளன. அவையுள் 'தோழி' எனும் விளிச்சொல்லே 24 இடங்களில் அதிகமான அளவில் பாடல் தொடருள் இடம்பெற்றுள்ளன. ஒரே ஒரு இடத்தைத் தவிர்த்து பிற 23 விளிச்சொற்களும் அண்மை விளிச்சொல்லாக அமைந்துள்ளன. அஞ்சியத்தை மகள் நாகையார் எனும் பெண்பாற்புலவர் மட்டும் தமது பாடல் தொடரில் 'தோழீஇ' எனும் சேய்மை விளிச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.*

*எ.கா.*

*'நல்லை காண் இனி காதல்அம்* ***தோழீஇ' (அகம். 352 : 10)***

*பெண்பாற்புலவர்களது பாடல்களில் அடுக்கி வரும் ஒரே விளிச்சொற்களைப் புறநானூற்றில் 2 இடங்களிலும் குறுந்தொகையில் 1 இடத்திலும், நற்றிணையில் ஒரு இடத்திலும் முறையே ஔவையார் மற்றும் பெருங்கோப்பெண்டும் (புறம்), ஔவையாரும் (குறுந்தொகை) வெள்ளி வீதியாரும் (நற்றிணை) கையாண்டுள்ளனர். அவை அடுக்குத் தொடரிலும் இடம்பெறுபவையாகும்.*

*(எ.கா.)*

***வாயி லோயே! வாயி லோயே! (புறம். 206 : 1)***

***'பல்சான் றீரே ! பல்சான் றீரே !' (புறம். 246 : 1)***

***'அகவன் மகளே ! அகவன் மகளே !' (குறு. 23 : 1)***

***'சிறுவெள்ளாங் குருகே ! சிறுவெள்ளாங் குருகே !'(நற்.70:1)***

*இத்தகைய அடுக்கி வருகின்ற ஒரே விளிச்சொற்களானது பாடலின் முதல் அடியில் இடம்பெற்றுள்ளமை நோக்கத்தக்கது.*

## வினாத்தொடர்

வினா வாக்கியம் என்பது ஒருவரிடம் ஒன்றை வினவுவதாக அமைவதாகும். ‘வினா வாக்கியங்கள் ஒரு செய்தி வாக்கியத்தை விடையாக எதிர்நோக்கி அமைபவை’.

**“எ யா முதலும் ஆஓ ஈற்றும்**
**ஏ இரு வழியும் வினாவாகும்மே” (நன். எழு. 67)**

என நன்னூலிலும்,

**“ஆ ஏ ஓ அம்முன்றும் வினா’ (தொல். எழு. 32)**

**‘யாவென் வினாவும் ஆயியல் திரியாது’ (தொல்.எழு. 175)**

எனத் தொல்காப்பியமும் வினா எழுத்துக்கள் பற்றி விளக்குகிறது. வினா வாக்கியங்கள் கருத்துவகை வாக்கியங்களுள் அமைவதாகும். வினாப் பொருள் தரக்கூடிய இவ்வகைத் தொடர்கள் (Interogative Sentence) சங்க நூல்களில் பல நிலைகளில் இடம்பெற்றுள்ளன. சங்கப் பெண்பாற்புலவர்களது பாடல்களிலும் இத்தகைய வினாத்தொடர்கள் நிரம்பியுள்ள நிலையையும் காண முடிகிறது. புறப்பாடல்களை விடவும் அகப்பாடல்களில் இத்தொடர்கள் மிகுதியாக அமைந்துள்ளன. ஔவையாரது பாடல்களைப் பொறுத்தவரையில் அகப்பாடல்களில் 13 வினாத்தொடர்களும் புறப்பாடல்களில் 17 வினாத்தொடர்களும் காணப்படுகின்றன. பிற பெண்பாற் புலவர்களை விட ஔவையாரே அதிகமான நிலையில் இவ்வினாத் தொடர்களைக் கையாண்டுள்ளார். ஒரே பாடலில் மீண்டும் மீண்டும் ஒரே சொல் கொண்ட வினாத் தொடர்களை ஔவையாரது பாடல்களிலேயே காண முடிகிறது.

“வள்ளினென் அல்லெனோ **யானே?** உள்ளி
நினைந்ததெனன் அல்லெனோ **பெரிதே?** நினைந்து
மருண்டனென் அல்லெனோ உலகத்துப் **பண்பே?” (குறு. 99)**

''முட்டுவேன் **கொல்?** தாக்கு வேன்**கொல்?**
ஓரேன், யானும் ஓர்பெற்றி மேலிட்டு
'ஆ அ ஒல்' எனக் கூவு வேன்**கொல்,'' (குறு. 28)**

''உடைவளை கடுப்ப மலர்ந்த காந்தள்
அடைமல்கு குளவியொடு கமழும் சாரல்
மறப்புலி உடலின் மான்கணம் **உளவோ?**
மருளின் விசும்பின் மாதிரத்து ஈண்டிய
இருளும் உண்டோ, ஞாயிறு **சினவின்?**
அச்சொடு தாக்கிப் பார்உற்று இயங்கிய
பண்டச் சாகாட்டு ஆழ்ச்சி சொல்லிய
வரிமணல் ஞெமர, கல்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையும் **உண்டா?**
எழுமரம் கடுக்கும் தாள்தோய் தடக்கை
வழுஇல் வன்கை, மழவர் பெரும!
இருநிலம் மண்கொண்டு சிலைக்கும்
பொருநரும் **உளரோ?** நீகளம் புகினே'' **(புறம். 90)**

ஒரே பாடலுள் இத்தகைய வினாத் தொடர்களை அமைத்து தமது தனித்த மொழிநடையைப் புலப்படுத்தி நிற்பவர் ஔவையார். பிற பெண்பாற் புலவர்களது பாடல்களில், ஒரே பாடலில் இரண்டிற்கும் மேற்பட்ட வினாத்தொடர்கள் காணப்படவில்லை. கழார்க்கீரன் எயிற்றியார் எனும் பெண்பாற் புலவர் மட்டும் தமது அகநானூற்றுப் பாடல் ஒன்றில் மூன்று வினாத்தொடர்களைக் கையாண்டுள்ளார்.

பெரும்பாலும் சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்களில் இடம்பெற்றுள்ள வினாத் தொடர்கள் 'கொல்' எனும் சொற்களைப் பெற்று அமைந்துள்ளன. 'கொல்' எனும் சொற்களைப் பெற்ற வினாத்தொடர்களாக மொத்தம் *35* வினாத்தொடர்கள் காணப்படுகின்றன. 'கொல்' என்பது அசைச்சொல். அதற்குப்

பொருள் இல்லையாயினும் அ்.்.து தொடருள் வினாப் பொருளைக் குறிப்பதற்கு மட்டுமே கையாளப்படுகின்றது. புறப்பாடல்களில் இத்தகைய ‘கொல்’ எனும் சொல் இடம்பெற்ற வினாத்தொடர்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. அகப்பாடல்களிலேயே இவை அதிகமாக அமைந்துள்ளன. புறப்பாடல்களில் யாங்கு, யாவது, உண்டோ, யார், யாவணதோ, உளரோ, யாண்டு, எவன் போன்ற சொற்களைக் கொண்ட வினாத் தொடர்கள் மிகுந்துள்ளதை அறிய முடிகிறது.

*(எ.கா.)*

‘பொருநரும் **உளரோ?** நும் அகன் தலைநாட்டு என’

***(புறம். 89 : 3)***

‘பொருநரும் **உளரோ?** நீ களம் **புகினே?’** ***(புறம். 90 : 13)***

“எயில்முகப் படுத்தல் **யாவது?** வளையினும்
பிறிதுஆறு சென்மதி, சினம்கெழு குருசில்!” ***(பதி. 53 : 12)***

‘ஆசுஆகு எந்தை **யாண்டு?** உளன் கொல்லோ,’***(புறம். 235: 16)***

**“யாங்ஙனம்?** மொழிகோ யானே ஓங்கிய
வரைஅளந்து அறியாப் பொன்படு நெடுங்கோட்டு”***(புறம்.39:13)***

‘அறான் **எவன்?** பரிகோ, வெள்ளியது நிலையே’ ***(புறம்.383:23)***

அகப்பாடல்களில் வினாத் தொடர்களானது தலைவி தன் தோழியிடத்து, தலைவனைவிட்டு பிரிந்த தனது மன ஆற்றாமையைக் குறித்து புலம்புவதாகவே அமைந்துள்ளன.

*(எ.கா.)*

“உள்ளார் **கொல்லோ?** தோழி உள்ளியும்
வாய்ப்புணர்வு இன்மையில் வாரார் **கொல்லோ?”** ***(குறு.232:1)***

என ஊண்பித்தையும்,

> "யாது செய்வாம் **கொல்** தோழி !
>
> . . . . . . . . . . . . . . . . . . . .
>
> கூதிர் உருவின் கூற்றம்
>
> காதலர்ப் பிரிந்த எற்குறித்து **வருமே?" (குறு. 197, 1-5)**

என கச்சிப்பேட்டு நன்னாகையாரும் தலைவியின் பிரிவு குறித்த தம் மனத்துயரைத் தோழியிடம் விரைவாகத் தொடுத்துப் புலம்புவதாக அமைத்துப் பாடியுள்ளனர். அகப்பாடல்களைப் பொறுத்தமட்டில் இவ்வகைப் புலம்பல்கள் நாட்டுப்புறக் கூறுகளின் தொடர்ச்சியாகக் கருத இடமளிக்கின்றன. புறப்பாடல்களில் அமைந்துள்ள வினாத் தொடர்கள், அரசனது ஒப்பில்லா வீரத்தையும் கொடைத் தன்மையினையும் மற்றும் கையறு நிலைப் பாடல்களில் அரசனில்லாத வெற்றிடத்தை எண்ணிச் சொல்லி அழும் தன்மையினையும் கொண்டு அமைந்துள்ளன. இவ்வமைப்பானது பாடாண், வாகை, பொதுவியல் ஆகிய திணைகளிலேயே மிகுந்து காணப்படுகின்றன.

செய்யுள்களில் இவ்வாறு வினாத்தொடர்கள் இடம்பெறுதல் என்பது ஒருவகை நடையியல் உத்தியாகக் கருதலாம். பாடல் படிப்போரிடையே ஒருவித சிந்தனைத் தூண்டுதலாகவும் இவ்வகை வினாத்தொடர்கள் இயங்குகின்றன. மனதில் எழும் எண்ணவோட்டங்களை எடுத்துரைப்பதற்கு வினாத்தொடர்கள் பெரிதும் துணை செய்பவை. பாடலின் உணர்ச்சி, அழகு மற்றும் கருத்தாழம் போன்றவற்றை இவ்வினாத் தொடர்கள் வெளிப்படுத்துகின்றன.

## ஏவல் தொடர்

ஒரு செயலை மேற்கொள்ளும் பொருட்டு கேட்பவரிடம் ஏவுவதாக அமையும் தொடர்கள் ஏவல் தொடர்கள் எனப்படும். ஒரு செயலைச் செய் அல்லது செய்யாதே என்பதனைச் சுட்டுவதற்கு நேர்மறை, எதிர்மறை ஆகிய இருநிலையில் இத்தொடர்கள் செயலாற்றுபவையாகும். இத்தொடர்களில் வினைச் சொற்களே ஏவல் சொற்களாகவும் அமைந்து காணப்படுகின்றன. பெரும்பாலும் இவை முன்னிலையில்

மட்டுமே செயல்படுகின்றன எனலாம். சங்கப் பெண்பாற்புலவர்களது பாடல்களில் எதிர்மறை ஏவல் தொடர்கள் காணப்படவில்லை. ஒருசில பெண்பாற்புலவர்களே ஏவல் தொடர்களைக் கையாண்டுள்ளனர். ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், நன்னாகையார், கழார்க்கீரன் எயிற்றியார், காக்கைப் பாடினியார் ஆகிய 5 பெண்பாற் புலவர்கள் மட்டுமே இத்தகைய ஏவல் தொடர்களைக் கையாண்டுள்ளனர். சிலவிடங்களில் விளி நிலையிலும், வியங்கோளிலும் இவை இடம்பெற்றுள்ளன.

(எ.கா.)

“அகவன் மகளே ! **பாடுக** பாட்டே
இன்னும் **பாடுக** பாட்டே அவர்
நல்நெடுங் குன்றம் பாடிய பாட்டே” ***(குறு. 23)***

‘**ஆடுக** விறலியர் ! **பாடுக** பரிசிலர்” ***(பதி. 58 : 1)***

ஏவல் வியங்கோளானது வாழ்த்துதல், வைதல், வேண்டுதல், விதித்தல் எனும் நான்கு நிலைகளில் கையாளப்படுவதாகும். ஔவையார் தமது குறுந்தொகைப் பாடலில் வேண்டுதல் நிலையில் இவ்வேவல் தொடரைக் கையாண்டுள்ளார். குறிஞ்சி நிலத் தலைவனது மலைவளத்தைப் பாடும் அகவன் மகளை விளித்துத் தோழியானவள் மீண்டும் அவற்றைப் பாடச் சொல்வதாக இத்தொடர் காட்சிப்படுத்துகிறது.

ஏவல் தொடர்கள் பெரும்பாலும் உரைமதி, உண்மதி, செல்மதி, ஆகுமதி போன்ற சொற்களால் அமைந்துள்ளன.

எ.கா.

“வாழ்வழங் கியற்கை வளியூட் டினையோ
மானுரு வாகநின் மனம்பூட் டினையோ
**உரைமதி** வாழியோ வலவ எனதன்” ***(அகம். 384 : 11)***

“கொடியோர் சென்ற தேஎத்து, மடியாது
இனையை ஆகிச் **செல்மதி**” ***(அகம். 163 : 13)***

"இவற்கு ஈத்து **உண்மதி,** கள்ளே, சினப்போர்
இனக்களிற்று யானை இயல்தேர்க் குரிசில்" ***(புறம். 290 : 1)***

"எயில்முகப் படுத்தல் யாவது? வளையினும்
பிறிதுஆறு **சென்மதி,** சினம்கெழு குருசில்!" ***(பதி. 52 : 14)***

'நல்கினை **ஆகுமதி,** எம் என்று அருளி' ***(பதி. 52 : 3)***

'செல்லாமோதில்' என்ற சொல் கொண்ட ஏவல் தொடரினைக் காக்கைப்பாடினி நச்செள்ளையார் மட்டும் தமது பதிற்றுப்பத்தினுள் இரு இடங்களில் கையாண்டுள்ளார். இவ்வேவல் தொடரும் விளித்துக் கூறுவதாக அமைந்துள்ளது. (செல்லாமோதில் - செல்வோம் வருக)

(எ.கா.)

"மெல்லிய வகுந்தில் சீறடி ஒதுங்கிச்
**செல்லா மோதில்** சில்வளை விறலி!" ***(பதி. 57 : 6)***

**'செல்லாமோதில்**, பாண்மகள் ! காணியர்' ***(பதி. 60 : 3)***

மேலும் சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்களில் வருகம், கேளாய், ஓம்புமின், கேட்டிசின், முடித்தி ஆகிய சொற்களைக் கொண்ட ஏவல் தொடர்கள் காணப்படுகின்றன. அகப்பாடல்களைவிட புறப்பாடல்களிலேயே இவை மிகுந்துள்ளன. ஔவையாரும் காக்கைப்பாடினியாரும் பிற பெண்பாற்புலவர்களைவிட மிகுதியான ஏவல் தொடர்களைக் கையாண்டுள்ளனர்.

## ஏகாரத் தொடர்

சங்கச் செய்யுளில் ஏகாரம் தனிப்பெரும் சிறப்புபெற்று திகழ்பவையாகும். இவ்வேகாரமானது 5 நிலைகளில் இடம்பெறும் என தொல்காப்பியர் விளக்கியுள்ளார்.

**“தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே**

***ஈற்றசை யிவ்வைந் தேகா ரம்மே” (தொல். சொல். 257)***

*சங்க இலக்கியங்களில் தேற்றம் (தெளிவு), வினா, பிரிநிலை, எண், ஈற்றசை என்ற 5 இடங்களில் மட்டுமே ஏகாரச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன. இவ்வேகாரச் சொற்கள் அசைநிலையில் வருவதாயினும் சங்கப் பாடல் தொடர்களுள் தனிச் சிறப்புப் பெற்று திகழ்கின்றன. ஏகாரத் தொடர்கள் சங்கப் பெண்பாற்புலவர்கள் பாடல்களிலும் தனியிடம் பெற்றுள்ளன. பிற பெண்பாற் புலவர்களைவிட வெண்பூதியார், வெள்ளிவீதியார் ஆகியோர் ஏகாரத் தொடர்களை மிகுதியாகக் கையாண்டுள்ளனர்.*

*(எ.கா)*

“**யானே** ஈண்டை **யேனே** என் **நலனே**

ஆனா நோயொடு **கான ல஼.தே**

துறைவன் தம்**ஊ ரானே,**

மறைஅலர் ஆகி **மன்றத் த஼.தே” (குறுந். 97)**

“பொருள்வயிற் பிரிவார் ஆயின்இவ் உலகத்துப்

**பொருளே** மன்ற **பொருளே**

**அருளே** மன்ற ஆடும்**இல் லதுவே” (குறு. 174)**

“பயப்பு மேனி **யதுவே** நயப்புஅவர்

நார்இல் நெஞ்சத்து ஆர்இடை **யதுவே**

செறிவு சேண்இகந் **தன்றே அறிவே**

ஆங்கண் செல்கம் எழுகஎன, **ஈகே**

. . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . .

இடம்மன் தோழி எந்நீரிரோ? **என்னே” (குறு. 219)**

பிற பெண்பாற்புலவர்கள் ஏகாரத் தொடர்களைக் கையாண்டிருப்பினும் வெண்பூதியார் பாடல்களில் இவ்வேகாரத் தொடர்கள் மிகுந்துள்ளதை மேற்சுட்டிய பாடல்களின் மூலம் அறியலாம். தேற்றம், அழுத்தம் ஆகியவற்றிற்காக இத்தகைய ஏகாரங்களைக் கையாளுதல் என்பதும் ஓர் இலக்கிய உத்தியாகும். இப்பெண்பாற் புலவர் ஏகாரத்தை எண்ணல், தேற்றல் ஆகிய இரு நிலைகளில் கையாண்டுள்ளார். குறிப்பாக, இவரது குறுந்தொகை பாடல்கள் மூன்றுமே பிரிவு குறித்த தலைவி கூற்றாகவே அமைந்துள்ளன. ஒரு பாடல் பாலை திணையினையும் (குறு. 174) மற்ற இரண்டும் நெய்தல் திணையினையும் சார்ந்தவை. தலைவி தனது ஆற்றாமையைச் சுருங்கக் கூற இத்தகைய ஏகாரத்தைக் கொண்ட குறுகிய தொடர்களால் உணர்த்தி நிற்கிறாள். பாடலின் அழகுணர்ச்சிக்காகவும், கருத்தாழத்திற்காகவும் இவ்வேகாரத் தொடர்களை பயன்படுத்தியுள்ளார். இவரைப் போன்றே வெள்ளிவீதியாரும் இத்தகைய ஏகாரத் தொடர்களைத் தமது குறுந்தொகைப் பாடல் ஒன்றினுள் மிகுதியாகக் கையாண்டுள்ளார்.

(எ.கா.)

**“காலே பரிதப் பினவே கண்ணே**
நோக்கி நோக்கி **வாள்இழந் தனவே**
அகல்இரு விசும்பின் மீனினும்
**பலரே** மன்றஇவ் வுலகத்துப் **பிறரே” (குறு. 44)**

மேற்சுட்டிய பாடலும் பாலைத் திணையைச் சார்ந்த பிரிவுத்துயரைக் கூறும் தலைவி கூற்றுப் பாடலாக அமைந்துள்ளமை நோக்குதற்குரியது. பெரும்பாலும் இத்தகைய ஏகாரத் தொடர்கள் குறுகிய தொடர்களால் ஆக்கப்பட்டுள்ளன. ஏகாரங்களை அமைத்துப் பாடுவதும் ஓர் இலக்கிய உத்தியாகவே கொள்ளப்படுகிறது. புறப்பாடலைவிடவும் அகப்பாடல்களிலேயே இவை அதிகம் காணப்படுகின்றன. புறப்பாடலை நோக்கும்போது ஔவையார் தமது புறநானூற்றுப் பாடல் (புறம். 235) ஒன்றனுள் அதிகமான ஏகாரத் தொடர்களைக் கையாண்டுள்ளமையைக் காண முடிகிறது. 20 அடி கொண்ட இப்பாடலுள் 11 ஏகாரங்களைக் கையாண்டுள்ளார்.

(எ.கா.)

"சிறியகட் **பெறினே** எமக்கீயு **மன்னே !**
பெரியகட் **பெறினே**
யாம் பாடத்தான் மகிழ்ந்துண்ணும் **மன்னே!**
சிறுசோற் றானும் நனிபல கலந்தன் **மன்னே!**
பெருஞ் சோற்றானு நனிபல கலத்தன் **மன்னே!**
என்பொடு தடிபடு வழியெல்லா எமக்கீயு **மன்னே!**
அம்பொடு வேனுழை வழியெல்லாம் தானிற்கு **மன்னே!**
நரந்த நாறுந் தன்கையாற்
புலவுநாறு மென்றலை தைவரு **மன்னே" (புறம். 235)**

என ஏகாரத் தொடர்கள் தொடர்ந்து வருதலை இங்கு காண முடிகிறது. மன்னே! மன்னே ! என்ற ஏகாரங்கள் கழிவுப் பொருளைத் தாங்கி நின்று பாடல் கருத்திற்கு ஒரு தேற்றத்தினையும் கருத்தாழத்தினையும் தந்து அமைந்துள்ளன. கையறு நிலையில் ஔவை தமது மனவுணர்வினை இவ்வேகாரத் தொடர்கள் மூலம் பதிவு செய்துள்ளார். ஔவையின் பாடல்களில் இவ்வேகாரங்கள் விளிநிலையிலும் ஈற்றசையிலும் கூட மிகுந்து காணப்படுகின்றன. சங்கப் பாடல்கள் அனைத்துமே ஈற்றசையில் ஏகாரங்கள் அமைத்துப் பாடப்பெற்றவை யாயினும் ஔவையின் ஈற்றசை ஏகாரங்கள் தனிச்சிறப்புடையவையாகும்.

எ.கா.

**"அகவன் மகளே ! அகவன் மகளே!" (குறு. 23)**

**'வாயிலோயே ! வாயிலோயே!" (புறம். 206)**

என ஏகார விளியில் ஔவையாரின் கவிதை ஆற்றல் வெளிப்படுகிறது.

"மறந்தோர் மன்ற மறவார் **நாமே" (குறு. 250 : 4)**

'கானமும் இனிய நும்மொடு **வரினே' (குறு. 388 : 7)**

'மருந்து பிறிதின்மையின் இருந்து **வினையிலனே'** **(அகம்.147:14)**

என அகப்பாடல்களில் உள்ள ஏகாரத் தொடர்கள் கருத்தாழமும் பொருள் அழுத்தமும் கொண்டுள்ளன.

''எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய **நிலனே!''** **(புறம். 187 : 3-4)**

'எத்திசைச் செலினும் அத்திசைச் **சோறே'** **(புறம். 206 : 12)**

எனப் புறப்பாடல்களில் உள்ள ஏகாரத் தொடர்கள் வாழ்வியல் உண்மைகளையும் வெளிப்படுத்துகின்ற தொடர்களாக அமைந்துள்ளன. இத்தகைய ஏகாரங்கள் கவன ஈர்ப்புச் சொற்களாக அமைந்து நடையியல் உத்தியாகவும் செயலாற்றுகின்றன.

## உவமைத் தொடர்

புலவர்களின் நடையியல் உத்திகளில் ஆற்றல் மிக்கது உவமையாகும். இதன் சிறப்பை உணர்ந்தே தொல்காப்பியர் 'உவமவியல்' என்ற தனி இயலையே படைத்தளித்தார். ''புலவன் தான் தனித்தன்மையுடன் பெறும் பார்வையினை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள உதவுவது உவமையேயாகும் என முனைவர் பா. வீரப்பன் கூறுவார்.[17] செய்யுளில் உவமைகள் பல நிலைகளில் இடம்பெறுவன. அவற்றுள் குறிப்பாக நிகழ்ச்சியை விளக்கவும், பொருள்நுட்பத்திற்காகவும், அழகியலுக்காகவும் பெரும்பாலும் கையாளப்படுகின்றன. இத்தகைய உவமையானது,

**''வினை பயன் மெய் உரு என்ற நான்கே**
**வகைபெற வந்த உவமத் தோற்றம்''** **(தொல். பொருள். 272)**

என்ற நூற்பாவிற்கிணங்க வினை, பயன், மெய், உரு என்ற நான்கு நிலைகளில் தோன்றும் எனத் தொல்காப்பியம் உவமைக்கு இலக்கணம் வகுத்துள்ளது. மேலும்,

[17] *வீரப்பன், பா., சங்க இலக்கிய நடை, ப.153.*

அவை சிறப்பு, நலன், வலி, காதல் ஆகிய நான்கு பொருள்களைச் சுட்ட வருவதாகவும் தொல்காப்பியம் கூறுகிறது. இதனை,

**"சிறப்பே நலனே காதல் வலியொடு**
**அந்நால் பண்பும் நிலைக்களன் என்ப" (தொல்.பொருள். 275)**

என்ற நூற்பா வழி அறியலாம். சங்கப் பாடல்களில் சற்றேறக் குறைய 90 விழுக்காடு உவமைகளே இடம்பெற்றுள்ளதாக முனைவர் ரா.சீனிவாசன் குறிப்பிடுவார்.[18] தமிழ் இலக்கியங்களில் உவமையே தாயணியாக சிறப்பிடம் பெற்றுள்ளது. சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களிலும் இத்தகைய உவமைகள் கொண்ட பல தொடர்கள் காணப்படுகின்றன. பிற எந்த பெண்பாற் புலவர்களை விடவும் ஔவையாரே உவமைத்தொடர்களை மிகுதியாகக் கையாண்டுள்ளார். தொல்காப்பியர் சுட்டிய வினை, பயன், மெய், உரு ஆகிய நான்கு நிலையிலும் உவமைத் தொடர்களைத் தமது பாடல்களில் ஔவையார் பயன்படுத்தியுள்ளார். ஏறத்தாழ 60 உவம உருபுகளைத் தமது பாடல்களில் கையாண்டுள்ளார். இவரது நற்றிணையில் 3 உவமைத் தொடர்களையும் குறுந்தொகையில் 8 உவமைத் தொடர்களையும் புறநானூற்றில் 41 உவமைத் தொடர்களையும் காண முடிகிறது. ஒரு பாடலில் ஒரே ஒரு உவமைத் தொடரினையும் ஒரு பாடலில் பல உவமைத் தொடர்களையும் உவமைகள் நிரம்பிய பாடலினையும் ஔவையார் அமைத்துள்ளார். அதியமானின் வீரம் பற்றி குறிப்பிட புறநானூற்றுப் பாடல்களில் பல வினை உவமைகள் ஆளப்பட்டுள்ளன.

(எ.கா.)

**"களம்புகல் ஓம்புமின் தெவ்வீர் போர்புரிந்து**
**எம்முளும் உளன்ஒரு பொருநன் வைகல்**
**எண்தேர் செய்யும் தச்சன்**
**திங்கள் வலித்த கால் அன்னோனே" (புறம். 87 : 4)**

---

[18] *சீனிவாசன், ரா., சங்க இலக்கியத்தில் உவமைகள், ப.128.*

**"நீயே ஐயவி புகைப்பவுந் தாங்காது ஒய்யென**
**உறுமுறை மரபிற் புறநின்று உய்க்கும்**
**கூற்றத் தனையை" (புறம். *98 : 17*)**

**"மறப்புகழ் நிறைந்த மைந்தினன் இவனும்**
**உறைப்புழி ஓலை போல**
**மறைக்குவன் பெரும நீர்குறித்து வருவேலே" (புறம். *290 : 7*)**

*ஒருநாளில் எட்டு தேரினைச் செய்யும் தச்சன் ஒரு மாதமாக இருந்து செய்த தேர் போல வலிமையைப் பெற்றவன் அஞ்சி எனவும் உயிர் பறிக்கும் எமன் போன்ற ஆற்றல் வாய்ந்தவன் அதியன் எனவும் மழையில் நனையாது காக்கும் பனை ஓலை போல பகைவரின் அம்பு மழை தாக்காதவாறு தடுப்பவன் அதியமான் எனவும் உவமைகள் மூலம் ஔவை விளக்குகிறார். இதே போன்று அதியமான் மூலம் பயன் அடைந்த நிலையை பயன் உவமைகள் மூலமும் ஔவை விளக்குகிறார்.*

*(எ.கா.)*

**"நீர்த்துறை படியும் பெருங்களிறு போல**
**இனியை பெரும! எமக்கே மற்றதன்**
**துன்னருங் கடாஅம் போல**
**இன்னாய் பெருமநின் ஒன்னா தோர்க்கே" (புறம். *94*)**

**"கோட்டிடை வைத்த கவளம் போல" (புறம். *101*)**

**'அமிழ்தனை மரபின் ஊன்துவை அடிசில்' (புறம். *390*)**

**'அமிழ்தம் அன்ன கரும்பு' (புறம். *392*)**

*எனவும்,*

**'உடைவளை கடுப்ப மலர்ந்த காந்தள்' (புறம். *90*)**

**'குயில்வாய் அன்ன கூர்முகை அதிரல்' (புறம். 269)**

என்ற பாடலடிகள் மூலம், ஒன்றன் தோற்றத்தைப் பிரிதொன்றின் மூலம் ஒப்புமைப்படுத்திக் கூறும் மெய் உவமைத் தொடர்களையும் ஔவை பயன்படுத்தியுள்ளார். மேலும், அரசன் அல்லது இயற்கையின் மீது ஏற்றிக் கூறும் உரு உவமையினையும் இவர் எடுத்தாண்டுள்ளார்.

(எ.கா.)

**'பால் புரை பிறைநுதல்' (புறம். 91)**

**"வரிவயம் பொருத வயகளிறு போல**
**இன்னும் மாறாது சினனே" (புறம். 100)**

**'புத்தகல் கொண்ட புலிக்கண் வெப்பர்' (புறம். 269)**

என்ற பாடலடிகளில் நெற்றி (நுதல்), கண்கள் ஆகியவற்றிற்கு முறையே பிறைநிலவும், யானையின் கண்களும், உரு உவமையாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன. ஔவையாரைப் போன்றே நன்னாகையாரும், கழார்க்கீரன் எயிற்றியார், காக்கைப்பாடினியார், நக்கண்ணையார், மாறோகத்து நப்பசலையார், வெள்ளிவீதியார், வெறிபாடிய காமக்கண்ணியார் போன்றோர் சில உவமைகளைக் கையாண்டுள்ளனர். அகப்பாடல்களைவிடவும், புறப்பாடல்களிலேயே உவமைத்தொடர்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. வாகை, பாடாண் போன்ற திணைகளிலேயே இவை அதிகமாக இடம்பெற்றுள்ளன. அகப்பாடல்களான அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை போன்றவற்றுள் குறுந்தொகையிலேயே உவமைத் தொடர்கள் மிகுந்துள்ளன. நன்னாகையார் குறுந்தொகையுள் 180-வது பாடலில் இரு உவமைத் தொடர்களைக் கையாண்டுள்ளார்.

(எ.கா.)

**"பழூஉப்பல் அன்ன பருஉகிர்ப் பாவடி**
**இருங்களிற்று இனநிலை ஏந்தல்வரின் மாய்ந்து**

**அறைமடி கரும்பின் கண்இடை அன்ன**

**பைதல்ஒரு கழைநீ டியசுரன். . . .” குறு. 180)**

பதிற்றுப்பத்துள் காக்கைப்பாடினியார் ஒரே பாடலில் *5* உவமைத் தொடர்களை அமைத்துப் பாடியுள்ளார்.

*(எ.கா.)*

**வெறிஉறு நுடக்கம் போலத் தோன்றி’ (பதி. 51 : 11)**

**‘வண்பிணி அவிழ்ந்த கண்போல் நெய்தல்’ (பதி. 51 : 17)**

**‘வெள்வேல் அண்ணல் மெல்லியன் போன்ம்! என’ (பதி.51:23)**

**‘பெருஞ் சினப்புயல் ஏறு அனையை’ (பதி. 51 : 28)**

**“வலைவிரித் தன்ன நோக்கலை**

**கடியையால், நெடுங்தகை செருவித் தானே” (பதி. 51 : 36)**

நக்கண்ணையாரும் ஔவையாரும் ஒரே பாடலுள் பல உவமைத் தொடர்களை மிகுதியாகக் கையாண்டுள்ளனர். உவமைத் தொடர்களை மிகுதியாகக் கையாள்வதும் புலவரின் தனித்த மொழிநடைப் பண்பாகவே கருதப்படுகிறது.

*(எ.கா.)*

**“இறவுப்புறத்து அன்ன பிணர்படு தடவுமுதல்**
**சுறவுக் கோட்டன்ன முள்இலைத் தாழை**
**பெருங்களிற்று மருப்பின் அன்ன அரும்புமுதிர்பு” (நற். 19)**

**“என்னை, புற்கைஉண்டும் பெருந்தோ ளன்னே**
**யாமே, புறஞ்சிறை இருந்தும் பொன் அன்னமே**
**போர் எதிர்ந்து என்னை போர்க்களம் புகினே,**
**ஏமுற்றுக் கழிந்த மன்னர்க்கு**

**உமணர் வெரூஉம் துறையன் னன்னே" (புறம். 84)**

மேற்கண்ட உவமைத் தொடர்கள் பெரும்பாலும் வலிமைக்கும் வடிவத்திற்குமே ஒப்புமைகளாகக் கொண்டு இயற்றப்பெற்றுள்ளன. உவமைத் தொடர்களை அடுக்கிப் பயன்படுத்துதலும் நடையியலில் சிறப்பிடத்தைப் பெறுவதாகும். அவ்வகையில் ஔவையாரே இச்சிறப்பினைப் பெற்றுத் திகழ்கிறார் எனலாம். கவிதைக் கட்டமைப்பில் உவமைத் தொடர்கள் பெரும் பங்காற்றுகின்றன. உவமைகள் மூலம் புலவர்கள் தாம் எண்ணியதைத் துல்லியமாக விளக்கவும் காட்சிப்படுத்தவும் ஓர் உத்தியாகவே இவற்றைக் கையாளுகின்றனர். பொருளின் சிறப்பை உணர்த்தவும் உணர்வுமிக்க பாடல்களுக்கு உவமைகள் மேலும் அழகுணர்வு செய்யவும் புலவர்கள் இவற்றைத் தெரிவு செய்தே கட்டமைக்கின்றனர்.

## முரண் தொடர்

செய்யுளில், சொல் அல்லது பொருள் முரண்பட்டு அமைந்து வருதல் முரணாகும். இதனை,

**"சொல்லினும் பொருளினும் முரணுதல் முரணே" (தொல்.)**

எனத் தொல்காப்பியம் சுட்டும். செய்யுளில் இ்ஃது ஓசையினிமைக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. சங்க இலக்கியங்களில் இத்தகைய முரண்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. முரண்சொற்கள் செய்யுளடிகளில் இடம்பெற்று அமைவதே முரண் தொடர் ஆகும். கூறும் கருத்துகள் மனதில் பதியவும் கவிதை நயத்திற்காகவும் புலவர்கள் முரண்களைக் கையாளுகின்றனர். தொடை வகைகளுள் முரண் சிறப்பிடத்தைப் பெறுவதாகும். சங்கப் பெண்பாற் புலவர்களது பாடல்களிலும் இத்தகைய முரண்கள் இடம்பெற்ற தொடர்களைக் காணமுடிகிறது. சங்கத் தொடர்களில் முரண் சொற்கள் ஒரே அடியிலும் அல்லது அடுத்தடுத்த அடிகளிலும் அல்லது பொருள் நிலையில் இரு தொடர்புள்ள நிலைகளிலும் இடம்பெற்றுள்ளன. 30 சங்கப் பெண்பாற் புலவர்களுள் 14 புலவர்கள் பாடல்களில் மட்டுமே முரண் தொடர்கள் மிகுந்துள்ளன. இவரது பால்களில் அகப்பாடல்களைப் பொறுத்தவரையில்

ஒரே அடியில் அமைந்த முரண் சொற்கள் கொண்ட தொடர்களும் புறப்பாடல்களில் அடுத்தடுத்த அடிகளில் அமைந்த முரண் சொற்கள் கொண்ட தொடர்களையும் காண முடிகிறது.

(எ.கா.)

‘**நல்உரை** இகந்து **பல்உரைத்** தாஅய்’ ***(குறு. 29 : 1)***

‘**உள்ளின்** உள்ளம் வேமே **உள்ளாது**’ ***(குறு. 102 : 1)***

“**பெருமலை** விடரகத்து அருமிசைக் கொண்ட
**சிறியிலை** நெல்லித் தீங்கனி குறியாது” ***(புறம். 91 : 8 – 9)***

“**உண்டாயின்** பதம் கொடுத்து
**இல்லாயின்** உடன் உண்ணும்” ***(புறம். 95 : 6 – 7)***

“**சிறியகட்** பெரினே எமக்கீயும் மன்னே !
**பெரியகட்** பெறினே. . . . .” ***(புறம். 235 : 1 - 2)***

“**அறவை** நெஞ்சத்து ஆயர், வளரும்
**மறவை** நெஞ்சத்து ஆயி வாளர்” ***(புறம். 390 : 1 - 2)***

ஔவையாரது நற்றிணை மற்றும் அகநானூற்றுப் பாடல்களில் ஒரு முரண்கூட இடம்பெறாமை இங்கு நோக்கத்தக்கது. ஔவையாருக்கு அடுத்த நிலையில் கழாஅர்க்கீரன் எயிற்றியார் அதிக அளவில் முரண் தொடர்களைப் பயன்படுத்தியுள்ளார்.

“**கோடைத்** திங்களும் பனிப்போள்
**வாடைப்** பெரும்பனிக்கு என்னன்கொல்? எனவே”***(நற்.312:8–9)***

‘**கோடைப்** பூளையின் **வாடை**யொடு துயல்வர” ***(அகம்.217 : 5)***

கழாஅர்க்கீரன் எயிற்றியார் பாலைத் திணைப்பாடல்களை மிகுதியாகப் பாடியுள்ளமையால் கோடை, வாடை, போன்ற சொற்கள் அவரது தொடராக்கத்தில் இயல்பாகவே அமைந்துள்ளன. மேலும்,

**‘கரிமுகழ்** முசுண்டைப் **பொதிஅவிழ்** வான்பூ’ ***(அகம். 235 : 9)***

போன்ற பிற முரண் தொடர்களும் இவரது பாடல்களுள் இடம்பெற்றுள்ளன. ஔவையாருக்கு அடுத்த நிலையில் மாறோகத்து நப்பசலையார் முரண் தொடர்களைத் தமது கவிதையாக்கத்தில் இடம்பெறச் செய்துள்ளார்.

(எ.கா)

**‘புணரின்** புணருமார் எழிலே ; **பிரியின்’** ***(நற். 304 : 5)***

**‘இன்பமுந் துன்பமும்** உடைத்தே’ ***(நற். 304 : 9)***

**‘சிறுமென்** சாயல் **பெருநலம்** உள்ளி’ ***(அகம். 377 : 2)***

**“மறம்**கெழு சோழர் உறந்தை அவையத்து

**அறம்** நின்று நிலையிற்று ஆகலின், அதனால்” ***(புறம். 39:8–9)***

புறப்பாடல்களை அதிக அளவில் பாடியிருப்பினும் இவரது அகப்பாடல்களிலேயே முரண் தொடர்கள் அதிகம் கட்டமைக்கப்பட்டுள்ளன. பதிற்றுப்பத்தினைப் பாடிய காக்கைப்பாடினியாரும் தமது கவிதைகளில் முரண்களைக் கையாண்டுள்ளார்.

(எ.கா.)

**“மறாஅ** விளையுள் **அறாஅ** யாணர்’ ***(பதி. 60 : 8)***

**‘முன்னும் பின்னும்**நின் முன்னோர் ஓம்பிய’ ***(பதி. 53 : 12)***

**‘ஆடுக,** விறலியர் ! **பாடுக** பரிசிலர்!’ ***(பதி. 58 : 14)***

‘இரவல் மாக்கள் **சிறுகுடி பெருக’** ***(பதி. 59 : 7)***

‘**பகல்**நீடு ஆகாது **இரவுப்**பொழுது பெருகி’ ***(பதி. 59 : 1)***

காக்கைப்பாடினியார் கையாண்ட முரண்கள் யாவும் பெரும்பாலும் ஒரே அடியுள் இடம்பெறுகின்ற தொடர்களாகவே காணப்படுகின்றன. ஒரு பாடலுள் மட்டும் முரண் சொற்கள் வெவ்வேறு இடங்களில் அமைந்து நின்று தொடராக்கம் பெற்றுள்ளன.

(எ.கா.)

“மாசி நின்ற மாகூர் **திங்கள்**

. . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . .

பாய் இருள் நீங்க, பல்கதிர் பரப்பி

**ஞாயிறு** இனமுதல் தோன்றி யாஅங்கு” ***(பதி. 58)***

மேலும் பல பெண்புலவர்கள் இத்தகைய முரண் தொடர்களைக் கையாண்டுள்ளனர். இருப்பினும் ஔவையார், கழாஅர்க்கீரன் எயிற்றியார், காக்கைப்பாடினி போன்றோரே அதிக அளவில் முரண் தொடர்களைக் கையாண்டுள்ளனர். செய்யுளில் இத்தகைய முரண்கள் கருத்தாழத்திற்காகவும், கவன ஈர்ப்பிற்காகவுமே பயன்படுத்தப்படுகின்றன. கவிதைக் கட்டமைப்பில், இவை குறிப்பிட்ட வகையில் செயலாற்றுகின்றன. அகப்பாடல்களைப் பொறுத்தவரையில் தலைவி கூற்றிலும் புறப்பாடல்களில் பாடாண் திணை மற்றும் வாகைத் திணைகளிலும் இவை மிகுந்துள்ளன.

## எதிர்மறைத் தொடர்

மொழியில் இருவகைத் தொடர்கள் காணப்படுகின்றன. அவை உடன்பாடு – எதிர்மறை ஆகிய தொடர்களாகும். ஒரு நிகழ்வு நடைபெறுதல் உடன்பாடு என்றும் நிகழ்வு நடைபெறாமை எதிர்மறை என்றும் கருதப்படும் இதனை,

> **“தமிழில் எதிர்மறை என்பது ஒரு தனி வகையன்று. எல்லா வினைகளுமே உடன்பாடு, எதிர்மறை என அமையலாம். அதனால் எதிர்மறை என்பது வினையின் ஒரு பிரிவு என்று கொள்வதை விட,**

> **அது வினையின் ஒருவகை அமைப்பு என்று கொள்ளலாம். உடன்பாட்டு வினைகளுக்கு ஏவல், வியங்கோள், நிபந்தனை முதலிய வடிவங்கள் இருப்பது போலவே எதிர்மறைக்கும் உண்டு. உடன்பாட்டு வினையோடு எதிர்மறையுணர்த்தும் இடைச்சொல் சேர எதிர்மறை வினை உண்டாகிறது"**

என ஆ. வேலுப்பிள்ளை எதிர்மறை வினைகள் குறித்து கூறுவார்.[19] தொடருள் இடம்பெறும் வினை சொற்கள் எதிர்மறை உருபுகளைக் கொண்டு அமைவனவாகும். இவை எச்சம், முற்று ஆகிய சொல் வகைகளிலும் இடம்பெறுவன.

சங்க இலக்கியங்களில் இத்தகைய எதிர்மறைத் தொடர்கள் மிகுந்து காணப்படுகின்றன. சங்க இலக்கியத் தொடரமைப்புகளில் பெரும்பாலும் அல், இல், ஆ, ஆர் ஆகிய எதிர்மறை விகுதிகளே இடம்பெற்றுள்ளன. சங்கப் பெண்பாற் புலவர்களது படைப்புகளிலும் பல எதிர்மறைத் தொடர்களைக் காண முடிகிறது. அவை பெரும்பாலும் எதிர்மறைப் பெயரெச்சங்களாகவும் எதிர்மறை வினைமுற்றுகளாகவும் அமைந்துள்ளன. பெண்பாற்புலவர்களின் அகப்பாடல்களைவிட புறப்பாடல்களில் எதிர்மறைத் தொடர்கள் மிகுந்துள்ளன. ஔவையார், மாறோகத்து நப்பசலையார், காக்கைப்பாடினியார் ஆகியோர் அதிக அளவில் எதிர்மறைத் தொடர்களைக் கையாண்டுள்ளனர். அகப்பாடல்களைப் பொறுத்தவரையில் வெள்ளிவீதியார் எதிர்மறை வினைமுற்றுகளை தமது தொடராக்கத்தில் அதிகமாக அமைத்துள்ளார்.

(எ.கா.)

'முழவுத்தோள் என்னையைக் **காணா ஊங்கே' (புறம். 88 : 6)**

'உய்ந்தனர் **அல்லர்,** இவன் உடற்றியோரே' **(புறம். 100 : 9)**

'இரவலர்க்கு அருங்கலம் **அருகாது** வீசி' **(புறம். 367 : 9)**

''வான்**அறியல** என் பாடுபசி போக்கல்

---

[19] வேலுப்பிள்ளை, ஆ., தமிழ் வரலாற்றிலக்கணம், ப.14.

அண்ணல் யானை வேந்தர்

உண்மையோ, **அறியல்?** காண்பு **அறியலரே" (புறம். 390:27–28)**

மேற்குறிப்பிட்ட ஔவையாரது புறப்பாடல் தொடர்களில் ஆ, அர், அல், ஆது போன்ற எதிர்மறை விகுதிகள் இடம்பெற்றுள்ளதைக் காணலாம்.

'இனிப் பாடுநரும் **இல்லை** பாடுநர்க்கு ஒன்று ஈகுநரும் **இல்லை'**

**(புறம். 235 : 17)**

'செல்வை ஆயின், சேணோன் **அல்லன்' (புறம். 103 : 5)**

'ஒல்வான் **அல்லன்** வெல்போரான் எனச்' **(புறம். 97 : 21)**

மேலும் இல்லை, அல்லன் போன்ற எதிர்மறை குறிப்பு வினைமுற்றுகளும் ஔவையாரது பாடல் தொடர்களில் இடம்பெற்றுள்ளன.

**"வாடாத் தாமரை** ஆட்டிய விழுச்சீர்

**ஓடாப் பூட்கை** உரவோன் மருக" **(புறம். 126 : 2 – 3)**

"பொலம் தருநாவாய் ஓட்டிய அவ்வழி

பிறர்கலம் **செல்கலாது** அனையே அத்தை" **(புறம். 126 : 16)**

'சேண்விளங்கு சிறப்பின் ஞாயிறு **காணாது' (புறம். 174 : 2)**

'நெடுநகர் வரைப்பின் விளக்கு **நில்லா' (புறம். 280 : 3)**

'செம்முது பெண்டின் சொல்லு **நிரம்பா' (புறம். 280 : 7)**

'கழைபடு சொலியன் இழையணி **வாரா' (புறம். 383 : 10)**

மேற்குறிப்பிட்ட எதிர்மறைத் தொடர்களானது மாறோகத்து நப்பசலையார் பாடிய புறநானூற்றுப் பாடல்களில் அமைந்துள்ளவையாகும். இவரது பாடல்களில் எதிர்மறைச் சொற்களானது எச்சங்களாகவும் முற்றுகளாகவும் இடம்பெற்றுள்ளன.

பெரும்பாலும் இவரது பாடல்களில் பாடாண் திணையிலேயே இவ்வகை எதிர்மறைத் தொடர்கள் அதிகமாகப் பயின்று வந்துள்ளன.

காக்கைப் பாடினியாரது பதிற்றுப்பத்துப் பாடல்களில் அமைந்துள்ள எதிர்மறைத் தொடர்கள் பெரும்பாலும் ஈறுகெட்ட எதிர்மறைச் சொற்களைக் கொண்டவையாக அமைந்துள்ளன.

(எ.கா.)

**'தொலையாத் தும்பை** தெவ்வழி விளங்க' ***(பதி. 52 : 8)***

**'வாடா யாணர்** நாடு திறை கொடுப்ப' ***(பதி. 53 : 2)***

**'நில்லாத் தானை** இறைகிழ வோயே' ***(பதி. 54 : 17)***

'செவ்ஊன் **தோன்றா வெண்துவை** முதிரை' ***(பதி. 55 : 7)***

**'ஓடாப் பூட்கை** மறவர் மிடல்தப' ***(பதி. 57 : 1)***

'பொய்படுபு **அறியா வயங்கு**செந் நாவின்' ***(பதி. 58 : 9)***

'அரம்போழ் **கல்லா மரம்படு** தீம்கனி' ***(பதி. 60 : 5)***

**'துவ்வா நறவின்** சாய்இனத் தானே' ***(பதி. 60 : 12)***

ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்களைக் கொண்ட தொடர்களைத் தொடர்ச்சியாகத் தம் பாடல்களுள் கையாண்டிருப்பது, காக்கைப்பாடினியாரின் தனிப்பட்ட நடையியல் தன்மையைக் காட்டுவதாகும். மேலும் இவரது பாடல்களில் 'செய்யாது' எனும் வினையெச்ச வாய்பாடு கொண்ட சொற்களைக் கொண்டும் எதிர்மறைத் தொடர்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

(எ.கா.)

'மெய்புகை அரணம் **எண்ணாது** எஃது சுமந்து' ***(பதி. 52 : 6)***

'உயர்நிலை உலகத்துச் **செல்லாது,** இவண் நின்று' ***(பதி.54:10)***

'பகல்நீடு **ஆகாது,** இரவுப்பொழுது பெருகி' ***(பதி. 59 : 1)***

'இகல்வினை மேவலன் **தண்டாது** வீசும்' ***(பதி. 60 : 2)***

'மிஞிறுபுறம் மூசவும் தீம்அவை **திரியாது'** ***(பதி. 60 : 4)***

சங்கப் பெண்பாற் புலவர்களது அகப்பாடல்களிலேயே வெள்ளி வீதியார் பாடிய குறுந்தொகையுள் ஏராளமான எதிர்மறைத் தொடர்களைக் காணமுடிகிறது. சிறு சிறு தொடராக்கத்தில் எதிர்மறை வினைமுற்றுகளே அதிகம் அமைந்துள்ளன. குறிப்பாகப் பாலைத் திணைப் பாடல்களில் தலைவி மற்றும் தோழி கூற்றுகளிலேயே இத்தகைய எதிர்மறைத் தொடர்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன. பிரிவுத் துயரையே இவை மிகுத்துக் காட்சிப்படுத்தியுள்ளன.

(எ.கா.)

"கன்றும் **உண்ணாது** கலத்தினும் **படாது**
நல்ஆன் தீம்பால் நிலத்துஉக் காஅங்கு
எனக்கும் **ஆகாது,** என்னைக்கும் **உதவாது**" ***(குறு. 27)***

'நிலம் தொட்டுப் **புகாஅர்** வானம் **ஏறார்**
விலங்குஇரு முந்நீர் காலின் **செல்லார்"** ***(குறு. 130)***

"தாங்கும் அளவைத் தாங்கி
காமம் நெரிதரக் **கைந் நில்லாதே"** ***(குறு. 149)***

"நிலம் பரந்தன்ன புன்கணொடு
புலம்புடைத்து ஆகுதல் **அறியேன் யானே"** ***(குறு. 386)***

வெள்ளிவீதியாரின் பாடல்கள் அகநானூறு மற்றும் நற்றிணையிலும் இடம்பெற்றுள்ளன. அவற்றிலும் சில எதிர்மறைத் தொடர்கள் காணப்படினும் குறுந்தொகையிலேயே இவை மிகுதியாகக் காணப்படுகிறது. தனது உள்ளத்துணர்வை

இத்தகைய எதிர்மறைத் தொடர்களின் மூலம் வெளிப்படுத்துதல் இவரது நடையியல் உத்தியாகக் கருதத்தக்கது.

## முடிவுரை

சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் அமைந்துள்ள சில குறிப்பிட்ட தொடரமைப்புகள் இவ்வியலில் விரிவாக எடுத்துரைக்கப்பெற்றுள்ளன. சங்கப் பெண்பாற் புலவர்களின் தொடரியல் பயன்பாடுகள் திணை, துறை, கூற்று, நூல் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன. இப்பெண்பாற் புலவர்களது கவிதைக் கட்டமைப்பு உத்திகளில் தொடர்கள் செயலாற்றும் பான்மையினை இவ்வியலானது ஆராய்ந்தளித்துள்ளது. அடுக்குத் தொடர், எச்சத் தொடர், பெயரடைத் தொடர், ஏகாரத் தொடர், உவமைத் தொடர், முரண் தொடர், எதிர்மறைத் தொடர் ஆகிய தொடர்கள் சங்கப் பெண்பாற் புலவர்கள் கையாண்ட விதத்தை இவ்வியலில் அறியலாம்.

# துணைநூற்பட்டியல்


**முதன்மை ஆதாரங்கள்**

**எட்டுத்தொகை நூல்கள்** (மர்ரே பதிப்பு) — நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், *சென்னை-600 098, (1981) இரண்.பதி.*

**துணைமை ஆதாரங்கள்**

அகத்தியலிங்கம் ச., — **சங்க தமிழ் I, II, III, IV, V**
அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்
*அண்ணாமலை நகர்-608002, (1983,84,86)*

…………………, — **மொழியியல் - சொல்லியல் - பெயரியல் - *1***
அனைத்திந்தியத் தமிழ்மொழியியற் கழகம்,
*அண்ணாமலை நகர் - 608-002, (1979)*

…………………, — **மொழியியல் - சொல்லியல் - வினையியல்-2**
அனைத்திந்தியத் தமிழ்மொழியியற் கழகம்,
*அண்ணாமலை நகர் - 608-002, (1982)*

…………………, — **தமிழ்மொழி அமைப்பியல்**
மெய்யப்பன் பதிப்பகம்,
*சிதம்பரம், (2011)*

அரங்கராசன் மருதூர் ச., — **யாப்பறிந்து பாப்புனைய**
ஐந்திணைப் பதிப்பகம்,
*சென்னை, (2005)*

அம்மன்கிளி முருகதாஸ் — **சங்கக் கவிதையாக்கம் மரபும் மாற்றமும்**
குமரன் புத்தக இல்லம்,
*சென்னை. (2006)*

ஆதித்தன் — **இலக்கணக் கொள்கை**
சங்குமுத்து வெளியீடு,
*மதுரை, (1999)*

இராமமூர்த்தி எல்., **தமிழ் இலக்கியங்கள் கட்டவிழ்ப்பும் கட்டமைப்பும்,** காவ்யா வெளியீடு, சென்னை-24, *(2005)*

இலட்சுமி ஜே.ஆர்., **வரலாற்றில் ஔவை** மதன்மோனிகா பதிப்பகம், சென்னை, *(2011)*

எழிலரசி பாலசுப்பிரமணியன், **சங்க இலக்கியச் சிந்தனைகள்** காவ்யா வெளியீடு, சென்னை-24, *(2014)*

காமாட்சி, அ., கல்பனா, செ., **ஐங்குறுநூறு உருபனியற் பகுப்பாய்வு** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-600 098, *(2016)*

சஞ்சீவி ந., **செவ்விலக்கியக் கருவூலம் சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்** தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை, *(2008)*

…………………, **செவ்வியல் இலக்கிய அடை: வகை தொகைக் களஞ்சியம் - I** காவ்யா வெளியீடு, சென்னை-600024, *(2016)*

சண்முகம் செ.வை., **மொழி ஆய்வு** மெய்யப்பன் பதிப்பகம் சிதம்பரம் - 608 001, *(2005)*

…………………, **கவிதைக் கட்டமைப்பு** மெய்யப்பன் பதிப்பகம் சிதம்பரம் - 608 001, *(2003)*

…………………, **இலக்கண ஆய்வு** மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 1, *(2004)*

…………………, **இலக்கண உருவாக்கம்**
மெய்யப்பன் பதிப்பகம்,
சிதம்பரம் - *1,(1994)*

…………………, **யாப்பும் நோக்கும்**
**தொல்காப்பியரின் இலக்கியக் கோட்பாடுகள்**
மெய்யப்பன் பதிப்பகம்,
சிதம்பரம் - *1,(1994)*

சதீஷ் அ., **தமிழ் யாப்பு மரபுகள்**
**புறநானூற்றில் யாப்பியல்**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
சென்னை, *(2014)*

சாமிநாதையர் உ.வே., **நல்லுரைக் கோவை (2ம் பாகம்)**
கபீர் பிரிண்டிங் ஒர்க்ஸ்
சென்னை. *(1954)*

………………….., **சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்**
ஆனந்தா அச்சுக்கூடம்
சென்னை. *(1929)*

சீனிச்சாமி துரை., **திணைக் கோட்பாடு**
நியு செஞ்சுரி புக் ஹவுஸ்,
சென்னை, *(2016)*

சுசீலா மு., **பழந் தமிழ்த் தொடரியல்**
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்-*613005*, *(2003)*

…………………..., **பழந்தமிழில் பதிலிடு பெயர்கள்**
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்-*613005*, *(2007)*

சுந்தரமூர்த்தி இ., **பாரதி நடையியல்**
ஐந்திணைப் பதிப்பகம்,
சென்னை, *(1985)*

………………….., **திருக்குறள் நடையியல்**
ஐந்திணைப் பதிப்பகம்,
சென்னை, *(1987)*

………………….., **நடையியல் சிந்தனைகள்**
நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
சென்னை-600098, *(1994)*

சுப்பு ரெட்டியார் ந., **கவிதையனுபவம்**
கழக வெளியீடு,
சென்னை, *(1961).*

தமிழண்ணல், **சங்க மரபு**
சிந்தாமணி பதிப்பகம், சென்னை *(2009)*

தமிழரசி இரா., **சங்க இலக்கிய உத்திகள்**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை, *(1981)*

தாயம்மாள் அறவாணன் **மகடூஉ முன்னிலை பெண் புலவர் களஞ்சியம்**
தமிழ்க்கோட்டம்,
சென்னை-600029, *(2011)*

நடராஜன் தி.சு., **தமிழ் அழகியல் மரபும் கோட்பாடும்**
நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
சென்னை-600098, *(2016)*

நடனசபாபதி சு., **தொல்காப்பியம் சங்கத் தமிழ் ஒரு புதிய பார்வை**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம், *(2006)*

நீதிவாணன் ஜெ., **நடையியல்**
மணிவாசகர் பதிப்பகம்,
சிதம்பரம், *(1983).*

நு.்.மான் எம்.ஏ., **மொழியும் இலக்கியமும்,**
காலச்சுவடு பதிப்பகம்.
சென்னை, *(2006)*

பட்டாபிராமன் துரை., **இலக்கண ஆய்வடங்கல்**
**(பொருள்-யாப்பு-அணி)தொகுதி-2**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம், *(1999).*

பொற்கோ, **இலக்கணக் கலைக் களஞ்சியம்**
பூம்பொழில் வெளியீடு,
சென்னை *20*, *(1985)*

…………………, **புதிய நோக்கில் தமிழ் யாப்பு**
புலமை வெளியீடு,
சென்னை, *(1995)*

மாணிக்கம் வ.சு.ப., **தமிழ்க் காதல்**
பாரி நிலையம்,
சென்னை, *(1975)*

முத்துராஜன் ஆர்., **செவ்விலக்கிய கவிதை மரபும்**
**ஆய்வு நோக்கும்,**
காவ்யா வெளியீடு,
சென்னை-*24*, *(2014)*


ரேணுகா தேவி வீ., **சங்கப் பெண்பாற்புலவர்களின் மொழிநடை**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை, *(2012)*

| | |
|---|---|
| வள்ளி நாயகி, | **தமிழ் வளர்த்த மகளிர்**<br>இலக்குமி நிலையம், சென்னை, *(1990)* |
| விஜயகாந்த் க.,<br>செந்தில்குமார் ம.,<br>தீபலட்சுமி த.,<br>(தொகுப்பு நூல்) | **இலக்கண நோக்கில்**<br>**செவ்வியல் இலக்கியங்கள்,**<br>புலம் வெளியீடு,<br>சென்னை, *(2010)* |
| வீரப்பன் பா., | **சங்க இலக்கிய நடை,**<br>பூவழகி பதிப்பகம்,<br>சென்னை - *600 014*, *(1989)* |
| வேல்மயில் த., | **இலக்கணத் தேடல்கள்,**<br>காவ்யா வெளியீடு,<br>சென்னை-*600 024*, *(2009)* |
| வேலுப்பிள்ளை ஆ., | **தமிழ் வரலாற்றிலக்கணம்**<br>குமரன் புத்தக இல்லம்,<br>சென்னை – *2002.* |
| ஜீன் லாறன்ஸ் செ.,<br>(பதி.ஆ) | **தொல்காப்பிய இலக்கண மொழியியல்**<br>**கோட்பாடுகள்,**<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>சென்னை-*600113.* *(2001)* |
| ஜெயா வ., | **சங்கப் பெண்பாற்புலவர்களின்**<br>**மொழியும் கருத்தும்**<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>சென்னை, *(2003).* |
| ஜோதிராணி க.அ., | **சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள்,**<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>சென்னை, *(2011)* |

## பின்னிணைப்பு – I


இயல் இரண்டில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இலக்கணக் கூறுகள் அட்டவணைகளாகத் தரப்பட்டுள்ளன. அவற்றிற்கான நிகழ்வெண்ணிக்கை வரைபடங்களாக மாற்றப்பட்டு விளக்கப்பட்டுள்ளன.

### அகப்பாடல்கள் – மோனை





படம் – 1

### புறப்பாடல்கள் – மோனை





படம் – 2

## அகப்பாடல்கள் – எதுகை





படம் – 3

## புறப்பாடல்கள் – எதுகை





படம் – 4

## அகப்பாடல்கள் – இயைபு




படம் – 5

## புறப்பாடல்கள் – இயைபு




படம் – 6

# பின்னிணைப்பு – II


இயல் மூன்றில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அனைத்து இலக்கணக் கூறுகளுக்கான முழுமையான அட்டவணைகளும் அட்டவணைகளில் இடம்பெற்றுள்ள நிகழ்வெண்ணிக்கைகள் வரைபடங்களாக மாற்றப்பட்டும் விளக்கப்பட்டுள்ளன.

## நூல் அடிப்படை

| வ. எ. | சொல் வகைகள் | அக நானூறு | குறுந் தொகை | நற்றிணை | புற நானூறு | பதிற்றுப் பத்து |
|---|---|---|---|---|---|---|
| 1 | பெயர் | 784 | 671 | 469 | 1183 | 490 |
| 2 | சுட்டு | 21 | 28 | 16 | 65 | 6 |
| 3 | பதி.பெ. | 43 | 66 | 29 | 104 | 25 |
| 4 | வி.பெ. | 15 | 26 | 8 | 25 | 6 |
| 5 | விளி | 10 | 22 | 10 | 36 | 18 |
| 6 | தொ.பெ | 28 | 14 | 14 | 57 | 15 |
| 7 | வி.அ.பெ. | 24 | 39 | 16 | 53 | 22 |
| 8 | பெ.அ. | 115 | 102 | 73 | 234 | 98 |
| 9 | பெ.எ. | 224 | 175 | 132 | 350 | 98 |
| 10 | எ.பெ.எ. | 13 | 6 | 9 | 30 | 14 |
| 11 | வினை | 16 | 17 | 9 | 73 | 50 |
| 12 | வி.அ. | 5 | 1 | - | 4 | 8 |
| 13 | வி.மு. | 31 | 56 | 30 | 75 | 35 |
| 14 | கு.வி.மு. | 45 | 42 | 20 | 114 | 16 |
| 15 | எ.வி.மு. | 6 | 12 | 3 | 13 | 1 |
| 16 | வி.எ. | 140 | 99 | 58 | 267 | 66 |
| 17 | எ.வி.எ. | 5 | 5 | 1 | 14 | 5 |
| 18 | வி.வி. | 8 | 13 | - | 23 | 7 |
| 19 | வி.தொ. | 5 | 1 | 1 | 7 | 7 |
| 20 | நி.எ. | 14 | 23 | 11 | 47 | 6 |
| 21 | கு.எ. | 53 | 19 | 26 | 37 | 37 |
| 22 | ஏவல் | 2 | 3 | 1 | 4 | 7 |
| 23 | உ.உ. | 26 | 20 | 15 | 57 | 8 |
| 24 | உ.சொ. | 4 | 4 | 5 | 7 | 2 |
| 25 | இ.சொ. | 280 | 339 | 190 | 583 | 140 |

அட்டவணை – 1

## நூல் அடிப்படை





படம் – 1

# அகநானூறு – திணை அடிப்படை

| வ.எ. | சொல் வகைகள் | குறிஞ்சி | முல்லை | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| 1 | பெயர் | 229 | 112 | 84 | 359 |
| 2 | சுட்டு | 12 | 4 | 4 | 1 |
| 3 | பதி.பெ. | 12 | 6 | 11 | 14 |
| 4 | வி.பெ. | 3 | 1 | 3 | 8 |
| 5 | விளி | 4 | 1 | 1 | - |
| 6 | தொ.பெ | 14 | 2 | 1 | 11 |
| 7 | வி.அ.பெ. | 5 | 2 | - | 17 |
| 8 | பெ.அ. | 42 | 15 | 21 | 37 |
| 9 | பெ.எ. | 63 | 36 | 20 | 105 |
| 10 | எ.பெ.எ. | 5 | 1 | 1 | 6 |
| 11 | வினை | 2 | 4 | 1 | 9 |
| 12 | வி.அ.பெ. | 3 | - | 2 | - |
| 13 | வி.மு. | 5 | 8 | 8 | 10 |
| 14 | கு.வி.மு. | 18 | 10 | 10 | 8 |
| 15 | எ.வி.மு. | 4 | - | - | 2 |
| 16 | வி.எ. | 41 | 16 | 20 | 63 |
| 17 | எ.வி.எ. | 1 | - | 2 | 2 |
| 18 | வி.வி. | 3 | - | 3 | 1 |
| 19 | வி.தொ. | 2 | - | 1 | 2 |
| 20 | நி.எ. | 3 | 1 | 5 | 5 |
| 21 | கு.எ. | 19 | 3 | 5 | 26 |
| 22 | ஏவல் | - | 1 | - | 1 |
| 23 | உ.உ. | 8 | 4 | 1 | 13 |
| 24 | உ.ச. | 1 | 2 | - | - |
| 25 | இ.சொ. | 82 | 37 | 45 | 116 |

அட்டவணை - 2

## அகநானூறு – திணை அடிப்படை





படம் – 2

## குறுந்தொகை – திணை அடிப்படை

| வ.எ. | சொல் வகைகள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | பெயர் | 94 | 120 | 152 | 197 | 108 |
| 2 | சுட்டு | 4 | 2 | 5 | 9 | 8 |
| 3 | பதி.பெ. | 10 | 4 | 24 | 16 | 12 |
| 4 | வி.பெ. | 4 | 9 | 1 | 3 | 9 |
| 5 | விளி | 6 | 5 | - | 4 | 3 |
| 6 | தொ.பெ | 3 | 3 | 5 | - | 3 |
| 7 | வி.அ.பெ. | 5 | 4 | 5 | 15 | 10 |
| 8 | பெ.அ. | 16 | 21 | 22 | 28 | 15 |
| 9 | பெ.எ. | 24 | 39 | 40 | 43 | 29 |
| 10 | எ.பெ.எ. | 2 | 1 | 1 | 1 | 1 |
| 11 | வினை | 1 | - | 5 | 9 | 2 |
| 12 | வி.அ. | - | - | 1 | - | - |
| 13 | வி.மு. | 7 | 8 | 6 | 22 | 13 |
| 14 | கு.வி.மு. | 8 | 8 | 8 | 14 | 4 |
| 15 | எ.வி.மு. | - | 2 | 2 | 6 | 2 |
| 16 | வி.எ. | 12 | 17 | 21 | 31 | 18 |
| 17 | எ.வி.எ. | 1 | 1 | 1 | 1 | 1 |
| 18 | வி.வி. | 4 | 1 | 4 | 3 | 1 |
| 19 | வி.தொ. | - | - | 1 | - | - |
| 20 | நி.எ. | 1 | 2 | - | 11 | 9 |
| 21 | கு.எ. | 2 | 3 | 5 | 6 | 3 |
| 22 | ஏவல் | 2 | 1 | - | - | 1 |
| 23 | உ.உ. | 4 | 2 | 5 | 7 | 2 |
| 24 | உ.சொ. | - | - | 1 | 3 | - |
| 25 | இ.சொ. | 53 | 53 | 56 | 54 | 114 |

அட்டவணை - 3

## குறுந்தொகை – திணை அடிப்படை





படம் – 3

# நற்றிணை – திணை அடிப்படை

| வ.எ. | சொல் வகைகள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | பெயர் | 92 | 68 | 85 | 160 | 64 |
| 2 | சுட்டு | 2 | 1 | 3 | 7 | 3 |
| 3 | பதி.பெ. | 9 | 1 | 3 | 10 | 6 |
| 4 | வி.பெ. | 1 | 2 | - | 2 | 3 |
| 5 | விளி | 2 | - | 3 | 2 | 1 |
| 6 | தொ.பெ | 3 | 3 | 2 | 4 | 2 |
| 7 | வி.அ.பெ. | 2 | - | 4 | 1 | 9 |
| 8 | பெ.அ. | 13 | 11 | 14 | 27 | 8 |
| 9 | பெ.எ. | 21 | 24 | 23 | 43 | 21 |
| 10 | எ.பெ.எ. | - | 3 | 3 | - | 3 |
| 11 | வினை | 2 | 1 | 1 | 3 | 2 |
| 12 | வி.அ. | - | - | - | - | - |
| 13 | வி.மு. | 5 | 7 | 1 | 17 | - |
| 14 | கு.வி.மு. | 6 | 4 | 5 | 2 | 3 |
| 15 | எ.வி.மு. | 1 | - | 1 | 1 | - |
| 16 | வி.எ. | 15 | 5 | 8 | 18 | 12 |
| 17 | எ.வி.எ. | 1 | - | - | - | - |
| 18 | வி.வி. | - | - | - | - | - |
| 19 | வி.தொ. | - | - | - | - | 1 |
| 20 | நி.எ. | 6 | - | - | 2 | 3 |
| 21 | கு.எ. | 6 | 3 | 1 | 9 | 7 |
| 22 | ஏவல் | 1 | - | - | - | - |
| 23 | உ.உ. | 2 | 3 | 4 | 4 | 2 |
| 24 | உ.சொ. | 1 | - | 1 | 2 | 1 |
| 25 | இ.சொ. | 34 | 33 | 24 | 69 | 30 |

அட்டவணை - 4

## நற்றிணை – திணை அடிப்படை





படம் – 4

## பதிற்றுப்பத்து – திணை அடிப்படை
## (காக்கைப்பாடினி நச்செள்ளையார்)

| வ. எ. | சொல் வகைகள் | பாடாண் |
|---|---|---|
| 1 | பெயர் | 490 |
| 2 | சுட்டு | 6 |
| 3 | பதி.பெ. | 25 |
| 4 | வி.பெ. | 6 |
| 5 | விளி | 18 |
| 6 | தொ.பெ | 15 |
| 7 | வி.அ.பெ. | 22 |
| 8 | பெ.அ. | 98 |
| 9 | பெ.எ. | 98 |
| 10 | எ.பெ.எ. | 14 |
| 11 | வினை | 50 |
| 12 | வி.அ. | 8 |
| 13 | வி.மு. | 35 |
| 14 | கு.வி.மு. | 16 |
| 15 | எ.வி.மு. | 1 |
| 16 | வி.எ. | 66 |
| 17 | எ.வி.எ. | 5 |
| 18 | வி.வி. | 7 |
| 19 | வி.தொ. | 7 |
| 20 | நி.எ. | 6 |
| 21 | கு.எ. | 37 |
| 22 | ஏவல் | 7 |
| 23 | உ.உ. | 8 |
| 24 | உ.சொ. | 2 |
| 25 | இ.சொ. | 140 |

அட்டவணை - 5

## பதிற்றுப்பத்து – திணை அடிப்படை





படம் – 5

## புறநானூறு – திணை அடிப்படை

| வ. எ. | சொல் வகைகள் | பாடாண் | வாகை | பொதுவியல் | தும்பை | கரந்தை | வெட்சி | கைக்கிளை | நொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பெயர் | 656 | 33 | 183 | 158 | 31 | 33 | 38 | 51 |
| 2 | சுட்டு | 33 | 9 | 9 | 2 | 3 | 2 | 6 | 1 |
| 3 | பதி.பெ. | 42 | 21 | 15 | 11 | 4 | - | 10 | 1 |
| 4 | வி.பெ. | 11 | 4 | 6 | 3 | - | - | 1 | - |
| 5 | விளி | 10 | 4 | 6 | 3 | 1 | - | - | - |
| 6 | தொ.பெ | 32 | 11 | 4 | 3 | - | - | 5 | 2 |
| 7 | வி.அ.பெ. | 19 | 16 | 11 | 2 | - | 1 | 3 | 1 |
| 8 | பெ.அ. | 95 | 56 | 45 | 20 | 3 | 4 | 7 | 4 |
| 9 | பெ.எ. | 147 | 87 | 38 | 43 | 4 | 10 | 4 | 17 |
| 10 | எ.பெ.எ. | 16 | 4 | 1 | 6 | - | - | - | 3 |
| 11 | வினை | 20 | 20 | 11 | 13 | 2 | - | 6 | 1 |
| 12 | வி.அ. | 3 | - | 1 | - | - | - | - | - |
| 13 | வி.மு. | 30 | 13 | 18 | 3 | 3 | 1 | 3 | 4 |
| 14 | கு.வி.மு. | 43 | 18 | 18 | 24 | 3 | - | 7 | - |
| 15 | எ.வி.மு. | 7 | 4 | 1 | - | - | 1 | - | - |
| 16 | வி.எ. | 111 | 65 | 31 | 30 | 6 | 8 | 7 | 9 |
| 17 | எ.வி.எ. | 5 | 5 | 3 | - | - | - | - | - |
| 18 | வி.வி. | 9 | 6 | 7 | - | - | - | 1 | - |
| 19 | வி.தொ. | 2 | 3 | - | 2 | - | - | - | - |
| 20 | நி.எ. | 26 | 9 | 10 | 2 | - | - | - | - |
| 21 | கு.எ. | 16 | 12 | 2 | 5 | - | 1 | 1 | - |
| 22 | ஏவல் | - | - | - | 2 | 1 | - | - | - |
| 23 | உ.உ. | 27 | 11 | 6 | 6 | 4 | 1 | 1 | 1 |
| 24 | உ.சொ. | 3 | - | 3 | - | - | 1 | - | - |
| 25 | இ.சொ. | 253 | 122 | 87 | 65 | 11 | 5 | 27 | 13 |

அட்டவணை - 6

## புறநானூறு – துறை அடிப்படை





படம் – 6

## பதிற்றுப்பத்து – துறை அடிப்படை

| வ. எ. | சொல் வகைகள் | செந்துறை | விறலி ஆற்றுப்படை | வஞ்சி | துறை நிலை | காட்சி வாழ்த்து | ஒள்வாள் அமலை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பெயர் | 194 | 67 | 94 | 63 | 44 | 16 |
| 2 | சுட்டு | - | 1 | 1 | 1 | 1 | 2 |
| 3 | பதி.பெ. | 11 | - | 2 | 10 | 2 | - |
| 4 | வி.பெ. | 2 | 1 | 1 | 2 | - | - |
| 5 | விளி | 14 | 2 | - | 2 | - | - |
| 6 | தொ.பெ | 5 | 2 | 3 | 2 | 1 | 2 |
| 7 | வி.அ.பெ. | 8 | 2 | 5 | 6 | 1 | - |
| 8 | பெ.அ. | 34 | 13 | 22 | 23 | 5 | 1 |
| 9 | பெ.எ. | 31 | 15 | 18 | 23 | 6 | 5 |
| 10 | எ.பெ.எ. | 4 | 6 | - | 2 | 2 | - |
| 11 | வினை | 21 | 9 | 10 | 4 | 4 | 2 |
| 12 | வி.அ. | 1 | 1 | 1 | 3 | 1 | - |
| 13 | வி.மு. | 14 | 7 | 5 | 4 | 3 | 1 |
| 14 | கு.வி.மு. | 3 | 3 | 3 | 2 | 3 | 2 |
| 15 | எ.வி.மு. | 1 | - | - | - | - | - |
| 16 | வி.எ. | 33 | 5 | 8 | 10 | 7 | 3 |
| 17 | எ.வி.எ. | 1 | 2 | - | 1 | 1 | - |
| 18 | வி.வி. | 3 | 1 | - | 1 | 1 | 1 |
| 19 | வி.தொ. | 3 | - | 2 | 2 | - | - |
| 20 | நி.எ. | 3 | 1 | 1 | - | 1 | - |
| 21 | கு.எ. | 17 | 3 | 5 | 8 | 3 | 1 |
| 22 | ஏவல் | 4 | 2 | - | - | 1 | - |
| 23 | உ.உ. | 1 | - | 5 | - | 1 | 1 |
| 24 | உ.சொ. | - | - | - | - | - | - |
| 25 | இ.சொ. | 49 | 25 | 21 | 24 | 13 | 8 |

## பதிற்றுப்பத்து – துறை அடிப்படை





படம் – 7

# புறநானூறு – துறை அடிப்படை

| வ. எ. | சொல் வகைகள் | தானை மறம் | வாழ்த்தியல் | அரசவாகை | இயன்மொழி | கையறுநிலை | உவகைக்கலுழ்ச்சி | பழிச்சுதல்துறை | தாபதவாகை | பரிசில்துறை | ஆனந்தப்பையுள் | ஏறான்முல்லை | மூதின் முல்லை | செருவிடை வீழ்ச்சி | குதிரை மறம் | வான் மங்கலம் | பரிசில் கடாநிலை | விறலியாற்று படை | பரிசில் விடை | பொருண்மொழிக் காஞ்சி | உண்டாட்டு | வேத்தியல் | குடிநிலை | பாண்பாட்டு | வல்லாண முல்லை | கடைநிலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பெயர் | 76 | 81 | 296 | 269 | 89 | 49 | 38 | 57 | 125 | 58 | 10 | 25 | 23 | 28 | 17 | 24 | 29 | 16 | 12 | 33 | 12 | 19 | 20 | 13 | 65 |
| 2 | சுட்டு | 1 | 2 | 5 | 19 | 5 | - | 6 | - | 6 | 3 | 1 | 3 | - | 1 | 2 | 2 | 1 | - | 1 | 2 | - | 3 | - | 1 | 1 |
| 3 | பதி.பெ. | 6 | 7 | 20 | 17 | 8 | 3 | 10 | - | 7 | 7 | 2 | 1 | 1 | - | 1 | 2 | - | 4 | - | - | 3 | 1 | 1 | 1 | 3 |
| 4 | வி.பெ. | 1 | - | 2 | 4 | 3 | - | - | - | - | - | - | - | - | - | - | - | 1 | - | 1 | - | - | - | - | - | - |
| 5 | விளி | 2 | 2 | 4 | 1 | - | - | - | - | 5 | 6 | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | 1 | - | - | 1 |
| 6 | தொ.பெ | 2 | 3 | 10 | 22 | 2 | - | 5 | 1 | 1 | 1 | - | 1 | 2 | - | - | - | 3 | 1 | - | - | - | - | - | - | 2 |
| 7 | வி.அ.பெ. | - | 4 | 15 | 9 | 8 | 1 | 3 | - | 3 | 2 | - | - | - | 1 | 1 | - | 1 | 1 | 1 | 1 | - | - | - | 1 | - |
| 8 | பெ.அ. | 14 | 12 | 47 | 48 | 18 | 3 | 7 | 14 | 10 | 20 | 1 | 2 | 2 | 4 | 3 | 1 | 6 | 5 | - | 4 | 1 | 2 | 3 | - | 10 |
| 9 | பெ.எ. | 22 | 19 | 74 | 68 | 16 | 12 | 4 | 13 | 35 | 16 | 3 | 3 | 5 | 12 | 2 | 5 | 12 | 4 | - | 10 | 2 | 2 | 3 | 6 | 4 |
| 10 | எ.பெ.எ. | 2 | 3 | 4 | 7 | - | 3 | - | - | 3 | 1 | - | - | 1 | 2 | - | - | 1 | 1 | - | - | - | - | - | 1 | 1 |
| 11 | வினை | 5 | 3 | 18 | 11 | 6 | 5 | 6 | 2 | 2 | 1 | - | - | 1 | - | 1 | - | - | - | 4 | - | - | 2 | 1 | 2 | 3 |
| 12 | வி.அ. | - | - | - | 3 | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 13 | வி.மு. | - | 2 | 5 | 16 | 9 | 3 | 3 | 4 | 8 | 8 | 1 | 4 | 3 | 1 | - | 2 | - | - | - | 1 | 1 | 2 | - | - | - |
| 14 | கு.வி.மு. | 12 | 2 | 10 | 17 | 13 | 7 | 7 | 3 | 8 | 4 | 4 | 2 | - | - | 2 | 1 | 3 | 7 | - | - | - | 3 | 2 | 4 | 6 |
| 15 | எ.வி.மு. | - | 1 | 3 | 4 | - | - | - | - | - | - | 1 | - | - | - | - | 2 | - | - | - | 1 | - | - | - | - | 2 |
| 16 | வி.எ. | 5 | 16 | 50 | 53 | 20 | 21 | 7 | 4 | 20 | 8 | 3 | 11 | 5 | 4 | 7 | 3 | 1 | 3 | - | 8 | 1 | 5 | 3 | 1 | 8 |
| 17 | எ.வி.எ. | - | 2 | 5 | 1 | 2 | - | - | - | - | 1 | - | - | - | - | - | 2 | - | - | - | - | - | - | - | 1 | - |
| 18 | வி.வி. | - | 2 | 4 | 2 | 4 | - | 1 | - | 2 | 3 | - | 2 | - | - | - | 1 | 1 | - | 1 | - | - | - | - | - | 1 |
| 19 | வி.தொ. | 1 | - | 3 | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | - | - | - | - | - | - | - |
| 20 | நி.எ. | 4 | 5 | 14 | 7 | 8 | - | 1 | 4 | - | - | - | - | - | - | - | 2 | 2 | - | - | - | - | - | - | - | - |
| 21 | கு.எ. | 2 | 2 | 12 | 7 | - | 2 | 1 | - | 5 | - | - | - | - | - | - | - | - | 2 | - | 1 | - | - | 1 | - | - |
| 22 | ஏவல் | 2 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | - |
| 23 | உ.உ. | 2 | 5 | 6 | 12 | 4 | 2 | 4 | 3 | 1 | 2 | 1 | - | - | 1 | 1 | 2 | - | - | - | 1 | 2 | 1 | - | 2 | 5 |
| 24 | உ.சொ. | - | - | - | 2 | 3 | - | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | - | 1 | - | - | - | - | - |
| 25 | இ.சொ. | 33 | 39 | 92 | 102 | 43 | 20 | 27 | 14 | 51 | 33 | 7 | 13 | 4 | 9 | 5 | 9 | 6 | 9 | 5 | 5 | 3 | 8 | 8 | 4 | 18 |

**புறநானூறு – துறை அடிப்படை**





படம் – 8

## அகநானூறு - கூற்று அடிப்படை

| வ.எ. | சொல் வகைகள் | தலைவி | தோழி | உழையர் |
|---|---|---|---|---|
| 1 | பெயர் | 526 | 189 | 69 |
| 2 | சுட்டு | 8 | 11 | 2 |
| 3 | பதி.பெ. | 22 | 17 | 3 |
| 4 | வி.பெ. | 9 | 5 | - |
| 5 | விளி | 5 | 4 | 1 |
| 6 | தொ.பெ | 17 | 9 | 2 |
| 7 | வி.அ.பெ. | 20 | 3 | - |
| 8 | பெ.அ. | 70 | 35 | 10 |
| 9 | பெ.எ. | 151 | 52 | 21 |
| 10 | எ.பெ.எ. | 10 | 3 | - |
| 11 | வினை | 13 | 1 | 2 |
| 12 | வி.அ. | 3 | 2 | - |
| 13 | வி.மு. | 15 | 8 | 7 |
| 14 | கு.வி.மு. | 20 | 17 | 8 |
| 15 | எ.வி.மு. | - | 1 | - |
| 16 | வி.எ. | 87 | 20 | 12 |
| 17 | எ.வி.எ. | 2 | 3 | - |
| 18 | வி.வி. | 1 | 6 | - |
| 19 | வி.தொ. | 3 | 2 | - |
| 20 | நி.எ. | 5 | 8 | 1 |
| 21 | கு.எ. | 40 | 12 | 1 |
| 22 | ஏவல் | 1 | - | 1 |
| 23 | உ.உ. | 17 | 6 | 3 |
| 24 | உ.சொ. | 1 | 1 | 2 |
| 25 | இ.சொ. | 165 | 87 | 28 |

அட்டவணை – 9

## அகநானூறு – கூற்று அடிப்படை





படம் – 9

## குறுந்தொகை - கூற்று

| வ.எ. | சொல் வகைகள் | தலைவன் | தலைவி | தோழி | செவிலி | பரத்தை |
|---|---|---|---|---|---|---|
| 1 | பெயர் | 32 | 388 | 216 | 19 | 16 |
| 2 | சுட்டு | 1 | 19 | 6 | - | 2 |
| 3 | பதி.பெ. | 3 | 43 | 17 | - | 3 |
| 4 | வி.பெ. | 3 | 11 | 11 | - | - |
| 5 | விளி | 1 | 10 | 10 | 1 | - |
| 6 | தொ.பெ | 3 | 5 | 6 | - | - |
| 7 | வி.அ.பெ. | 1 | 21 | 17 | - | - |
| 8 | பெ.அ. | 4 | 59 | 36 | 3 | 5 |
| 9 | பெ.எ. | 9 | 103 | 56 | 4 | 3 |
| 10 | எ.பெ.எ. | 1 | 3 | 2 | - | - |
| 11 | வினை | - | 12 | 5 | - | - |
| 12 | வி.அ.பெ. | - | 1 | - | - | - |
| 13 | வி.மு. | 7 | 38 | 10 | - | - |
| 14 | கு.வி.மு. | 6 | 26 | 7 | 1 | 1 |
| 15 | எ.வி.மு. | - | 8 | 4 | - | - |
| 16 | வி.எ. | 12 | 50 | 32 | 1 | 4 |
| 17 | எ.வி.மு. | - | 3 | 2 | - | - |
| 18 | வி.வி. | - | 7 | 5 | - | 1 |
| 19 | வி.தொ. | - | 1 | - | 1 | - |
| 20 | நி.எ. | - | 12 | 11 | - | - |
| 21 | கு.எ. | 2 | 10 | 5 | 1 | 1 |
| 22 | ஏவல் | - | 1 | 3 | - | - |
| 23 | உ.உ. | 3 | 6 | 9 | - | 1 |
| 24 | உ.ச. | - | 4 | - | - | - |
| 25 | இ.சொ. | 24 | 173 | 93 | 5 | 3 |

அட்டவணை - 10

## குறுந்தொகை – கூற்று அடிப்படை





படம் – 10

## நற்றிணை - கூற்று அடிப்படை

| வ.எ. | சொல் வகைகள் | தலைவன் | தலைவி | தோழி |
|---|---|---|---|---|
| 1 | பெயர் | 43 | 278 | 148 |
| 2 | சுட்டு | 3 | 8 | 5 |
| 3 | பதி.பெ. | 3 | 18 | 8 |
| 4 | வி.பெ. | 1 | 5 | 4 |
| 5 | விளி | - | 6 | 4 |
| 6 | தொ.பெ | - | 9 | 3 |
| 7 | வி.அ.பெ. | 2 | 11 | 3 |
| 8 | பெ.அ. | 3 | 43 | 27 |
| 9 | பெ.எ. | 13 | 82 | 37 |
| 10 | எ.பெ.எ. | 3 | 3 | 3 |
| 11 | வினை | - | 5 | 4 |
| 12 | வி.அ. | - | - | - |
| 13 | வி.மு. | 3 | 16 | 11 |
| 14 | கு.வி.மு. | 2 | 14 | 4 |
| 15 | எ.வி.மு. | - | 3 | - |
| 16 | வி.எ. | 6 | 36 | 16 |
| 17 | எ.வி.எ. | - | 1 | - |
| 18 | வி.வி. | - | - | - |
| 19 | வி.தொ. | - | 1 | - |
| 20 | நி.எ. | - | 6 | 5 |
| 21 | கு.எ. | 2 | 16 | 8 |
| 22 | ஏவல் | - | - | 1 |
| 23 | உ.உ. | 1 | 9 | 4 |
| 24 | உ.சொ. | - | 2 | 3 |
| 25 | இ.சொ. | 17 | 153 | 53 |

அட்டவணை – 11

## நற்றிணை – கூற்று அடிப்படை





படம் – 11

# அகநானூறு - புலவர் அடிப்படை

| வ. எ. | சொல் வகைகள் | அஞ்சியத்தை மகள் நாகையார் | ஔக்கூர் மாசாத்தியார் | ஔவையார் | கழார்க்கீரன் எயிற்றியார் | குமிழி ஞாழலார் | போந்தைப் பசலையார் | நக்கண்ணையார் | வெள்ளி வீதியார் | வெறிபாடிய காமக்கண்ணியார் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பெயர் | 37 | 69 | 175 | 175 | 43 | 41 | 38 | 93 | 113 |
| 2 | சுட்டு | - | 2 | - | 3 | - | 4 | 1 | 2 | 9 |
| 3 | பதி.பெ. | 2 | 3 | 10 | 6 | 2 | 9 | 1 | 3 | 7 |
| 4 | வி.பெ. | - | - | 3 | 4 | 1 | 1 | 1 | 2 | - |
| 5 | விளி | 1 | 1 | - | 3 | - | 2 | 1 | 1 | 1 |
| 6 | தொ.பெ | - | 2 | 6 | 3 | 1 | - | 3 | 2 | 11 |
| 7 | வி.அ.பெ. | - | - | 7 | 10 | - | - | - | 3 | 4 |
| 8 | பெ.அ. | 7 | 10 | 16 | 19 | 9 | 12 | 7 | 14 | 21 |
| 9 | பெ.எ. | 17 | 21 | 55 | 53 | 12 | 8 | 4 | 18 | 36 |
| 10 | எ.பெ.எ. | 1 | - | 5 | 2 | - | 1 | 1 | - | 3 |
| 11 | வினை | - | 2 | 3 | 8 | 1 | - | 2 | - | - |
| 12 | வி.அ. | 2 | - | - | - | 1 | 1 | - | - | 1 |
| 13 | வி.மு. | 1 | 7 | 1 | 8 | 3 | 5 | 1 | 3 | 2 |
| 14 | கு.வி.மு. | 6 | 8 | 2 | 5 | 2 | 8 | 2 | 3 | 9 |
| 15 | எ.வி.மு. | 1 | - | 1 | - | - | - | 2 | 2 | - |
| 16 | வி.எ. | 4 | 12 | 38 | 26 | 8 | 12 | 5 | 8 | 27 |
| 17 | எ.வி.எ. | - | - | - | 2 | 1 | 1 | - | - | 1 |
| 18 | வி.வி. | - | - | 1 | 1 | - | 3 | - | 2 | 1 |
| 19 | வி.தொ. | - | - | 1 | 1 | 1 | - | 1 | - | 1 |
| 20 | நி.எ. | - | 1 | 2 | 2 | 2 | 3 | - | 2 | 2 |
| 21 | கு.எ. | - | 1 | 5 | 21 | 2 | 3 | 3 | 6 | 12 |
| 22 | ஏவல் | - | 1 | - | 1 | - | - | - | - | - |
| 23 | உ.உ. | 1 | 3 | 7 | 5 | - | 1 | 1 | 5 | 3 |
| 24 | உ.சொ. | - | 2 | - | 1 | - | - | - | 1 | - |
| 25 | இ.சொ. | 16 | 28 | 62 | 49 | 15 | 30 | 9 | 27 | 44 |

அட்டவணை – 12

## அகநானூறு – புலவர் அடிப்படை





படம் – 12

# குறுந்தொகை - புலவர் அடிப்படை

| வ. எ. | சொல் வகைகள் | ஆதிமந்தி | ஊண்பித்தை | ஓக்கூர் மாசாத்தியார் | ஔவையார் | கழார்க்கீரன் எயிற்றியார் | காக்கை பாடினியார் | நன்னாகையார் | நெடும்பல்லியத்தை | பூங்கணுத்திரையார் | வருமுலையாரத்தி | வெண்பூதி | வெண்ணிக்குயத்தியார் | வெள்ளி வீதியார் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பெயர் | 14 | 15 | 111 | 204 | 33 | 16 | 111 | 26 | 24 | 19 | 36 | 19 | 75 |
| 2 | சுட்டு | - | - | 1 | 4 | - | - | 3 | 1 | 1 | - | 7 | 3 | 5 |
| 3 | பதி.பெ. | 3 | - | 2 | 23 | 4 | 1 | 7 | 5 | - | 2 | 3 | 3 | 13 |
| 4 | வி.பெ. | - | 2 | 3 | 10 | - | - | 3 | - | 2 | 2 | 1 | 1 | 2 |
| 5 | விளி | - | 1 | 5 | 6 | 1 | 1 | 5 | - | 1 | - | 1 | - | 1 |
| 6 | தொ.பெ | - | - | 3 | 3 | 1 | 1 | 1 | 1 | - | - | - | - | 3 |
| 7 | வி.அ.பெ. | - | 2 | 3 | 7 | 1 | - | 9 | 2 | - | - | 3 | - | 10 |
| 8 | பெ.அ. | 2 | 3 | 9 | 35 | 5 | 4 | 9 | 2 | 5 | 3 | 1 | 3 | 14 |
| 9 | பெ.எ. | 6 | 3 | 29 | 55 | 13 | 5 | 18 | 9 | 3 | 4 | 7 | 5 | 14 |
| 10 | எ.பெ.எ. | - | 1 | - | 1 | 1 | - | - | 1 | - | - | - | - | 1 |
| 11 | வினை | - | 1 | - | 1 | 1 | - | 3 | - | 4 | 1 | 4 | - | 2 |
| 12 | வி.அ. | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | - |
| 13 | வி.மு. | - | - | 3 | 18 | - | - | 10 | 4 | - | 2 | 7 | 2 | 8 |
| 14 | கு.வி.மு. | - | - | 2 | 13 | 3 | 1 | 5 | 4 | 1 | - | 5 | - | 6 |
| 15 | எ.வி.மு. | - | - | - | 3 | - | - | - | - | - | - | - | - | 6 |
| 16 | வி.எ. | 1 | 2 | 10 | 32 | 4 | - | 11 | 5 | 2 | 3 | 4 | 3 | 14 |
| 17 | எ.வி.எ. | - | - | 1 | 2 | - | - | 1 | - | 1 | - | - | - | - |
| 18 | வி.வி. | - | - | 1 | 5 | 1 | - | 2 | - | 1 | - | 1 | - | 1 |
| 19 | வி.தொ. | - | - | - | - | - | - | - | - | 1 | - | - | - | - |
| 20 | நி.எ. | - | - | - | 15 | 2 | - | 1 | - | - | - | 1 | - | 4 |
| 21 | கு.எ. | - | - | - | 7 | 1 | 1 | 5 | 1 | 3 | - | - | - | - |
| 22 | ஏவல் | - | - | 1 | 2 | - | - | 1 | - | - | - | - | - | - |
| 23 | உ.உ. | - | - | 1 | 8 | 1 | - | 1 | 1 | 2 | - | 2 | - | 3 |
| 24 | உ.சொ. | - | - | - | 1 | - | - | - | - | - | - | - | - | 1 |
| 25 | இ.சொ. | 10 | 7 | 27 | 97 | 14 | 8 | 43 | 13 | 14 | 7 | 25 | 8 | 66 |

அட்டவணை – 13

## குறுந்தொகை – புலவர் அடிப்படை





படம் – 13

## நற்றிணை - புலவர் அடிப்படை

| வ. எ. | சொல் வகைகள் | அஞ்சில் அஞ்சியா | ஔவையார் | கழார்க்கீரன் எயிற்றியார் | குறமகள் எயிற்றியார் | நக்கண்ணையார் | நப்பசலையார் | மாறோக்கத்து நப்பசலையார் | வெள்ளிவீதியார் | வெறிபாடிய காமக்கண்ணியார் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பெயர் | 35 | 163 | 44 | 23 | 53 | 20 | 25 | 60 | 25 |
| 2 | சுட்டு | 1 | 4 | 3 | - | 4 | - | - | 2 | - |
| 3 | பதி.பெ. | - | 12 | 6 | 3 | - | - | 1 | 4 | - |
| 4 | வி.பெ. | - | 2 | 2 | 1 | - | - | - | 2 | 1 |
| 5 | விளி | - | 4 | - | - | 2 | - | - | 3 | 1 |
| 6 | தொ.பெ | - | 6 | 1 | - | 3 | 1 | - | 1 | 1 |
| 7 | வி.அ.பெ. | 2 | 1 | 7 | 1 | 1 | 2 | 1 | - | - |
| 8 | பெ.அ. | 6 | 22 | 5 | 4 | 11 | 3 | 4 | 7 | 4 |
| 9 | பெ.எ. | 11 | 47 | 10 | 8 | 11 | 11 | 6 | 18 | 6 |
| 10 | எ.பெ.எ. | 3 | 3 | 2 | - | - | 1 | - | - | - |
| 11 | வினை | - | 2 | - | - | 2 | 2 | 1 | 1 | - |
| 12 | வி.அ. | - | - | - | - | - | - | - | - | - |
| 13 | வி.மு. | - | 16 | 1 | - | 3 | - | 1 | 9 | 1 |
| 14 | கு.வி.மு. | - | 10 | 2 | 2 | - | 2 | 2 | 1 | 2 |
| 15 | எ.வி.மு. | - | - | - | 1 | - | - | - | 1 | - |
| 16 | வி.எ. | 2 | 18 | 9 | 2 | 4 | 3 | 5 | 9 | 3 |
| 17 | எ.வி.எ. | - | - | - | 1 | - | - | - | - | - |
| 18 | வி.வி. | - | - | - | - | - | - | - | - | - |
| 19 | வி.தொ. | - | - | - | - | - | 1 | - | - | - |
| 20 | நி.எ. | - | 5 | - | 1 | - | 1 | - | 2 | 2 |
| 21 | கு.எ. | 1 | 14 | 3 | 2 | - | 4 | 1 | - | 1 |
| 22 | ஏவல் | - | 1 | - | - | - | - | - | - | - |
| 23 | உ.உ. | - | 6 | - | - | 3 | 2 | 1 | - | 1 |
| 24 | உ.சொ. | 1 | 1 | 1 | - | - | - | - | 1 | 1 |
| 25 | இ.சொ. | 8 | 66 | 20 | 8 | 15 | 10 | 10 | 43 | 10 |

அட்டவணை – 14

## நற்றிணை – புலவர் அடிப்படை





படம் – 14

# புறநானூறு - புலவர் அடிப்படை

| வ. எ. | சொல் வகைகள் | ஓக்கூர் மாசாத்தியார் | ஔவையார் | காக்கை பாடினியார் | காவற்பெண்டு | குறமகள் எயிற்றியார் | தாயங்கண்ணனார் | நக்கண்ணையார் | பாரி மகளிர் | பூங்கண்ணுத்திரையார் | பெருங்கோப்பெண்டு | பேய்மகள் இளவெயினி | மாற்பித்தியார் | மாறோக்கத்து நப்பசலையார் | வெண்ணிக்குயத்தியார் | வெறிபாடிய காமக்கண்ணியார் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பெயர் | 25 | 859 | 16 | 10 | 35 | 24 | 38 | 12 | 15 | 33 | 42 | 33 | 302 | 19 | 51 |
| 2 | சுட்டு | 3 | 33 | - | 1 | 4 | - | 6 | 4 | - | - | - | - | 13 | - | 1 |
| 3 | பதி.பெ. | 1 | 66 | 3 | 2 | 1 | - | 10 | - | - | 3 | - | - | 17 | 2 | 1 |
| 4 | வி.பெ. | - | 20 | - | 1 | - | - | - | - | 1 | - | - | - | 3 | - | - |
| 5 | விளி | - | 20 | - | - | - | - | - | - | - | 3 | - | - | 10 | 3 | - |
| 6 | தொ.பெ | 1 | 33 | - | - | 4 | 1 | 5 | - | - |  | - | - | 11 | - | 2 |
| 7 | வி.அ. | - | 37 | 1 | - | 1 | - | 3 | 2 | - | - | 1 | - | 6 | - | 1 |
| 8 | பெ.அ. | 2 | 128 | 2 | 1 | 5 | 8 | 7 | 2 | 1 | - | 6 | 6 | 49 | 1 | 4 |
| 9 | பெ.எ. | 3 | 182 | 4 | 3 | 4 | 6 | 4 | - | 6 | 12 | 15 | 7 | 82 | 5 | 17 |
| 10 | எ.பெ.எ. | - | 14 | 2 | - | 2 | - | - | - | - | 12 | - | - | 9 | - | 3 |
| 11 | வினை | - | 44 | 2 | - | 1 | - | 6 | 1 | 1 | - | - | 2 | 15 | - | 1 |
| 12 | வி.அ.பெ. | - | 4 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 13 | வி.மு. | 4 | 23 | 1 | 1 | 2 | 1 | 3 | 1 | 1 | - | 3 | 1 | 26 | 1 | 4 |
| 14 | கு.வி.மு. | - | 72 | 4 | 4 | 2 | 1 | 7 | - | 2 | 1 | - | 2 | 16 | 1 | - |
| 15 | எ.வி.மு. | - | 10 | - | 1 | - | - | - | - | - | 2 | - | - | 1 | - | - |
| 16 | வி.எ. | 11 | 154 | 7 | 3 | 3 | 3 | 7 | 1 | 2 | 1 | 3 | 3 | 56 | 4 | 9 |
| 17 | எ.வி.மு. | - | 10 | - | - | - | - | - | - | - | 3 | - | - | 3 | - | - |
| 18 | வி.வி. | 2 | 12 | - | - | - | - | 1 | - | - | 1 | - | - | 4 | - | - |
| 19 | வி.தொ. | - | 7 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 20 | நி.எ. | - | 35 | - | - | 1 | - | - | - | - | 3 | - | 1 | 10 | - | - |
| 21 | கு.எ. | - | 17 | 1 | - | 1 | - | 1 | - | - | - | - | - | 15 | 1 | - |
| 22 | ஏவல் | - | 3 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 23 | உ.உ. | - | 38 | - | 1 | - | 1 | 4 | - | 1 | 1 | - | 3 | 5 | 2 | 1 |
| 24 | உ.ச. | - | 6 | - | - | - | - | 1 | - | - | - | - | - | 1 | - | - |
| 25 | இ.சொ. | 13 | 345 | 8 | 7 | 12 | 6 | 27 | 8 | 8 | 13 | 14 | 8 | 96 | 5 | 13 |

அட்டவணை – 15

## புறநானூறு – புலவர் அடிப்படை




படம் – 15

# சங்கப் பெண்மொழி:
# கட்டமைப்பு ஆய்வு

**சென்னைப் பல்கலைக்கழக முனைவர் பட்டத் தேர்விற்காகச்**
**சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறை வாயிலாக**
**அளிக்கப்பெறும் ஆய்வேடு**

**ஆய்வாளர்**

## இர. ஹேமலதா

(Ph.D./02/FT/06/2014/6341/01.09.2014)

**நெறியாளர்**

## முனைவர் ப. டேவிட் பிரபாகர்

*எம்.ஏ.,(தமிழ்),எம்.ஏ.,(மொழியியல்) எம்.ஃ.பில்., பிஎச்.டி.,*
*தமிழ்த்துறைத் தலைவர்*

**தமிழ்த்துறை**
***சென்னைக் கிறித்தவக் கல்லூரி (தன்னாட்சி)***
***தாம்பரம், சென்னை - 600 059.***

**ஆகஸ்ட் – 2020**

இத்தகைய எதிர்மறைத் தொடர்களின் மூலம் வெளிப்படுத்துதல் இவரது நடையியல் உத்தியாகக் கருதத்தக்கது.

## முடிவுரை

சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் அமைந்துள்ள சில குறிப்பிட்ட தொடரமைப்புகள் இவ்வியலில் விரிவாக எடுத்துரைக்கப்பெற்றுள்ளன. சங்கப் பெண்பாற் புலவர்களின் தொடரியல் பயன்பாடுகள் திணை, துறை, கூற்று, நூல் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன. இப்பெண்பாற் புலவர்களது கவிதைக் கட்டமைப்பு உத்திகளில் தொடர்கள் செயலாற்றும் பான்மையினை இவ்வியலானது ஆராய்ந்தளித்துள்ளது. அடுக்குத் தொடர், எச்சத் தொடர், பெயரடைத் தொடர், ஏகாரத் தொடர், உவமைத் தொடர், முரண் தொடர், எதிர்மறைத் தொடர் ஆகிய தொடர்கள் சங்கப் பெண்பாற் புலவர்கள் கையாண்ட விதத்தை இவ்வியலில் அறியலாம்.